சிவானந்த

திக்விஜயம்



திவ்ய ஜீவன சங்கம்

ஆனந்தகுடீரம்

சிவானந்த திக் விஜயம்

(அகில இந்திய-இலங்கை யாத்திரை வரலாறு)



தொகுத்தவர்கள் :—

ஸ்வாமி ஸதானந்தா

ஸ்வாமி ஸச்சிதானந்தா

ஸ்வாமி ராமானந்தா

ஸ்ரீ மு. ஸ்ரீனிவாசன், B. A.



சிவானந்தா பதிப்புக் கழகம்


ஆனந்த குடீரம், ரிஷீகேசம்

இமயமலை

1951

சிவானந்தா பதிப்புக் கழகத்திற்காக
ஸ்ரீ சுவாமி சிதானந்தரால் வெளியிடப்பட்டது.
முதல் பதிப்பு 1951
உரிமை பதிவு செய்யப்பட்டது.

Printed by V. Balasubramanyam, at Rajah Power Press, Madras—14.
for the Sivananda Publication League, Ananda Kutir Post.
RISHKESH.



SRI SWAMI SIVANANDA
"ANANDA KUTIR"
HIMALAYAS

ஓம்

சுவாமிஜியின் அகில இந்திய யாத்திரையில் எல்லையற்ற
பக்தியுடனும் அளவிடற்கரிய அன்புடனும்
அன்னாரை வரவேற்று உபசரித்த
பொது மக்களுக்கு இந்நூல்
சமர்ப்பணமாகிறது

ஓம்

பதிப்புரை

ஸ்ரீ சுவாமி சிவானந்தஜியின் தென் இந்தியா-கொழும்பு சுற்றுப்பிரயாணத்தின் விவரத்தைப்பற்றி பத்திரிகைகளில் வெளியாகி இருக்கும் வாலாறுகளைத் தவிர, அவரது விஜயத்தின் தொடர்ச்சியான வாலாறு ஒன்றும இப்புதகத்தில் தரப்பட்டிருக்கிறது. இச்சுற்றுப்பிரயாணத்திற்குப் பதிப்பு ஆசிரியர்கள் கொடுத்திருக்கும் "திக் விஜயம்" என்ற பெயரே மிகப் பொருத்தமானது என்பதைச் சொல்லத் தேவை இல்லை. பல இடங்களிலும சுவாமிஜிகுத் தமிழில் அளிகப்பட்ட வரவேற்புகளையும பாட்டுக்களையும இதில் காணலாம். ஆங்கிலத்தில் அமைநதுள்ள வரவேற்புகளும் பாட்டுக்களும இதனிலும் விரிவான விவரங்களோடும் வெளியாகி யிருக்கும் ஆங்கிலப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதில் யாததிரையைப் பற்றிய வாலாறுகளும் ஸ்ரீ சுவாமிஜி ஆங்காங்கு நிகழ்த்திய பிரசங்கங்களும செவ்விய முறையில கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சரித்திர காலவரை என்று சொல்லும்படி முக்கியத்வம் அமைந்த சுவாமிஜியினுடைய யாத்திரையைப் பற்றி தமிழர் களுக்குச் சிறிதேனும் தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கமே இப்புத்தகம் வெளிவருவதற்குக் காரணம்.

ஸ்ரீ சுவாமிஜியின் விஜயத்தைப்பற்றிய வாலாறுகளைத் தொகுத்த ஸ்ரீ சுவாமி சதானந்தஜிக்கும் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கும் வாலாறுகளை ஒரு கோர்வையாக இணைத்து இப்புத்தகத்தைப் பிரசுரித்த ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜிக்கும், ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கும் வெகு அழகாக முன்னுரை எழுதிய ஸ்ரீ சுவாமி ராமானந்தஜிக்கும் நமது நன்றி உரித்தாகுக.

ஆனந்தகுடீரம்
18—7—51

பதிப்பாளர்
சிவானந்தா பதிப்புக்கழகம்.

அண்ணாமலை நகர்

சுவாமி சிவானந்தா அவர்களின் விஜயத்தின்போது

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து பட்டமளிப்பு

மண்டபத்தில் பாடிய இசைப்பாடல்

இயல் — இசை

யோகி ஸ்ரீ சுத்தானந்த — V. S. கோமதி சங்கர

பாரதியார் — ஐயர்

பாண்டிசுசேரி — விஜய விநாயகர்

இராகம்-காபி — 22வது மேளத்தில்

ஆ ரோ-சா, ரீ ம ப தீ ர சா

தாளம்-ஆதி — ஜண்பம்

அவ-ச நி த நி ப ம க ரி ச நீ சா

சுத்த சச்சி தானந்த

சுயம் ப்ரகாச ஜோதி ஓம்

சததிய ஸ்வரூப ஓமஸத—குருநாதா

புத்தி மீதமர்ந்தென ஆதம

போத மோங்கத் தூண்டுவாய்

உத்தமரின் உள்ளமான—பரமாத்மா

பக்தி ஞான கர்ம யோகப்
பாதை செல்லும் சாதகர்
சிதந்தி சோரச்சக்தி நல்குமம—உமைநாதா

அத்தனே உன் அன்பிலென
அகங்களைந் துருகியுன
பித்தனாக வேண்டுகின்றேன—அடியேனே

சித்த மின்னும் வட்ட மிட்டுச
சீரழித்திடாமலுன்
பத்மபாதம பற்றி நிற்கும—பதமீவாய்

கைத்தலக் கனியெனக
கருத்தினுன்னைக காணவே
மெய்த்திரு வழிதலக்கி—யெனையாளாய்

பத்துபேய்கள் வாழும் வெய்ய
பாசக்காட்டில் ஞானத்தீ
வைத்தெரித்துன் வாய்மையாகும—வந்தாராய்

இத்தலதனு யோக லீல
எங்குமின்பந் தாண்டியே
சித்த சித்த மோங்கவருள்—பெருமானே,

—o—

இப்புத்தகாதிபர்களுடன்



ஸ்ரீ மு. சீனிவாஸன், B.A. ஸ்ரீ வெங்கடி சிவானந்தா ஸ்ரீ வெங்கடி ராமானந்தா

முகவுரை

ஆத்மஞானத்தின் மகிமைக்கு ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் அகில இந்திய சுற்றுப் பிரயாணமே அத்தாக்ஷி. உலகத்தில் மனிதன அடையும் வெற்றிகளுக்குள் ஆத்மஞானமே தலை சிறந்தது என்ற உண்மையை இந்த இருமாத சுற்றுபபிரயாண காலத்தில் ஒவ்வொரு நிமிஷமும நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

இத்தகைய பிரயாணம் ஒன்றை சரிவர முடிக்கும் விஷயத்தில் சிலர் சந்தேகமாகவே இருந்தனர். இது நடக்காது என்றே இவர்கள எண்ணி இருந்தனர். இன்னும சிலர ''இந்த உடமபை வைத்துக்கொண்டு சுவாமிஜி எவ்வாறு போகமுடியும, இதக் கஷ்டத்தைத் தாங்க அவருக்குப் போதிய பலம இல்லையே. ஒரே நாள் இரவில் இவர் இந்த சித்தியை எவ்வாறு அடைய முடியும்'' என்று கவலைப் பட்டனர். யாத்திரை ஆரம்பமாவதற்கு சில மாதங்கள முன்னர் சுவாமிஜியைப பார்த்திருந்தவர்கள் ''நாடு முழுதும ஆவலோடு காத்திருக்கும் மக்களுக்கு சுவாமிஜி தரிசனம் அளித்தாலே போதுமானது; உபன்னியாசங்களை அவர்கள் சிஷ்யர்கள் பண்ணிக்கொள்ளட்டும்'' என்று அபிப்பிராயப்பட்டனர்.

இத்தகைய பயங்கள் எலலாம் ஆதாரமற்றவை என பதை சுவாமிஜி நிரூபித்துவிட்டார். அனைவரும் ஆச்சரியம் அடையும் அளவுக்கு சூக்ஷ்மமாக இருந்த தன்னுடைய சக்தியை சுவாமிஜி புலப்படுத்தினர். உற்சாகத்தையும் ஊக்கத்தையும் பூஷணமாகக் கொண்ட சுவாமிஜிக்குக களைப்பு ஏது? களைப்பை அடைந்தவர்கள் சுவாமிஜியின்

தரிசனத்திற்காக வந்தவாகளே. சுவாமிஜியின் உபன்னி யாசங்கள ஒவ்வொன்றும் வெகு உருக்கமாக இருந்ததால இவர்களுக்கு ஒரு உபன்னியாசத்தையும் தவறவிட மனம இலலை. ஆகையால இவர்கள் சுவாமிஜியைப் பின் தொடாந்தே சென்றனர். எனினும் சுவாமிஜியின் உற்சாக ஊறுக குன்றவே இலலை. கோசுவாமி கணேச தத்ஜி போன்ற தீவிர ஆத்மீக உபன்னியாச கர்தாகளே சுவாமி ஜியின் ஊக்கத்தையும் சக்தியையும் கண்டு ஆசசரியப்பட் டார்கள் என்றால் வேறு யாதான் ஆச்சரியப்படமாட்டார் கள. உபன்னியாசம் செய்யுமபொழுது, சுவாமிஜி, தொணடை கட்டியதையும் பொருட்படுத்தாமல், தன்னையே மறந்து, இடிமுழக்கம்போல முழக்கினர். இவருடைய தொண்டை கட்டிய நிலையையும் களைப்பையும் கண்டு உபன்னியாசத்திற்கு ஏற்பாடு செய்தவர்களும், சுவாமிஜி யைச் சுற்றி கூடியிருந்தவர்களும கவலையால் பீடிகக்பட்டு பீதியை அடைந்தார்கள். ஆனால் சுவாமிகருக் கவலை சிறி தேனும இல்லை. ஆண்டவனை தரிசித்த ஞானிக்கு எது தான முடியாத காரியம்! அவருடைய அசைகக முடியாத மன உறுதிக்கு முன் நிற்கக்கூடியது எது? அவருடைய தேகமும் இந்திரியங்களும் அவருக்கு அடிமைகளே. இக் களைபபின் ஒரு சிறு துளியை வேறு யாராவது அனுபவித் திருப்பாராகில் அவர் குறைந்தது இருவாரங்கள் படுக்கை யோடு படுக்கையாய் கிடந்திருப்பார். சுவாமிஜியினுடைய இந்த மன உறுதியையும், யாவரும் அதிசயிக்கும்படியான பொறுமையையும் என்னென்று உரைபபது! இந்த சக்தியை அளிப்பது ஆத்மஞானமே. இந்த ஆத்மஞானம் அல்லவா நம்மை ஆண்டவனிடம் கொண்டு சேர்க்கிறது. இதைத்தான் சுவாமிஜி அடிக்கடி வற்புறுத்துகின்றார்.

ஒவ்வொரு இடத்திலும் தங்கும் வெயிலையும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, ஜனங்கள லக்ஷக் கணக்கில சுவாமிஜியின் தரிசனத்திற்காக ஆவலுடன் கூடி இருந்தனர். ஆவலும உறசாகமும் இருகுமிடத்தில வெயிலும் மழையுமு என்ன செய்யும்? சுவாமிஜியின் ஆகாஷண சகதி லக்ஷக்கணக்காவர்களை அவர் பகுகம் இழுத்தது. இவ்வாறு இழுகுகப் பட்டவாகளில் அநேகா பக்தாகள, அநேகா ரஸ்வாநம்பிக்கை இல்லாதவர்கள், அநேகா பணகாரர்கள, அநேகர் குடியானவர்கள், அநேகர் பாணவர்கள், அநேகர் ஸ்திரீகள, அநேகர் வெவ்வேறு மதத்தினர்கள், அநேகா வெவ்வேறு அரசியல் கக்ஷிகளைச் சேர்ந்தவர்கள. மதத்தைப்பற்றி பேசினல் பேசினவர்களை விரட்டி அடிக்கும் மனப்பானமை யுடையவர்களே, சுவாமிஜியைக் கண்டதும, பெட்டிகுள் அடங்கிய பாமபைப போல் அமைதியாக இருநது, சுவாமிஜி கூறியதை நன்றுக மனதில் கொண்டு, தங்களையும மறநது, சுவாமிஜியின் கீர்த்தனத்தில லயித்துவிடடார்கள் என்றால் சுவாமிஜியின் சகதியை என்னென்று உறைபபது! அரசியல் தலைவர்களையும் தேசியப் போர் வீரர்களையும் அலக்ஷியம செய்யக்கூடிய வர்கள் சுவாமிஜிக்கு அன்பார்ந்த வரவேற்பு அளித்தார்கள் என்றால் சுவாமிஜியின் சக்தியை விரித்துரைக்கவேண்டிய அவசியம இல்லை அல்லவா!

கூடி இருநதவர்களில் வெகு சிலரைத் தவிர லக்ஷக் கணக்கானவர்கள சுவாமிஜியை ஒருகடனைகூட தரிசிதததுகிடையாது. இவர்களுககு சுவாமிஜி கருணைமூர்த்தி என்றே, அன்புக்களஞ்சியம என்றே. உலகமக்களைக கைதூக்கி விட வந்த அவதார புருஷா என்றே தெரியாது.

அப்படியிருந்தும் ஒருதடவையாவது தரிசிக்கவேண்டும என்ற ஆவல் அவர்களுக்கு ஏற்படுவானேன்? இதைத் தூண்டும சக்திதான் என்ன?

சுவாமிஜியின் கட்டுரைகள், புத்தகங்கள் முதலியனவ களைப் படித்து அதனல் இவர்கள் இழுக்கப்பட்டார்களா? ஆம, ஓரளவுக்கு இது உண்மைதான். சுவாமிஜியின தூண டுப் பிரசுரங்கள் இநதியாவில் ஒவ்வொரு மூலையும் ஊடுரு விச் சென்றிருக்கின்றன. உலகம முழுவதிலும் சுவாமிஜியி னுடைய புத்தகங்கள் பரவி இருகின்றன. இவவாறு பரவியிருந்தும் இதனல் பயன்பட்டவர்கள வெகு சிலரே. ஏனெனில் கூடியிருநதவர்களுள வெகு சிலரைத தவிர பெருமபாலோர் அதிகப் படிப்பு இல்லாதவர்களே.

மேலும் புஸ்தகங்களைப் படித்த வெகு சிலரும அங்கு கூடுவானேன்? இவர்கள் புஸ்தகங்களை எழுதிய ஆசிரி யரை ஒரு முறை பார்த்துவிட்டுப் போகலாம என்ற நோக கத்துடன் அங்கு கூடியிருநதார்கள். உளநோககத்துடன வநதிருப்பதாக வைததுக்கொண்டாலும இவாகள் தாங்கள வாசித்த புஸ்தகங்களின எலலா ஆசிரியர்களையும பார்ப்ப தற்காகக் கச்சை கட்டிகொண்டு புறப்படுவார்களா? புற படமாட்டாகள்; இவாகள் நோக்கம இது அல்ல. பின், அங்கு கூடிய காரணம் யாது?

அங்கு கூடியிருந்த அநேகருக்கு சுவாமிஜியின் நாமம கூடத தெரியாது. சுவாமிஜியைப் பார்த்ததும் கிடையாது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதும் கிடையாது. என்ன அதிசயம்! எந்த சக்தி இவர்களை இழுத்தது

ஆத்ம ஞானத்தின் சக்தியே இவர்களை சுவாமிஜியின் பால் இழுத்தது. இதுவே சுவாமிஜியின் முன்பு இவர் களை தலைவணங்கச் செய்தது. சுவாமிஜியின் ஒவ்வொரு உபன்னியாசங்களிலும், சுவாமிஜி பாடிய ஒவ்வொரு பாட் டிலும் இந்த ஆத்மஞானம் ஒளித்தது. இவர்களை அழுத் திழுத்த சக்தியும, இவர்களைக் கொள்ளை கொண்டதும, இவர்களை தாலாட்டி பேரின்ப சாகரத்தில் மூழ்க வைத் ததும, ஞானிக்கு முன, அடக்கம ஒடுக்கமாக இருக்கும் படி செய்ததும் சுவாமிஜியின் ஆத்மஞானதின் மகிமையே. கூட்டத்தின் நெருகலடி சொல்லத்தரமன்று. இத்தனைய நெருக்கடியில அவதிபடும்பொழுதும், இவர்கள் எல்லை யற்ற ஆனந்தத்தை அடைந்ததும் சுவாமிஜியின் ஆத்ம ஞானத்தின் மகிமையே. சுவாமிஜி அவர்களுக்கு உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையையும், அது ஸ்வரன் பால் கொண்டு செல்லாது என்றதையும எடுத்துக்கூறி அதற்கு திருஷ்டாந்தமாக இவர்கள் ஒரு முதலையின்மீது உட்காந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாமல, ஒரு மரக் கட்டையினமீது உட்காந்திருப்பதாக எண்ணி மோசம் போகிறார்களென்றும, உலக வாழ்க்கையின பயனற்ற தன்மையை அறிந்து, ஸ்வரன்பால் செல்ல வழி தேட வேண்டுமென்றும வற்புறுத்திக் கூறியபொழுது, இவர்கள் அடைந்த சாந்திக்கும சுவாமிஜியின ஆத்ம ஞானத்தின் மகிமையதான் காரணம. இவ்வுபதேசம இவர்களைச் சற்றுத் தாக்கியது. எனினும இவர்கள் சந்தோஷத்தையே அடைந்தார்கள். ஏனெனில் சுவாமிஜியிடமிருந்து இவர் களுக்கிக கிட்டிய ஒளஷதம சற்று கசப்புளளது எனினும் வியாதி நிவாத்திக்கு மேறதுவாகும என்பதை இவர்கள அறிவார்கள்.

சுவாமிஜி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு ஈகரத்திற்கும விஜயம் செய்யவில்லை. எனினும் ஒவ்வொரு ஜில்லாவும ஒவ்வொரு ஈகரமும அவரிடம வநதன! கள்ளிக கோட்டையச சேர்ந்தவர்கள் சுவாமிஜியைச சென்னைப் படடணத்தில் பார்த்தாகள் மங்களூரிலிருந்து வந்திருந்த பகதாகள சுவாமிஜியை பயகளூரில் சநதிததார்கள். தூத்துக்குடியிலிருநது மோட்டார்காரகளில் வந்திருந்த சாதகர்கள விருதுநகரில் சுவாமிஜியை தரிசித்தார்கள. கோவூரில அநத ஜில்லாவாசிகள அனைவரும கூடி இருந்தனர். அடலசாத்திற்கு சுவாமிஜி விஜயம் செய்வதற்கு அநேக நாட்கள முன்பே இருநது எலலா பகஙகளிலிருநதும அமல்சாத்திறகு வரும ரயில்வண்டிகள் சுவாமிஜியின் பகதாகளாக கொண்டுவநதவண்ணமாகவே இருந்தன. சுவாமிஜியை ஒருதாம தரிசித்தவர்களும சுவாமிஜியைப் பறறி ஒரு தடவையே கேட்டுள்ளவாகளும, சுவாமிஜியின் பாதங்களை ஒரு தடவை ஸ்பரிசித்தவாகளும, ஒருதடவையுடன் திருப்தியடையாமல், இநதத் திடடாத அமிர்தத்தை அநேக தடவைகள் பருகவேண்டும் என்ற ஆவலுடன் அநேகமுறை சுவாமிஜியின் பாதங்களை ஸ்பரிசிக்க விரும்பினர். இந் நோக்கத்துடனே, இவர்கள் சுவாமிஜி சென்ற இடங்களிலெல்லாம சுவாமிஜியைப பின தொடாந்தே சென்றனர். சிலர் ரிஷிகேசம் வரையும சென்றாகள். யாவரிடமும அன்பு செலுத்தும ஆத்மதத்துவம் இவரிடம் இருப்பதைக் கண்டாகள். மனித உளளங்கள "அனைத்திலும் விளங்குவது ஒரே ஆதமா; தனனுடைய உள்ளத்தில் இருக்கும் ஆத்மாவே யாவருடைய உள்ளங்களிலும் இருப்பது என்ற தன் உபதேசத்தை சுவாமிஜி நிரூபித்துக் காட்டிவிட்டார.

இந்த ஆத்மஞானமே ஆங்காங்கு கூடி இருந்தவர்களை ஸ்தம்பிக்கச் செய்தது. இவர்களின் உலகவாழ்க்கைத் தனமையை அறிவே ஒழித்தது இவர்கள் இதய குகையில் ஞான விளக்கை ஏற்றும்படி செய்ததும் இந்த ஆத்ம ஞானமே. ஆயிரக்கணக்காகக் கூடியவர்களையும் தன்னையும் சுவாமிஜி, சமமாகவே பாவித்துக்கொண்டார். தான் வேறு இவர்கள் வேறு என்று சுவாமிஜி கருதவில்லை. இதை சுவாமிஜி அடிக்கடி வெளிப்படையாக வற்புறுத்தினர். 'ஓ'ங்காரத் தொனியுடன் உபன்னியாசங்களை ஆரம்பித்த பொழுது, எல்லா வேற்றுமைகளும் மறைந்தன. இவர்களும் தாங்கள் வேறு, சுவாமிஜி வேறு என்று கருதவில்லை. இவர்களுடைய கண்கள் சுவாமியைத் தரிசித்தவண்ணமாகவே இருந்தன. இவர்களுடைய காதுகள் உபன்னியாசங்களைக் கேட்டவண்ணமாகவே இருந்தன. இவ்வாறு இவர்கள் திகட்டாத அமிர்தத்தைப் பருகியவண்ணமாகவே இருந்தனர். இவர்கள், தங்களை மறந்து ஹிருதயத்தைத் திறந்து காட்டினார்கள். சுவாமிஜியினுடைய ஹிருதயத்திலிருந்து வரும் வார்த்தைகள்—அந்தாத்மாவிடமிருந்து வரும் வார்த்தைகள்—இவர்களுடைய ஹிருதயத்தில் பாய்ந்தன. சுவாமிஜியின் வெண்ணெய்போன்று உருகும் ஹிருதயம் அன்பு மேலிட்டால உருகிற்று. உருகி ஓடும் அன்புப் பிரவாகத்தைப் பருக ஒவ்வொரு ஹிருதயமும் தயாராகக் காத்துக்கொண்டே இருந்தது. இவ்வாறு ஞானம் சுவாமிஜியின் ஹிருதயத்திலிருந்து பக்தர்களுடைய ஹிருதயங்களுக்குச் சென்றது. இதுவும் சுவாமிஜியின் ஆத்ம ஞானத்தின் மகிமையே தன் ஹிருதய குகையில ஆத்மாவைத் தரிசித்தவன் யாவர் உள்ளத்திலும் உள்ள ஆத்மா

வாக ஆகிவிடுகிறான். இவ்விஷயம் சுவாமிஜியின் இருமாத சுற்றுப்பிரயாண காலத்தில் ஒவ்வொரு நிமிஷத்திலும் நிரூபிக்கப்பட்டது.

இப்புதகத்தில் இந்த அற்புத சக்தியைப் பற்றி அநேக விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன ஆங்கிலத்தில் வெளியிடப்படும் "சிவானந்தரின் உபன்னியாசங்கள்—அகில இந்திய சுற்றுப்பிரயாணம்" என்ற புத்தகத்தில் இதை இன்னும் விரிவாகக் காணலாம் இவ்விரு புத்தகங்களுமே ஒரே காலத்தில் வெளியாகின்றன. இதைக்காட்டிலும் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், பாரத பூமியிலுள்ள லக்ஷக்கணக்கான மக்களின் ஹிருதயங்களையும் இலங்கையிலுள்ள லக்ஷக்கணக்கான மக்களின் ஹிருதயங்களையும் திறந்து பாருங்கள். இவர்கள் உள்ளத்தில் சுவாமிஜியின் அற்புத சக்தி, ஆணித்தரம்போல் பதிந்து கிடக்கிறது. இவர்கள் உள்ளத்தில் சுவாமிஜி குடிகொண்டுள்ளார். இக் கோயில்களிலிருந்து தான் சுவாமிஜி பிரகாசிக்கின்றார். இங்கிருந்துதான் மனிதனை ஆத்மீகத துறையில் கைதூக்கி விடுகின்றார். இங்கிருந்துதான் இவனுக்கு மோக்ஷத்திற்கு வழிகாட்டுகிறார்.

ஜூன் 1951
ஆனந்தகுடீர்
ஹிமாலயம்

சுவாமி ராமானந்தர்.

பரமானந்தா

ஈஸ்வரனே குருவாக வந்து நம்மை ஆட்கொள்ளுகிறார். இதை நன்கு அறிந்தவர் கர்மயோகி சுவாமி பரமானந்தா.

குருவே இவருடைய உயிரும் உடலும். குருவுக்காக இவர் தன்னுடைய உயிரையும அர்ப்பணம் செய்துவிடுவார். குரு சிறிதும் கஷ்டப்பட சகிக்கமாட்டார். குருவுக்குப் பணிவிடை செய்வதில் எல்லையற்ற ஆனந்தம். குரு சேவைக்காகக் குதித்துக்கொண்டு ஓடிவருவார் நாள் முழுதும் குரு சேவையில் ஈடுபட்ட வண்ணமாகவே இருப்பார். கஷ்டமான வேலை என்பதே இவருக்குக் கிடையாது குருவுக்காகச் சஞ்சீவி மலையையும் கொண்டுவந்து விடுவார். இவர் ஒரு "சக்தி ஊற்றே" இவருக்கு மோகூம்கூடத் தேவைஇல்லை. குரு சேவைதான் வேண்டும். குரு சேவையில் ஈடுபடும் மற்லவர்களுக்கும் இவர் அன்புடன் பணிசெய்வார். அவர் களைக் கோயிலில் வைத்தும் கும்பிடுவார்.

இவருக்குச் சேவையே ஆதனை. பலனை எதிர் பாராமல், ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலையில் மூழ்கிக் கிடப்பார். பசி தாகம் இவரைப் பாதிக்காது. சேவையே இவரது பசியை ஆற்றிவிடும். இவரே உண்மை யான கர்மயோகி.

இவர், படிப்பு முடிந்து, ரயில்வேயில் வேலை செய்து வந்தார். அன்புப் பணிசெய்து மக்களின் உள்ளத்தையும் கவர்ந்தார்.

சென்னைப்பட்டணத்தில் தங்கியிருக்கையில் ஆனந்த குடீர் ஸ்ரீ சுவாமி சிவானந்தஜியைப்பற்றி கேள்விப்பட்டார்.

ஒருநாள் கணிமரா புஸ்தகசாலையில் சிவானந்தஜி எழுதிய "Practice of Yoga Vol I" புஸ்தகத்தை வாசித்தார். புஸ்தகத்தை வாசித்து முடித்தார். மனமும் சிவானந்தஜி யிடம் சென்றது. சிவானந்தஜியும் இவரைக் கவர்ந்தார். சுயநலமற்ற சேவையிலேயே மூழ்கியிருக்க வேண்டும் என்னும் தாகம அதிகரிக்கவே, எங்குசென்றால் இத்தாகத் தைத் தணித்துக்கொள்ளலாம் என்று தீவிரமாக ஆலோ சனைசெய்ய ஆரம்பித்தார். கடைசியில் ஞானிகளுக்குத் தொண்டு செய்வதுதான் உண்மையான சுயநலமற்ற சேவை என்பதை உணர்ந்து, வீட்டைவிட்டு வெளியேறி, தான் நாடிய குருவைத் தேடி அலைந்தார்.

1931-ல் ஸ்ரீ சுவாமி சிவானந்தஜி சுவர்காஸ்ரமத்தில் இருந்த சமயத்தில் பரமானந்தஜி சுவாமிஜியை வந்து அடைந்தார். குருவை வந்து அடைந்ததுமே, சீடன் பய பக்தியுடன் குருவுக்குச் சேவைசெய்வதில் ஈடுபட்டான். தன்னையும குருவுக்கு அர்ப்பணமாகச் செய்து கொண் டான். அன்றே ஒரு பிரதிக்ஞையையும செய்துகொண் டான். "ஆண்டவன் என்று ஒருவர் இருபபாரேயானால் இவரே அது. இவர பூஜிக்கத் தகுந்தவர். இவருக்கு மனமாரச் சேவை செய்வேன்." 'சிவா'வுக்குச் சேவை செய்வதே என்னுடைய சாதனம்." இப்பிரதிக்ஞையை நிறைவேற்றியே விட்டார்.

இவர ஒரு உண்மையான கர்மயோகி என்பதை அறிந்து ஸ்ரீ சிவானந்தஜி இவருக்கு உடனே சன்னியாசத் தைக் கொடுத்து ஸ்ரீ சுவாமி பரமானந்தர என்ற பெயரை யும் கொடுத்தார். அன்று முதல், பரமானந்தர, குருவுக்கு ஆத்மீகத்துறையில் அரிய தொண்டாற்றி, குருவினுடைய

கீர்த்தி உலகமுழுவதிலும பாயும்படிச் செய்து ஒரு ஆஸ்ரமத்தையும தெய்வநெறி கழகத்தையும் ஏற்படுத்துவதில சுவாமிஜிக்கு உதவிபுரிந்தார்.

இவர்தான் தெய்வநெறி கழகத்தின முதல் பொதுசகாரியதரிசி. 1936 லிருந்து 1942 வரையில் இந்த ஸ்தானத்தை வகித்தார். இன்று இக்கழகம பிரசித்தி பெறறு இருப்பதற்கு இவருடைய தீவிரமான உழைப்புதான் காரணம.

சுவாமிஜியின முதல் வாழ்க்கைச் சரிதத்தை எழுதியவர் இவரே.

சிவானந்தா பதிபபுக காரியாலயம, சாதனைவாரம் முதலியவைகளையும் ஆரம்பித்து வைத்தவர இவரே.

சுவாமிஜியைப் பற்றிய சினிமாப்படங்களை முதலை முதலாக இவர்தான் எடுத்தார்.

சுவாமிஜியின் கீர்த்தனங்களும உபன்னியாசங்களும் ரிகாமபோன் ரிகார்டுகளில் எடுக்கப்பட்டிருப்பதற்கும் இவர்தான் காரணம ஸ்ரீ சுவாமி சிவானந்தஜியின் வைரவிழா கொண்டாட்டத்தையும இவர்தான் வெற்றிகரமாக முடித்துவைத்தார்.

சுவாமிஜியின அகில இந்திய சுறறு பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துவைத்ததும இவர்தான். எட்டு மாதங்கள இவர் யாத்திரை நிணைபபாகவே இருந்து, இரவு பகலாக யாத்திரைக்காக உழைத்தார். இவ்வுழைப்புதான் வெறறிக்குக காரணம. லக்ஷக்கணக்கான ரசிகருக்கு சுவாமிஜியின் தரிசனம கிட்டியதும இவருடைய உழைப்பினை பயனே

சுவாமிஜியின் அந்தராதமாவிடமிருந்து வந்த வார்த்தையே பரமானந்தஜிக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது இப்பெரிய காரியத்தைச செய்து முடிக்கச சக்தியையும அளித்தது.

பாத்திரையில் சுவாமிஜிக்குச் சிறிது அசௌகரியம் கூட இல்லாமல் அவரை நன்கு கவனித்தது பரமானந்த ஜியே. இக்காரியத்தை பரமானந்தஜி செய்தது போல வேறு ஒருவராலும் செய்திருக்க முடியாது. ஒரு பக்கத்தில் சுவாமிஜியின் தரிசனத்திற்காக ஜனங்கள் சூழ்ந்து விடுவார்கள். கூட்டத்தை விலக்கி சுவாமிஜிக்கு ஒரு ஹானியும் நேராதபடி பாதுக்கொள்ளவேண்டும். மற்றொரு பக்கத்தில் ஆங்காங்கு சுவாமிஜியின் உபன்னியாசத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் இவரிடம் ஆலோசனை கேட்பதற்காகக் காத்து இருப்பார்கள். அவர்களுக்கும் ஆலோசனை அளிக்கவேண்டும். இன்னொரு பக்கத்தில் பத்தில் எழுத வேண்டிய கடிதங்கள் கவனத்தை இழுத்தவண்ணமாகவே இருக்கும். இக் கடிதங்களுக்கு உடனே பதில் எழுதியும் ஆகவேண்டும். இம்மூன்றும் ஒரே காலத்தில் செய்யப்பட வேண்டியவையே. சுவாமிகளுக்குத் தேவையான பொழுதெல்லாம் அங்கும் இருப்பார். சுவாமிஜியின் உபன்னியாசங்களை ஏற்பாடு செய்பவர்களுக்கு ஆலோசனை அளிக்கவும் முன் வருவார். கடிதக்குவியல்களையும் பதில் எழுதிக் கணைப்பார். எனன சுகதி! இது எங்கிருந்து வந்தது? எல்லாம் சுவாமிஜியின் மகிமையே. இவ்வாறு அஷ்டாவதானம் செய்து யாத்திரையை வெற்றிகரமாக முடித்து, சுவாமிஜியையும் அவருடைய ஸ்வஸ்தானத்திற்குக் கொண்டு சேர்த்தார்.

இப்பெரிய காரியத்தை சாதித்த கர்மயோகி பரமானந்தா வாழ்க! குரு சேவையும் குரு பக்தியும் பூஷணமாகக் கொண்ட மகான் வாழ்க!! இவருக்கு ஆரோக்கியத்தையும், குரு சேவை செய்வதற்காக நீண்ட ஆயுளையும் ஆதமீகத்துறையில் உழைக்க ஊகத்தையும் ஆண்டவன் அனிப்பாராக!!!


சுவாமி ராமானந்தா.

பொருளடக்கம்

		பக்கம்
	வடநாட்டு யாத்திரை	1
1.	ஹரித்வார	3
2.	டேராடூன்	5
3.	லக்னௌ	9
4.	பைஸாபாத்	8
5.	காசி	12
6.	சாரநாத்	13
7.	பாட்னா	16
8.	ஹாஜிப்பூர்	19
9.	கயா	20
10.	கல்கத்தா	22
11.	வாலேடோ	26
12.	ராஜமஹேந்திரம்	29
13.	விஜயவாடா	35
14.	சென்னை ...	38
15.	ஸ்ரீநிவாசக காந்தி நிலையம	40
16.	திருவல்லிக்கேணியில்	41
17.	காப்பரேஷன் வரவேற்பு ...	47
18.	பத்திரிகையாளர் சம்மேளனத்தில் ...	48
19.	மைலாப்பூரில்	65
20.	சிவாஜி வியாயமண்டலத்தில் ...	67
21.	விழுப்புரம்	78
22.	சிதம்பரம்	83
23.	மாயூரம்	93
24.	தருமபுரம்	96
25.	சிவானந்தரை சந்திக்கவாரும் (தர்க்கம்) ...	100
26.	மகா சன்னிதான உபசாரம் ..	112
27.	தஞ்சை	137
28.	திருச்சி	145

29.	புதுக்கோட்டை	....	... 149
30.	குருகரிசனம	(நாடகம)	.. 159
31.	ராமேஸ்வரம்	...	 169
32.	கலுஷ்கோடி	....	... 173
33.		இலங்கை	... 177
34.	கொழும்பில்	....	.. 195
35.	முனிசிபல சபை வரவேற்பு		.. 198
36.	மேயர் வரவேற்பு	....	... 210
37.	கோட்டையில் வரவேறபு		.. 215
38.	பொது வரவேற்பு	...	.. 225
39.	மதுரை	...	 228
40.	விருதுநகர்	...	 238
41.	திருநெல்வேலி	....	... 247
42.	நாகர்கோவில்	....	... 264
43.	திருவனந்தபுரம்	....	 273
44.	கொச்சி	...	... 278
45.	பெங்களூர்	...	 280
46.	மைசூர	....	... 281
47.	ஹைதராபாத்	....	... 291
48.	புனே	....	... 297
49.	பம்பாய்	...	... 392
50.	அமலனாத்	....	... 316
51.	பரோடா	....	... 321
52.	அஹமதாபாத்	...	.. 323
53.	டெலி	....	 327
54.	ரிஷிகேசம்	....	 339

இப்புத்தகாசிரியர்கள்



ஸ்வாமி ஸச்சிதானந்தர்



ஸ்ரீ ஸ்வாமி ஸதானந்தர்

Professors, Forest University, RISHIKESH

சிவானந்த திக்விஜயம்

வட நாட்டு யாத்திரை

வருஷக கணக்காக தம்முடைய அனபாகளும் அடியாகளும் பன்முறை விருமபிக கேட்டுமம விண்ணப்பஞ செய்தும் எதற்தும இணங்காத சிவானந்த ஸ்வாமிஜி 1950-ம வருஷத்தில் பலா வேண்டுகோளுக்கு இணங்கி இநதியாவிலுளள பறபல முகியமான இடஙகளுககும் இலஙகைக்தும விஜபம செய்வதாக வாக்களிததா. அவருடைய சிஷபாகளும், ஆயிரக்கணக்கான பகதர்களும தமமுடைய குருநாதரின் மனமாற்றம கணடு ஆனந்தங் கொண்டு சுவாமிகளுடைய அகில இநதிய யாத்திரை இடையூறின்றியும குருநாதருக்கு மெய்வருத்தம அதிக மிலலாமலும நடைபெறுவதற்காக மிகுந்த ஊக்கத்துடன் உழைக்க முற்பட்டாகள. சுவாமிகள் புறப்படுமநாளை நிசசயித்து, அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னமே சகல ஏற்பாடுகளையும் வெறு செம்மையாகவே செய்து வைத்தார்கள.

ஆரம்பவிழா

1950 ஆவது ஸெப்டமபர் 7ஆ யன்று ரிஷீகேசம ரெயில்வே ஸ்டேஷனில யாத்ரா மண்டபியின் ஆரமப விழா நடததபபட்டது. அழகிய ரெயிலவணடி யொன்று ரிஷீகேச ஸடேஷனிலே கொணடுவந்து நிறுததப்பட்டிருநதது. அதனகதது ஸ்வாமிகளும அவருடன செலலுமம சீடருமம இரணடு மாதஙகள இருநது வாழ்வதற்கான வசதி

களும சௌகரியங்களும் வெகு நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்தன. இவற்றை நண்பர் யாவரும அறிந்துகொள் வதற்காக அத்தினம் காலை 10 மணிக்கு ஒரு சிற்றுண்டி விருந்து அவ்வண்டியினகத்தே அளிக்கப்பட்டது ரிஷீ கேச வாசிகளில முக்கியமான சிலரும் ஆனந்தகுடீரத்தி லேயே இரப்போருட் சிலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆங்கில நாகரீகமேபோலக் காணப்பட்டாலும அச்சிற் றுண்டிவிழா நம்நாட்டு மனப்பான்மையுடன் நடைபெற்ற தென்று விளங்கும்படி ஸ்வாமிகள அங்கேயே தம்முடைய கீர்த்தனங்களைப் பாடினதுடன் பிறரையும பாடவைத்தனர். அன்று புதிதாக ஒரு கீர்த்தனம் அமைத்திருந்தார்— அதன் பொருள் "இணங்கு, இடங்கொடு, இசைந்து நில, அவமதிப்பைப் பொறு, தீங்கைப் பொறு, இதுவே உயர்ந்த சாதனை" என்பதாம். அங்கு வந்து கூடியிருந்தவர் மகிழ் வுற்றனர். இறுதியில் மஹா மிருத்யுஞ்ஜய ஜபம் செய்யப்பட்டபின் கூட்டமும் கலைந்தது.

செப்டம்பர் மீ 9 தேதியன்று யாத்திரை ஆரம்பித் தது. காலை 8 மணிக்கு ஆனந்த குடீரத்திலிருந்து ரிஷீகேசம் ஸ்டேஷனுக்கு யாத்ராமண்டலி புறப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட யானை தன்மீது சில மகாத்மாக்களை ஏறறிக்கொண்டு முன்சென்றது அதன்பின் பூமாலைகளால் முற்றிலும் மூடப்பட்ட ஒரு மோட்டாரில் வைத்த ஒரு வெள்ளிப் பல்லக்கில், வெள்ளிக்குடத்தில் கங்காஜலம; அதன்பின் ஒரு மோட்டார்வண்டியில் ஸ்வாமி சிவானந்த ருமம, அவர் அருகே ஒரு பெரிய குடத்தில கங்காஜலமும், அதன்பின் ஆறு மோட்டார் பஸ்களில் அளவுகடந்து நிரம்பியிருந்த ஜனங்கள, அவற்றின்பின் மைல்கணக்கான

ஜனக்கூட்டங்கள், இவை வழி முழுவதும 'ஹரே ராமா' பாடிகொண்டே சென்றது—இவற்றையெலலாம விஸ்தாரமாக எழுதுவது இங்கே சாத்தியமிலலை. வழியிலே தரித்திரநாராயணாகளுக்கு ஸ்வாமிகள் பிடிபிடியாகத் தானம கொடுத்துக்கொண்டே வந்தார். ஸ்டேஷனிலும் வந்து குவிந்திருந்த ஜனங்களுக்கும ஸ்வாமிகள் தரிசனம கொடுத்ததுமல்லாமல இனிய தின்பண்டங்களை வேண்டியவரையில் தாமே எடுத்து அளித்தார். வண்டிக்குள் புகுந்ததும அதற்குளளே வைக்கப்பட்டிருந்த ஒலிபரப்பியின் உதவியால் சுவைமிகுந்த தம்முடைய உபந்யாசத்தை அளித்தார். அவர் கூறியவற்றின் குறிப்பு பின்வருமாறு. "பொறுத்துக்கொள்வதே முக்கியமான சாதனை. ஆபீசுகளிலே குமாஸ்தாக்களுககும மேலதிகாரிகளுக்கும் உனடாகும் சண்டைகளுக்கும, வீடுகளிலே மனைவிக்கும் அவள் புருஷனுக்கும் உண்டாகும் வேற்றுமைக்கும், இதுபோன்ற மற்ற சச்சரவுகளுககும பொறுமை யில்லாததே முக்கிய காரணம். தாழ்மைக குணமில்லாமற் பொறுமை சாத்தியமில்லை" என்பதே. ஸ்டேஷனைவிட்டு வண்டி புறபபடும் போது ஸ்வாமிகள் சொன்னது "எல்லோரும ராமநாமம் சொல்லுங்கள்—அதுவே இநத அணுகுண்டு நாட்களுக்குப் பெரிய அணுகுண்டாகும். அன்றியும நீஙகள் உங்களுடைய உண்மை ஸ்வரூபத்தை அறிய அதுவே பயனளிக்கும்."

ஹரித்வார்

சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி ஹரித்வாரம் வந்து விட்டது. அங்கே ஸ்வாமிகள மாலை 4 மணிக்கு வண்டியிலிருந்து இறங்கி ஹரிக்கீப்பூடிக்குப்போய் கங்கா ஆரதி நடத்தினர்—வண்டியிலிருநதிறஙகியவுடனேயே லாஹூர் வாசிகளான ஸ்ரீமதி கைலாஷவதி யமமையாரும் அவர்கள்

தங்கைகளுமம ஸ்வாமிகளுக்கு மாலையிட்டனர். அப பொழுதே ஸவாமிகள ஹரஹராமம கோதநன தொடங்கினர். அங்கே கூடியிருந்த அனைவருமம ஆனநதபாஷபதது டன் கீர்த்தனையிலே கலந்துகொண்டனா இலவசப் பத்திரிகை களுமம வழஙகபபட்டன ஏழைகளுநதப் பணமும அளிக கப்பட்டது கஙகா பூஜை முடிநதபின் ஸவாமிகள மகாவலி தர்மசாலைகுப் போனா. அங்குமம கீர்த்தனையே. ராசன் நாமமம சொல்லிகொண்டே இருபபதல்லவா அவ ருகது ஆனந்தம! மீண்டுமம ஸவாமிகள வண்டிகுத திருமம பினர்

இரவு மறுபடியும் வண்டி ஹரிதவாரைவிட்டுப் புறப் பட்டது. யாத்திரை வணடி சென்றுகொண்டிருக்குமம பொழுதிலெல்லாம் ஏதாவது ஸ்டேஷனில் சில நிமிஷங்கள் வண்டி நின்றாலும ஜனஙகள வந்து கூடிவிடுவார்கள் அவர்க ளிடமம அநதச சிறு நேரத்துக்குள் மிகப் பெரிய விஷயங் களை ஸவாமிகள் கூறிவிடுவார். இப்படிச் செயவதில ஸ்வாமிகளை எவராலும் வெல்ல முடியாது வைத்யத் தொழிலில் பூர்வாசிரமத்தில மாதநிரைகொடுத்து வாதது போல இபபொழுது வேதாநத மாதநிரைகள கொடுபபது அவருடைய தனிப்பட்ட சாமர்த்தியம. யோகமம, வேதாந தமம என்றும் இவ்விரண்டிலும் உளள நுட்பமான விஷயம் இதுவே :—பணிசெய், நேசி, கொடு, சுத்தப்படுதது, தியானமசெய், ஆத்மானுபவமபெறு—நல்லவனுயிரு, நனமைசெய், தனயகாட்டு, கருணை பாராட்டு. இபபடியே கூறிகொண்டு போவது அவருடைய வழக்கம அவர் கூறுவதுபோலவே நாமும் ஒழுகி யிருபபதாலேயே இன் றைக்கு அவர் மிகவும சிறப்பு வாய்நத ஓபபற்ற மகாதமா வாக விளங்குகிறார்.

மறுநாட் காலை வண்டி ஹர்தாய் என்னும் ஸ்டேஷன் வந்ததும ஜனங்கள் அடக்கமுடியாதவாறு மேனமேலும் வந்து குவிந்து ஒருவரை யொருவர் மோதிகொண்டு முன் சென்றனர். ஸ்வாமிகள் அவர்களுடைய அலட்டுதாகத் தைத் தணிக்க வண்டியினின்று கீழே இறங்கி நின்றார். அன்றியும் அடகத்தைப் பற்றி ஒரு சிறு பிரசங்கம் செய் தார். நாக்கு முதலிய உறுபபுக்களையும இந்திரியங்களையும் விருப்பு வெறுப்புகளையும் அடக்கவேண்டும் என்று கூறி னர். வண்டி புறப்படும் நேரம் வந்ததும் அதற்குள புகுந தார். பளாட்பாரத்திலோ ஜனங்கள் தாயிழந்த கன்று போல தவித்தனர். ஸ்வாமிகள அனைக்கணடு ஸிமமம் போல "ஓம்" என்று நீளமாகவும் உரகவுமகர்ஜித்தார். அனைவரும் அதுபோலவே உரக்கக் கூவவே அவர்கள் கொதிப்புத் தணிநதது. அதன்பின சுவாமிகள "நசன் நாமமே உங்களுக்கு எலலாவறறையும அளிக்கும—என் னுடன் கூறுங்கள! நாம, நாம், நாம!" எனறார். எல் லோரும் "நாம—நாம" என்று கூறிக்கொண்டே யிருக்க வண்டியும் நகர்ந்தது—அபபொழுதும் ஸ்வாமிகள் விட வில்லை—"ஓம்" என்று மீண்டும் ஆரம்பித்தார். அப் பெருங் கூட்டமும் அவரையொத்து "ஓம" என்று உரக் கக் கூவிற்று. இடி முழுக்கம போன்ற அந்த அரவம் எத்தகைய சகதி வாயநததென்று யாரறிவார!

பலமாவ்

பலமாவ் என்ற ஸ்டேஷன் வந்ததும் பலர் ஸ்வாமிகள் வண்டிக்குள புகுந்தனர். எவரே ஒருவன், "ஸ்வாமிகளை மிகவும் துன்பப்படுததுகின்றோம்" என்றான். அதற்கு ஸ்வாமிகள் "துன்பமே உன்குரு" என்று தாம் பாடியுள்ள

ஆங்கிலப்பாட்டைப் பாடினர். அதன் அருமையான அர்த்தத்தை நீர் நிறைந்த கண்களுடன் கேட்டிருந்த அவர்களை ஸ்வாமிகள் 'ஹரே ராம' கீர்த்தனையில சேரச் செய்தார். இதன்பின "ராம நாமமே பெரிய சிலாஜித்—அபூர்வமான ச்யவனப்ராசம்" என்று கூறி அவர்களை ராம நாமம உரைக்கச் செய்தார்—

லக்னௌ

ஸ்வாமிகளுக்கு லக்னௌ ஸ்டேஷனில் சுமார் முந்நூறு பேர் மாலையிட்டனர். அன்பர்கள் அவரிடம வந்து அவருக்கு மாலையிட முடியாமல் இருப்பதைப்பார்த்து ஸ்வாமிகள் தாமே அவர்களிடமிருந்து மாலையைப் பெற்றுக்கொண்டு தமமுடைய கழுத்திலேயே அணிந்துகொண்டார். அது அங்கிருந்த யாவருக்கும ஆனந்தமளித்தது.

அரைநிமிஷமும் வீண் போகக்கூடாதென்பதே ஸ்வாமிகள் நோக்கமாதலால் அவர் உடனே கீர்தனம் ஆரம்பித்துவிட்டார். அவருக்கு மிகவும பிடித்த பாடல் "சிதானந்த ரூபம்" என்பது அதைபபாடி அதன் பொருளையும ஓர் உபன்யாசமாக உரைத்தார். "உணவு ஒன்றுமே கிடையாத போதிலும நீ பரமாத்மா என்பதை மறவாதே" என்று அவர் சொன்னபொழுது அங்கு நின்றவருடைய முகங்கள மலர்ந்தன. அந்த நேரத்தில் அவர்கள் அசசமற்றவராகக் காணப்படடனர்.

ஸ்டேஷனிலேயே மற்றோரிடத்திலும் சுவாமிகள் உபந்யாசமும் கீர்த்தனையும செய்யவேண்டி யிருந்தது. அப்பொழுது அவருடைய அழகான "கொஞ்சம்" என்னும பாடலைப் பாடினர். அவர் சொல்லியதின் குறிப்பு இதுவே

"எல்லாவற்றிலும மிதமாக இரு. உணவு கொஞ்சமாக இருக்கட்டும. அப்படியானால வைத்யனுக்கு வேலையிலல. பேசுவதும் கொஞ்சமாகவே யிருக்கட்டும். அப்படியானல் சண்டை சசரவில்லை" இவ்விஷயத்தை வெகு அழகாக உணாத்தியபின்பு அவர் யோக சாதனதத்தின் இரகசியங் களை ஐநதாறு வார்த்தைகளில் அடகிக கூறினர். "தெய்வானுபூதி பெற இவையே படிகள். கேளுஙகள். சுத்தம், தாரணை, மனனம், த்யானம், ப்ரகாசம், ஒன்றுதல், ஒன்றுக நிற்றல், அனுபூதி." இவ்வளவு சுருக்கமாகக் கூறுமம திறமை ஸ்வாமிகளிடம் மாத்திரமே காணலாகும். அதன்பின் "பதினென் குணஙகள்" (Song of Eighteen "1ties") என்ற பாடலைப் பாடினர். இப்பாட்டை ஸ்வாமிக ளிடம் எத்தனைதரம கேட்பினும் போதுமென்று தோன் றுது. பின்பு, அன்று ஞாயிறறுக்கிழமை என்ற நினைப்பு அவருக்குண்டாகவே ஏசுநாதரைப்பற்றித் தாம இயற்றிய பாடலைப் பாடினர். எம்மதமும தம்மதமாகக கொளளும் ஸ்வாமிகளுக்குக் கிருஸ்தவரும, இஸ்லாமியரும சிஷயர்க ளாக அமைந்துளளார். அதன்பின் "காலையில் ப்ரம்ம முகூர்த்தத்தில் எழு" என்று தொடஙகிப் பல உபதேசங் கள் அடங்கி யிருககின்ற அவருடைய ஒரு பாடலைப் பாடிக் காட்டினர். அப்படிப் பாடுவதோடு நிற்காமல் அதன் கருத்துக்களை விளக்கி மிகவும் அழகிய ஒருபதேசமும் செய்தார். அதனிடையில் "உன்னை எது 'பயந்தாங் கொள்ளி'யாக்குகிறது? அவித்யை—அதுவே மாயை. அதற் கிடம் கொடுக்காதே. நீ உன் உடம்பல்ல வென்று உணர். பணம் பணம் எனறு உயிர் விடாதே. பணத்தைத் திருடன் கொண்டுபோக முடியும். ஆத்மஞானமே பெரிய அழிவற்ற சொத்து" என்று வெகு அருமையாக எளிய நடையிலும்

தெளிவான உதாரணங்களோடு அன்பு ததும்பும குரலுடன் ஸ்வாமிகள் பேசுவதைக் கேட்டு யார்தாம் ஆச்சரியமடையமாட்டாகள்? லக்னௌ ஜனங்கள் மெய்மறந்து நின்றுர்கள் என்றுல் அதில் ஆசசரியமில்லை.

இந்த ஞானவிருந்து முடிந்ததும ப்ளாட்பாரத்திலேயே ஏராளமாக உணவளிக்கப்பட்டது. சுமார் நூற்றைமபதுபோ உண்டார்கள். லகனௌ ஸ்டேஷனை விட்டபின்பு ஸ்வாமிகளை ஜனங்கள் சூழ்ந்துகொண்டது பாரபங்கி என்னுமிடத்திலேதான். அங்கேயும் முன்போலவே கீர்தனமும உபந்யாசமும் செய்து அன்பர்களுக்கு ஆனந்தம் அளித்தார். அங்கு எடுத்துக கூறிய விஷயம் கர்மயோகத்தின் பெருமை. "அஹங்காரமில்லாமல் சேவை செய்வீர்களானுல் ஆசம ஞானம் எளிதிலே தோன்றும" என்பது அவர் கூறியதன் சுருக்கமாகும்.

பைஸாபாத்

பைஸாபாத வந்து சேர்ந்ததும ஸ்ரீ ராமசரண்மிஸ்ரா என்னும அன்பரால் வரவேற்கப்படடு ஸ்வாமிகள் அவர் வீட்டுக்குச் சென்றார். அவர் அளித்த உபசரணைகளைப் பெற்றபின் விக்டோரியா ஹாலுக்குக் சென்று அங்கே உபன்யாசம செய்தார. லக்னௌவுக்கும், பைஸாபாதுக்கும் கமிஷனரான ஸ்ரீ. எஸ் எல். தார், ஐ வி. எஸ். என்பவர் தலைமை வகித்த கூட்டதில் ஸ்வாமிஜி பேசினர். ஓம் என்னும் மந்திரத்தின் மகிமையை எடுத்துக் கூறி அம்மந்திரத்தையே அங்குக கூடியிருந்த எல்லாருடனும் சேர்ந்து காமும் சிறிதுநேரம் உரக்கக் கூவினர். "எல்லாருக்கும் அமரத்துவம வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது ... அளவற்ற சுகம் வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது...

இவை கிட்ட வேண்டுமாயின் இந்திரியங்களுக்கு இடம கொடாதீர்கள்" என்று சாதனமுறைகளைக கூறி, பொறுமை, தைரியம, ஸ்ரத்தை சக்தி, ஆத்மபாவம், அன்பு முதலிய குணங்களை வளர்த்திகொள்ள வேண்டுமெ என்று வற்புறுத்தினர். தன்னை யடக்கிக கொள்ளாதவனுல் மூன் னேற்றம பெறமுடியாதென்பதை யுணர்த்தினர பின்பு ஸ்ரத்தை சதுஷ்டயம, த்யானத்தின் இரகசியம, விடா முயற்சியின் அவசியம், வைராகக்கியம விவேகம் என்ப வற்றின் இன்றியமையாமை முதலியவற்றை விளகிக காட டினர். உபன்யாச முடிவில் தமமுடைய இனிய குரலில் தமமுடைய பாடல்களைபபாடி, கீர்த்தனமும செய்தார். அங்கு கூடினவருக்குத் தாங்கள பூலோகத்திலிருபப தாகவே அப்பொழுது நினைப்பிலலை. ஏதோ அபூர்வமான ஒரு புதிய உலகத்திலிருப்பதாகவே தோன்றிற்று. தலைமை வகித்த ஸ்ரீ தார் என்பவர் முடிவுரை கூறும்பொழுது "எனக்கு ஸ்வாமிஜீயின் தெய்வீக குணங்களை வருணிக முடியவில்லை. நாம் அவருடைய மேன்மையை யனுபவிகக லாமேயல்லாமல் அது எத்தகையது என்று நமமால் சொல்ல முடியாது" என்றார் ஆம— அதுவே ஸ்வாமி சிவானந்த ரின் தன்மை அவருடைய குணங்களை வருணிக்க கடங்க மாட்டா.

மறுநாட் காலை (11—9—50) ராமசரணமிசரா அவர்கள் வீட்டில் ஸத்ஸங்கம் நடத்தப் புறப்படுகொண் டிருக்கும் ஸமயத்தில் ஸ்வாமிகள் தம்மைச சில சிறுவர்கள சூழ்ந்திருப்பதைக் கவனித்தார். உடனே ஒரு கூடை வாழைப்பழம் வரவழைத்து அவர்களுக்குக்கொடுத்து அவர களைக் கீர்த்தனஞ் செய்யவைத்தார். அவர்களும வெகு சீக்கிரம் கீர்த்தன த்வனியைக் கற்றுக்கொண்டு அழகாகச்

சொல்லத் தொடங்கினர்கள். இப்படியே கிடைத்த சந்தர்ப்பங்களை யெல்லாம் உபயோகபடுத்துவதே ஸ்வாமிகள் வழக்கம.

பைஸாபாத்திலே ஸ்ரீ ராம்சரண மிஸ்ரா வீட்டில் ஸத்ஸங் கமும டாக்டர் சக்ரவர்த்தி வீட்டில சிறிது ஓய்வு எடுத்துக் கொளவதும முடிநதபின்பு, அவ்வூர் மாணக்கர்களுக்கு ஒரு அழகிய உபன்யாஸம் செய்தார். அவ்வுபன்யாசம் ஆரம்பித்ததே நனறாக இருநதது. "நீங்கள சிறுவர்களாக இருக்கும்பொழுதே உஙகள் சேவையைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும. வாசனை யிருக்கும புஷ்பத் தையே தெய்வதத்துசகுக கொடுகக வேண்டுப. வாசனை நீங்கின பினபு அபபுஷ்பம பயனறறதாகும்." இப்படி ஆரமபிதது, தைத்திரீய உபநிஷத்து கூறும, "உணமை பேசு, தர்மதைக கைப்பற்று" முதலிய உபதசங்களை விளக்கிப பேசினர. மனத்தையும இநதிரியஙகளையும அடக கவேண்டிய அவசியதத்தையும, சரீரத்தை நோயினறி வைத் துக்கொள்ள வேண்டிய முக்கியத்தையும, அதற்காக ஸாத் வீக ஆகாரமே ஏற்றுக்கொளள வேண்டுமென்பதையும் அவர்களுக்கு அறிவித்து இறுதியில் நிஷ்காமிய ஸேவை யின் மகிமையை விளக்கும ஒரு பாடலையும பாடிக் காட்டி னர். கலாசாலைப் படிப்புக்கு மேலான ப்ரம்மவித்தையைப் பெற முயலவேணடும். அபபொழுதுதான தீரஙக முடியும் என்று சொன்னர. மனிதா தங்கள சரீரங்களையும சொத் துக்களையும பறறியே சிநதனை செய்துகொணடு தங்கள வாழ் நாட்கள எலலாவற்றையும செலவிடடு ஒரு சிறிது சுகமும் பெறாமல் உலகத்தைவிட்டு விலகுகிறார்கள் என்பதை அறி வித்தார். கீதை, உபநிஷத் முதலியவற்றில் இருந்த பல வாக்கியஙகளைச் சொல்லி அவற்றின் கருத்தை விளக்கித்

தம் சொற்பொழிவை மிகவும மேன்மையாக நடத்தினர். இறுதியில் ராமநாமத்தை அவாகள தமமுடன் சொலலி அதிலே மகிழ்ச்சி பெறும்படியும செய்தார அவா பாடும் போதுப கீதத்தை செய்யுமபோதும அவருடைய உளளத் தில் ஊறிகொண்டிருந்த ஆனநதம வெளிப்பட்டுக் கொண்டே இருநததால் அநகு கூடியிருநத அனைவரும் ஆனநதக்கடலில் அமிழ்நதிருநதாகள. பலர் ஸ்வாமிகள் கூடவே சோநது பாடினர்கள். மிருத்யுஞ்ஜய மநதிரத்துட னும் சாநதிக் கூற்றுடனும கூட்டம் முடிவுறறது.

அதன்பின் ஸவாமிகள் அயோத்யாவைப் பார்க்கச் சென்றார். சூரியன் தன் அஸ்தமனக் கிரணங்களை ஸரயு நதியிலே விடுவித்துகொணடிருநத காட்சி கண்ணைக் கவர்ந் தது. அப்பொழுதும் அவ்விடதில் ஸ்வாமிகளால், டளன மாக இருக்க முடியவில்லை. வைராகிகள், வைஷ்ணவபக்தர் கள, ராமபகதர்கள் முதலியோா அஙகே ஸ்வாமிகளைச் சூழ்ந்துகொண்டு நின்றமையால், ஸ்வாமிகள அவர்களை நோக்கிச் சில வார்த்தைகள பேசவேண்டி வநதது. ‘‘ராமர் தசரதர் மகன் மாத்திரம் என்று நினையாதீர்கள். அவர் பரமாத்மா. அவர் பெயா எவவளவு சக்தி வாய்ந்தது என் பது தெரியுமா?’’ என்று ஆரமபித்து ராமர் பெருமையைப் பற்றியும், ராமநாமத்தின் அளவற்ற சக்தியைப் பற்றியும் மற்ற பக்தி முறைகளைப்பற்றியும ஒரு சிறு சொற்பொழிவு அளித்தார். அவா கூறியவற்றை ஸ்ரீ வியாஸஜீமகாஜ் ஹிநதியில் மொழி பெயர்த்தா. அதன்பின் மனத்தை யுருகசும் கீர்த்தனையும செய்யப்பட்டது.

திரும்பினபின்பு பைஸாபாத முனிஸிபாலிடி சேர்மன் ஸ்ரீ ப்ரியததராட என்பவர் வீட்டில கீர்த்தனையும் விருந்தும நிகழ்ந்தன. அஙகிருநது கல்லூரி மாணவிகள்

ஹாஸ்டலில் ஒரு சொற்பொழிவு நடந்தபொழுது சுவாமி களை அவர்களை மைதலேயி, காஞ்சி, முதலிய பாமடைஞான அனைகளேபாலப் பெருமைபெற்று வளர்வேண்டும் என்று ஆசீர்வதித்தார். மெயின்வே ளைே யுனிலும கணக் கற்ற ஜனங்கள் காத்திருந்தனமாலை அஞ்சலி கரிசனைழும் நலலுரையும அளித்து ஆசீர்வதின விடைபெற்றுச சென்றார.

காஞ்சி

ஸெப்டம்பர 12ஆ ஸ்வாமிகள் காஞ்சிவந்து சேர்ந்தார. காலையில் ஸ்ரீ சந்திரசேகர அவர்கள் வீட்டில் ஸ்நானம் நிகழ்ந்தது. பினபு விசுவநாதர் கோயிலுக்குப் போன பொழுது அங்கே கோவில் ஆதிகாரிகள் தாணை ஸ்வாமிக் துடனே வரவேற்று, காப்பகத்தில் ஆதுக கணழுத்தும் சென்று அபிஷேகம செய்ய வசதிகள் அளித்தார்கள். அபிஷேகம அர்சசனை முதலிய முடிந்தபின், ஆங்கே ஸ்வாமிகள் பஞசாக்ஷரிகீர்த்தனை செய்து, சில பாடல்களைம பாடினர். புரோகிதாகளுக்குத் தக்ஷிணைகள் கொடுத்து வெளியே வந்தார.

அனறு மாலை சிவகாஞ்சி அன்பர்கள் வீட்டிலே நடந்த ஸத் ஸங்கத்தில் சுவாமிகள் பகவான்நாமத்தின் மஹிமையைப் பற்றி வெகு விரிவாக பேசியிருந்தார். அம்மஹா நிரதத்திலுள்ள பதினாறு அத்தியாயங்களுக்குள்ள பதினாறு கலைகளுக்குமட இதற்குமட நாமாக்ஷரங்களைப்பற்றிய வெகு நுட்பமான விஷயங்களை விரித்துச் சொன்னபின் ஆம் மந்திரத்தில் அடையக்கூடியபயன் ஜீவன்முக்தியடைவதாகச் சொன்னார். அந்தச் சாஸ்திரத்திலேயே ஹரணாமத்தைப் பற்றிய அரிய உண்மைகளையும் கூறினார் ஹரணாமத்தை

பற்றிய கீர்த்தனைகளை செய்பவேண்டிட அவசியத்தையும் சொன்னார் மாயையைப் தாண்டுவது ஆண்டவன் அருளில் லாமல் முடியாதென்றும், அவ்வருளைப்பெறுவது பக்தியி னல் மாத்திரமே சாத்தியமாகுமென்றும், அந்தப் பக்தியின இன்றியமையாத ஒரு அங்கம் கீர்த்தனையென்றும விவரித்தார

சாரநாத்

ஸெப்டம்பர் மாதம் 13உ ஸ்வாமிகள சாரநாத் என்னும் இடத்தைப் பார்க்கச சென்றார். அங்கே புத்த விக்கிரகத்தினடியிலிருந்து கொண்டு ஸ்வாமிகள தியானம் செய்தார். அசசமயம் அவ்விஹாரத்தின் காரியதரிசியான ஸங்கரதன பிக்ஷு என்பவர் விரைவாக வந்து ஸ்வாமிகளை நமஸ்கரித்தார் வெகு சீகரம் பெரியதோர் குழாம் கூடி விடடது ஸ்வாமிகளும வழகமம்போல கீர்த்தனம ஆரம் பித்துவிட்டார். சிறிது நேரம சென்றதும சிலர் ஸ்வாமி களை பல வேறு சந்தேகங்கள கேட்க முனைந்தனர் அவர் களுக்குள ஒருவர ஹாபீஸ ஸப்யத் என்னும ஓர் இஸ்லா மியர. அவர கேட்டது விகதிக ஆர்தனைப்பற்றியது. தகுந்த விடைகளைக கேட்ட ஹாபீஸ் ஸப்யத் மிகக மகிழ்சசி யடைந்தார அங்கே பாகக இருந்த சிறப வேலைப்பாடுகள யாவற்றையும் பார்த்தானந்தித்த பின்பு ஸ்வாமிகள் ஸ்ரீ கிச்சலு விட்டுகுத திரும்பினர். அன்று ஸ்வாமிகளுககு காசி ஸாவகலாசாலை தத்வஞான ஸங்கத் தார் ஒரு சிற்றுணவிட் விருந்து அளிததனர.

பின்பு, டாக்டர ஆதரேயர அவரகள ஸ்வாமிகளை ஸாவ கலாசாலைக கட்டடஙகளைப் பார்கக அழைதத்ச் சென்றார். அஙகே ஆத்ரேயர அவரகள் விட்டில மிஸ்-

பின்பு, அங்கிருந்து பண்டித கோவிந்த மாளவியா வீட்டிற் குச் சென்று அவரைக் கண்டு சிறிது நேரம் பேசிக்கொண்டி ருந்தார். அதன பின அவ்விடம் விட்டகன்று ஸென்ட் ரல் ஹிந்தி ஸ்கூல் ஹாலுக்குப் போய் அங்கே நடத்தப் பட்ட ஒரு நாடகத்தையும் பார்த்தார். நாடக முடிவில் ஸ்வாமிகளை கௌரவம் ஆரம்பித்தார் யாவரும் கலந்து கொண்டனர்

ராமானுஜ வித்யாலயம்

ஸெப்டம்பர் 14ல் ஸ்வாமிகள் பல இடங்களுக்குப் போய் பேச வேண்டியதாக இருந்தது. அவற்றுள ஒன்றான ராமானுஜ வித்யாலயத்துக்குப போனபொழுது அவ் வாலயத்து அதிபதி ஸ்வாமிகளைப பார்த்துப் புகழ் மொழிகள் பல கூறினர். பினபு அங்கு கூடி யிருந்த கூட்டத்தில் ஸ்வாமிகள ஒரு உபன்யாசம் செய்தார். "நாம் முதலில அஷ்டாக்ஷரத்தால் ஸ்ரீமந நாராயணன் நாமத்தைச் சொல்லுவோம். அதுவே இக்கலியுகத்தில் நமமைமக காப் பாற்றக் கூடியது" என்று ஆரமபித்தார் பினபு, ஸ்ரீ ராமனுஜர் சரித்திரத்தைச சுருக்கமாகச சொல்லி அவர் தென நாட்டிற்களித்த தொண்டை விவரித்து, அவர் தந்துள்ள விசிஷ்டாத்வைதத்தின் பெருமையை விளக்கினர். இகக்கூட்டம கலைந்தபின் ஸ்வாமிகள் விரைந்து சென்று பண்டித கோவிந்த மாலவியாவைக் கண்டு அவர் நோய்தீர, கீர்த்தனஞ் செய்து, மிருதயுஞ்ஜய ஜபமும பண்ணினார். அதன பின் அங்கிருந்து தியஸாபிகல் ஸொஸைட்டிக்குப் போய் அங்கே யாத்ராமண்டலியின் படங்களைக்காட்டும ஸினிமாவைக் காண்பிக்கச்செய்தார். அது முடிந்ததும் காசியிலுள்ள தென்னிந்தியச சங்கத்தார் ஸ்வாமிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரிகையை சமர்பித்தனர். அதற்

கூறியிருந்தவற்றிற்கு விடையாக இரண்டொரு வார்த்தைகள் பேசி விட்டு, ஸ்வாமிகள் தமிழில் சில பாடல்களைப் பாடினர். வேறு பாடல்களும பாடி, கீர்த்தனைகள் நடத்தி, இரவு சுமார் 9 மணிக்கு மீண்டும் கிச்சுலு அவர்கள் வீட்டுக்குப்போய் அங்கே நடத்தப்பட்ட வஸந்த பூஜையும் பார்த்தபின ஸ்வாமிகள நித்திரைகுச் சென்றார். வஸந்த பூஜையில் நான்கு வேதங்களிலிருந்தும சிற்சில பாகங்கள் ஓதப்பட்டன. நித்திரைக்காக ரயில்வே ஸ்டேஷனுக்குத்திரும்புமபொழுது இரவு பனிரண்டு மணியாகி விட்டது. எனினும் ஸ்வாமிகள் களைப்படைய வில்லை. "ஆண்டவன் நாமம சொல்லிக கீர்த்தன செய்யும பொழுது எனக்கு எங்கிருந்தோ ஒரு சக்தி வருகிறது" என்று ஸ்வாமிகள சொன்னர்.

ஸெப்டம்பர் 14உ தியஸாபிகல் ஸொஸைட்டியில் ஸ்வாமிகள செய்த பிரசங்கத்தின் முக்கியமானவை கீர்த்தனத்தின் மகிமை, பிரமமானந்தம் அடையவேண்டிய விதம, எப்படி ஒருவன் ஜீவன் முக்தனாக முடியும என்பவையே வழக்கம்போலவே பிரசங்கமுடிவில சில கீர்த்தனைகளும் பாட்டுகளும இருந்தன, அன்றைய தினமே ஸென்ட்ரல் ஹிந்து பெண்கள் பள்ளிகூடத்தில் நிகழ்ந்த உபன்யாசத்தில மாதர் கைப்பற்ற வேண்டிய நெறிகள், குழந்தைகளை வளர்க்க வேண்டியவிதம், பற்றற்றிருக்கும வழிகள், ஜபம கீர்த்தனை முதலியன செய்து மனதைத் சுத்தஞ் செய்து கொள்ளும முறைகள முதலிய விஷயங்கள விளக்கப்பட்டன.

அதே தினத்தில கிச்சுலு அவர்கள வீட்டில ஸ்வாமிகளுக்கு அதிக ஸங்கத்தார் உபசாரப்பத்திரங்கள பல

அளித்தனர். வடமொழியில் காசிவாசிப பண்டிதர்கள் ஒரு பத்திரம் கொடுத்தார்கள். டாகடா லால்தீன் என்பவர் உருது பாஷையில் ஒன்று கொடுத்தார். எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு சங்கத்தாருக்கும் அவரவருக்கேற்றவாறு வந்தன மொழிகளை ஸ்வாமிகள் கூறினார்.

ஸெப்டம்பர் 15உ காலை 8 மணிக்கு ஸ்ரீ பி எஸ். எஸ். வர்மா, ஸ்ரீ அதவானி முதலிய அநேக பெரிய உத்தியோகஸ்தர்கள், வித்வான்கள் முதலியோர் சுவாமிகளை வந்து பார்த்துப்பேசி அவரவர்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டபின்பு வண்டி காசியை விட்டு நகர்ந்தது. அப்பொழுது ஸ்டேஷனில் ஜனக்கூட்டம் மொய்த்திற்று.

பாட்னாவில்

குறிப்பிட்ட நேரத்தில் வண்டி பாட்னாவுக்குப் போயிற்று. மழையைப் பாராட்டாமல் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் எதிர் நோக்கி நின்றனர். பல பெண்மணிகள் ஆரத்தியும் பூஜையும் செய்து முடித்த பின் ஸ்ரீ ஏ. கே. ஸின்ஹாவால் ஏற்படுத்தப்பட்ட ஊர்வலம் ஆரம்பித்து அது அரை மைல் நீளம் இருந்தது. பீஹார் மந்திரி ஸ்ரீ அனுக்ரஹ நாராயண ஸின்ஹா ஸ்ரீ ஏ கே. ஸின்ஹா வீட்டிற்கு வந்து சுவாமிகளுடன் போஜனம் செய்தார். பின்பு கயானந்தர் ஹைஸ்கூலில் ஸத்ஸங்கம், யூனிவர்ஸிட்டி ஹாஸ்டலில் ஸகீர்த்தனம், ஸ்ரீ கோபால்ஜி வீட்டில் பல பக்தர்களால் பாத பூஜை முடிந்தபின ஏ. கே. ஸின்ஹா வீட்டிலேயே ஓர் உபன்யாசமும் நடைபெற்றது. அப்பொழுது கீர்த்தனங்களின் மேன்மையைப் பற்றியே சுவாமிகள் பேசினார். ஞானயோகம், காமயோகம், பக்தி யோகம் என்ற மூன்றும் சேர்வேண்டும் என்று சொன்ன

போது அதுவே அத்யாத்மக் கிச்சடி யென்றார். தேகப் பயிற்சியின் அவசியம் எடுத்து விளக்கப்பட்டது. அமெரிக்கா முதலிய நாடுகளில் நடைபெறும் தான தரு மங்களுக்கும் நம் நாட்டு நிஷ்காமிய லீலைக்கும் உள்ள வேற்றுமையை எடுத்துப் பேசினர். ஹடயோகத்தைப் பற்றிப் பேசினபொழுது சுவாமிகள் பிராணயாமம் செய்து காட்டினர். ஸாதன முறைகள விளக்கிக்காட்டப் பட்டன. அத்வைத விஷயமான பல உண்மைகள தெளிவாக அறிவிக் கப்பட்டன. உபந்யாச முடிவில் ராம ராம கீர்த்தனமும் நடைபெற்றது.

அன்று ஸாயங்காலம் பி. என். காலேஜ ஹாலில் உபந்யாசம நடந்தது. ஏறக்குறைய 10,000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். டாக்டர் ஸ்ரீகிருஷ்ண ஸின்ஹா (பீஹார் பிரதம மந்திரி அக்ராஸனம் வகித்தார். அவர் சுவாமிகளைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசினர். சுவா மிகள் நிகழ்த்திய பிரசங்கத்தில் பல உண்மைகள் கூறப் பட்டன. தைத்திரீய உபநிஷத்திலுள்ள உபதேச மந்தி ரங்கள் விளக்கப்பட்டன. கொஞ்சம் கீர்த்தனங்கள் பாடிய பின் யாத்திராமண்டலியின் சினிமாக்காட்சியின் மூலம் யோகாஸனங்கள், யோகஸகிரியைகள் முதலியவற்றைக் காண்பித்த பின் இரவு 9 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

ஸெப்டம்பர் மாதம் 17உ யாத்திரா மண்டலி ஏ. கே. ஸின்ஹா வீட்டில் ஊர்வலமாய்ப்போய் ஒரு பெரிய தன வான் வீட்டுக்குச் சென்றது. அந்தத் தனவான் ஸ்ரீ ராதா கிருஷ்ண ஜயென் என்பவர். அவர் வீடு ஓர் அரண்மனையை யொத்திருந்தது. சுவாமிஜிக்கு அவர் பாத பூஜை செய்தார். அவர் சேகரித்து வைத்திருந்த அபூர்வமான மிகவும் விலை

பெறுமான பற்பல காசுகளிக் கருவிகளை சுவாமிகளுக்கு காண்பித்தார். அவற்றை யெல்லாம் பார்த்த பின்பு வெளிப்புறத்தில் தோட்டத்தில் ஒரு பிரஸங்கம் நிகழ்ந்தது. பல பக்தர்கள் வந்து கூடி யிருந்தனர். "நதத்ர சூர்யோ பாதி" என்று தொடங்கும் மந்திரத்தை எடுத்துக் கொண்டு சுவாகள் ஆரம்பித்த அந்தராத்மாவின் இயல்பைப் பற்றியும் மற்ற பல்வேறு வேதாந்த விஷயங்களைப்பற்றி மிகவும் மேன்மையான ஒரு சொற்பொழிவு அளித்தார். வாலிஷ்டத்திலிருந்து சிகித்வஜ உபாக்யானத்தைச் சொல்லி அதன் அந்தரார்த்தத்தை விளகினர். ஜன்ம துக்கம், ஜராதுக்கம், முதலிய துன்பங்களைக்கூறி விவேக புருஷன் செய்ய வேண்டிய காரியத்தை விவரித்தார். மாயையின் பற்பல செயல்களை விளக்கினர். ஸாதனை செய்வதெப்படி என்பதை அறிவித்தார்.

பிரசங்கம் முடிந்தபின் தம்முடைய கையாலேயே சுவாமிகள் அங்கிருந்தவருக்கு பிரசாதங்கள் கொடுத்தார்.

அங்கிருந்து பாட்னா ஏ. ஐ. ஆர். ஸ்டேஷனுக்குப் போய் ஒலிபரப்பில் பேச்சும் கொடுக்கப்பட்டது.

மாலை 2-30 மணிக்கு பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு பேட்டி அளிக்கப்பட்டது. அதன் பின் தயானந்தர் ஹைஸ்கூலில் மாணக்கர்களுக் கென்று ஒரு சொற்பொழிவு அளிக்கப்பட்டது. அங்கே "ஓம்" என்னும் மந்திரம் உரக்கச் சொல்லப்பட்ட பின் சில நிமிஷங்கள் எல்லோரும் தியானத்திலும் இருந்தார்கள். இவை முடிந்தபின் மாணவர்களுக் கேற்றவாறு சுவாமிகள் பேசினர். ஜபத்தின் முக்கியத்தையே எடுத்துச்சொன்னர், ஸ்வபாவம நன்றாக

இருக்கவேண்டுமென வற்புறுத்தினர். சில இங்கிலீஷ் பாடல்கள பாடப்பட்டன. கீர்த்தனத்துடன் பிரஸங்கம் முடிவு பெற்றது.

பின்பு தயாளந்தா பெண்கள் பள்ளியில் நாற்றுக்கணக்கான பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஸ்வாமிகள் தரிசனம அளித்தார் அங்கேயும ஸங்கீர்த்தனமும் பிரசங்கமும நடைபெற்றன.

ஹாஜிப்பூர்

ஸெப்டம்பர் 18ல் காலை பாட்னாவிலிருந்து ஹாஜிப்பூருக்கு மோட்டார் லாஞ்சு மூலம யாத்திராமண்டலி போய்ச் சேர்ந்தார். அங்கே காலை 9-30 மணிக்கு போனபொழுது சுமார் 5,000 ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். ஊர் வலம மிகவும் மும்மரமாய் இருந்தது. ஐந்து யானைகள், 200 ஸ்கௌட்டுக்கள், இரண்டு லாரிகளில் போலிசார், கார்கள் முதலியன வந்திருந்தன. சுவாமிகள் உமாகாந்த சுக்லா வீட்டில் இறங்கினர். எல்லோரும் அங்கேதான் சுவாமிகளை வணங்கினார்கள். அருகிலே யிருந்த ஒரு சினிமாக் கொட்டகையில் பிரசங்கம், ஆஸனககாக்ஷி முதலியன நிகழ்ந்தன. பிரசங்கத்தில் சுவாமிகள் ஸங்கீர்த்தனத்தின் அத்யாவசியத்தைப் பற்றியே பேசினர். சிறிது கீர்த்தனங் களும செய்தார். பின்பு யோகம் என்பது என்ன வென்று பேசி யோகத்தின் பல்வேறு வகைகளையும் பிரிவுகளையும் எடுத்துக்காட்டினார். இறுதியில் ஸதாச்சாரம் என்பதைப் பற்றி வெகுதெளிவாகப் பிரசங்கித்தார்.

பிரசங்கம் முடிந்த பின்பு யாத்ராமண்டலி லாஞ்சி ஏறிப் பாட்னாவுக்குச் சென்றது.

கயா

ஸெப்டம்பர் 19ஆ மண்டலி கயாவை அடைந்தது. சுவாமிகள் மாலைகளால் மூடப்பட்டார். ஸ்டேஷனுக்கு வெளியே புஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்ட ஒரு மோட்டார் கார் காத்திருந்தது. அதன் மூலம கயா வாசியான ஸ்ரீ காசிநாத்ஸின் ஹா வீட்டில் சுவாமிகள வரவேற்கப்பட்டார். அங்கு போனவுடனேயே ஸத்ஸங்கம ஆரம்பமாயிற்று அன்று மாலை 5-30 மணிக்கு ஸமஸ்கிருத விதயாலயத்தில் சுவாமிகள் ஹிந்தியிலும இங்கிலீஷிலும் பேசினார். 'யாக்கை' நிலையாமையைப் பற்றிக் கூறிய அறிவுரையே அந்தப் பிரசங்கம். உடம்பு அழியப்பட்டது என்று கூறும் பொழுது ஆத்மன் அழிவற்றது என்று சொல்ல வேண்டியதாயிற்று. அப்பொழுது ஆத்மாவைப் பற்றிய யாவும் விளக்கப் பட்டன. ஆத்ம ஞானம் பெறுவதற்காக சங்கராச்சாரியா கூறியுள்ள ஸாதன சதுஷ்டயம் விளக்கப்பட்டது. அதைசசொல்லப் புகுந்தபொழுதுசுவாமிகள் உபநிஷதத்துக் களின் நுட்பங்களை எடுத்துக் காட்டினர்.

ஸெப்டம்பர் 20ஆ சுவாமிகள் புத்த கயாவுக்குப் போனர். அங்கு ஸத்காரம் பெற்றுத்திருமபின பின் கயாவிலே ஜவஹராலால் ஹாலிலே வேறொரு சொற்பொழிவு நடத்தினர். அப்பொழுது அவா சொன்ன மஹா மந்தி ரத்தை, கூட்டத்திலுள்ள எல்லோரும் அவருடன் சொன் னர்கள். ஜனங்களின் உத்சாகத்தைக்கண்டு சுவாமிகள அடுக்கடுக்காய் பல கீர்த்தனங்களைச்சொல்ல ஆரம்பித்தார். அதன பின் கடவுள் எப்படி நமமைப் பல ஆபத்துக்களி லிருந்தும் காப்பாற்றுகிறார் என்று விவரித்தார். பின்பு சிறிது சிறிதாக ஞானமார்க்கம, பக்திமார்க்கம், முதலிய

மார்க்கஙகளைப் பற்றிப் பேசி வேதாந்த தத்துவங்களின் அநதரங்கங்களை யெல்லாம் கூறினர். சொற்பொழிவு மிகவும் தெளிவாக இருநதமையால் ஜனங்கள் நிசப்தமாக யிருநது முடிவுவரையில் கேட்டார்கள்.

ஸெப்டம்பர் 21உ காலை 9 மணிக்கு சுவாமிகள் ஸ்ரீ சிவப்ரஸாத், ஸ்ரீ ராம்மூர்தி என்னும் இரு அன்பர் களை வசிக்குமி வீட்டுக்குப்போனர். அவ்விருவருமி தங்கள் வீட்டின் உச்சியில் ஒரு சிவாலயம் கட்டி யிருந்தார்கள். சுவாமிகள் மூலம சிவனைப் பிரதிஷ்டை செய்யவேணும் என்று ஆசை கொண்டிருந்தார்கள். சுவாமிகள் அஙகு சென்றபொழுது அவருக்குப் பாத பூஜை முதலிய உபசாரணைகள் நிகழ்நதன. பின்னர் சிவனுக்கு அபிஷேகம் செய்து, அர்சனை முடிந்தது. புதிதாகச் செய்திருநத சிவ லிஙகத்தை அங்கே பிரதிஷ்டை செய்தார்

அதன் பின கங்கா மஹாலில் ஒரு ஸத்ஸங்கம் நடை பெற்றது. அபபொழுது சுவாமிகள் தியானத்தைப் பற்றி விவரித்தார். கூட்டத்திலிருநத சிலருக்கு இங்கிலீஷ் விளங்காமலிருந்ததால், சிதானநத சுவாமி அசசொற் பொழிவை ஹிந்தி பாஷையில் மொழி பெயர்த்துப் பேசினர்.

பின் கயாக் கல்லூரி மாணக்கர்களுக்காக ஒரு பிரஸங்கம் நடந்தது. வெய்யில் மிகவும் அதிகமாகத் தீய்ந்து கொண்டிருந்தது. எனினும் பாதகாசரியர்களும் மாணக் கர்களும் சுவாமிகள வரவை வெகு ஆர்வத்துடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள. பிரசங்கம் செய்பவர் பேச்சைக் கவனமாகக் கேட்க வேண்டும் என்றும், இளமைப் பருவத்திலேயே ஆண்டவனை வழிபடப் பழக வேண்டு

மென்றும், மனிதனுடைய புத்தியிலுலேயே எல்லா உண்மைகளையும அறிந்து விடுவது சாத்தியமல்லவென்றும, உடம்பை நோய்களினின்று காப்பாற்றிக் கொள்ள யோகாஸனப பயிற்சி அவசியமென்றும், சூய நமஸ்காரத்தால் அடையக கூடிய பயன் மிகப்பெரிதென்றும, வெட்பம், தண்மை, என்னும இரண்டையும் பொறுக்கப் பழக வேண்டுமென்றும் போதித்த பின் ஓங்காரத்வனியின் சக்தியையும மேன்மையையும் எடுத்தோதினர். அப்பிரசங்கத்தில் இன்னும அநேக நுண்ணிய விஷயங்கள் அடங்கியிருந்தன. அவற்றைக் கேட்டவர மிகப்பயன் பெற்றவராஞர்கள.

சொற்பொழிவு முடிந்தபின் திவ்ய ஜீவன சங்கத்து நண்பர் சிலரைப் பார்த்துவிட்டு சுவாமிகள் ரயிலடிவஸ்டேஷனுக்கு மாலை 7 மணிக்கு வந்து சேர்ந்தார். 9 மணிக்கு வண்டி புறப்படப் போகின்றதென்று தெரிந்திருந்த பலர் ஸ்டேஷனில் வந்து குவிந்து விட்டனர். அங்கே சுவாமிகள பாதத்தைப்பிடித்துத் தத்தம சிரங்களில் வைத்துக் கொளளவேண்டும் என்ற எண்ணத்துடன் கூட்டத்துக்குள்ளே நெருக்கிச் சென்றவர் தொகை கணக்கிட முடியவில்லை. தமக்கு இதனல் ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு சுவாமிகள் அந்நேரத்திலெல்லாம் மஹா மந்திரமும் ராம மந்திரமும் உரக்கச் சொல்லிக்கொண்டே யிருந்தார. இறுதியில் வண்டி நகர்ந்தது. ஓங்காரத்வனி முழங்கிற்று.

கல்கத்தா

ஸெப்டம்பர் 22உ யன்று சுவாமிகள் கல்கத்தாவை அடைந்தார் அங்கே அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு ஒரு சக்கரவர்த்திக்கு அளிக்கக் கூடும் வரவேற்புக்கு

நிகராக இருந்தது. எனினும் ஒரு விஷயத்தில் மாத்திரம் வேற்றுமை யிருந்தது. இங்கே தனவான் ஏழை என்ற பேதம் காணப்படவில்லை ஒரு ஞானியின பால் அனை வரும ஒரே மாதிரி கௌத்த பகதியே அதற்குக் காரணம. சுவாமிகள கழுத்திலிறின மாலைகளுக்குக் கணக்கே இலலை. "ஜெய்" கூற்றின் ஒலி வானம் வரை பாய்ந்தது.

ஸ்ரீ ஸ்வாமிகள் தங்குவதற்காக கங்கைக் கரையில் ஒரு பெரிய பங்களாவை ஸ்ரீ காசிராம குப்தா அவர்கள ஏற் படுத்தி யிருந்தார். கங்கையைப் பார்த்ததும் ஸ்வாமி களுக்கு ஆனந்தம் பொங்கிற்று. எதிரில் தக்ஷிணேசுவரர் கோயிலும் இருந்ததால் இன்னும் அதிக சந்தோஷம் உண்டாயிற்று.

ஸ்வாமிகள வந்து சேர்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் ஆண் பெண் சிறுவர் பெரியோர் என்று நூற்றுக்கணக் கான ஜனங்கள் வரத்தொடங்கிவிட்டார்கள். தரிசனம் கிடைத்தவர் போலல் அவரிருந்த இடத்துக்கு வேறு கூட்டம வந்துவிடும். ஸ்வாமிகளும் கீர்த்தனம் செய்து கொண்டும் ஓய்வு எடுத்துக்கொண்டும் தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார்.

இப்படிக் கொஞ்சம் நேரம் சென்றபின் ஸ்வாமிகள் கல்கத்தா ஸர்வகலாசாலையில் பிரஸங்கம் செய்யப் புறப் பட்டார். மார்க்கத்தில் காசிராம் குப்தாவின் அச்சுச் சாலையைப் பார்வையிட்டார். அங்கேயும் கீர்த்தனம் செய் தார் சிறிது ஓய்வும் ஏற்றுக்கொண்டார்.

ஸர்வ கலாசாலையிலே ஆஷுடோஷ் ஹாலுக்குச் சென்றபோது ஸ்ரீ என். ஜி. கோஷ் சுவாமிகளுக்கு மற்ற போதகாசிரியார்களை அறிமுகப்படுத்தினர். கூட்டமும்

ஆரம்பித்தது. பிரார்த்தனையும் ஓங்கார உச்சரிப்பும் முடிந்தபின் சுவாமிகள் பிரசங்கத்தைத் துவக்கினர். வழக்கமபோலவே அச் சொற்பொழிவு வேதாந்த விஷயமாகவேயிருந்தது.

ஸைபடம்பா 23வ காலி கல்கத்தா வாசிகளான அன்பர்கள பலரும் சுவாமிகளை வந்து கண்டனர். மாலை அகில இந்திய ரேடியோ ப்ராட்காஸ்டிங் ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்வையிட்டார். அங்கேயிருந்த டைரக்டர் முதலியோர் சுவாமிகளைத் தகுந்தபடி ஸத்காரம் செய்தார்கள். அதன்பின் சுவாமிகளுடைய சில பாடல்கள அங்கே ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

அதன்பின் ஸ்ரீ சுவாமி விசுத்தானந்த ஸரஸ்வதி வித்யாலயத்திலே ஒரு பொதுக்கூட்டம கூடிற்று. அங்கே சில ஆசசாரியார்கள் சுவாமிகளைப் பற்றிய புகழ்மொழிகள் கூறினர்கள். அவர்களுக்குள் ஸ்ரீ முகுந்த மாளவியாஜி கூறியது சுவாமிகளின் தபோ மகிமையைப்பற்றியதாயிருந்தது. தறகாலத்திலே சுவாமிகள் செய்துவருமம தொண்டு மிகவும் சிறபபுற்றதும் மிகவும அவசியமானதும் ஆகும என்று அவா சொனனார.

சுவாமிகள் செய்த பிரசங்கத்தில் ரசுவர நாமத்தின் மகிமை பெரிதும எடுத்துக்காட்டபபட்டது சிரதையும் ஸேவா பாவமும் அதிகபபட்டு கீர்த்தன செய்து வர வேண்டுமென்றும், வேதாந்த விசாரம் பயில வேண்டுமென்றும அப்பொழுதுதான் உலகம் ஆனந்தத்திலிருந்து தோன்றி யிருக்கிறதென்ற உண்மையை அறியக்கூடுமென்றும் சுவாமிகள் பல உதாரணங்களுடன் விளக்கிக் காட்டினர். அதன்பின் நாமநாமம் சொல்லப்பட்டது.

தெய்வீக குணங்களை எப்படிப் பெற்றுக் கொள்வதென்றும் அறிவித்தார். எப்படி தெய்வ அனுக்கிரகமும் அருளும் நினைக்கமுடியாத பலவிதங்களிலும் தோன்றுமென்றும் அறிவித்தார். துன்பங்கள் யாவும் வைராக்யத்தை வளர்த்துவதற்காகவே வருகின்றன என்று உணர்த்தினர். துறவின் மேண்மையையும் எடுத்துக்காட்டினர்.

பிரஸங்கம் முடிந்தபின் சுவாமிகள் ஸ்ரீ பால பக்ஸ ஸிங்கானிய என்னும் ஒரு அன்பர் வீட்டிற்குப் போய் அங்கே அவருடைய மனைவியின் நோய் தீர்வதற்காகக் கீர்த்தனமும் மிருத்யுஞ்ஜய ஜபமும் செய்தார்.

ஸெப்டம்பர் மீ 24உ கல்கத்தாவிலுள்ள ஸீதாராம் ஆலயத்துக்கு சுவாமிகள் போனார். அங்கே பெண்மணிகளுக்காக ஒரு கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. அதில் சுவாமிகள் ஒருமணிநேரம் வரையில் ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், முதலிய பாஷைகளில் கீர்த்தனம் செய்தார். ஸ்திரீகளும் கீர்த்தனங்களில் கலந்துகொண்டார்கள்.

அதன்பின் பாலிகஞ்சிலே பாரதி தமிழ்ச்சங்கத்தில் தென்னிந்தியர் குழாம் ஒன்று கூடிற்று. அங்கே சுவாமிகள் தமிழிலேயே ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். தாமே இயற்றியிருந்த பல தமிழ்ப் பாடல்களையும் பாடினர். பிரசங்கவிஷயம் பரமாத்மாவைப்பற்றியதாயிருந்தது. இடையிடையே வேடிக்கையாகவும் பெரிய உண்மைகளைக் கூறினர். உதாரணமாக, "அங்கே ப்ளாக் மார்க்கெட்டில்லை. ஹோட்டல் இல்லை. க்ளப் இலலை! அங்கே மோனம் ஒன்று தான் உண்டு. வெறுப்பெல்லாம் தாண்டிச்சென்ற பேரன்பு தான் உண்டு" என்றார். வாசனைகளையும திருஷ்ணைகளையும் எப்படி வெல்வதென்று போதித்தார். துக்காராம் ஒரு

நாயினிடம தம்முடைய இஷ்டதெய்வமான விட்டலனைக் கண்டகதையைக் கூறினர். பக்தியின் மேன்மையையும் நிஷ்காம்ய சேவையின் பெருமையையும் பற்றிபேசினர். பிரஸங்கம் நடந்துகொண்டிருந்தபோதே மழை பெய்து கொண்டிருந்தது. பலர் நனைந்துகொண்டிருந்தார்கள். ஆனாலும ஒருவரும் மழையைப் பொருட்படுத்தவில்லை.

பின்பு பாலிகஞ்சில் தங்கியிருந்த ஜகத்குரு பூரி சங்கராச்சாரியாரை சுவாமிகள் தரிசித்தார். அதன்பின் ரெயில்வே ஸ்டேஷனுகுச் சென்றார். அங்கே கூடி யிருந்த நண்பர்களைவிட்டு பிரிவது மிகவும் கஷ்டமாய் விட்டது. எனினும் வண்டி இரவு $7\frac{1}{2}$ மணிக்குப் புறப் பட்டுவிட்டது.

வால்டேர்

ஸெப்டம்பர் 25ஆ பகல் பன்னிரண்டரை மணிக்கு ரெயில் வால்டேர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. சூரியன் கொடுமையாகக் காய்ந்துகொண்டிருந்தது. அதையும் பாராட்டாமல் ஸ்டேஷன ப்ளாட்பாரம்முழுவதும ஜனங்கள் சுவாமிகள் வரவை எதிர்பார்த்துக் காத்துககொண்டிருந் தார்கள். பூர்ணகும்பம், வேதபாராயணம் முதலியன தென் னிந்தியா வந்துவிட்டதென்று அறிவித்தன. திவ்ய ஜீவன ஸங்கத்துக் காரியதரிசி ஸ்ரீ ஜி. ஆர். ஸுப்ரமணியம் பூரண கும்பத்தைத் தம் தலைமீது வைத்துக்கொண்டு முன் செல்ல, யாத்ரா மண்டலி பின் சென்றது. திவ்ய ஜீவன ஸங்கத்துக் கட்டடத்தில் சுவாமிகளுக்குப் பாதபூஜை நடந்தது. வெளியிலிருந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு வராக உள்ளே அனுப்பி சுவாமிகளைத் தரிசனம் செய்ய வைத்தமையால் குழப்பமில்லாமல் ஜனங்கள் அனைவரும்

சுவாமிகளைத் தரிசிக்க முடிந்தது. இதக்காரியம் முடிந்த பின்பு சுவாமிகள் தம்முடைய யாத்திரை வண்டிக்கே வந்து விட்டார்.

மாலை ப்ரேமா ஸமாஜததுக்குப் போனர். சிறு பையன்களும் பெண்களுமே வரிசையாக நின்றுகொண்டு சுவாமிகளுக்கு வழிகாட்ட, ஸமாஜத்து நண்பர்கள் வெகு அழகாக வரவேற்புக் கொண்டாட்டத்தை நடத்திரர்கள். அங்கே காப்பாற்றப்பட்டு வரும் அனைதைகளை சுவாமிகள பார்வையிட்டார். அவர்களுட் சிலரிடம் சென்று பேசி அவர்களை ரசுவாரதாமம் ஜபிக்குமபடிச சொன்னர். அதன் பின் அந்த ஸமாஜக் காரியதரிசியான வைத்யரிடம் சில மொழிகள் கூறினர். அப்பால், பெண்மணிகள் பிரார்த்தனை நடத்திரர்கள். அது முடிந்ததும சுவாமிகள் தம பிரசங் கத்தை ஆரம்பித்தார்.

" நோயாளிகளுக்குச் செய்யும கைங்காரியத்துக்கு மேலான எந்த யோகமும் இல்லை " என்று ஆரம்பித்து ஒவ்வொருவரிடத்தும் கடவுளைக் காணவேண்டும், என்ற உண்மையையும், தானதர்மம செய்வதாலேயே உள்ளம் பரிசுத்தமாகும் என்பதையும், அப்படிச் செய்து வருவாரை யொரு காலத்திலும் கடவுள கைவிடமாட்டார் என்பதையும் பல அத்தாட்சிகளுடன் எடுதது க் காட்டினர். கீர்த்தனம் ப்ரேமஸமாஜத்தின் ஒரு நித்திய கர்மமாயிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றர். அவித்யை விலகுவதற்குக் கர்ம யோகமும் பக்தியோகமும் மிகவும் அவசியமென்று தெரி வித்தார்.

இரவிகழ்ச்சிகளுக்குப்பின் ஸர்வ கலாசாலைக்குச் சென்றர். அங்கே மிகவும சிறப்புற்ற பிரசங்கம் ஒன்று

நடத்தினர். அதன் முடிவில் டவுன் ஹாலுக்குப் போய் அங்கேயும் ஒரு சொற்பொழிவு அளித்தார். கூட்டம பிகவும் அதிகமாயிருந்தாலும் சுமார் இருபது ஊழியர்கள் வழிகாட்டி வந்ததால் சுவாமிகள் போகமுடிந்தது. அங்கே பேசினவற்றுள் சிறந்தவை, கலிகாலத்தில் ஸங்கீர்த்தனம ஒன்றே எளிய தெய்வமார்க்கம் என்பதும், ஆகாராதிகளைக் குறைப்பதே சாதனைகளின் முதற்படி என்பதும், கடவுள் அனந்த ஆனந்தம் என்பதும், இகத்திலும் பரத்திலும் இன்பம அளிக்கக்கூடியது தெய்வ வழிபாடு என்பதும், சாதனைகள் செய்து வந்தாலன்றி மகாபுருஷனை முடியா தென்பதும், இக்காலத்தில் நிர்ப்பய தீர்கள் தேவை யென் பதும், அப்படிப்பட்டவா கடவுள் பால் நம்பிக்கை வைத்தாலல்லாமல தங்கள பயத்தை அறவே யொழிப்பது அசாத்திய மென்பதும் போன்ற, பல கருத்துக்கள். தீக் குணங்களைச் சிறுகசசிறுக ஒழித்துப் பழகுவதற்கு உதவி யாக பல சிறு சாதனைகளை அறிவித்தார். இறுதியில் மகா மந்திரஜபமும் ராம ஜபமும் எலலாரும் கலந்து செய்தார் கள். அதன்பின் கூட்டம கலைந்தது.

ஸெப்டம்பர் 26ஆ காலை 6 மணிக்குப் புறப்பட்டு வால்டேரிலேயே யுள்ள சாரதி ஆச்சிரமத்துக்குப் போனோ. அவ்வாச்சிரமத்தை ஸ்தாபித்துள்ள ஸ்ரீ ஸ்வாமி ஓங்கார் என்பவர் சிவானந்த சுவாமிகளுடைய பழைய நண்பர்களுள் ஒருவர். ஓங்காரசுவாமிகள் போர்பெற்ற யோகிசுவரர். பல நன்மைகள் அங்கே செய்து வருகிறார். தீராநோய்களை யோகத்தால் நீக்குகிறரென்ற நம்பிக்கை அங்குள்ள ஜனங்களுக்குண்டு. சிவானந்த சுவாமிகள் அந்த ஆச்சிரமத்தில் மிருந்த அன்புடன் வரவேற்கப்பட்டார். அங்கே தங்கியிருந்த இரண்டுமணிநேரம் கீர்த்தன செய்து

கொண்டும் நன்மொழிகள் கூறிக்கொண்டும இருந்தார். பின்பு ஸ்ரீ ஓங்கார சுவாமிகளிடம் விடைபெற்றுப் பிரிந்தார்.

அருகாமையில் கடல் இருந்தமையால் அங்கே ஆனந்த மாக ஸ்நானமும செய்தார். அதன்பின் வேறொரு மாளிகை யில் தங்கி அங்கே கும்மைக் காண வந்தவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். சிலர் பாதபூஜைகள் செய்தார்கள். இச் சடங்குகள் நடந்தறியபின், மகாமந்திரம், ராமநாமம், பிரணவகீர்த்தனம ஆகிய யாவும் நிகழ்ந்தன. அப்பால் சில வேதாந்தக் கீர்த்தனைகளை சுவாமிகள் பாடினர். இவை முடிந்ததும் அநேகம்பேர் பற்பல மந்திரங்களை தீக்ஷை யாகப் பெற்றுக்கொண்டார்.

பின்பு, ரெயில்வே ஸ்டேஷனுக்குப்போய் ராஜமஹேந்திரத்துக்குப் பிரயாணம் செய்தார். வண்டி புறப்பட்ட பொழுது ராமநாமம் முழங்கிற்று.

இராஜ மகேந்திரம்

ஸெப்டம்பர் 26ஆ மாலை 5 மணிக்கு சுவாமிகள் இராஜ மஹேந்திரம் வந்து சேர்ந்தார். அங்கே சுவாமிகளுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைப் பார்த்தால் பண்டைக்காலத் தில் அயோத்யாவில் வஸிஷ்டருக்கும், விதேஹத்தில் யாக்ஞவல்கியருக்கும் அளித்திருக்கக்கூடிய வரவேற்பு எப்படி இருந்திருக்கும் என்று யூகிக்கக்கூடிய வகையி லிருந்தது. வேதமும் ஓதுமம கோஷ்டியார் பூர்ண கும்பத் தோடும் மந்திரங்களோடும அழைத்து முன்நிற்க, மாலை சாத்துவோர் ஒருவர் பின் ஒருவராய் சாத்திவர, தெரு வெல்லாம் நிறைந்து பக்தகோடிகள் ஆரவாரத்தோடு நல்

வரவு கூறும் மொழிகளைச் சொனனரர்கள. இதனிடையே நாதஸ்வரமும் வாசித்துக்கொணடிருநதது. சுவாமி கள் மீது ஜனங்கள வந்து விழாதபடி ஸ்டேஷனிலே ஒரு பாதுகாப்புக் கோஷ்டியும் இருநதது.

ஸ்டேஷனிலேயே பற்பல கனதனவான்கள் சுவாமி களை வநது பார்த்தார்கள. அவர்களுக்குள் பிரதானமாகக் கூறகூடியவர் கோதமி ஜீவகாருணய ஆச்சிரமத்தைச் சாநத ஸ்ரீ காருண்யானநதர் எனபவர். ஊர்வலம் சென்ற பொழுதெல்லாம் இநத சுவாமிகள் மோட்டார் காரின் புட்போர்டில் நின்றுகொண்டே "ஸ்ரீ—ஸ்ரீ சிவானந்த மகாராஜ்-கி-ஜெய்" என்று உரக்கக கூவிக் கொண்டே வந்தார். ஊர் முழுதும் பறபல ரஸ்தாக்கள் வழியாக ஊர்வலம் சென்றபொழுது அங்கக வாசிகளுக்கு சுவாமிகள் தரிசனம் கிடைத்தது. இதற்காகவே அவ்வூர் வலம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அயல் ஊர்களிலிருநதும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் இராஜமஹேந்திரத்துக்கு வந் திருநதார்கள.

ஊருக்குள செல்லும மார்க்கத்தில் கோதாவரி காணப் பட்டது. அத்திவ்ய நதியைப் பார்த்ததுமே சுவாமிகள் கணமூடி மௌனமாகத் தியானத்திலமர்ந்தார். பற்பல இடஙகளில் வரவேற்புப் பநதர்கள நிறுவப்பட்டிருநதன. அரசாங்கக கல்லூரியில் பொதுக்கூடடம் கூடிற்று. அக் கல்லூரியிலும மற்ற இடங்களிலுமம சுவாமிகளின் வாக்கி யங்கள் கொட்டைஎழுத்துக்களில் அழகாக எழுதப்பட் டிருநதன. அவற்றுள் சில, "நற்குணம் பயின்று தீக்குண மொழிமின்," "ஸேவை செய், அன்புகாட்டு, கொடு. சுத்தனையிரு, த்யானம் செய், அனுபூதி பெறு" என்பனவ.

இப்படி அவ்வூரிலுள்ள முக்கியமான கூட்டங்களிலெலலாம சுவாமிகளுடைய நற்கூற்றுக்கள் பலகைகளில் எழுதப் பட்டுத் தொங்கவிடப்பட்டிருந்ததானது ; அவ்வூரார் சுவாமிகள் பால் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்திற்று.

யாதராமண்டலி தங்கவேணடிய டாளிகையில் சுவாமி கள் வந்தபொழுது அவரைப் பாக்கவந்த கூட்டத்துகுக் கங்கு கரையில்லை. ஒவ்வொருவரும் சுவாமிகள் பாதங்களைத் தொடவேண்டும் என்று ஆசைபபட்டதால் ஒருவாமீது ஒருவா விழுந்து மோதிக்கொண்டனர். அகூட்டத்தை அடக்கமுடியவிலலை. வெகு பிரயாசையுடன் சுவாமிகளுக்கு அபாயமொன்றும் நேராதபடிப் பார்த்துக்கொளளப் பட்டது.

அரசாங்கக் கல்லூரி மைதானத்திற் கூடிய ஜன சங்கியை பல்லாயிரம என்றே சொல்லமுடியும். சூப்பரிண டெண்டிங் எஞ்சினீயர் ஸ்ரீ சேஷாவதாரம் என்பவர் சுவாமி களைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசினபின்பு சுவாமிகள தம்முடைய பிரசங்கத்தை ஆரமபித்தார. அவர் பேசியவை யாவும் வேதாந்தத்தின் அந்தரங்க உண்மைகளும், அவற்றை அனுபவத்துக்குக் கொண்டு வருவதற்கேற்ற உபாயங்களுமாகவே யிருந்தன இடையிலும் இறுதியிலும் கீர்த்தனங்களும் நாம உச்சாரணமும் நடைபெற்றன. சுவாமிகள் பேச்சு அவ்வூராருக்கு ஓர ஆனந்தமழை போல இருந்தது.

பிரசங்கம் முடிவுற்றபின் சுவாமிகள் இராமகிருஷ்ண ஸேவாஸமிதிக்குச சென்றார். அங்கு கூடிய ஜனங்களின் சங்கியையும் எண்ணிக்கையற்றதாயிருந்தது. ஸ்ரீ இராம

கிருஷ்ணா சிலையின் அருகே போனதும் சுவாமிகள் சில நிமிஷநேரம் தியானத்தில் ஆழ்ந்தார். அதன்பின் அங்கிருந்த புத்தகசாலை, வைத்தியசாலை முதலியவற்றைப் பார்வையிட்டார். பின் வெளியே வந்து அங்கே அமைக்கபட்டிருந்த பந்தலில் புகுந்து சொற்பொழிவொன்று அளித்தார். கூடியிருந்த ஜனங்கள் யாவரும் சுவாமிகள் கூறியவற்றை முற்றிலும் தெரிந்துகொள்வதற்காக ஸ்ரீ மஹதாரி பஹகாரய்யா என்பவர் சுவாமிகளின் பிரசங்கத்தை தெலுங்கு பாஷையில் மொழிபெயர்த்துக் கூறிவந்தார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் சுவாமிகளுடைய சரிதையைப் பற்றியும் சிறிது கூறினார்.

அங்கே ஒரு ஹார்மோனியம் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு சுவாமிகள் அதையெடுத்து பஜனையும் கீர்த்தனமும் ஆரம்பித்துவிட்டார். அவர் எடுத்துக் கொடுத்த தொனியைப்பின்பற்றிப பாடினவர் நூற்றுக்கணக்கான பேர்கள். அபபொழுது ரசுவரூபம் பரதரூபத்தும் முழுஙகிற்று. சிறிது நேரம் சென்றதும் சுவாமிகள் இருதொகுதிக் கீர்த்தனம துவக்கினார். அதாவது பெண்டிர் எல்லாரும் ஒரு கூற்றுக்கூற, அதற்கு எதிர்க் கூற்றாக ஆண்மக்கள் கூற வேண்டியது. இப்புதுமையை அவ்வூரார் மிகவும் மெச்சினர்கள். கூட்டம் கலையுமபொழுது இரவு மணி 10—45.

மறுநாள் காலை (27-9-50) சுவாமிகளுடைய கோதாவரி ஸ்நான ஊர்வலம் விடியற்காலை ஆரம்பமாயிற்று. கங்கா ஜலம கொண்ட வெள்ளிக் குடத்தை ஒருவர் ஏந்திச் சென்றார். முன்னே நாதஸ்வர கோஷ்டி சென்றது. அவர்களுக்குப் பின் வேதபாராயண கோஷ்டி. அவர்களுக்

குப் பின் பஜனைகோஷ்டி. இறுதியில் சுவாமிகள் இப்படியாக இரண்டு மைல் தூரம உளாவலம சென்றது. இதுவே தருணமென்று தெரிந்த இராஜ மகேந்திர வாசிகள் இக்குழாத்தில் ஆங்காங்கு கலந்துகொண்டனர். அவர்களுக்கு சுவாமிகளின் தரிசனமும் அப்பொழுது கிடைத்தது.

கோதாவரிக்கரையில அதற்கென்றே அமைக்கப பட்டிருந்த ஒரு பந்தரில் சுவாமிகள் அமர்ந்தார. சாஸ்திரிகள் சிலர் சுவாமிகளைப் பூஜை செய்தார்கள். ருத்ரம், சமகம், புருஷஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம் முதலிய மந்திரங்கள் உச்சாரணம் செய்யப்பட்டன. கோதாவரி அஷ்டோத்ர சத நாமவாளியைச சொல்லி சுவாமிகள அர்ச்சனை செய்தார்.

அச்சமயம் பலர் வந்து கோதாவரி நீரால் சுவாமிகள் பாதத்தை அபிஷேகம் செய்தனர். பின்பு அங்கிருந்து மார்க்கண்டேயர் கோவிலுக்குப்போய் சிவபூஜையை முடித்துக்கொண்டு சுவாமிகள் திரும்பினர.

காலை மணி 8-45க்கு பெண்கள் பள்ளிக்கூடமாகிய வைசிய ஸேவாஸதன ஸம்ஸ்கிருதப் பள்ளிக்கூடத்துக்குப் போய் அங்கே ஒரு சிறு பிரசங்கம் நடத்தினர். அப்பொழுது முக்கியமாகக் கூறபபட்டது, ஸ்திரீ தர்மம். பெண்மணிகள பதிவிரதா தர்மத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தால் ஸாவித்ரியைப் போல சகதியும் புகழும் பெறலாமென்று சொன்னர். பெண்கள செய்யக் கூடிய சாதனைகள் பலவற்றை விளக்கினர்.

பின்பு இராஜமஹேந்திரம் முனிஸிபாலிட்டி ஸ்வாமிகளை வரவேற்றது. அப்பொழுது நிகழ்ந்த பிரசங்கத்திற்கு அக்ராசனம வகிதவர ஜில்லா நியாயாதிபதியாகிய ஸ்ரீ

வி. எம். திகூஷி துலு என்பவர் வரவேற்புப்புப் பத்திரம் முனி வலிபாவிட்டிச சேர்மன் ஸ்ரீ பி. ஜி. நாகேசுவர ராயரால் வாசிக்கப்பட்டது. சுவாமிகளும் தகுந்தபடி பேசினர்.

கொவ்வூர்

ஸெப்டம்பர் 27உ ஸ்டீம் லாஞ்சில் ஏறிக்கொண்டு கோதாவரியைத் தாண்டிச் சென்று கொவ்வூருக்கு சுவாமி களும் யாத்ராமண்டலியும் போய்ச சேர்ந்தார்கள். கொவ்வூரில வரவேற்றவர் இராமலிங்கேசுவர் ராவ் என்னும் பிரபு. கொவ்வூரிலும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இராமலிங்கேசுவர ராவுக்கு சிவானந்த சுவாமியைக் கண்ட பொழுதுண்டான சந்தோஷம் இவ் வளவு அவ்வளவு என்று கூற முடியாது. அவர் தயாரித் திருந்த மோட்டார்கார் புஷ்பங்களால் முற்றிலும் மறைக்கப் பட்டிருந்தது. தெருவிலும் ரஸ்தாவிலும் குவிந்திருந்த ஜனங்களின் சங்கியை கணக்கிட முடியாததாக இருந்தது. வீடுகளின் கூரைகள் வெண்மாடங்கள் முதலியவற்றிலும், விளக்குமாடங்களிலும் வழியிலிருந்த மரங்களிலும் மற்ற இடங்களிலும் ஜனங்கள் இருந்தார்கள். போலீஸார் முயற் சியெடுத்துக் கூட்டத்தைத் தடுத்தநிலை சுவாமிகள் மீது ஜனங்கள் விழாமல் சுவாமிகள் காப்பாற்றப் பட்டார்.

அந்த ஊர் பள்ளிக்கூடத்துக்குச் சென்ற பொழுது அங்கேயும் பெருத்த கூட்டம் வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிந்தது. வரவேற்புப் பத்திரிகைகள் இங்கிலீஷிலும், தெலுங்கிலும், ஸம்ஸ்கிருதத்திலும் படிக்கப் பட்டன. ஸ்ரீ கந்தஸாமி என்ற ஜில்லா ஜட்ஜ் சுவாமிகளைப் பற்றிப் புகழ்ந்து சில வார்த்தைகள் கூறினர். அதன் பின் சுவாமி கள் வழக்கம் போல் கீர்த்தனைகளும் ஓங்கார த்வனியும் சேர்ந்த பிரசங்கம் செய்தார்.

கூட்டம் முடிந்தது. எப்படியோ அவ்விடத்திலிருந்து ஜனங்களைவிட்டு விலகி சுவாமிகள் வெளியே கொண்டுவந்து விடப்பட்டார்.

இராமலிங்கசுவர ராவ் வீட்டிற்கு வந்ததும் அங்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தது, வெளியாயிற்று. அந்தப் பிரபுவும் தம்முடைய வீட்டைத் தேவலோகம் போல அலங்கரித்திருந்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பாத பூஜைக்காக கையில் புஷ்பங்கள் வைத்துக் கொண்டு காத்து நின்று கொண்டிருந்தாகள். அரை மணி நேரம் வரைத் தம்முடைய பாதத்தைத் தொடச சமமதித்துக் கொண்டு சுவாமிகள் உட்கார்ந்திருந்தா. பின்பு உள்ளே சென்று விட்டார்.

சமையலறையைச் சென்று பார்த்தபொழுது இராம லிங்கசுவர ராவ் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு விருந்து தயாரித்ததாகத் தெரிந்தது.

சிறிது நேரம் அங்கே தங்கின பின்பு சுவாமிகள் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் திரும்பிப்போனர். யாததிரா மண்டலியைச் சேர்ந்த சிலர் கூட்டத்துக்குள் அகப்பட்டுக் கொண்டனர். அவர்கள் ஊருக்குள்ளே போய்ப் பார்த்த பொழுது ஒவ்வொரு வீடும அநேகமாகக காலியாகவே யிருந்ததை அறிந்தார்கள. வீட்டில் வசிப்பவர் யாவரும் வீட்டைட்ப பூட்டிகொண்டு சுவாமிகளைப் பார்க்கப் போயிருந்தார்கள்.

விஜயவாடா

ஸெப்டம்பர் 28உ காலை 8 மணிக்கு ரெயில் விஜய வாடாவை அடைந்தது. சுவாமிகளுக்குத் தக அவெள கரியம் ஏற்பட்டிருந்தது. ஜவராமும் இருமலும் இருந்தன.

ஸ்டேஷனில் வந்த கூட்டமோ ஆயிரக்கணக்காகவே யிருந்தது. உயரமான ஓர் ஆஸனத்தில் சுவாமிகளை இருத்தினர்கள். அவர மீது மாலைகள இடப்பட்ட வண்ணமே இருந்தன. பின்பு நான்கு குதிரைகள் கட்டின ஒரு வாகனத்தில அவரை அமர்த்தி ஓர் ஊர்வலம புறப்பட்டது. வேத பாராயண கோஷ்டியும், நாதஸ்வரமும, உடன் சென்றன. ஸ்ரீ ஸி. வெங்கட செட்டியார் வீட்டில் இறங்கி சுவாமிகள் ஒரு சிறு தர்சன ஸத்ஸங்கம நடத்தினர. வயது மிகுந்த ஒரு ஸம்ஸ்கிருத வித்வான் வரவழைப்புப் பத்திரத்தை ஸம்ஸ்கிருதத்தில வாசித்தார். சுவாமிகள் அதற்கு விடை கூறினர். அப்பொழுது உண்மையான ஆனந்தம் ஆத்மானந்தமே யென்றும் அதை ஹிருதயத்திலேயே காண வேண்டும் என்றும் கூறினர். "ஆத்மானுபவம் பெறுவ தெப்படி" என்று தெரிந்து கொள்ள வழிகளும் கூறினர்.

பிரசங்கம் முடிந்த பின் ஏ. ஐ. ஆர். ஸ்டேஷன் டைரக்டர் ஸ்ரீ ராமச்சந்திரய்யர் சுவாமிகளை அழைத்துச் சென்று "தர்மம்" என்ற விஷயத்தைப் பற்றி ஒரு சொற் பொழிவை ஒலிப்பதிவு செய்தார் அதன் பின்னர் அக்டோபர் 1 தேதி யன்று ஒலிபரப்பப்பட்டது.

இதனிடைய ஆயிரக்கணக்கான ஜனங்கள் பாத பூஜையும் செய்து பிரசாதமும் பெற்றனர.

பின்பு எஸ். ஆர். ஆர் வி. வி. இ. கல்லூரியில ஒரு பெரிய சொற்பொழிவு நிகழ்ந்தது. பற்பல விஷயங்கள் பேசப்பட்டன. அவற்றுள் முகியமான ஒரு விஷயமும் புகுத்தப்பட்டது. அதாவது கல்லூரி மாணக்கர் "கமயூனிஸத்தில" கலந்து கொள்ளக் கூடாது என்பதே.

கல்லூரிப பிரசங்கம் முடிந்த பின்பு கொத்தக்குடிக் கோவிலில் ஒரு கூட்டம் கூடிறறு. அங்கேயும் ஸ்வாமிகள் பேசினர். பின்பு ராம்மோஹன் புத்தகசாலையைப் பார்வை யிட்டார். அங்கும் பெருத்த ஜன சங்கியை கூடியிருந்தது.

அதன் பின் ஸமஸ்கிருத வித்தியா பீடத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் உபநிஷத்துக்கள் கற்பிக்கப்படு கின்றது.. சுவாமிகள் அந்த இடத்திலே சில கீர்த்தனைகள் செய்தார். இவையெல்லாம் முடிந்தபின் மறுநாள் காலை 8 மணிக்கு விஜயவாடாவை விட்டு ரயில் புறப் பட்டது. ராம் ராம் ராம் என்னும் முழக்கம் அங்கே பல மாக இருந்தது.

இரவு பொன்னேரியிலே கடத்தப் பட்டது. மறுநாட் காலையில் மண்டபி சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தது.

சென்னை

"நேற்று சுவாமிகள் சென்னை வந்து இறங்கினர். ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் அமோக வரவேற்பு நடந்தது. சுவாமிஜியை ஊர்வலமாக திருவல்லிக்கேணிக்கு கொண்டு போயினர். அவர் பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்று அங்கே பூஜை செய்தார். பிறகு ராமானுஜ கூடத்தில் நாம சங்கீர்த்தனம் நடத்தினர். அதில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். அவா ராமானுஜ கூடத்தில்தான் தங்கியிருக்கிறார். சுவாமிஜி அகில இந்திய சுற்றுப் பிரயாணம் செய்கிறார்.

"சுவாமி சிவானந்தா 1887வது செப்டம்பர் மாதம் 9-ந் தேதி தமிழ்நாட்டில் பத்தமடை என்ற ஊரில் பிறந்தார். இவரது தந்தை எட்டையாபுரம் ஜமீனில் தாசில்தாராக இருந்தார். சுவாமிஜியின் பெயர் குப்புசாமி. அவர் எட்டையாபுரம் ராஜா வைஸ்கூலிலும திருச்சி எஸ். பி. ஜி. காலேஜிலும் வாசித்தார். தஞ்சையில் வைத்ய கல்லூரியில் வாசித்த பின் மலேயா சர்க்கார் சர்வீஸில் சேர்ந்து டாக்டரானர். 1922-ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பியதும் சன்யாச ஆச்ரமத்தை ஏற்று ரிஷிகேசத்தில் காரியாலயமொன்று ஏற்படுத்தினர். யோகம், வேதாந்தம் பற்றி பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்." —தினசரி 1-10-50.

"ரிஷிகேசம் "ஆனந்த குடீர்" ஸ்தாபகரும், அகில இந்தியா திவ்ய ஜீவன சபையின் தலைவருமான சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் நாளை காலை 7—30 மணிக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷன் வந்து சேருகிறார். அங்கு அன்னர் மாலைகள சூட்டி, வரவேற்கப்படுவார். மங்கள ஹாரத்தி நடக்கும்; வெளி வாசல் வரையில் ஊர்வலம்.

"8-30 மணிக்கு பைக்ராப்ட்ஸ் ரோட் கிழக்குக் கோடியிலிருந்து (கடற்கரைக்கு வெகு சமீபம்) நல்ல தம்பி முதலி தெரு, தேரடித் தெரு, தெற்கு மாடவீதி, தூளசிங்கப் பெருமாள் கோவில வீதி, சிங்காரச்சாரியார் தெருக்கள் வழியாக ஊர்வலம். 9-30 மணிக்கு ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவிலுக்கு சுவாமிகள் விஜயம் செய்து தரிசனம் பண்ணுவார்.

"11 மணிக்கு திருவல்லிக்கேணி சிங்காராச்சாரியார் தெருவில உள்ள ராமானுஜ கூடம் வந்து சேருவார்.

பகல் 12 மணி முதல் 2 வரையில் ஓய்வு.

மாலை 6-30 மணிக்கு மவுண்ட்ரோட் "ஸ்ரீராமா பில்டிங்" ல் உள்ள தென்னிந்திய பத்திரிகாசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் சுவாமிகள் பேசுவார்.

திவ்ய ஜீவன சங்கம்

"நாளை பிற்பகல் 2-30 மணிக்கு ஜார்ஜ் டவுன், கெ.39, லிங்கிசெட்டித் தெருவில் உள்ள நர்மதா கிரஹத்துக்கு ஸ்ரீ சுவாமி சிவானந்தா விஜயம் செய்வார். பஜனை நடைபெறும்.

சிவாஜி வியாய மண்டல்

"சுவாமி சிவானந்தரை வரவேற்பதற்காக 2ந் தேதி திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் உள்ள மண்டல் கட்டிடத்தில் ஒரு கூட்டம் நடக்கும். சுவாமிஜி பேசுவார். மண்டலைச் சேர்ந்தவர்கள் யோகாசனங்களும் இதர பயிற்சிகளும் செய்து காட்டுவார். மண்டல் தலைவர் ஸ்ரீ கே. சஞ்சீவிகாமத் தலைமை வகிப்பார்.

ஸ்ரீ நிவாஸ காந்தி நிலையம்

"சுவாமிஜியை வரவேற்பதற்காக ஷெ ஸ்தாபனத்தின் ஆதரவில அக்டோபர் 1-ந தேதி, ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு தெணம்பேட்டை, நெ, 96, மோபரீஸ் ரோட்டில் ஒரு கூட்டம் நடக்கும. சுவாமிகளுக்கு திவான் பஹதூர் ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் நல்வரவு கூறுவார்கள்."

—சுதேச மித்திரன் 29-9-50

சுவாமி சிவானந்த சரஸ்வதி
சென்னையில் குதூகல வரவேற்பு

ரிஷிகேசிலிருந்து யாத்திரையாகக் கிளம்பியுள்ள மண்டலேச்வர ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி ஆந்திர தேசத்தில் தமது பிரயாணத்தை முடித்துக் கொண்டு இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார்.

அவரும அவரது கோஷ்டியினரும ஏறிவந்த ரயில் காலை 7-30 மணிக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷனை அடைந்ததும் "சுவாமி சிவானந்தஜிக்கு ஜே" என்ற கோஷம் வானைப் பிளந்தது.

சென்னை உபசரணைக்கமிட்டி தலைவர் நீதிபதி ஸ்ரீ ஏ. வி. விச்வநாத சாஸ்திரியும், கமிட்டி காரியதரிசியும், காரப்பரேஷன் கவுன்சிலருமான ஸ்ரீ பி. கே. விநாயகமும் உதவிக் காரியதரிசி ஸ்ரீ கே. ஆர். சேஷாத்ரியும், கார்ப்பரேஷன் கவுன்சிலர் ஸ்ரீ எ. ஆர். வி. ஆச்சாரும் இன்னும் பல பிரபலஸ்தர்களும், பக்தர்களும், அபிமானிகளும் ஸ்டேஷனில் கூடியிருந்து சுவாமிஜியை வரவேற்றனர்.

"சுவாமிஜிக்கு மலர் மாலைகள் சூட்டினர். பாண்டுவாத்தியம் 'ஜனகணமன' கீதத்தை முழங்கியது. மேள வாத்தியம் முழங்க ரயிலிலிருந்து சுவாமி அழைத்து செல்லப்பட்டு வெளியில் ஹம்ஸ ரூபத்தில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தில் அமர்த்தப்பட்டார். பலத்த "ஜே" கோஷங்களுக்கிடையே வண்டி திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டது.

திருவல்லிக்கேணியில் ஊர்வலம்

"நன்முக அலங்கரிக்கப்பட்ட காரில் இன்று காலையில் திருவல்லிக்கேணி தெருக்கள் வழியாக சுவாமி சிவானந்தா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். திருவல்லிக்கேணி கடற்கரையில் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. காரில் சுவாமிகள் பக்கத்தில் நீதிபதி ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி அமர்ந்திருந்தார். ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணய்யர் முதலியோரும் ஊர் வலத்தில் கலந்து கொண்டனர்.

"ஊர்வலம் பைக்ராப்ட்ஸ் ரோடு நல்ல தம்பி முதலித் தெரு, தேரடித் தெரு, தெற்கு மாடதெரு, துளசிங்கப் பெருமாள் தெரு, சிருங்காராச்சாரி தெரு, வழியாகச்சென்று ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலை அடைந்தது. ஸ்வாமிகள் அங்கு சுவாமி தரிசனம் செய்தார். 11 மணி சுமாருக்கு அவர் ராமனுஜ கூடத்தை அடைந்து, ஓய்வுக்காக அங்கு தங்கினர்.

"ஊர்வலம் வரும்பொழுது ஜனங்கள் திரளாகக் கூடி சுவாமிகளை தரிசித்தனர். ராஜா ஹனுமந்தலாலா தெரு முனையில் அங்குள்ள சிவன்கோயில் நிர்வாகிகள் பூர்ண கும்பத்துடன் அவருக்கு மரியாதை செய்தனர்.

—சுதேசமித்திரன் 30-9-'50

தென் இந்தியப் புண்ணிய புருஷருக்கு நகரில் குதூகல வரவேற்பு

சென்னை, செப் 30—இமயமலையில் ரிஷிகேசத்தில் தவம் புரியும் தென் இந்தியப் புண்ணிய புருஷரான மண் டலேசுவர சுவாமி சிவானந்த சரஸ்வதி இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார். ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் ஏராளமான பக்தர்களும் ஆஸ்திகர்களும் கூடி சுவாமிஜியை வரவேற்றனர்.

"சுவாமி சிவானந்தரும் அவருடைய ஆசிரமத்தைச் சேர்ந்த 20 பேரும் பொன்னேரியிலிருந்து இன்று காலை சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கினர். நாதஸ்வர இசையுடன் சுவாமி சிவானந்தருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சிவானந்தர் யாத்திரா மண்டலி வர வேற்புக் கமிட்டித் தலைவர் ஜஸ்டிஸ் ஏ. வி. விசுவநாத சாஸ் திரியும் மற்றும் பலரும் அவருக்கு மாலைகள் சூட்டினர். ஹிந்து தியாலாஜிகல் உயர்தரப் பாடசாலை தொண்டர்படை யினர் ஸ்டேஷனுக்கு வந்து கூட்டத்தைக் கட்டுப்படுத் தினர்.

"திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடின் கிழக்கு கோடியிலிருந்து பார்த்தசாரதி கோயிலுக்கு படகுபோல் அலங்கரிக்கப்பட்ட காரில் சுவாமி சிவானந்தர் ஊர்வல மாக அழைத்துச் செல்லப்பட்டார். கோயிலில் சுவாமி தரிசனம் முடிந்தவுடன் சிங்காராச்சாரி தெருவில் உள்ள ராமானுஜ கூடத்துக்குச் சென்றார். அங்கு சில நிமிஷங்கள் நாம சங்கீர்த்தனம் நடத்தினர். சுவாமி சிவானந்தர் சென்னையில் 3 தினங்கள் (அடுத்த செவ்வாய்க்கிழமை வரை) தங்கியிருந்துவிட்டு விழுப்புரத்திற்குப் புறப்படுவார்

வாழ்க்கை வரலாறு

மஹானகளில ஒருவரான மண்டலேசுவரர் சுவாமி சிவானந்த சரஸ்வதி ஆத்மீகத் துரையில் மஹா உன்னத நிலையை அடைந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் பரம்பரையில் தோன்றியவர். சுவாமி சிவானந்தர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் அவதாரமென்றே கூறலாம். ஸ்ரீ அபபய்ய தீக்ஷிதர் சம்ஸ்கிருதத்தில் எழுதினரென்பதும், சிவானந்தர், உலக பாஷையாகிய ஆங்கிலத்தில் எழுதுகிறார் என்பதும் தான் இவர்களுக்கிடையே உள்ள வித்தியாசம்

"இமயமலையில் ஆத்ம ஜோதியாக விளங்கும் சுவாமி சிவானந்தர் தாமிரபரணி ஆற்றின் கரையில உள்ள பத்தமடையில் 1887, ஸெப்டம்பர் 8-ம் தேதி அவதரித்தார். இவருடைய தந்தை எட்டய்ய புரத்தில் தாசில் தாராக இருந்தார். பூர்வாசிரமத்தில் சிவானந்தரின பெயர் குப்புசாமி என்பது. சிறுவயதிலேயே இவர் மனம் ஆத்மீகத் துரையை நாடியது. படிப்பில் மிகவும ஊக்கம் கொண்டிருந்தார். நல்ல ஞாபக சக்தி இருந்தது.

"இவர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய பின் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் சேர்ந்தார். இங்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். ஆனல் குடும்பக் கஷ்டங்களின் விளைவாக கலாசாலைப் படிப்பைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. பிறகு அவர் தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். சஸ்திர சிகிச்சையில் இவர் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்.

"1913-ல் டாக்டர் குப்புசாமி (சுவாமி சிவானந்தர்) மலாயாவுக்குச் சென்று வைதீயத் தொழில் நடத்தினர். நோயாளிகளையும் அவர் குணப்படுத்தி வந்தார். அவருடைய உதாரகுணத்தை அனைவரும் பாராட்டினர்.

துறவு

"வாழ்க்கை லக்ஷியத்தைப் பூர்த்தி செய்யுமாறு அவருடைய ஆத்மா தூண்டியது. 1922-ல் இந்தியாவுக்குத் திரும்பிவந்து காசி, கயை, பூரி முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றார். பிறகு அவர் உலகத்தைத் துறந்து இமயமலையில் உள்ள ரிஷிகேசத்திற்கருகே 10 வருஷம் கடுந்தவம் செய்தார். அங்கு அமைந்துள்ள ஆசிரமத்துக்கு ஸ்வர்க்க ஆசிரமம் என்று பெயர். ஹடயோகம், ராஜயோகம், காமயோகம், பக்தியோகம், ஞானயோகம், குண்டலினி யோகம் ஆகியவற்றில் சித்தி பெற்றார். இவர் ஓர் உண்மை வேதாந்தசித்தர்—ஜீவன் முக்தர்.

"உலகத்திற்கு சேவை செய்யாமல் குகைக்குள் அடைபட்டுக் கிடக்க இவர் விரும்பவில்லை. ஆகையால் லக்ஷ்மண ஜூலா என்ற இடத்தில் சத்திய சேவா ஆசிரமம என்ற ஆசிரமத்தை ஆரம்பித்து பத்ரி நாராயணுக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு வைத்திய உதவி அளிக்கத் தொடக்கினார்.

"1930-ல இவர் 500 மைல நடந்து கைலாய மலைக்கு யாத்திரை சென்றார். தம் ஆத்மீக அனுபவங்களை 1936 முதல் நூல்களாக எழுதி வெளியிடத் தொடங்கினர் வேறு எந்த ஆத்மஞானியும இவ்வளவு நூல்கள் எழுதியதில்லை. இவர் சுமார் 100 புத்தகங்களுக்குமேல் இயற்றி யிருக்கிறார்.

"இவருடைய ஆனந்த குடீர ஆசிரமத்தில் அன்பும், ஞானமும், குடி கொண்டிருக்கின்றன. இது ரிஷிகேசத்திலிருந்து 1½ மைல் தூரத்தில் உள்ளது. இது ஆத்மீகத்தைப் பரப்பும உலக ஸ்தாபனமாக விளங்குகிறது. ஓர் கோயில், தர்மசாலை, சாதகிகளுக்கான அறைகள், ஆசிரமத்திற்கு வருபவர்கள் தங்குவதற்கான இடம் முதலியவை உள்ளன. இவர் எழுதியுள்ள நூல்கள மனித ஜாதிக்கே வரப்பிரசாதம போன்றவை. ஆத்ம ஞானத்தை நாடெங்கும பரப்பி மக்கள் ஒழுக்கத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இப்பொழுது இவர் அகில இந்திய யாத்திரையை மேற்கொண்டிருக்கிறார்."

இமாசலத்தின் இருஷிகேசம்

பூரீலபூரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகட்கு

சென்னை ஸ்ரீ P.H. இராமகிருஷ்ணன் பாடிச்சமர்ப்பித்தது.

1-10-1950

பல்லவி

குருநாதா குருநாதா—உம்மைச
சரணமடைந்தோம் குருநாத

அனுபல்லவி

அருவுருவில்லா ஆத்ம ஜோதியே
அருள் ஒளி உருவே வா வா வா
அரு சமயதகினர் அனைவரும ஏத்திடும்
ஆதிபகவனே வா வா வா

சரணம்

அஞ்ஞான இருளிலே ஸம்சாரக் காட்டிலே
ஆசைக் கொடிகளால் கட்டுண்டு
கோபதாபங்களாம் கடும் புலி முதலான
கொடிய மிருகங்களால் கடியுண்டு
காப்பாற்றுவாரின்றி கதறித்துடித்து நிற்கும்
குருடர்கள் எம்மீது கருணை கொண்டு
காப்பாற்றிக் கண்ணளிக்க இருடிகேசத்தினின்று
இன்று இங்கு வந்த சிவானந்தமே—
சிவானந்தமே—சச்சிதானந்தமே
சிதானந்தமே ஓம் பரவ்மானந்தமே
நித்யானந்தமே— ஆத்மானந்தமே

சுபம

பார்த்தசாரதி கோவிலில் தெய்வ வழிபாட்டை முடித்துக் கொண்டு சுவாமிகள் இராமானுஜ கூடத்துக்குத் திரும்பினர் அங்கே குவிந்திருந்த பக்த கோடிகளுக்குக் கணக்கில்லை. அவர்களுக்குத் தரிசனம் கொடுத்துச் சிறிது ஓய்வாக இருப்பதற்குள், ஜார்ஜ் டவுன்—தெய்வ நெறிக் கழகக் கிளையைச் சார்ந்த அனபாகள் சுவாமிகளை அழைக்க வந்து விட்டனர். அங்கே சென்று அவர்கள் பாத பூஜை செய்து முடிதத பின சுவாமிகள் சில கீர்த்தனங்களைச் சொல்லி ஒரு சொற்பொழிவும் செய்தார். ராம நாமம கூறப்படும் இடமெலலாம வைகுண்டமே என்றார். நிர்க்குணத்யானமும, ஸகுணோபாஸனையும் எப்பொழுதும் நம்மால் கைப்பற்றப படவேண்டும் என்றார். "இல்லை, போ!" என்று சொல்வதை ஒழிக்க வேண்டும் என்றார். பெண்மணிகள் வீட்டு வேலை செய்து கொண்டிருக்கும பொழுதிலும் ராம நாமம சொலலமுடியும என்று போதித்தார். இந்தப்படியே பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசின பின் கூட்டம கலைந்தது.

பின் வெகு அவசரமாக ரிப்பன் பில்டிங்ஸிலே கார்ப்பரேஷன் பிரசங்கத்துக்குச் செலல வேண்டி யிருந்தது. அதனிடையில "மை மாகஸின்" பத்திராதிபர் ஸ்ரீ பி. கே. விநாயகம் எனபவரின் ஆபீஸுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கேயும் சில கீர்த்தனங்கள் பாடினார.

அதன்பின் கார்ப்பரேஷனில் ஒரு பெரிய கூட்டம் நடநதது மேயர டாக்டர் சென்னிய வரவேற்புக கூறினர். தாம் கிருஸ்தவ மதத்தைச சார்நதாராயினும் சுவாமிகள் பால் தமக்குள்ள பக்தி வெகு அதிகம் என்று கூறினர். சுவாமிகள் நிகழ்த்திய பிரசங்கம் மிகவும் உயர்வானதாக இருந்தது.

கார்ப்பரேஷனில் வரவேற்பு

—o—

கடவுளை மறவாமல் கடமைகளை செய்யும்படி மக்களுக்கு அறிவுரை

ரிஷிகேசத்தைச் சேர்ந்த சுவாமி சிவானந்த சரஸ்வதிக்கு நேற்று மாலை சென்னை காப்பரேஷன் வரவேற்பு யத்திரமொன்று வாசித்துக்கொடுத்தது. சுவாமிஜி பதிலளிக்கையில் தியானம், ஒழுக்கம் இவை மூலம ஆத்மாவை உணர்ந்து சாந்தியும் ஆனந்தமும அடையும்படி மக்களுக்கு அறிவுறுத்தினர்.

கவுன்சிலர்கள் தவிர ஏராளமான பிரமுகர்களும் கவுன்ஸில் ஹாலில பிரசன்னமாயிருந்தனர். நீதிபதி ஸ்ரீ. ஏ. வி. விஸ்வநாத சாஸ்திரியும் வந்திருந்தார். சுவாமிஜி வந்ததும அவரை மேயர் டாக்டர பி. வி. செரியன் வரவேற்றார்.

தேனீர் விருந்துக்குப் பிறகு மேயர, சுவாமிஜியை வரவேற்றுக் கூறியதாவது :— காப்பரேஷனைது மத தலைவர் ஒருவருக்கு வரவேற்பு அளிப்பது அபூர்வமாகும். சுவாமிஜி போன்றவரைக கௌரவிப்பது எங்களை நாங்களே கௌரவித்துக்கொள்வதாகும. சுவாமிஜி மலேயாவில் பல தோட்டங்களில் டாக்டராக இருந்தார. 1924-ல் அவர் சன்யாசியானர்.

சுவாமி சிவானந்த சரஸ்வதி பேசியதாவது :—"ஒவ்வொரு மதமும் கடவுள் ஒருவரே என்பதையே போதிக்கிறது. மனிதருக்குள பிளவுகளையும் தடைகளையும் நீக்கி சகோதரத்துவத்தை ஸ்தாபிக்கவேண்டும. நகரில் பொதுஜன சுகாதாரத்தைப் பராமரிக்கும் வேலையில கார்ப்ப

ரோஷன் ஈடுபட்டிருக்கிறது. லௌகீக முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி ஆத்மஞானம் பெறவும ஆரோக்கியம் அவசிய மாகும். எல்லோரும் கடவுளின் அம்சம்தான். அஞ் ஞானத்தின் விளைவே விருப்பு வெறுப்புகள். துன்பத் திலும் மனம சலனமடையாமலும் சோர்வு அடையாமலு மிருக்க உதவும் வித்தை ஆத்ம வித்தைதான். அந்த வித்தையை எந்த சர்வகலாசாலையும் போதிக்க முடியாது. தியானம மூலமே ஞானம் சித்திக்கும. ஆத்மஞானத்தால் தான் அஹங்காரம மாயும. அஹங்காரந்தான் மனிதரிடை பிளவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. கடவுளின் ராஜ்யம் நமக் குள்ளேயே இருக்கிறது. 'தியானத்தால் அந்த ராஜ்யத்தை நாம் பெறலாம."

முடிவாக, கார்ப்பரேஷன் தம்மைக் கௌரவித்ததற் காக சுவாமிஜி வந்தனம் கூறினார்.

—o—

பத்திரிகையாளர் கூட்டத்திலும் சுவாமிஜி பிரசங்கம்

.....மாலை தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேள னத்திலும் சுவாமிஜிக்கு வரவேற்பு நடந்தது. ஏராளமான வாளை வந்திருந்தனர்.

சம்மேளனத்தின் தலைவர் ஸ்ரீ. என். ரகுநாத அய்யர் சுவாமிஜியை வரவேற்றார்.

சுவாமி சிவானந்த சரஸ்வதி ஆசீர்சனம் ஏற்படும் விதத்தில் பேசினார். அவர் கூறியதாவது:—பல விஷயங் கள் குறித்து கருத்துக்களை வினியோகிப்பவரான பத்திரிகையாளர்கள் அறிவு, ஞானம் இவற்றின் மூலஸ்

தானத்தையே அறிய முயலவேண்டும். இம்முயற்சி கடவுளைக் குறித்த தியானத்தால் கைகூடும். இளமையிலேயே இதை அப்பியாசம் செயயவேண்டும். மற்றவரிடம அன்பு பாராட்டுவது, உதவிபுரிவதுபோன்ற நற்செய்கைகளால் கடவுளுடன் ஒன்றுபடும் அத்வைத உணர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அன்றாட கடமைகளை நிறைவேற்றும்போதும் பகவானை மறவாதிருக்கவேண்டும்.

துகாராம, மீராபாய், ராமகிருஷ்ண பரமாத்மா போன்ற பெரியார்களின் சரித்திரங்களைக் குறிப்பிட்டு சுவாமிஜி கூறியதாவது —"அவர்களது சரித்திரங்கள் கடவுளை அடைவது வாழ்க்கையின் நடவடிகைகளிலிருந்தும சகோதர மக்களுக்கு சுயநலமற்ற சேவை புரிவதிலிருந்தும வேறுபட்ட தலலவென்பதையே நிரூபிக்கின்றன. கடவுளிடம பிரேமை கொண்டால் ஒவ்வொன்றிலும் கடவுளைக் காணக்கூடும. பக்தியுடனும் ஏகாக்ரகசித்தையுடனும் ஸ்வராநாமத்தை அடிக்கடி ஜபிப்பதால் வசீகரமான பலன் ஏற்படும. புத்தியைக் கைவல்யம் பெற சாதனமாகச் செய்து கொள்ளவேண்டும.

முடிவில் சுவாமிஜியின் சிஷ்யர்களில் ஒருவர் யோகாசனங்கள் செய்துகாட்டினர்.

—தினசரி 1—10—50

—o—

அகங்காரத்தை ஒழித்து எல்லோரிடமும் சகோதரபாவத்துடன் நடந்துகொள்க

—o—

நகரசபை வரவேற்புக்கு சுவாமி சிவானந்த சரஸ்வதியின் பதில்

——

வாழ்க்கையின் எல்லா முயற்சிகளையும் ஆத்மீக மயமாக்க வற்புறுத்துகிறார்

நமது முயற்சிகள் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஆத்மீக மயமாக்கவேண்டும் என்று வற்புறுத்தி ஸ்ரீ சுவாமி சிவனந்த ஸரஸ்வதி, அவருக்கு சென்னை நகரசபை அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

ரிப்பன் மாளிகையில் மேயர் டாகடர் பி. வி. கரியலை இந்த வரவேற்புப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. பிரதம நீதிபதி, மற்ற ஹைகோர்ட் நீதிபதிகள், அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீஜெ சிவஷண்முகமபிள்ளை, நகரசபை அங்கத்தினர்கள்சிலர், பிரம்மஞான சங்கத்தினர் முதலானோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மேயர் டெபுடி மேயர் அபீஷியேட்டிங் கமிஷனர் ஸ்ரீ எஸ். இ. டி. மாசிலாமணி ஆகியோர் சுவாமிஜி வந்ததும் அவரை வரவேற்றார்கள். கார்ப்பரேஷன் பாண்டு வாசிக்கப்பட்டது.

ஆத்மீக வழிகளில் ஈடுபட்டுள்ள மதத்தலைவருக்கு நகரசபை வரவேற்பு அளிப்பதென்பது சாதாரணமாக நடைபெறுவதில்லை யென்றும், கிறிஸ்துவ மேயரான தமக்கு சுவாமிஜியை வரவேற்று கௌரவிக்கும் பாக்கியம் கிடைத்ததைப்பற்றி மகிழ்ச்சி கொள்வதாயும் சேவை செய்வதி

லேயே சுவாமிஜியின் உளளம் முழுவதுமே நிலைபெற்றிருக்கிற தென்றும் மேலும் சுவாமிஜியை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஓம்" என்று நாமெல்லோருமே உச்சரிப்போமே என்று சுவாமிஜி தனது பிரசங்கத்தை ஆரம்பித்தார். சுவாமிஜியுடன் எல்லோரும் "ஓம்" என்று உச்சரித்தனர். "ஓம்" என்பதின் மகிமையை சுவாமிஜி விளக்குகையில்; எல்லாவற்றிற்கும் மேலான ஏகபரம்பொருளே அது குறிக்கிறதென்றும் அந்தராத்மா இருக்கும் உளளத்தின் பகுதியை அது திறக்கிறதென்றும் ஆதியில சப்தமே தொனித்ததென்றும் அந்த சப்தமே "ஓம்" என்றும் அதே பரம்பொருள் என்றும் "ஓம" என்பதே மனத்திற்கும் அறிவுக்குமே அடிப்படை யென்றும் கூறினார்.

எல்லா மதங்களும் முக்கியமான அடிப்படைகளில் ஒன்றுதானென்றும் தார்மிக வாழ்க்கை நடத்தவேண்டிய முக்கியம்பற்றி புத்தமதம் போதித்ததென்றும் ஹிந்து மதத்திலும் அறநெறி மார்க்கம பிரதானமாக கூறப்பட்டிருக்கிறதென்றும் தேகம்-மனம-பேச்சு ஆகியவை மூலம் தபஸ்பண்ணவேண்டிய அவசியமபற்றி கீதையில் வறபுறுத்தப்பட்டிருகிறதென்றும் அவா மேலும் குறிப்பிட்டு விட்டு "உண்மையாயிரு. அண்டை அயலாரிடம அன்போடிரு. எல்லோரிடமும் சகோதர பாவததுடனிரு" என்று எல்லா மதங்களும் உபதேசம் செய்கின்றன என்றார்.

"அகங்கார மமகாரத்திலுல் மனிதனுக்கு மனிதன் எற்படும் வேற்றுமை உணர்ச்சி என்ற தடையை நாசஞ் செய். இநதத் தடையை நீக்குவதற்கு எல்லோரிடமும்

சகோதரபாவத்துடன் நடந்துகொள்ளவேண்டும். பொறாமை விரோதம் முதலிய எல்லாக் கெடுதல் உணர்ச்சிகளையும் விலக்கி உங்களை பரிசுத்தம் செய்துகொண்டு தன்னலமற்ற சேவையில ஈடுபடுங்கள்" என்று சுவாமிஜி கூறினார்.

புராணத்தில் கூறப்பட்டுள்ள எண்திசை அதிபர்கள் போல் கார்ப்பரேஷன் அதிகாரிகள் நகரின் சுகாதாரத்தினைக் கவனித்து வருகின்றனர் என்று சுவாமிஜி மேலும் கூறிவிட்டு ஐந்துவித கிலேசங்கள் மனிதனை எவ்விதம் தொந்தரவுக்குள்ளாக்குகின்றன என்று விளக்கினார்.

"மன அமைதி, உற்சாகம, தற்பெருமையிலலாமை, உண்மை, எளிமை, நம்பிகைக ஆகியவைகள ஈஸ்வரதியானத்துக்கு மிகவும் அத்யாவசியமானவையென்றும் இந்தக் குணங்களை எளிதில் அடைய முடியாதெனறும் இந்த உலகம் முழுவதும் கிடைத்தாலுங்கூட ஒருவனுக்கு அழிவிலா ஆனந்தம் கிட்டிவிடாதென்றும் ஆசையையும் அபிமானத்தையும் ஒழித்தால்தான் மனிதன் உண்மையான ஆனந்தம்பெற முடியுமென்றும் "அகங்காரம்" எப்பொழுதும் கெடுதி விளைவிப்பதென்றும், ஆனல் "வைராக்யமே" அதைக் கொல்ல முடியுமென்றும், கெடுதிகளை ஒழிப்பதே வாழ்க்கையின் லட்சியமாயிருக்கவேண்டுமென்றும் வாழ்க்கையின் எல்லா முயறசிகளும் நடவடிக்கைகளும் ஆத்மீகமயமாக்கப்படவேண்டுமெனறும சுவாமிஜி மேலும வற்புறுத்திக் கூறினர்.

உலகில் ஒன்றும் நமக்குச் சொந்தமானதில்லையென்றும பிறப்பு இறப்பிலிருந்து விடுதலைபெற நாம முயற்சிக்க வேண்டுமென்றும், மாயையின் அடிமைகளாக நாம

ஆகிவிடகூடாதென்றும மன நிம்மதியுடன் காரதம்மிய உணர்ச்சியினறி சம தரிசனத்துடன் பரம்பொருளின்மீது புத்தியை செலுத்தவேண்டுமென்றும் நாமே அழிவில்லாத பரமாத்மா என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டுமென்றும அவர் கூறி சில கீர்த்தனங்கள் பாடினர்.

ஆதமீக வழிகளில் அப்பியாசம் செய்ய ராணுவக் கட்டுபபாட்டைக் காட்டிலும தீவிரமான கட்டுப்பாடு அவசியமென்றும ஒரே நிலையில் நிற்றல், கோபமின்மை விடாமுயறசி, சௌஜன்யம், தாராள சிந்தனை, தார்மிக உணர்ச்சி உள்ளத்தூய்மை முதலிய குணங்களைப் பயிற்சி செய்யவேண்டுமென்றும கூறினர். உணவு, பேச்சு முதலிய வைகளில மிதமாக இருந்து ஸாத்வீக குணங்களை பழக்கம் செய்வதுமூலம மேற்கூறிய கட்டுப்பாடு ஏற்படும என்று தெரிவித்தார்.

எல்லோரும் நலன் பெற்றிருக்க சுவாமிஜி ஆசி கூறி பிரசங்கததை முடித்துக்கொண்டார்.

காப்பரேஷன் பாண்டு "ஜன கணமன" கீதம்பாட விழா முடிவுக்கு வந்தது.

——o——

பத்திரிகையாளர்களுக்கு
ஆத்மீக அறிவின் அவசியம்

—o—

சொற்களின் சக்தி பற்றி சுவாமி சிவானந்தர்

——

பத்திரிகையாளர் சம்மேளனத்தில் பிரசங்கம்

சென்னை அக். 1—நேற்று மாலை தென் இந்திய பத்திரிகையாளர் சம்மேளனத்தில் சுவாமி சிவானநதர் பேசுகையில், பத்திரிகையாளர்கள் உலகெங்கும் அறிவைப் பரப்புவதாகவும், அவர்கள் உண்மை அறிவாகிய ஆத்ம

அறிவைப பெற்றால் அவர்கள் உபயோகிக்கும வார்த்தை களை சாதாரசக்தியைப் பெறுமென்றும "பகவன்" நாமத்தை ஜபிப்பது இதற்குச சிறந்த வழியென்றும கூறினர். சுவாமிஜி பிரசங்கத்தில் இடையிடையே சங்கீதத்தனம் நடத்தினர.

கூட்டதற்கு சபமேனத் தலைவர் ஸ்ரீ. என். ராகுநாத அய்யா தலைமை வகித்தார் பல ஸ்திரீகள் உள்பட ஏராள மானவர்கள கூட்டத்திற்கு வந்திருந்தனர.

—தினமணி 1—10—50

காப்பரேஷன் நிகழ்சிக்குப் பின்னர் சுவாமிகள் தென்னிந்திய பத்திரிகையாளர்களின் சம்மேனத்துக்கு விஜயம செய்தார்.

அதனபிறகு கோகலேஹாலில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டார. அதன் விவரம் வருமாறு .

சென்னை கோகலே மண்டபத்தில் ஹைகோர்ட்டு நீதிபதி ஸ்ரீ. பி. சத்யநாராயணராவின் தலைமையில் ஜெயந்தி விழா நடைபெற்றது. ஏராளமான ஆண்களும பெண்களும் தேசப்பிதாவின் பிறந்த தினவிழாவில் கலந்துகொண்டனர். ஸ்ரீ. கே சஞ்சீவி காமத் வரவேற்றார்.

சுவாமிஜி பிரசங்கம்

சுவாமி சிவானந்த சரஸ்வதி பேசுகையில் காந்திஜியை கர்மயோகி என்று வர்ணித்தார். பெரியவர்கள் பிறந்தநாள் கொண்டாட்டத்தை கேட்கவில்லையென்றும் ஆனல் நாம் அவரகளை மறக்காமல் பின் பற்றுவதற்குத்தான் இந்த ஜெயந்தியென்றும கூறினர்

"காந்திஜி ஒரு ரிஷி. அவர் உண்மையான வழியைக் காட்டினார். தன்னலமற்ற சேவை மூலம இருதயத்தை பரிசுத்தமாக்கும் வழியைக் காட்டினார அரசியலைவிட கடவுளையே அவர் முக்கியமாகக கருதினார. புத்தருக்குப் பின் அஹிம்சையைக் கடைபிடித்த மகாத்மா அவர் ஒருவர் தான" என்று சுவாமிஜி கூறினர்

காந்திய வழி

அஹிம்சை, சத்தியம், பிரமம சரியம் இவைதான் யோகத்திற்கு அடிப்படை இதற்கு இமயமலைக்கோ அல்லது குகைக்கோ செல்லவேண்டாம. எந்த இடத்திலிருந்தும் இந்தக் குணங்களைக் கடைபிடித்து கடவுளைக் காணலாம். காந்திஜியின் வழி இதுதான. தன்னலமற்ற சேவை இதற்கு மிகவும் தேவை. அப்பொழுதுதான் ராஜயோகியாக முடியும்.

காந்திஜி இந்த முறைகளைத் தானே கடைப்பிடித்தும் போதித்தும் மக்களை கர்மயோகிகளாக்க பாடுபட்டார். ஆனல அவர் காட்டிய வழியில இன்று எவ்வளவுபேர் செல்கிறார்கள்? அவர் வழியை எந்த அளவுக்கு கடைபிடிக்கிறார்கள்?

கதர் உடுப்பதும், 'காந்திஜிக்கு ஜே' போடுவதும் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுவதும் அவரைப் பின் பற்றுவதாக ஆகாது இவைகளைச் செய்வதால் நாம் அவருடைய உண்மை சிஷ்யாகளாக ஆக முடியாது.

உண்மையாக தன்னலமில்லாமல் அஹிம்சையைப் பின்பற்றி நாம் சேவை செய்யவேண்டும். அவருடைய ஒவ்வொரு பிறந்த தினத்திலும் நாம இதுவரை அவரைப்

பின்பற்றி என்ன செய்திருக்கிறோம் என்று ஆராய்ந்து கணக்குப்பார்க்கவேண்டும்.

"காந்திஜி கடைபிடித்த உண்ணாவிரதங்களைப்போல் வேறு யாறும் இருந்ததில்லை யென்றும், மனசுத்திக்கு இது நல்லதென்றும்" அவர் வற்புறுத்தினர்.

தலைமை வகித்த ஸ்ரீ. பி. சத்தியநாராயண சிங் பேசுகையில் இது ரிஷிகள் நாடு என்றும், மகாபாரதத்துக்குப் பின் ரிஷிகளைப்பற்றி நாம் அதிகமாக கேட்டதில்லை யென்றும், பழைய நாட்களைப்போல் நாட்டில் உயர்வு வாய்ந்த மகரிஷிகள் இருக்கவேண்டுமென்றும் கூறினர். பழைய காலத்தைப்போல ஆத்மீக பலத்தை அதிகரித்து இந்திய ஆத்மீகத்துறையில் மறுபடியும் உலகில் முதன்மை ஸ்தானம் வகிக்க வேண்டுமென்றும் கூறினர்.

ஸ்ரீ. ஜி. சீனிவாசன் வந்தனம் கூற முடிவடைந்தது.
கோகலே ஹாலில் ஸ்ரீ சுவாமிஜி பிரசங்கம் 30—9—50
3—10—50ல் "பாரததேவி"யில் வெளிவந்த செய்தி.—

—o—

சென்னையில் காந்தி ஜெயந்தி

அரசனும் ஆண்டியும் சமம்

விழாவுக்குத் தலைமைவகித்த நீதிபதி பி. சத்திய நாராயண பேசியதாவது :—

விஸ்வாமித்திரர், வசிஷ்டர் ஆகிய பிரமரிஷிகள், அரசர்களையும், ஆண்டிகளையும் ஒன்றெனக் கருதி நடந்து பெருமைகொண்டனர்.

மாபெரும சாம்ராஜ்யங்களையும வீழ்ததும ஆற்றல் பெற்றுள்ளவர்கள ரிஷிகள். அவ்வித ரிஷிகளைப பின் பற்றி நடந்தால நமக்கு ஒருவித குறையும வராது யோகத்தின் தன்மை எல்லையற்றது. ஆனல் எல்லா காரி யங்களையும் அதனால சாதிக்க முடியாது. காநதிஜியின் கொள்ளைகளை மககள் உண்மையுடன் கடைப்பிடித்தால் எல்லாக் குறைகளும் நீங்கும்.

மக்களுள் மஹான்

சுவாமி சிவானந்தா பேசியதாவது :—கடமையைக கருதி நாம் காந்தி ஜெயந்தியை மகிழசசியுடன கொண்டாடு கிறோம். மனநதளராது உழைத்து மகளுக்குச் சுதநதிர சுகவாழ்வையளித்த உயர்நத புருஷர் காநதிஜி. அவர் மகளுள் மகாத்மா : மஹான்.

அவதார புருஷர்

புத்தரைப் பிரிநதபின் அஹிமசையை மறந்த நமக்கு அஹிம்சா மூர்த்தியாக காந்திஜி அவதரித்தார். சத்தியம, அன்பு, அஹிமசை, ஆகியவையே அவருடைய மூல மநதிரங்கள். அவற்றைக் கடைப்பிடித்து நடப்பது நம கடமை. காநதிஜியின் ஆத்மா சாந்தியடைய வேண்டு மானல், அவரது நிர்மாணத் திட்டங்களை பயபக்தியுடன் பின்பற்றவேண்டும்.

அவர் தொடர்நது சொன்னதாவது :—குருவை அடையாத ஒருவனுக்கு சட்டென்று சில சந்தர்ப பங்களில் கோபமேற்படும. ஆனல் குருவின் கீழ் ஞானோப தேசம் பெற்றுள்ளவர்கள் அன்பின் அவதாரங்களாக விளங்குவர். குருபக்தியும், குருவின்கீழ் உபதேசம பெறும தன்மையும் மக்களுக்கு அவசியமாகும்.

ஒருநாள் உபவாசம்

மேலும் அவர் கூறியதாவது :—வாரத்திற்கு ஒரு முறைகூட நமமால் உண்ணாவிரதம் இருக்க இயல்வதிலலை. வாரத்தில் ஞாயிற்றுக்கிழமையாவது நாம் உணவு அருந்துதல் கூடாது. அப்படிச் செய்தால்தான் தேகம் பரிசுத்தமடையும். ஆன்மயோக நிலலையை நாடுடம். உலகத்திலேயே காந்திஜி தான் அதிகப்படியாக உணாவிரதஙகளை அனுஷ்டித்துள்ளார். அதுவே அவரைப் புனிதராக்கியது. ராம பக்தியால் அமராராகிய காந்திஜினை நாம் பின்பற்றி நடககவேண்டும்.

வியக்கத்தக்க சாதனைகளை செய்யும விஞ்ஞானிகள் மக்களால் போற்றப்படவேண்டியவர்கள்தான். ஆனால் அவர்கள் புகழும், பெருமையும் மண்ணுலகில்தான். விண்ணுலகில் தலைகாட்ட முடியாது. நிரந்தர ஸ்தானம் பெற விரும்பினால் நாம் யோகிகளாய் மாற்றம் பெறவேணடும். "ஓம்" நம்மை வாழ்விக்கட்டும்.

கேப்டன் சீனிவாசமூர்த்தி நன்றிகூற விழா முடிவுறறது

—தினத்தந்தி 3—10—50

இன்று காலை ஸ்ரீ சுவாமிகள் மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவிலுக்கு விஜயம செய்து இறைவனை வழிபட்ட பின் ஸ்ரீ கேசவப்பெருமாள் கோவிலுககுச் சென்று தரிசனம செய்து திருவல்லிக்கேணியிலுள்ள தெய்வநெறிக் கழகக் கிளைக்கு விஜயம் செய்தார். பின்னர் திரும்பவும் தமது ஜாகைக்கு வந்து சேர்ந்ததும பாதபூஜை, மந்திர தீக்ஷை முதலியன நடந்தேறியது அனைவரும் ஆகார முண்டு சிறிது இளைப்பாறினர.

பிற்பகல் மயிலாப்பூர் ஸ்ரீனிவாச காந்தி நிலையத்திலும் சர்வோதய சகோதர சங்கக்கூட்டத்திலும் நடந்த விசேஷ விபரம பதத்திரிகை வாயிலாக .—

வ்ஸ்திரீகளுக்கு உபதேசம்

சுவாமி சிவானந்த ஸரஸ்வதி நேற்று பிற்பகல் மயிலாப்பூர் ஸ்ரீனிவாச காந்தி நிலையத்துக்கு விஜயம் செய்தார். கடவுளுக்கு அடுத்தபடியாக தாய் ஜகத்குரு வாக கருதப்படுவதாகவும் ஸ்திரீகள நாமசங்கீர்த்தனத்தின் மூலம் முக்தியடையலாம என்றும் ஸ்திரீ குழந்தையை எவ் விதம் வளர்க்கிறாளோ அதற்கு தகுந்த முறையில்தான் உலகம் முன்னேற முடியும் எனறும் சுவாமிஜி அங்கு பேசு கையில் கூறினர்.

ஸ்ரீமதி அம்புஜம்மாள மங்களஹாரத்தியுடன் சுவாமியை வரவேற்றார்.

"எல்லா மதங்களின் லக்ஷியமும் ஒன்றே"

ஊழியர் கழக சேவா சமாஜத்தில் பிரசங்கம்

சென்னை அக். 2—நேற்று மாலை ஊழியர் கழக சேவா சமாஜத்தில் சுவாமி சிவானந்தர் பேசுகையில, எல்லா மதங் களின் கருத்தும் இலக்ஷியமும் ஒன்றுதானென்றும், கடவு ளுக்கு மதம் கிடையாதென்றும் ஆனால நமது மனத்தையும் புலன்களையும அடக்குவதற்கு கடவுள் நமக்கு பல மார்க் கங்களைக் கொடுத்திருக்கிறார் என்றும் எடுத்துரைத்தார.

சர்வமத ஒத்துழைப்பு என்ற விஷயமாக சுவாமிஜி பேசினர். அவர் பேசியதன் சாரமாவது :—

எல்லா மதங்களும் ஸ்ரீ புத்தரின் 8 வித மார்க்கங்களையே உபதேசிக்கின்றன. அதை உணர்ந்தால் கடவுள் உங்கள் சித்தத்தில் பிரகாசிபபதை நீங்கள் பார்க்கலாம். ஹிந்து மதம் உபதேசிக்கும சதாசாரமும கிறிஸ்துவ மதம் போதிக்கும் ஒழுகக நெறி எல்லாம் ஒன்றே. எல்லாவற்றிலும் இலகூயம் ஒன்றுதான் நாம் மதத்தை அனுஷ்டித்து அதில் வாழவேணடும். சத்தியத்தைக் கடைப் பிடிக்கவும் சீலத்தைக் கையாளவும் என்று ஒவ்வொரு மதமும் போதிக்கிறது. எல்லோரிடத்தும அன்புடனும் பகூமுடனு மிருகக வேண்டும. அந்தக் கருணையால் சிதசப்பிரசாதம ஏற்படும். ஒவ்வொரு மதமும் உங்களுக்கு பாதையைக் காட்டுகிறது. எல்லா மதங்களும் சாந்தினையப் போதிக்கின்றன. ஒவ்வொரு மதத்திலுள்ள சிறந்த அம்சங்களை எடுத்துக்கொண்டு எல்லோரும ஒன்றுபட முயற்சிக்கவேண்டும். சகிப்புத்தன்மையும் அன்பும் வேண்டும.

அன்பு மதத்திற்கு தடங்கலாக நிற்கக்கூடிய காமக் ரோகம், மாக்சர்யம், ராகதுவேஷங்களை ஒழிக்கவேணடும். பொறுமையை நாம் வளர்க்கவேண்டும். சகல நல்ல குணங்களுக்கும் அடிப்படை பொறுமைதான். மதம் மதம் என்று வெறுமனே பேசிவிட்டால் மட்டும் ஒன்றும் பிரயோஜனப்படாது. நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். சுயநலத்தை உதரித்தள்ள சேவை செய்யவேண்டும். சேவைக்குப் பணம் தேவையில்லை. உள்ளம்தான் தேவை. ஆயிரக்கணக்கான மக்கள் துன்பத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும.

—சுதேசமித்திரன் 2—10—50

பிரார்த்தனைக்கு குறிப்பிட்டநேரம் அவசியமில்லை

சக்தியின் ஸ்வரூபமே தாய்

சிவானந்தர் அருள்மொழி

சென்னை, அக், 2—சுவாமி சிவானந்தர் ஸ்ரீனிவாச காந்தி நிலையம், சர்வோதய சகோதர சங்கக் கூட்டம் முதலிய இடங்களில் அரிய சொற்பொழிவாற்றினர்.

அவர் கூறியதாவது ; குறிப்பிட்ட நேரத்தில்தான், இடத்தில் தான் பிரார்த்தனை செய்யவேண்டுமென்பதில்லை. எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும் வேறு வேலைகள் செய்துகொண்டிருக்கும்போதும் கடவுள் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கலாம்.

கடவுளுக்கு அடுத்தபடி தாய்

கடவுளுக்கு அடுத்தபடியாக தாய்தான் ஜகத்குருவாக கருதப்படுகிறார் உலகின் தலைவிதி அன்னையின் கைவசம் இருக்கிறது. குழந்தையை அவள் எப்படி உருவாக்குகிறாளோ அதைப் பொருத்திருக்கிறது உலகம்.

மாயைத் திரையை நீக்க வழி

மாயைத் திரையை நீக்கினால் கடவுளுடன் லயித்து விடலாம். பிராத்தனை, தியாகம், தன்னலங் கருதா சேவை அகந்தையை ஒழித்தல் இவைமூலம மாயைத் திரையை நீக்கிவிடலாம்.

எல்லா மதங்களும் ஒன்றேதான்

பல மதங்கள் இருந்தபோதிலும் அவைகளுள் கொள்கைகளும் உபதேசங்களும ஒன்றேதான். இதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டால் எவ்வகும் ஒற்றுமையும்

சௌஜன்ய உணர்ச்சியும் எற்படட்டுமே. தெய்வ உணர்ச்சி பெறுவதுதான் உணமையான மதம்.

—பாரத தேவி 3—10—50

இவ்விரு நிகழ்ச்சிகளுக்கு மிடையே ஸ்ரீ சுவாமிகள் திரு. கே. எஸ். ராமசாமி சாஸ்திரி அவர்கள் இலலம் சென்றுதரிசனமதந்தார.

பின்னர் திட்டமிட்டபடிகு எழுமலூர மியூஸியம் தியேட்டரில் நிகழ்ச்சி நடந்தேறியது. விவரம 'சுதேச மித்திரன்' பத்திரிகை தந்தவணணம:—

வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

சுவாமி சிவானந்தர் உபதேசம்

சென்னை பொதுமக்கள் வரவேற்பு

சென்னை, அக. 2—சுவாமி சிவானந்த சரஸ்வதிகு நேற்று மாலை எழுமலூர் மியூஸியம தியேடடரில் சென்னை பொதுமகளை சாரபில வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமிஜியை தரிசிக்கவும அன்னாருடைய பொன் மொழி களைக் கேட்கவும ஹாலில உளளமம புறமும் ஆயிரக்கணக் கான மக்கள் கூடியிருந்தனர்.

ஸ்ரீ விச்வநாத சாஸ்திரி

வரவேறபுக் கமிட்டித தலைவர நீதிபதி ஸ்ரீ ஏ. வி. விசவ நாத சாஸ்திரிகள சுவாமிஜிகு வரவேற்புப் பத்திரம ஒன்றை வாசித்துக்கொடுத்தார். வெள்ளிப் பேழையில் அப்பத் திரம் வழங்கப்பட்டது. பணம, பதவி, பராசை, காமக் குரோத லோபங்களில் உழன்று கிடக்கும் மக்களை உய்விப பதற்கு அவ்வப்போது இந்த பாரதநாட்டில் தோன்றிய

மகான்களின் வரிசையில் சுவாமி சிவானந்தஜி ஒரு விசேஷ ஸ்தானத்தைப பெறறிருபபதாகவும அவர் ஒரு உண்மை வேதாந்தி என்றும பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தது.

யோகி சுத்தானந்தபாரதியார், டாகடர் பட்டாபி, ஸ்ரீ பக்தவத்ஸலம, ஸ்ரீ குமாரசுவாமி ராஜா ஆகியோரிட மிருந்துவந்த வாழ்த்துச் செய்திகளை ஸ்ரீ பி. கே. விஜயகம வாசித்தார்.

சுவாமிஜியின் விஜபதுதிலை சென்னை ராஜயடக்களின மனதும் செபடைகளும் பரிசுத்தமடையுமென்று தாம் நமபுவதாக ஸ்ரீ குமாரசுவாமி ராஜா தமது செய்தியில் குறிப்பிட்டார்.

சுவாமிஜி உபதேசம்

சுவாமி சிவானந்தர் பிறகு உபதேசம் செய்தார். ராம நாம சங்கீர்த்தனமும, தியானமும் அவரது பிரசங்கத்தின் ஊடே நடைபெற்றன. ஆங்கிலமும தமிழும கலந்த நடையில் சுவாமிஜி பேசினர் அவர் கூறியதன் சாரமாவது

"ஓம்" "ஆமென்" "ஆமீன" இந்த எலலா ஒலிகளும் பரம்பொருளையே குறிப்பிடுகின்றன. அவனன்றி ஓரணுவும அசையாது. உலகம் யாவையும் தமதுள்ள வாக்கால் நிலை பெறுத்தலும நீக்கலும், நீஙகலா அளவிலா விளையாட்டுடையவன் அவன். மனிதனுக்கு மனிதன் வித்யாசம் பாராட்டலாகாது. எல்லோரும் இறைவனின் குழந்தைகள்; கடவுளின வெவவேறு சொரூபங்கள. மக்கள் வாழ்க கையின் குறிக்கோள் என்ன? ஒவவொரு தனி மனிதனும அந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேணடும. அதுதான் ஆத்ம

சோதனை. தன்னலமற்ற சேவையே சமூகத்துக்கு உதவி. எல்லோருக்கும் நன்மைசெய்ய வேணடும. அறநெறி வழுவாது நடக்கவேணடும்.

சடமான தேகம அழிந்துபோகலாம. ஆத்மாவுக்கு அழிவு கிடையாது. ஞானேந்திரிய காமேந்திரிய சம்பந்தத்தால் அறிவை பறிகொடுக்காது சுகதுக்கங்களை சமமாக எவன் பாவிக்கிறானே அவன் முக்தியடையத் தகுதியுடையவனுவான். காமக்குரோதங்களால் மனிதனுக்கு ஞானம் மறைந்திருக்கிறது. மனம் புத்தி முதலிய இந்திரியங்களை ஆசைகளு இருப்பிடம். இவை ஞானத்தை மறைத்து மனிதர்களை மயக்குகின்றன. ஆதலல் ஆத்ம விசாரணையில் ஈடுபட்டு மனதை அடக்கி ஆசைகளை ஒழிக்கவேண்டும்.

தினசரி தியானம் செய்யுங்கள். உணவு, உறக்கம், நடமாட்டம் கர்மம் முதலிய விஷயங்களில் மிதமாக நடந்து கொள்பவனுகு தியானயோகம் சித்திக்கும். ராமநாம சங்கீர்த்தனம் செய்யுங்கள் வாழ்க்கைமுறையை திட்டமிட்டு வரையறுத்து, தினசரி குறிப்பிட்ட நேரங்களில் தியானத்தையும் நாம சங்கீர்த்தனையும் மேற்கொண்டால், பரம்பொருளை அறியும் மார்க்கத்தைக் காண முடியும். உங்கள் வாழ்க்கை புனிதப்படும்; பரமபத மோட்ச சாம் ராஜயத்தை அடையலாம்.

உபசரணைக் கமிட்டி உதவிக் காரியதரிசி ஸ்ரீ கே. ஆர். சேஷாத்ரி வந்தனைபசாரம் கூறினர்.

—சுதேச மித்திரன் 2—10—50

மியூஸியம தியேட்டர் அலுவல் முடிந்தவுடன் ஸ்ரீ சிவானந்தா சிறிது ஓயவு எடுததுக்கொண்டு கமமால்

மிகவும் பகதிகொண்ட அன்பர் திரு N. சீனிவாசன் அவர் களை அழைப்பிற கிணங்கி அவரில்லம் சென்று பாதபூஜை ஏற்றுக்கொண்டு அவாகளை ஆசீாவதித்தார்.

அடுத்தபடியாக மயிலாப்பூர் ஸ்ரீ சாயிபாபா பஜனை மண்டலியின் ஆதரவில் "பாரததேவி" பத்திரிகையில் கணடபடி பிரசங்கமும பகவந நாமபஜனையும் நடந்தேறியது.

இத்துடன் இன்றைய அலுவல்களை ஒருவாறு முடிததுக்கொண்டு சுவாமிகள ஓய்வெடுத்துக்கொண்டனா.

வாழ்க்கை மேம்பட பக்தி அவசியம்

மயிலேயில சிவானந்தர் உபதேசம்

சென்னை, அக். 2—நேற்றிரவு ஸ்ரீ சாயிபாபா பஜனை மண்டலியின் ஆதரவில் மயிலை பி. எஸ். ஹைஸ்கூலில் சுவாமி சிவானந்தருக்கு மகோன்னதமான வரவேற்பு அளிகைப்பட்டது. ஸ்ரீ ஏ. எஸ். பி. அய்யர் தலைமை வகித் தார். ஏராளமான ஜனங்கள் சுவாமிகளை தரிசிகைவும் அவருடைய உபதேசங்களைக் கேட்கவும் கூடியிருநதார்.

நீதிபதி ஸ்ரீ ஏ. எஸ். பி. அய்யர் பேசியதாவது: நம் நாடு ஹிட்லர், முஸோலினி, நெப்போலியன் என்பவர்கள் போன்றவர்கள் பிறந்த இடமல்ல. இங்கு ஞான மார்கைத் தைக் கண்ட மகான்கள் கபீர, நானக், ஸாயிபாபா, ராமகிருஷ்ணர், விவேகானநதர், மகாத்மாகாந்தி போன்ற வாகளை அவதரித்த நாடாகும். இது இங்கு பக்தியே பிரதானமானது. பக்தி மார்க்கத்தில் இந்தியா சிறநது விளங்கியதனால்தான் நம கலாசாரமும் நம் பண்பும் உன்னத நிலைமையை அடைந்திருக்கின்றன.

இப்போது நாஸ்திகத்தைப் பரப்ப சிலர் கிளம்பி யிருக்கின்றனர். இவர்கள் வாதம் "சாமி கண்ணுக்குத் தெரிகிறதா? எப்போது சாமி கண்ணுக்குப் படவிலலையோ அப்போது சாமி என்று ஒன்று கிடையாது" என்பது. இவர்களை நான் ஒன்று கேட்கிறேன். "இவாகள மூளை கண்ணுக்குத தென்படுவதில்லை. இதைக் கொண்டு இவாகளுகக மூளையே இல்லை என்று சொலலிவிடலாமா?"

ஸ்ரீ ஏ. எஸ். பி. அய்யர் பேசியபின் ஸ்வாமி சிவானநதா பகவநநாம பஜன நடதத்தினர் பினனர் அவர் பேசுகையில் வாழ்வு மேம்பட பக்தி அவசியம் என்றும் வைகுண்டம் என்பது எங்கேயோ யுள்ளதலல வென்றும ஒவ்வொரு வீட்டையும வைகுண்டமாகக மக்கள் மனது வைத்தால் முடியும் என்றும், சற்று தியானம, பகவன் நாமத்தை பஜித்தல்; இவைகளை தினம் செய்து வநதால் வாழ்க்கையும் நிம்மதியாக நடப்பதுடன் மோட்சமும் கிடைக்கும் என்று கூறினர்.

சேவை மூலமே மேன்மை அடையலாம்

சுவாமி சிவானந்தருக்கு நேற்று மாலை மியூஸியம் தியேட்டரில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக் கமிட்டித் தலைவர் நீதிபதி ஸ்ரீ வஸ்வநாத சாஸ்திரி வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளிததார.

முதல்மந்திரி ஸ்ரீ ராஜா, மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் டாக்டர் பட்டாபி சீதாராமையா இவர்களுடைய செய்திகள் படிக்கப்பட்டன.

சுவாமி பேசுகையில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம காட்டப்படக்கூடாது எனறும் சேவை மூலமே

மேன்மையடைய முடியும் என்றும எல்லாரும் கடவுளின் குழந்தைகளே என்றும் கூறினார.

2உ அக்டோபர் 1950 இன்று நிகழவேண்டிய முதல் நிகழ்ச்சியாகிய திருவல்லிகேணி சிவாஜி வியாய மண்டல உபன்யாசத்துக்குச் செல்லு முன்னர் சுவாமிகள் அன்பர் S. V ஐயர் அவர்கள கோரிக்கைக்கிணங்கி அவர் இல்லம் சென்று அவாகளை ஆசிாவதித்துப் பிறகு சிவாஜி வியாய மண்டலம் வந்து சேர்ந்தாா. அங்கு நிகழ்ந்தவைகளை சென்னை "சுதேசமித்திரன்" கூறுகிறது.

யோகாசனங்களின் அவசியம்

சிவாஜி வியாய மணடலில் வற்புறுத்தல்

சுவாமி சிவானந்த சரஸ்வதிக்கு இன்று காலை திருவல்லிகேணி சிவாஜி வியாய மணடலத்தினர் ஒரு உப சாரம் நடத்தினர்

ஏராளமான ஆண், பெண், குழநதைகள் குழுமி யிருந்தனர்.

சுவாமிஜிக்கு ஸ்ரீ சஞ்சீவி காமத் நல்வரவு கூறினார.

ஆங்கிலத்திலும, ஹிந்தியிலும, தமிழிலும உபசாரப் பத்திரங்கள வாசித்தளிக்கப்பட்டன.

மணடலின் தேகப பயிற்சி ஆசிரியர் ஸ்ரீ ஏ. ரங்க ராஜன் யோகாசனங்கள் செய்து காண்பித்தார்.

ஸ்வாமிஜியின் சிஷ்யர்களும் சில அபூர்வ ஆசனங் களைச் செய்தனர.

பிறகு சுவாமிஜி பேசுகையில், தேகாரோக்கியமின்றி ஆத்மீக அபிவிருத்தி சாத்தியமில்லை என்றும் தேகா ரோக்யத்திற்காக யோகாசனங்கள் புரிவது அத்யாவசியம் என்றும் உலகாயத நலனுக்காகவும ஆத்மீக பரி பக்குவத் திற்காகவும தியானம் அவசியம என்று கூறினர்.

பெண்மணிகளுகக்கும் ஆயுள ஆரோக்யத்திற்காக சூர்ய நமஸ்காரம் ஆசனங்கள ஆகியவற்றைச் செய்ய வேண்டும் என்றும் அவர் உபதேசித்தார்.

"சிவாஜி மண்டலில் உள்ள அங்கத்தினர்கள எண் ணிக்கை வருத்தத்தக்கது. சென்னை நகரிலுள்ள அனை வரும அதில் சேர்ந்து பயனடைய வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

சிவாஜியின் பெயரைக் கேட்டாலே உத்வேகம் ஏற் படும. நாம் ராணுவ மனப்பான்மை பெறவேண்டும். இன்றைய நிலைமையில் இது அவசியமாகிறது. நாம் ஆத் மீக ஆயுதத்தால் தற்காப்பு செய்துகொள்ள வேண்டும் என்று சுவாமிஜி முடிவில் கூறினர்.

நாமசங்கீர்த்தனத்துடன் விழா முடிவடைந்தது.

—சுதேசமித்திரன் 2-10-50

ஓம்

பூஜ்யஸ்ரீமத் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் அடிபணிந்து, சிவாஜி உடற்பயிற்சிக் கழகத் தின் சார்பாக, அன்னரின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கப் படும மனமுவந்த வாழ்த்துப் பத்திரம்.

"போற்றத்தகுந்த புண்ணிய சீலரே, எங்கள் இதய பூர்வமான வணகக்ம் பல. தாங்கள், எங்கள அழைபபுக்

கிணங்கி, இவ்விடத்தில் எழுந்தருளி, இதனை தாங்கள், தங்கள் பாததூளிகளினால் பரிசுத்தஸ்தலமாக மாற்றியமைத்த பெருங்கதை என்னே? பெறற்கரிய பெருமை பெறினைப பெற்ற எங்கள் பாகதியத்தை என்னென்று கூறுவோம்! யாதென இயம்புவோம்! தங்களை வரவேற்கும தனிப்பெரும பேறுகிட்டிட நாங்கள பேருவகையுடனும், காவத்துடனும் தலை நிமிர்ந்து பார்க்கிறோம். நிற்க, எங்களுடைய இத்துணைநாள், தவத்தின் பலன் கிட்டியது, என்று நினைக்குங்கால், எங்களுள்ளமும், உடலும் அகமும், புறமும், புளகாங்கித மெய்துகின்றன.

"முற்றும் துறந்த முனிபுங்கவரே! பூஜயரே! இத் தென்னிந்திய நாடு, ஸ்ரீ சங்கர, ஸ்ரீ ராமாநுஜர், போன்ற புணணிய புருடாகளைப் பெற்றெடுத்து பாதுறந்த பாமரர்களைப் போற்றி வளர்த்து இப்பாரத நாடுமுழுமைக்குமே உதவி யிருககின்றது. ஆனால், இன்று, இத்தென்னிநதியா, தங்களை ரன்றெடுத்ததின் காரணம் யாதெனில சகவலம், தங்கள் மூலம் பாரத நாடு முழுமைக்கும், சுமூகமத்தையும், நன்மைகளையும், பெறுவதற்காக மட்டுமல்ல; இநத அகில உலகும் தங்கள் மூலம், நன்மையையும், நலனையும், அடைதற்பொருட்டேதான், என்னும் கூற்றில அணு வளவும் ஐயமில்லை. இதனைச் சிந்தையில் நிறுத்துங்கால தனிப்பெரும கர்வம் ஏற்படுகிறது.

"இன்று அகில முழுவதிலும், கொடுமைகளும், அநீதிகளும், அக்கிரமங்களுமம, ஊழி நடனம் புரிகின்றனமாண்பு மிக்க மானிடவர்க்கமானது,

"அசுர சக்திகளின் ஆதிபத்தியத்திற்கு அடிவருடி, அடிமையாகி, அதனைப் போற்றிப் புகழ்நது பூஜிக்கத்

தலைப்பட்டுள்ளது. யுத்தமென்னும் பிரளயத்தின் கரு மேகங்கள், வந்து குவிந்து குழுறுகின்றன. அதன் காரணமாக ஏற்படவிருக்கும், மாபெரும் அழிவினை மாந்தர் குலத்துக்கு, குறிப்புகளினுல் அறிவுறுத்துகின்றது. இந் நிலையிலே, பாமரமக்கள், எது செய்ய வேண்டும், எது செய்யத்தக்கது, என்று அறிவிழந்து, மதி கெட்டு எங்கும் அடைக்கலம கிட்டாமல், பயந்த நோக்குடன் மரணத்தை எதிர் நோக்குகின்றனர். இவ்வித மரணவஸ்தையினின்றும், எங்களை விடுத்து, உண்மைப் பாதையிலே நடத்திச் சென்று "சுகம், சாந்தி, இவை கிட்டுமாறு, அருள புரியத் தக்கவாகள், தங்கள் போன்று மாபுருடர்களைத்தவிர்த்து, வேறுயாரே உளர்?"

"துஷ்டநிக்ரஹ, சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டும், அறநெறி நிறுவுதல் பொருட்டும், நான் ஒவ்வொரு யுகத் திலும், அவதரிக்கிறேன்" என்று கீதையின் வாக்கியத் தையே, தியானித்தவர்களாக, விண்ணை நோக்கி, ஆண் டவனின் அருளுக்காக ஏங்கிநிற்கின்றனர், எளிய சாதுக் கள். இன்றே, தங்களுடைய திருவுருவை காணக்கிடைத்த பெரும் பேற்றின் நிமித்தமாக, எங்கள மனத்தகத்தே குடி கொண்டிருந்த பயங்கள் பறந்திட்டன. அவநம்பிக்கையும், ஏமாற்றமும், அழிந்துபட்டன. நம்பிக்கையென்னும் பயிர் முளை விட்டிருக்கிறது. அது தலையெடுத்து, தழைத் தோங்கும என்பதில் ஐயமில்லை. அன்று தொட்டு இன்று வரை தாங்கள் "ஆனந்த குடீரத்தில்" அமர்ந்து, பாரின் கண்ணுள்ள பற்பலபாகங்களில் வதிந்து வரும் மக்களின் மனத்தினை பக்தி நெறியில் நிறுத்து வதற்காக எத்தனை பாடுபட்டிருக்கின்றீர்களோ, அதைவிட ஒரு மேலான நலன், தங்களுடைய இந்த யாத்திரையின் மூலம், எங்

களுக்குக் கிட்டியுளளது அஃது யாதெனில், தாங்கள் இருதயாத்தினையின் மூலம, உலக சேஷமத்துக்கான, விதை விதைத்திருக்கின்றீர்கள். இது எங்களுக்கும், யாவருக்குமம, மிகக நலம பயக்கக்கூடியதாகுமம.

"அகிலம் துறந்த அண்ணலே! சுவாமிகளே! இந்த சிவாஜி உடற் பயிற்சிகழகமம, 1927ம, ஆண்டில், ஸ்ரீமான் சஞ்சீவி காமத் அவர்களின் பெருமுயறசிகளினல் நிறுவப்பட்டதெனபதையும், அன்று முதல இம்மணடலம் பாரத நாட்டினுடையதேயான, உடற்பயிற்சிகள், ஸூர்ய நமஸ்காரம் யோகாஸனங்கள், இவைகளின் பிரசார மூலமாக, மகக்களுகக்குத் தொணடாற்றி வருவதை தாங்கள் அறிந்திருப்பீர்கள. இம்மண்டலத்தை நிறுவி இன்னைக்குச் சற்றேறக்குறைய இருபதது மூன்றே வருடங்கள் தான் ஆயினபோதிலும் இந்த ஸ்தாபனத்தின் மூலம் ஆயிரகணக்கான மக்கள், நன்மை பெற்று, வெவவேறு இடங்களிலே, "ஆரோக்கியம் குன்றியும், வியாதிகளினல் பீடிக்கப்பட்டும் வசித்து வரும் மக்களுக்கு" தொணடு புரிந்து வருகின்றனர்.

"நோயற்ற திடகாத்திர சரீரம் பெறுதல் வேண்டும்; அதனிலே பிறர் சேவையில் ஈடுபடும பலிததிரமான மனத்தினைப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும" ஆகிய இவையே எமது குறிக்கோளாகும. நாங்கள கர்மயோகி, சத்ரபதி சிவாஜி மகாராஜாவை எங்களுடைய லக்ஷிய புருஷராக ஏற்று, எங்கள் உடலினை உடற்பயிற்சிகளினல் உறுதியாகவும, மனத்தினை யோகாசனம், பிராணயாமம, முதலிய வைகளால், தூய்மையாக ஆக்க முற்படுகிறோம.

மேலும தங்களைப்போன்ற, அன்பே உருவெடுத்த, மகான்களின் ஆசிர்வாதத்திலால, நாங்கள உலக க்ஷேமத்தையும, நலன்களையும, கோரிக்கொடுக்கும ஆணவனின, கைக்கருவிகளாக ஆவோம் அவனுடைய சக்தியின் இயந்திரங்களாக ஆவோம. மாந்தர்களிடம மட்டற்ற அன்பு பூண்டவர்களாகத திகழ்வோம.

தங்களுடைய, இந்த யாத்திரையில், கிட்டிய பலனும, நலனும, இவ்விடத்திய மக்களின் மனத்திலிருந்து, தீனனிலத்தை அறவே அழிக்கட்டும், இரக்கமற்ற தன்மையை அகற்றடும், எம்மிடையே பொங்கி நிற்கும் வேற்றுமை உணர்ச்சியை களைந்தெறிந்து செய்யட்டும. இவற்றின் மூலம், நாட்டிலே, அமைதி, ஆரோக்கியம், சந்தோஷம, தனதான்யங்களின் விருத்தி, ஆகிய இவை வேண்டுப் பெருகிவளருமென்று, திட்டமாக நம்புகிறோம.

தங்கள் ஆசி பல கோரிநிற்கும்,

சிவாஜி உடற்பயிற்சிக் கழக உறுப்பினர்கள்,

சென்னை.

இவ்விழாமுடிந்ததும் ஹரிஜன தியாலாஜிகல பள்ளிக்குச் சென்று அங்கு மாணவர்களுக்கு தக்க அறிவுரைகளை உபதேசித்துப் பின்னர் ஸ்ரீ சுவாமிகள் அன்பர் திரு சம்பந்த முதலியார் அவர்கள் வேண்டுகோளின்படி அவர் இல்லம் சென்று அனைவருக்கும ஆசி தந்து புரசவாக்கம் திவ்யஜீவன் சங்கக்கிளைக்கு விஜயம செய்தார.

அதன் பின்னர் இன்று மாலை வரையில் சுவாமிகள் ஹிந்தூ பெண்கள் உயர்தரப் பள்ளிக்கும, சென்னை வேதாந்த சங்கத்துக்கும, ஆரோக்ய ஆசிரமத்திற்கும விஜயம் செய்து ஆங்காங்கு பற்பல உபதேசங்களைப் போதித்து அனைவரும் பிறவிப் பெரும் பயன் எய்தும் வண்ணம் அனுக்கரகித்தார். இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

சுவாமி சிவானந்தர்

செவ்வாய் அலுவல்கள்

காலை 6-30 மணி பாகடவுன், தேவ ராஜ முதலி தெரு ஸ்ரீ சென்ன மல்லீசவரர் ஸ்ரீ சென்னகேசவப் பெருமாள் கோவிலகளில் சுவாமி தரிசனம்.

8-மணி - அடையாறு கலாக்ஷேத்திரம், பெஸண்ட் பிரம்மஞானப் பளளிக்கூடம, குழநதைகள் விடுதிகளுக்கு விஜயம.

11-மணி-அடையாறு பிரமமஞான சங்கத்துகது விஜபம்.

பிற்பகல் 2-15 மணி-பிராட்வே, "மைமாகஸின் ஆப் இநதியா" ஆபீஸில் உபசாரம்.

மாலை 3-15 மணி தங்கசாலத் தெரு, ஸ்ரீ சென்ன ஏகாம்பரேசுவரர் கோவிலில் சுவாமி தரிசனம்.

4-30-மணி கோடம்பாக்கம், ஸ்ரீ வட பழனி ஆண்டவர் கோவிலில் சுவாமி தரிசனம்.

6-மணி தியாகராயநகர், "வாணி மஹாலில்" நடக்கும் பொதுக் கூட்டத்தில பேசுவார்.

7-45 மணி - தியாகராயநகர் சிவ விஷ்ணு ஆலயத்தில் சுவாமி தரிசனம.

இரவு 10-15 மணி - எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து விழுப்புரததுக்குப் பயணம்.

வரவேற்புப் பத்திரம்

அவ்வை ஆஸ்ரமம் 3-10-50

பிரமம ஸ்ரீ மகா மணடலேசுவர சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹராஜ அவர்களுக்கு, சென்னை அடையாறு அவ்வை ஆசிரமத்தார் வாசித்தளித்த வரவேற்பு.

ஓங்கார நாதத்தால உலகினை எழுப்பும் சுவாமிஜி வருக! வருக!! தஙகள வரவு நல்வரவாகுக!!!

அஞ்ஞான இருளில ஆழ்நது உறஙகிக் கிடக்கும் மககள் விழிப்படைய வநத சூரிய ஒளியே! நாங்கள பாக்கியம் பெற்றவர்கள். தங்கள் பாத தூளி படுதலால் எங்கள் ஆஸ்ரமம் பரிசுத்தமடைநதது.

எஙகள அவ்வை நிலையம் ஜாதிமத பேதமின்றி ஆதரவற்ற குழந்தைகளுக்கும் திக்கற்ற ஸ்திரீகளுக்கும் ஒரு ஒப்பற்ற புகலிடம். பரிவு கொண்டு வரவேற்று அவர்கள் துன்பத்தைத் துடைத்து இன்ப வழி காட்டி ஆதரிக்கும் ஆஸ்ரமம.

செநதமிழ் நாட்டில் தோன்றி தூய எளிய வாழ்க்கை வாழ்ந்து உண்மை ஒளியில் ஒழுகி உலகிற்கு ஞான ஒளி வீசிய அன்னை அவ்வை பிராட்டியின் பெயரால் இலங்குவது.

மண்ணுலகில் பொருளாதாரச் சிக்கல்களாலும், சமூகக் கொடுமைகளாலும், அறியாமையாலும் வேதனை யடையும் பெண்ணுலகைப் போற்றி நல்வழிகாட்டி இம்மாதிரியான நிலையங்கள் பல இன்றியமையாதன என்பதைத் தாங்கள் அறிவீர்கள். உடற்கு வரும் இடர்களையும் உத்தமாய்ப் பணியேற்ற பின்னர் உலகின் மாபெரும் பிணியான அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தை யூட்டி சன்மார்க்கத்

தைக் காட்டி பிறவிப் பிணியை அறவே ஓட்ட வல்ல உன னதப பணியில் தங்களை ஈடுபடுத்திய ஆணடவனை மன மொழி மெய்களால் வணங்குகிறோம். தொன்றுதொட்டு அருந்தவ முனிவாகள் அருள்மிகு ரிஷிகள சன்மாக்க மணிகள் சத்திய சீலர்கள ஆகிய சான்றோாகள் வழி வந்த எங்களுக்கு தவகள் தனிப்பெருங் கருணையையும் உய்விக்க வல்ல அருளையும் ஆசியையும வாரி வழங்க வேண்டுமாய்த் தங்கள் திருவடி பணிந்து வணஙகி வேண்நிகின்றோம.

இப்படிக்கு
தங்கள் அன்புமிக்க, அவ்வை ஆஸ்ரமத்தார.

சென்னை நகரில் ஸ்ரீமத் சிவானந்த சரஸ்வதி சுவாமி களின் விஜயம எததனைய புதுதுணாசசியை ஊட்டிற்று என்பதை 'நாரதர்' தம் பதிதிரிகை மூலம் விளக்குகிறார்.

சென்னையிலே சுவாமி சிவானந்தர்

சென்ற நான்கு நாட்களாகச சென்னையில் எங்கு போனாலும, ரிஷி கேசதிலிருந்து வநதிருக்கும் ஸ்வாமி சிவானந்த சரஸ்வதியைப் பற்றிய பேச்சுதான். அவர் அங்கே வநதார், அவா அநதக கோவிலில தரிசனம் செய் தார்; அவர் இங்கே வந்தார், அநாயாசமாகப் பேசினர்; அஙகே வந்தார்; அங்கிருந்து புறப்படவே அரைமணி யாகி விட்டது; என்றெல்லாம் ஜனங்கள் பேசுவது என் செவி களில் விழுந்தது.

கன்னி முனையருகே, அசல் பாண்டிய நாட்டில், தாமிர பருணிக் கரையில் ஒரு சிற்றான பத்தமடையில், பிறந தவர் இந்தத் தமிழர். வடக்கே இமயத்திலே, சுமார் முப்

பதாண்டுகளாக, காஷாயமேந்தி, கடுந்தவம் புரிந்து, தன்னை யறிந்து, உணமை யறிந்து, நல்லதை நானிலத்துள்ளோருக் கெலலாம அழகாக எடுத்துச் சொல்லி வருகிறார். சமஸ் கிருத பாஷையில் மகா மேதையாக இருந்து, ஆத்மீகத் துறையில் அபார ஆராய்ச்சி செய்து, நாடெங்கும புகழ் பெற்று வாழ்ந்து மறைந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் வழி வந்த வர ஸ்வாமி சிவானந்தர். இவர், சிறந்த ஆங்கில பாஷை யில நூற்றுக் கணக்கான ஆத்ம ஹிதமான விஷயங்களடங ங்கிய நூல்களை இயற்றியிருக்கிறார்.

சுயநலமின்றி, பரநலத்திற்காகவே பாடுபட்டு வரும் ஒரு உத்தம சந்நியாசி இவர். ஆடம்பரமென்பதே அணு வளவும் அற்றவர். ஆண்டவனுக்கு அடிமையாக இருப் போரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் அசாத்திய ஆர்வமுள்ளவர் இவர். குழந்தை உள்ளம் படைத்தவர். குழந்தையைப் போலவே பேசுபவர். பேச என்று எழுந்து விட்டால, மடை திறந்த வெள்ளமென ஞான போதனைகள் வந்து பாய்கின்றன. கேட்போருக்கு அலுப்பு ஏற்படுவதே இல்லை.

ஆங்கிலம், தமிழ், ஹிந்தி எல்லாம் கலந்து பாய்கின்றன. நடுநடுவே ஸ்வர நாம பஜனைகளைச் செய்கிறார் உற்சாகத் தோடு எல்லாவித சக்திகளும், ஸ்வரநாமங்களைத் தொடர்ந்து பஜன ரூபத்தில் உச்சரிப்பதால் உண்டாகின் றன என்கின்றார்.

'ரட் ஏ லிட்டில், டிரிங்க் ஏ லிட்டில், ஸ்லீப் ஏ லிட் டில், திங்க் ஏ லிட்டில், நீ ஏ லிட்டில' என்று ஆங்கிலத் தில் பாட்டாகப் பாடுகிறார்.

'மிதமாகச சாபபிடு, மிதமாக அருந்து, மிதமாகத் தூஙகு, மிதமாக நினை, சிறிதேதனுமை செய்' என்று அர்த்தம் இதற்கு

நகை முகத்தோடு நல்லது பல சொல்கிறார். செவிக்கும், உள்ளத்திற்கும சிறந்த விருந்தாக இருகின்றன அவரது உபதேசச மொழிகள்.

அவரது எழுத்து வன்மை அபாரமானதாம். அவரது ஆங்கில நூல்களைப் படித்து, அவரது சீடர்களானவர்கள் பலர். உலகெங்கும் அவரது தெய்வநெறிச சஙகத்தின் கிளைகளிருகின்றன.

இத்தகைய ஸ்வாமிஜிக்குச் சென்னை நகர சபை வரவேற்பளித்தது. வணககம் தெரிவித்து உபசரித்தது, சென்னைக்கே ஒரு பெருமையாகும.

சென்னையில் உள்ள முக்கியமான பல ஆலயங்களுக் கெல்லாம் சென்று, ஸ்வாமிஜி வழிபட்டார். ஒரு பிரபல அரசியல் தலைவரை அலைக்கழிபபது போல, இந்த வயது முதிர்ந்த துறவியை அங்குமிஙகும் இழுத்துச் சென்று அசாத்யமாக பேச வைத்து விட்டார்கள. ஆனல் அது காரணமாக, அநேகாயிரவர் அவரைத் தரிசித்துமகிழ சந்தாபபம ஏறபட்டது.

சென்னையிலே அவரை மிகச் சிறந்த முறையில் வரவேற்று மலர் அன்னவாகன அலங்காரத்துடன கூடிய ரதத்தில்வைத்து ஊர்வலமாக இட்டுசசென்று அவருககு வேணடியதனைதையும செய்து கொடுத்து, அவரது அன்பிற்குப் பாத்திரமானவரும, "மை மாகஸின்" பத்திரிகை முதலாளி

யுமே, நகர சபை அங்கத்தினருமான ஸ்ரீ பி. கே. விநாயகமும், "மை மாகஸின்" கூட்டாசிரியரான ஸ்ரீ கே. ஆர். சேஷாத்திரியுமே எடுத்துக் கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. வரவேற்புக கமிட்டித் தலைவரான கனம நீதிபதி ஏ. வி. விஸ்வநாத சாஸ்திரியாரும் நிழல் போலவே கூட இருந்து வந்தார்.

ஸ்வாமிகளின் விஜயம் ஆஸ்திகர்களின் உள்ளங்களுக்கு ஓர் 'டானிக்' கொடுத்தது மாதிரி இருக்கும.

—நாரதா 3-10-50.

இன்றைய நிகழ்ச்சியில் கண்டபடி எல்லா இடங்களுக்கும் விஜயம் செய்தபோது இடையே அடையாறு 'அவ்வை' விடுதிக்கும் சென்று அவ்வாசிரமத்தார் அன்புடன் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நல்லுரைகளைக் கூறி நாம சங்கீர்தனமும் செய்து அனைவரையும் ஆசீர்வதித்தார்.

பின்னர் இரவு எழும்பூர் ரயில் வண்டி நிலையமடைந்து 10-15 மணிக்கு யாதத்ரா மணடலி அடுத்த இடமாகிய விழுப்புரத்தை நோக்கிப் புறப்பட்டது.

விழுப்புரம்

4—10—50-ல் விழுப்புரத்தில் அன்பர்கள் கூடி சுவாமிகளை மிகவும் பக்தியுடன் வரவேற்று பத்திரம் படித்தளித்தார்கள்.

கேப்டன் V. S மணி, மற்றுமுள்ள பல திவ்ய ஜீவன் சங்கத்து அங்கத்தினர்கள வெகு உற்சாகத்துடன் சகல ஏற்பாடுகளையும் தயாரசெய்தார்கள

இருஷீகேசம்
தெய்வநெறிக்கழக ஸ்தாபகத் தலைவர்
பூமண்டலேஸ்வர
ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி
மகராஜ அவாகள
4—10—50ல் விழுப்புரம் விஜயம்செய்தபொழுது
விழுப்புரம் தெய்வநெறிக் கழகத்தாரால்
பணிவோடு படித்தளித்த
வரவேற்பு பத்திரம்

அறநெறியை அகிலமெலாம் அளித்தாய் போற்றி
ஆத்மாவின் ஆனந்தம் ஆளுய் போற்றி
இதயததில் இறைவனைக் காண்கின்றாய் போற்றி
ஈசனைத் துதிக்க வழிதந்தாய் போறறி
உடல்நலத்திற்குயர் நெறியும உரைத்தாய் போற்றி
ஊக்கமோ டுணைமையுழைப்பு உகந்தாய் போற்றி
எளிமையால் இன்பமதை ஈவாய் போற்றி
ஏழ்மைநிலை இன்பமென ஏற்றாய் போற்றி
ஐமபொறியை அடக்குமமுறை அறைந்தாய் போற்றி
ஒளியொலிகளுட் பொருள்கள உரைத்தாய் போற்றி
ஓங்காரத்தொரு பொருளில் ஒளிர்வாய் போற்றி
ஔஷதமாம சற்குருவே போற்றி போற்றி.

அன்பின் வடிவாய் அறத்திற்கோர் அரணுகி அகில மெலாம ஒளிவீசும் ஆதம ஜோதி.

மாயையின் மயக்கால மானிடர்கள் மதிகெட்டு பகுத் தறிவு பெற்றும பகற்கனவு காண்போராய் உளளிருககும் உணவு விட்டு ஊருராய் உழல்வன்போல் தன்னுள் நோக்கி தன்னியல்பைத தான அறிந்து மற்றும உயிரகளெல்லாம்

மாதவனே எனறறிந்து, அறநெறி வாழ்வே அழியாச் செல்வமென்று வாழுவறியாது விபரீதக் கொளகை மிஞ்சி தாழ்நத நிலையடைநது தவிதது நிற்கும இநநாளில் உண்மை உணர்த்தி உலகியலில் உழுனறலும் அவரவாகடகேற்ற அறநெறியைக் கைக்கொண்டு பிரம்மசரியம் பேணி பெரியார்கள் தணைப்போற்றி மனமொடுங்கும் மார்க்கமும் மநதிரமும் தான் கொண்டு நியமங்களுடனே நினறிறை வனை இடைவிடாது நாமமதால் ஏற்றி நலமபெற வாழ்வதறகு நாணுவிதமாக நாடெங்கும் எடுத்துரைத்து நாஸ்திகத்தை வீழ்ததிய குருநாதா வருக.

தங்கள் தெய்வீக வரவால் தூயமையுற்றது இச்சிற்றூர். கைம்மாறு கருதாக் கருணைபொழி கறபகமே எழைகட்கும இடைவிடாது ஏவல் செய்யும் காமதேயாகி பக்தியை பாராங்கும பரப்பவந்த பரம்பொருளே.

ஞானத்தின் உண்மையை ஊட்டவல்ல ஞானவள்ளால் மழைக்கு மனிதனால் ஆகவேணடிய தொனறுமில்லை. மழையினால் மனிதற்கு மங்களங்களுணடாகும. ஒருவாகாய் வநதமழை பலருகுகும் பெய்வதேபோல் உன்னைப்போற்றும் உத்தமா பல்லாயிரவா எஙகெஙகோ ஏவலுககு எதிபாாத திருந்தும,

தங்கள் பொன்னடியைப் பார்க்க எங்கள் புண்ணியத்தை என்னென்போம !

தஙகள் பரப்பிரம்மஸ்வரூபமும், பிர்ம்ம ஞான வாழ்க்கையும தவசியரும் கண்டேற்றும் தத்துவ விளக்கங்களும் வேதாந்தத்திற்கும் புத்துயிர் கொடுத்தது. சன்மார்க்க

வாழ்வை பெருக்கியது. நாஸ்திகத்தை நசிக்கச் செய்தது. ஒளி கிடையாதுழன்ற சாதகர் பலருக்கு பேரொளி கொடுத்தது.

தினசரி வாழ்வும் திறமபட நடக்க தெய்வீகம் தேவை யெனத் தெளிவாக்கியது. ஜாதி, மதம், தொழில்கள் எத்தகைய தெனினுமம ஒவவொருவனுமம, ஒவ்வொருவரும் தன் வாழ்வை நல்ல நம்பிக்கையுடன் உயர்நிலைக்கு கொண்டு வர அறிய ,வழிகாட்டியாயிறறு. யோகத்தின் உண்மை யையும் வழிகளையும் யாவரும அறிநது எளிதில கைக் கொள்ள உதவியது

தன் லீலைகாக ஜீவர்களை சம்சாரக் கடலில தளளிய கடவுள அவவப்பொழுது கட்டைகளையும மரஙகளையும் கொட்டுவான்போல் வேதங்கள் விடுததான். உபநிஷதங கள் உதித்தன. கீதையைத் தநதான். பல மேனைதகளையும் நந்தான். இன்று எமக்குக் கிடைத்தது கட்டை அல்லது கட்டுமரம் இல்லை,தோணியுமம இல்லை. "சிவானந்தக்கப்பல்," யாவரும் ஏறி கவலையின்றி சமசாரக் கடலனைதக் கடக்கலாம்

வேதத்தின் ஸாரம் உபநிஷத, உபநிஷத்தின்ஸாரம கீதை. கீதையின் ஸாரம "ஸ்ரீ சிவானந்தசரஸ்வதி" எனறால் மிகையாகாது.

அறநெறியான தங்கள் அருள வாக்குகள அவ்வப பொழுது உத்தமர் பலரை உய்வித்து வந்தும் தனயரைத் தேடிவருமம தநதையேபோல் தங்கள அழுத மொழியாலும், அருட்கண்நோக்காலும் ஆதரித்து ஆட்கொள்ளவந்த அன்பினபெருக்கை என்னவெனறு சொலவது? உல

நிலையில் உடலுக்கு மாதநிமின்றி ஜீவனுக்கும் உணவின்றி அறத்தைப்போற்றி வளர்க்க ஆற்றலற்று, ஆர்வமும் விட்டுசரீர யாத்திரையே சங்கடமாகி பெரிய சோதனைக் குள்ளாகி யிருக்கும எங்கள்பால் நின் கடாக்ஷவீக்ஷணி யத்தால் பருதிமுன் பனிபோல் துன்பநிலை நீங்கி ஸன் மார்கக வாழ்விற்குரிய சூழ்நிலையும் போறிவும பெற அருள்வீராக. கண்ணன்போல் தொண்டுசெய்யுப் நின் கண்ணொளியால் பூவுலகில பூசல்கள் நீங்கி புத்துயிர் பொலிய வைப்பாய் புண்ணிய மூர்த்தி.

இங்ஙனம,

தெய்வநெறிக் கழகத்தார்,

விழுப்புரம்.

சுவாமிகளை அலங்கரித்த வாகனத்தில் ஊர்வலமாக அழைத்துவந்து திரும்பவும் ரயில் நிலையததில் சோதகதார் கள். ஜயகோஷத்துடன அங்கிருந்து வண்டியும புறப பட்டது.

—o—

சிதம்பரம்

சிதம்பரத்தில் டாக்டர் பி. ஸி ராய் ஸ்ரீ சுவாமிஜியின் விஜயத்தைப்பற்றி சகல ஜனங்களுக்கும் தெரியப் படுத்தினர். அண்ணாமலை யுனிவர்சிடியில் ரிஜிஸ்ட்ரார் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். பிறகு சிதம் பரம் கோயிலில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு உப தேசம்-செய்தார். அதுசமயம அரவிந்தகோஷ் ஆஸ்ரமத் திலிருந்த புகழ்பெற்ற ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் விஜயம் செய்தார்.

ஸ்ரீ சிவானந்த யாத்ரா மண்டலி

சிதமடரம் விஜயம் 4-10-1950.

மாலை மணி 2-29க்கு வருகை. மணி 3 விருந்து அண்ணுமலை சாவகலாசாலை விஜயம்; சர்வகலாசாலை போதகாசிரியர்கள உத்தியோகஸ்தர்களுடன் பேச்சு; தேநீர விருந்து; சாஸ்திரியார் ஹாலில் ஆத்மீக ஸம்பந்தமான கூட்டம.

இரவு மணி 6 விருந்து 9 வரையில யோகாஸனப பயிற்சிசெய்து காண்பித்தலும், ஆச்ரம வேலைகளை, சினிமாப்படமாக காண்பித்தலும். டவுணுககு திருமபி வருதல. கோஷ்டியாக ஸ்ரீ நடராஜர் கோயிலுககுச சென்று பூஜை, நாமசங்கீர்த்தனம, உபந்நியாசம்.

5—10—1950 காலை 7-50கு மாயவரத்திற்கு புறப்பாடு

—o—

உ

குருபாதம்

அழைப்பிதழ்

ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி அவர்கள் யாத்திரைக்காக, தென்னாடு வருகிறார்கள். வழியில் தருமபுர ஆதீனத்திற்கு 5-10-50 வியாழாக்கிழமை காலை 9-30 மணிக்கு எழுந்தருளுகிறார்கள். அவர்கள் இமாலயத்தில பல யாண்டுகள் தவஞ்செய்து, சகல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து, தெளிந்து, நிட்டைகூடி, ஆத்மதரிசனம் செய்தவர்கள. யோகமம வேதாந்தங்களைப்பற்றி அவர்கள் எழுதியுள்ள நூல்கள் பல. அவை மேல் நாடுகளிலும் ஏராளமாய்

பரவியுள்ளன. 1936-ம் ஆண்டில் அவர்கள நிலைநாட்டிய தெய்வநெறிக் கழகம் ஐரோப்பாவிலும, இங்கும பல இடங்களில் பல கிளைகளுடன் விளங்கிவருகிறது. அவாகள், யோகமுறைகளையும் ஆத்மஞானப் பயிற்சியையும் அளித்து வருகிறார்கள். இந்த மகாஜன தரிசிதகய்ய அரிய சந்தர்ப்பம இப்போது வாயத்துள்ளது. ஆகலால அவர்கள் வரவேற்பிலும், நிகழ்சசிகளிலும கலந்துகொண்டு உபதேசச மொழிகளைக் கேட்டுய்ய வேணடும.

உத்தரவுப்படி,
சோமசுந்தரத் தம்பிரான்,
ஆதீனப் பிரசார கோஷ்டித் தலைவர்.

தருமபுரம்,
29—9—50.

—o—

நிகழ்ச்சி

5—10—50 வியாழக்கிழமை

—o—

காலை மணி 9-30 மாயூரம் ஜங்ஷனில வரவேற்பு. மாலையணிதல், பூரணகுமபம, விபூதிபிரசாதம.

,, 10 சண்முக வளைவுக்கருகில் இருந்து ஊர்வலம்

,, 10-30 11 வடகரு மடததில வரவேறபு.

,, 11 காவிரியில நீராடுதல, கோயில, மடாலயம் தரிசனம.

நடுப்பகல் 12 உணவும்—ஓய்வும்

மாலை 3-10 அரங்கிற்கு அழைத்துவருதல்.

,, 3-30 கூட்டம்

1. கடவுள வாழ்த்து.
2. வரவேற்புரைகள்.
,, ஆதின டடம்.
,, ஆதீனக் கல்லூரி.
,, எனைய கலவி நிலையங்கள்
3 கீதகனம வேலாயுத ஓதுவார்.
4. உரையாடல்: மாணவர்கள்.
5. பஜகோவிநதம: மாணவாகள்
6 உபதேசம: சுவாமிஜி.
7 நன்றிகூறல்.

,, 6 திருக்கடஷூருக்குப் புறப்பாடு.

இரவு 7-30 8-30 ஸ்ரீ அழுதலிங்கப் பெருமான், ஸ்ரீ அபிராமி காலசஙகாரமூர்த்தி தரிசனம்,

,, 9 தருமைக்குத் திருமபுதல்

6—10 50 வெள்ளிக்கிழமை

காலை 4 பஜன.

,, 5 வழி அனுப்பி உபசரித்தல்

[தருமடபுர ஆதின சஞ்சிகையான 'ஞான சம்பந்த'தில் வெளியான கட்டுரை.]

பொன்றயங் கிலஙகொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாம் பிஞ்ஞகா பிறபபிலீ
கொன்றையம முடியினைப் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே—சம்பந்தர்

ஸ்ரீ சிவானந்தர் விஜயம்

ஒரு மூன்றுமாத காலமாகவே தென்னாடு சிவானந்த மகாராஜ அவர்களை வரவேற்கத் தயாராகிறது. சிறப்பாகத் தருமபுரமும அப்படியே. ஊரெங்கும் தூய்மை; எங்கும மகர தோரணங்கள; அஙகஙகும் தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலுமெ எழுதிய வளைவுத்தட்டிகள்.

சுவாமிகள் தங்குவதற்கு வசதியாகத் தேவாரபாடசாலையும் புது எழிலுடன் மிளிகண்ணை முதலிய பல நிற வாணங்களைப் பூசிக்கொண்டு தயாராக இருந்தது. சிப்பந்திகள் நியமன ஜாப்தாவும் தயாரிக்கப்பட்டு அவரவாகளுமே இன்னின்னது செய்யவேண்டுமென முன்னரே அறிவிப்பும் கரப்பட்டிருந்தது.

சுவாமி சிவானந்த மகாராஜ் சென்னைக்கு வருவதை விடுதலாகளை என்று தெரிந்தவுடனேயே மகாசந்நிதானமவர்கள் ஆதீனசகாபில் பிரதிநிதிகளைச் சென்னைக்கு அனுப்பி வரவேற்கச் செய்தாகள சிதம்பரத்திற்கு வந்ததும் தருமபுர ஆதீனத்தின் சார்பாக வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தர தம்பிரான் சுவாமிகளவர்கள, சுவாமிஜீ அவர்களை அழைத்துக்கொண்டு 5-10-50 காலை 7-40 வண்டிக்குச் சிதம்பரத்தில் ரயிலேறினர்கள். சீகாழி வந்ததும் ஸ்டேஷனில் அரஹர முழக்கம் கேட்டது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின ஆணையால் சீகாழி கட்டளை விசாரணை, வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள கோயில் மரியாதையுடன் விபூதிப்பிரசாதம் பார்த்தார்கள. அடுத்தது வண்டி வைதீஸ்வரன் கோயில் வந்துநின்றது. அங்கும் ஸ்டேஷனில் பெருங்கூட்டம்.

வேளூர் தேவஸ்தானத்தில் விருந்து மந்திரமும், தந்திரமும் மருந்துமாகிய ஸ்ரீவயித்தியநாதப்பெருமானின் அநுக்கிரஹ விபூதியும் பிரஸாதங்களுமே வந்திருந்தன. அவற்றை வேளூர் கட்டளை சுவாமிகள் வாங்கிச் சிவானந்த சுவாமிகளிடம் ஏறபித்தாகள். புறப்பட்டது வண்டி. 9-40கு மாயூரம் ஜங்ஷனை வந்து சேர்ந்தது.

மாயூரம நகர சபைச் சார்பிலும் மறறும பல ஸ்தாபனங்கள் சார்பிலும் வரவேற்க முன் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்டேஷனிலும் பெருங்கூட்டம். வைதிக சம்பிரதாயப்படி ஆதீன மரியாதைகளுடன் ஞானபுரீஸ்வரஸ்வாமி கோவில் பிரசாதங்களைச சேர்ப்பித்து, பூர்ணகுமபத்தோடு முதல் முதல் வரவேற்கப்பட்டது. திருக்கடவூர்கட்டளை ஸ்ரீ மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் மாலையணிந்து வரவேற்றார்கள நகரசபை சார்பாக வந்த ஸ்ரீமான் முத்தையஞ் செட்டியார் அவர்களும், மற்றும் பல சபையின் அமைச்சர்களும் சுவாமிஜி அவர்களுக்கு அறிமுகம் செய்விக்கப் பெற்றார்கள். பிறகு ஆதீன மோட்டாரில தருமைக்கு எழுந்தருளினர்கள். வழியில் சுவாமிஜி அவர்கள் மாயூரம் நகராண்மைக் கழக உயர் நிலைப்பள்ளிக்குச் சென்று முனிஸிபல், மெடிகல் அஸோஸியேஷன், மாணவர் ஆசிரியர் சங்கம், முதலியவற்றின் வரவேற்புப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு, ஆசி அருளி, நல்லுரை வழங்கினர்கள்.

11 மணிகு சுவாமிஜி அவர்கள் தருமபுரம் சண்முகம் வளவுககு அருகாமையில் வந்தார்கள். குடை, கொடி, ஆலவட்டம், பூர்ணகும்பம், யானை இவைகளுடன் வரவேற்க ஏற்பாடாகியிருந்தது. இரு மருங்கும் ஆதீனக்

கல்வி நிலைய மாணவாகள அனைவரும அணிவகுத்து நின்று சிவநாம முழக்கம செய்தனர. கார மெதுவகர ஊரநது வநதது. மாணவாகள அனைவரும் திருவாசகத்திலுள்ள சிவபுராணம போற்றிதிரு அகவல இவைகளைப் பாராயாணம செயதுவநதார்கள. கும்பகோணம், நாகப்படடினம, பேராளம, சிக்கல், நனனிலம, மஞ்சக்கொலலை முதலான இடஙகளிலிருநதும பல மெய்பன்பாகளரும, செய்வநெறிக்கழக உறுப்பினாகளரும சுவாமிஜி அவாகளைத் தரிசிகக கூடியிருநதாாகள். மங்களவதத்தியதத்துடன் வநத ஊர்வலம தேவார பாடசாலையை அடைந்தது. வநதிருநத அனபாகள் அனைவரும முறையாக வணஙகிச் சுவாமிகள அவர்களின் அருளைப் பெறறுகொள்ள, சுமார் மணி 12 ஆகிவிட்டது அதற்குமேல் யாத்திரைகோஷடி அமைச்சராகிய ஸ்ரீ பரமானநத அவாகள சுவாமிஜி அவர்களுடைய திருமேனிப்பாஙகை முன்னிட்டு, சுவாமிஜி அவாகளைத் தனித்திருக்குமாறு வேணடிக்கொணடார்கள். அவ்வாறே அதற்கேற்ற வசதிகளும செய்துதரப்பட்டன. பின்னர் உணவும ஓய்வும.

மாலை 9-30 மணிக்குக் கூட்டம ஏறபாடாயிற்று. பழுதத தவச்செலவருடைய பண்பட்ட மொழிகள ஊரொங்கும் பாவ எட்டுதிக்கிலும ஒலிபாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டன. ஆதீனப் பாடசாலை ஆசிரியர்களாலும மாணவர்களாலும் தேவார இன்னிசை முழக்கம் செய்யபபட்டது. ஓசை ஒலியெலாமான சிவபெருமான் சலையைனை எலலோரும மனத்தகத்துக் கண்டு சிவானநத மகராஜ அவர்களும ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும கூட்டத்திற்கு எழுந்தருளி வநது மேடையிலுள்ள தத்தமகுரிய ஆசனத்தில் எழுந்தருளினர்கள். இரண்டு குரு

மார்கள எழுந்தருளியிருகின்ற காட்சியை அனபர்கள கண்டு ஆனநதிதகார்கள. ஸ்ரீலஸ்ரீ மாகசநிதானகதிறகு அன்று குருவார உபவாசமும மௌனதினமும் மாகையால் முன்னலேயே ஓலிபபதிவு செய்யபபட்டிருநதது. அவர்களின் *உபசாரமொழிகள அப்பொழுது ஓலிபரப்பப் பட்டன.

———

ஸ்ரீசுவாமிஜி சிவானந்தசரசுவதி மகராஜ்

அவாகடகு

(தென்னட்டுச் சுறறுப் பயணத்தினபோது)

மாயூரம் நகரான்ணமைக்கழக உறுப்பினாகள

மனமகிழ்நது அளித்த

வரவேற்புரை

—o—

பிரவா யாக்கை உடையோன்

மலரடி என்றுட ாறவாப் பெரியீர்!

அன்பின் சிறப்பை அகில உலதறகும் எடுத்துக் காட்ட, அல்லும் பகலும் ஐமபொறிகளையும் அடக்கிய தவத்தின் தலைவ! ஆண்டவன் கடடளையை மக்களுக்கு உணர்த்தி, அன்பு வழியிலே அனைத்து உயிரையும சேர்நது வாழ, அறிவுரை கூறிவரும் ஆத்மீக தலைவா! என்னு வதற்கும் வநிய துன்பங்களையும், இயற்றுவதற்குக் காரணமான மனத்தை அடக்கிய மாபெரும் வித்தக! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசைகளையும நீக்கிய முனிவா! நீரில் குமிழிபோன்ற நிலையிலா வாழ்க்கையை விரும்பாது, அநதமில் இன்பத்தை அழியாத் தொறவு

*உபசாரமொழிகள் இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளன.

வாழ்கையையே மேற்கொண்ட துறவின் தன்மை' மழையைக் கண்ட பயிரைப்போல—தாயைக்கண்ட சேய்போல—பசுவினைக்கண்ட கன்றினைப்போல, தங்களைக்கண்ட நாங்கள் சொல்லமுடியாத இன்பத்தை அடைகிறோம். அந்த இன்பப் பெருக்கினால் தங்களை அன்புடன் வருக' வருக! என்று வரவேற்கவும் செய்கிறோம்.

நாட்டு மக்களும், உயிர்களும் நல்ல நிலையில் செழித்து வாழ, எண்ணிய அறிஞர்கள் எங்கு எங்கு தோன்றினும் எல்லோரும் போற்றும் நிலையை அடைபவர்கள் அல்ல. ஒரு சிலரே போற்றும் நிலையைப் பெறுபவர்கள். பழங்கால மக்கள், அறிவை அரேக இயந்திரங்கள் உண்டாக்கப் பயன்படுத்தி அதனால் உலகத்தையே ஆட்டியும் அழித்தும், பிறகு அன்பு வாழ்க்கையையேக் கைக்கொள்ளலாயினர். மதிப்பிடற்கு அரிய மாபெருஞ் செல்வமும், மன்னர் பதவியும் இருந்தும், மண்ணாசை பொன்னாசை புத்தரையும், நாடு பிடிக்கும் கருத்தில் நாட்டு மக்களைக் கொன்றழித்து நாட்டைப் போர்க்களமாக்கி, பிறகு திருந்திய அசோகரையும், அறிவு அற்ற மக்கட்கு ஆவியைக்கொடுத்து அனைவ நிலைநிறுத்திய இயேசுவையும் மூடப்பழக்கத்தில் மூன்றாந்தின்ற மக்களை முழு அறிவு கொளளப் பாடுபட்ட முகமதுநபியையும், நிலம், நீர், தீ, ஒளி, வான் என்ற ஐம்பொருள்களையும் ஆண்டவனைக்கூறி வழிபட்ட அடியார்களையும் தோற்றுவித்த உலகுதான், அவர்களுக்கு வழிவழியாக அன்பின் பெருமையை அங்கும் இங்கும எங்கும எடுத்து ஓத அண்ணல் காந்தியடிகளையும் தெய்வநானசபையை நிலைநாட்டிய தங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது என்றே கருதுகிறோம்.

ஆதமீகத துறையை அடிவிடாது பறறி, அதனவழி நடநதுகாட்டிய அன்பாகள தோன்றிய நாடு இதுவே யாயினும சிறப்பாகத தென்னாடு என்று சொன்னால் மறுப்பார் யாரும இல்லை. ஏனெனில துறவுநிலையில் நின்று, துன்பமிலாத வாழ்வை மக்கள ஏற்கும்படியான தொண்டுகள பலபுரிய எற்பட்ட மடாலயஙகளும், சமரச சன்மார்க்கம போதித்த இராமலிங்கரும், வேதமுறைப்படி விரதம இயற்றும் சஙகராசசாரியாரும், ஆணடவன் பக்கத்தில் இருநது அன்பு கூறிய ரமணரிஷிகளும, காஙகளும இநத விதமாக இருக்கின்ற நிலையை நோக்க எநநாட்டினும தென்னாடு ஆதமீகததுறையில சிறநதுள்ளது என்பதை மறுக்க இயலாது.

இத்தகைய சிறபபிற்கெல்லாம் காரணமாய் இருநது மேல்நாட்டார உணரும் வகையில ஆங்கிலமொழியில் அனபின நிலையைக கூறிவரும காஙகள் அகில உலகும் அன்புடன இணைநத வாழ்வில ஒன்றாய் விளங்க, ஆன தொண்டுகள புரிய, நீண்ட ஆயுளையும, நலல உடல் வலிமையையும் தநது காபபாற்ற எலலாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம.

இஙனம,

மாயூரம் நகராண்மைக்கழகத் தலைவரும்,
உறுப்பினர்களும்

ரிஷிகேசம் மண்டலேஸ்வர

சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின்

தென்னிதிய யாததிரையில், மாயூரம் எழுந்தருளியபோது மாயூரம் வைத்திய சங்கத்தினரால் மனமுவந்து வாசித்தளித்த

வரவேற்பு மங்கலப் பா மலர்

—o—

கண்ணுறும் இமயமலைச சாரலில்இ ரிஷிகேசத்
தவசியாய் ஓங்கும தருவே!
சண்டன் அணு காசிஷ்யில் மண்டலேஸ் வராஞானத்
தலைவனுய் வாழும் தயவே!
கண்ணுறுமை அபையய தீட்சிதரின் திருமரபில
கவிஞுற வெழுந்த கனியே!
கழறுதாம பிரபரணி தீரமதில் பத்தமடை
கனம்பெற வுதித்த கடலே!
பண்ணுருமை பெயர்சூப்பு சாமியெனப் பெற்றுமே
பாவு மருத்துவ மேற்றனை,
பவரோக முதலஞக ரோகமனைத் தீர்த்துமே
பாரிலுருமை சிருமை பெற்றாய்
விண்ணுருரும் சொர்க்காதி பதியென்ன யோகத்தில்
வெற்றிமேல் வெற்றி கண்டாய்,
விநதைதமிகும் தந்தையே! எநதாய்! சிவானந்த
வேத விததே! வருகவே!

(திரு சரவணைபவானந்தர்.)

மாயூரம் வைத்திய சங்கத்தார்கள்.

ஸ்ரீ :

தெனைடுச சுற்றுபபயணதின்போது

சுவாமி சிவானந்த சரஸ்வதி அடிகளுக்கு

மாயூரம் நகராண்மைக்கழக உயர்நிலேப்பள்ளி,

ஆசிரியர்களும் மாணவர்களும்

மனமுவந்தளித்த

வரவேற்புரை

—o—

தாமிரபரணியாள தந்த தவப்பெறும் புதல்வ! வருக!

பொன்னிக்கரையிலே பொலியும மாயூர நகர்க்கு வருக! எங்கள் ஞானியே வருக! மூவாசை துறந்த முனிவனே வருக! ரசனும் திருடாலும இலங்கும் இத் தலதநிலே உங்களை வாழ்விக்க வந்தவனே! வருக! வருக!!

அப்பைய தீக்ஷிதர் அருங்குல அடிகளே வருக!

ஆன்மீகத் துறையில் அவரது அவதாரம் நீர்! அன் ஞரின் தத்துவபோதமெல்லாம் அமரர் மொழியிலே அழகு செய்வன. ஐய! நின் போதவுரைகளெல்லாம் அகில உலக மொழியாகிய ஆங்கிலத்தின் ஆழங்கண்டன.

இமயத்திலே இலங்கும் பேரின்பச் சோதியே! வருக!

எங்களிடையே நீ வருக இந்நாள் எங்களுக்கு இன்ப நன்னாள். குப்புசாமி யெனுமை பெயர்கொண்டு திகழ்ந்து கல்வியில குறையா ஊகமும் குறு நினைவும் குலவும் அறிவின் குன்றம் நீ. குணக்கடல் நீ. உடல் நோயின்றி மனநோய் களையுமை மருத்துவ வித்தகன நீ. நின்னை தரி சிக்க யாங்கள் என்ன பாகியமை செய்தோம்.

ஆன்மீக நூல்களை நூற்றுக்கணக்கில் அளித்தவா! வருக!

மக்கட் குலத்துக்கே வரப்பிரசாதமேபான்ற நூல்கள ஆதம ஞானத்தை உலகெங்கும பரபபி ஒழுகக நிலையை உயர்த்தும நோகக்கம கொண்டன. நினபணி நீடூழி வாழுவதாக.

ஆன்மீக வாழ்க்கைச் சங்கம் நிறுவிய அண்ணலே! வருக!

நின்பெருமாண்பு நிகரற்றதுகாண! நின்னை நாடி வருவோரிடம நீ உண்மைத தத்துவப பொருளைபபற்றி உரையாடுவது தனிச் சிறப்புடையதுகாண! காட்சிக்கு எளிய நிலையும் கருத்துக்கு இனிய சொல்லும் கசிந்துருகும் அன்புகுப் புனித இடமும கொணடு பழகும அழகு நின் அழகு. இரகசியம் ஏதுமின்றி வெளிபபடையாக காரண காரிய நிலையிலேயே கொள்ளைகளை ஆராயும் நடைமுறை யினையுடையது நின்சங்கம். அடைநதோரை அணுகும் முறையிலும் தனிச் சிறப்புடையது நின்சங்கம். மற்றைச் சங்கங்களிலே சேர விருமபுவோர் முதலிலே உறுப்பினராக வேண்டும். பூரண விசுவாசம் தெரிவித்து உறுதி கூற வேண்டும் பின்னரே சேரவும், ஆராயவும இடமுண்டு. முதலிலே வருவோருடன் மனமாரப் பேசி கொள்ளைகளை விளகக்கித் தெளிவுபடுத்திப் பின்னா உறுப்பினராகும் நிலையை வருவோரது உகப்புகு விடுதலே நின்சங்கத்தின் இணையற்ற நிலை அது என்றும் வாழ இறைவன் அருள் புரிவாராக!

குகைக்குள் அடைபட்டுக்கிடக்க மனங்கொளளாதவனே! வருக!

உலகசேவை உன் விருப்பம்; மக்களுயர்வு நின் கருத்து; சாதிக்க என்னென்ன செய்தாய்? 'சுத்திய

சேவா ஆசிரமம்' கண்டாய்; யாதரீகர்களுககு மருத்துவ உதவி தந்தாய்; 'ஆனந்தகுடீர்' ஆசிரமம் கண்டாய்; அன்பும் ஞானமும அங்கு குடிகொண்டுள்ளன. 'ஆன்மீக வாழ்க்கைச் சங்கம்' நிறுவினாய்; அளவிலா நூல்களை ஆக்கித்தந்தாய்; அகில உலகமும் உய்ய ஆக்கம் அளித்தாய்.

உதார குணமுடைய உத்தம புருட!

உண்மைச சோதனையில் உயிர்வாழ்கின்றோருககு உயர்ந்த இலக்கணம இது நிரம்பப்பெற்றாய்! 'அத்வைத' கொள்கையில் ஆழ்ந்துளளோய் ஆயினும, மற்ற வேதாந தக் கொளகைகளையும் முடிவுகளையும மதித்து ஆராயந்து அறிந்து கொண்ட நின் ஆற்றல் சூடிய பொன்னுரைகள பொன்னேபோல உலகத்தாரால் போற்றபபடும என்பதில் ஐயமில்லை.

அன்பும ஆதமஞானமும் தந்து உலகமக்களை உய்விக்க நீ செய்யும் தொண்டினை இன்றுபோல் என்றும் ஆற்றிவர நினக்கு நீண்ட ஆயுளை அருள எலலாம வலலவனை இறைஞ்சுகின்றோம.

இங்ஙனம,

மாயூரம் நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,
ஆசிரியர்களும், மாணவாகளும்.

—o—

உ

குருபாதம

தெய்வநெறிக் கழக ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள்

5—10—50 வியாழக்கிழமை திருகுகயிலாய பரமபரைத் தருமபுர ஆதீனகத்திற்கு எழுந்தருளியபோது

அளித்த வரவேற்பு இதழ்

—o—

இமயப்பொருப்பின் எழிற்றவ! வருக!!

சுத்த சமரச சன்மார்க்க விததாய், வளர்சிமைய இமயப் பொருப்பில தறவறம பூண்ட நல்லறச்செல்வ! வருக! தொணடாணசமைத்து, தவப்பயிர் நட்டு, சிவானநதம் விளையச்செயயும சிவானந்த சரசுவதியெனும் செம்மெனச் செம்மால்! தங்கள் அன்புமலர் மக்கள உளளத் தடாகத்தே மலர்கிறது.

செந்தமிழ்நாட்டில் தோன்றிய செம்மால்!

தமிழ்நாட்டிலே-செநதமிழ்ப் பொருநைக்கரையிலே-பக்த மடையிலே தோன்றி வீரமும் தீரமும், கவிதையும கலையும், இசையும் அரசும் முரசுகொட்டிய எட்டய புரத்திலே, மதிமலர் விரிந்து, இமயத்துச்சியிலிருநது சிவமணம் பரப்பும் தெய்வத்தாமரையே! அடியார் வணடுகள் அருள்தேனுண்ண ரீங்காரம் பண்ணுகின்றன வருக!

தமிழ்நாட்டு இளங்கோவடிகளைப் போலத் தறவறச் செல்வத்துடன் நலறச் செல்வத்தையும் நாவலந தீவினர்க் களிக்குமம ஙின சான்றாண்மையை உன்னி உன்னி உவகை பூகின்றது அன்பர்கள உள்ளம்.

மண்ணு உலகத்து மனுஷ்ய குறிக்கோளாய்!

மானிடபபிறவி அரிது. அதனினும அரிது ஞான வேட்கை. அதனினுட அரிது மெய்வழிகாட்டும குருவை யடைதல். ஆசைகளை அறவே பொழித்து, உலகப் புகழை ஒதுக்கித் தள்ளி, பால்நினைந்தூட்டும தாயினைப போலப் பணபாடறிந்து, அறவுரை நல்கும தங்கள பாத் திரை நாதத்தில இருளை நசுக்கி அறிவொளியை யாண்டும் மலருவிபபதாகுக.

உதிக்கின்ற மெய்ஞ்ஞானக் கதிரவ! வருக!

அமைதிக்க சர்வமத மகாசபையிலே வேதாந்த முழக்கம செய்த சுவாமி விவேகானந்தரேபோல, இருடி கேசத்தை அறச்சாலையாக்கி இந்தியாவையே தவச்சாலை யாக்கும ஆத்துமசோதியே வருக!

பொதுமக்கள புனிதவாழ்வைக கருத்துள இருத்தி யான எனது என்னும செருக்கழித்தப் போருள பரியும மனமாசில்லா மாண்புடைக்குரவ! வருக.

குருஞானசமபந்தா அருள்வெள்ளத்தாழந்து கிளைகளும பதி பசு பாச இலக்கணம பேசுகின்ற இந்தத் தரு மைக்கு இன்று எழுந்தருளப் பெற்றதலை, உளளம இனப மடைகிறது! இதய கீதம் எழுப்புகிறது! உள்ளச சோலை யில் சனமார்க்கக் குயில கூவுகிறது! ஞானக் கதிரவன் உதித்து விட்டான்! உதிக்கின்ற செங்கதிரால் உளளத் திருள் ஓடுகிறது; எங்கும அறிவொளி! எங்கும் புத்தொளி!

பொருப்பிடையிருந்து புத்தொளி தந்தருள கதிரவ! வருக!! வாழ்க நின்னருள்!!!

தருமபுரம்,
4—10—50

ஆணைப்படி,
சோமசுந்தரத் தம்பிரான்.

உ

குருபாதம்

திருக்கயிலாயபரம்பரை சுருமபுர ஆதீன மடாலயத்தின்கண்

இருஷிகேசவாசி ஸ்ரீ சிவானத்த ஸரஸ்வதி மகராஜ அவர்கள்

எழுந்தருளியஞான்று வாழ்த்தியருளிய

கீர்த்தனைப்பா

1. இராகம்: மோஹமவதி தாளம்: ஆதி

பல்லவி

சிவானந்த சரஸ்வதி சுவாமி
தவமுனிபோற்றும தத்துவஉபதேச

அனுபல்லவி

அவமாயை நீங்கி அவனியெல்லாமுய்ய
சிவமாகவேயருளும் சிவமருள சற்குரு

சரணம்

தவவல்லி யணைமகிழ் தவவல்லியாகியே
பவவலி நீக்கிடும் பஜனைகள் ஆக்கியே
சிவசுர நதியணி சிவன்மகிழ் மலையுறை
தவமுறை பெறஅருள் தண்ணடி வாழியே.

2. இராகம: சாமா தாளம்: ஆதி

பல்லவி

அத்வைத சுத்தசிவ ஆனந்தனே
நித்யானந்த திவ்ய தேஜோமயனே

அனுபல்லவி

வித்யாசசிதசகல வேதாநதகீதனே
அத்யாத்மவிஸ்வானந்த ஹமசோப தேசனே

சரணம்

சத்யம் ரதனவே சகலநிட்களமனை
அத்யயனம பெறஅருளமுறை பாஹிமாம
வைத்தசற்குருமணி வானவரும்பரவ
நித்யமேபெற அருள் நிமலனே நினைநதுறும்

3. இராகம: ஆபோகி தாளம: ஆதி

பல்லவி

வேதாநத ஞான சறகுருவே ஸ்ரீ
நாத சிவானநத நலமருள சரஸ்வதி

அனுபல்லவி

பூதாந்தமாய புவனமதுய்ந்திட
கீதாந்த ஞான கிளர்மொழியருளிடும்

சரணம்

வேதாந்தத்துச்சி விளங்கொளி சிவநகர்
நாதாந்த நடத்தொடு நலமருள் கங்கை
மாதார்ந்த இமய மலையிருடிகேசமதின்
மீதார்ந்த புண்யனின் பொன்னடி வாழியே

வாழ்க திருவடி

அடியேன் ரா. வேலாயுதன்
தேவார ஆசிரியன், தருமை,
5—10—50.

உ

குரு பாதம்

சிவானந்தரை தரிசிக்க வாரும்

(தருமபுர ஆதீனத்திற்கு சுவாமிஜியவர்கள் விஜயம் செய்தபோது, ஆதீனக் கல்லூரி மாணவர்கள இருவரின் தத்துவ சாஸதிரக கருத்து நிறைந்த சமபாஷணை.)

இளஞ்செழியர்: என்ன நித்தியானந்தரே! இந்த நேரத்தில எங்கு புறப்பட்டீர்?

நித்தியானநதா: அடேடே! தோழர் இளஞசெழியரா! வணக்கம் ஐயா. தருமையாதீன மடாலயதததுகுச் செல கிறேன். சரி வரட்டுமா நேரமாகிறது.

இளஞ்: என்ன விசேடம இன்று.

நித்தி: என்னவா. உமக்குத தெரியாதா? தமிழகம தந்த தவச் செலவா ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகள தமிழகப் பயணத்திலே இன்று தருமை வநதிருகிறாகள். எனபது உமக்கு தெரியாத? வேதாநத விற்பன்னரான... (இடைமறிதது)

இளஞ: என்னையா வேதாநதம, மற்ற சமயங்களைக காட்டிலும அவ்வளவு சிறப்புடையதா?

நித்தி: தோழரே! வேதாநதம் சாதாரணமானதல்ல. பரந்த விரிந்த கற்பகத்தருவின் ஆணிவேர் வேதாந்தம். அது நன்னெறி. மக்கள் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய வறறை எலலாம ஒழுஙகுபடுத கூறும. சநநெறி இநதியாவில் கற்போது வழக்கிலுளள வெவ்வேறு மதக கொளகைகள, யோகசாதனைகள எல்லாம் உபநிடதஙகளின சாரமாகிய வேதாந்தத்தினின்றும் முளைத்தெழுந்ததாகும்.

இளஞ்: என்னையா மீண்டும வேதாந்தத்தைபபற்றி விளம்ப ஆரம்பித்துவிட்டீரே. தற்கால உலகம விஞ்ஞான உலகம், சரித்திர உலகம ; அறிவியல உலகம. சாத்திரம் படிப்பது அநதக கலம, சரித்திரம படிப்பது இநதக்காலம் என்ன முழிக்கிறீர்? சரிதநதிரச் சான்று இருககிறதா ஐயா? கூறும, கேட்ஙக கொளகிறேம. அது இலலாமல் வெறும் புராணங்களைப் பொழிய ஆரமபித்துவிட்டீரே

நிதநி: (நகைப்பு) சரிதநதிரக சான்று வேண்டுமா? சொல்கிறேன். இநதியாவிற் சரண்புகுநத அன்னிய மதங் களரும் மண வெறி பிடித்து கப்பலேறி வநதிறங்கி அனர்த் தம் விளவித்த புறச் சமயஙகளநகூட வேதாநதத்தினின் றும தபபித்துக் கொளளமுடியவில்லை. அப்படியானால் அதன பெருமையை என்னென்று சொல்வது. வேதாநதம் இநதிய மணணில கலநது ஊறியுள்ளது. அதன் சாரத்தை உட்கொளளாமல் இருகக முடியாது. ஏன்? இதுமட்டுமா இன்றைய புதிய விஞ்ஞான உலகம் கண்டுபிடித்துள்ள உண்மைகளோடு முரண்படாத சமய தத்துவம் ஒன்று உண்டென்றால் அது வேதாநத சமயநதான். சத்தியமே வெல்லும். சத்தியப் பாதையே கடவுளிடஞ் சேர்க்கும் என்பதுதான் வேதாந்தத்தின் லட்சியம்.

இளஞ் · என்ன, மீண்டும் சத்திய போதனையா?

நிதநி: ஒரு சிறு விதையில் ஆலமரத்தின் வளர்ச்சி அடங்கி நிற்பதைப் போலவே இவ்வுலக முழுவதும் கடவு ளிடததினின்றுட பரிணமித்தது என்பதே வேதாந்த சமயத் தின் கொள்கை. "டார்வின்" கண்டு பிடித்த 'எவல்யூஷன்' என்ற பரிணமக் கொள்கை இதற்கு உடன்பாடானது.

இன்னபிறகாரணங்களாலேயே இன்றைய விஞ்ஞான உலகத்தின பார்வை வேதாந்த சமயதத்தின் மீது விழுந்துள்ளது. ஹக்ஸ்லி, ஐன்ஸ்டீன போன்ற அறிவியல் வல்லுநர்கள் வேதாந்த ரகசியங்களை ஆராய்வது உலகறிந்த விஷயம். அப்படி யிருக்கும்போது உம்போலியான ஒரு சாரார் மட்டும அறியாதிருத்தல வியப்புதான்.

இளஞ்: (யோசித்து) ஆம நீங்கள் சொல்லுவதிலும் உணமை யிருக்கத்தான் செய்கின்றன ஆராயப போனல் சைவத் திருமுறைகளினதும வேதாந்தக கருத்துக் களோடொதனவே அதில் சந்தேகமே இலலை. ஆம் ஒனறு கூட நினைவுக்கு வருகிறது. தெய்வத தமிழ்ப் பாட்டி யார் ஆகிய ஒளவையாரும்,

"தேவா குறளும திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும முனிமொழியும்-கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லுமம
ஒருவாசக மென றுணா"

என்றல்லவா கூறியிருக்கிறார். திருநான மறைமுடிவும் தமிழ்த் திருமுறைக் கருத்தும ஒரு வாசகமே எனறு.

நித்தி: என அது மட்டுமா ? மன்னன் மகேந்திரவர் மன் அழைக்கின்றான். நாவரசர் பதிலிருத்திய அடிகளைத் தான் பாருங்களேன்.

"நாமார்க்கும குடியலலோம் நமனை யஞ் சோம்
நரகத்திலிடப்படோம் நடலையில் லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை..."

எனறு கூறினரலலவா. சறபு ஊனறிப் பாரப்போமானால் உண்மையின் அவா செயதது வேதாநத கரஜூன யலலவா.

இளஞ் ஆட, நிதியானநதரே உணர்கிறேன். வேதாநத நெறி பொது நெறி அஃது யாவருகமும உரியது. அதிருக் கட்டுமம, சுவாமிகள யாரோ இன்று வநதிருப்பதாக கூறினீர் களே அதைபபறறி ..

நிதி : அதுவா ஆம தெனனாட்டில் பிறநது இனறு இமய டூலைசசாரலில் உலகத தெய்வ நெறிக கழகத் தலைவ ராக விளஙகும சுவாமி சிவானநத சரஸ்வதியவர்கள கஙகை யைபபோல் தெளிநத உளளமுட, கருணைமாழுகிலெனத் தோற்றம. திஙகளைப போல் ஒளிருமம சாநதம, தினகரன் போல ஒளிராநதிடம ஞானம இவையே நம சுவாமிகள். இத்தகைய சீரபடைதத சுவாமிகள தமிழர் என்று நினைக் கும போது செநதமிழ் மகள் உளளம் துள்ளித் துளளி குதிகிறது.

இளஞ் எனன தமிழரா! நம் தமிழரா!! ஆகா. நம் தமிழ் நாடு பெற்ற பேறு தான் என்னே. வேதாநத விளகைக இமயததில் ஏற்றி வைத்திருக்கும நம தமிழ்க் கடவுளின் தணடெணளிதான என்னே!

நித்தி : ஆம. தமிழர்தான். தாமிரபரணி நதிக்கரை யில் பத்தமடையில் 8-8-1887ல் குப்புசாமி என்ற பெய ருடன பிறநதது இநதத் தமிழ்ச சுடர். வீரமும் கலையும் விளையாடும எட்டயபுரததில் கலி பயின்றது. மறுத்துவக் கலி பயின்று பொது மக்கள் வாழ்வில் புத்துணர்ச்சி பாய்ச்சியது. நாட்டுக்குத தொணடு செய்வான் ஞானவேட் கையில் நாட்டம செனறது. 'நில்லாதவற்றை நிலையின்

வென்று உணருமம் புல்லறிவாணமை கடை' யென்று உணாநதாா. உலகியலை ஒதுககிறா இயமயம ஓடிறா. இருஷிகேசசத்திய ஸ்வாமி.

சநயாச தீகைகூ யளிக்கப பெறறூர். சிவானந்த சரஸ்வதியாறூர். இன்று வேதாநத விளக்காக விளஙகு கிறூா, வாழுக அவா பல்லாண்டு. கொழும்புவரை பயணம் செல்லப் புறப்பட்டு இன்று நம தருணைககு வந்திருக்கிறூர்.

இளஞ் : நித்தியானந்தரே நாணும் அவரைப் பாாக்க வேணடும். அவரது அருளேணைக்கம பெறவேண்டும. அணு ருண்டு சகாபதமாகிய இநநாளில உய்வதற்கு ஒரு வழி யிருக் கததான் செய்கிறதென்பதை சுவாமிகளின் போதனைகளை, வாழ்க்கையை அறிநதவர்கள உணாத்தவறமாட்டார்கள்.

இநநாள் சுவாமிகளின் வரலாற்றைக கூறிய உங்கள் நன்றிக்கு என வணகககம. இதோ

பொது மகளை பொரவாழ்வைக கருத்தில் வைத்தார்
பூகலத்தோா யோக மறைப பயில வைத்தா
மதுமொழியும் தெய்வநெறிக கழுகம வைத்தா
மாதா பல மதிவாழ்வை உனன வைததா
கதுவுறற காமத்தின் தாழ்வு வைத்தார்
அது விலக்கும் வகைபலவும விளக்க வைத்தா
மதுவுற்ற திருவடியென தலைமேல வைத்தார்
மாண்பிலஙகுமம சிவானநதர் நலலவாரே.

நித்தி : மிக நன்று. வாரும் சென்று சுவாமிகளை தரிசித்து வணங்குவோம்.

சுபம்

வை. கல்யாண சுந்தரன்.

பிறகு ஆதினகத்தின் சார்பிலும, சன்னிதானத்தின் சார்பிலும், ஏனைய கல்வி நிலையங்களின சார்பிலும சுவாமிஜி அவர்களுக்கு வரவேற்பு பத்திரங்கள வாசித்தளிக்கப்பட்டன.

தேவார ஆசிரியர் ஸ்ரீ சேவலாயுத ஓதுவார் அவர்களால். சிவானந்த கீதங்கள் பாடப்பட்டன

பின்னர் பாடசாலை மாணவர்கள இருவரால் தத்துவ சாஸ்திர கருத்துக்களை அடங்கிய சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

மகன் இச்சம்பாஷணைகளைமிகவும் ரஸித்தார்கள அடுத்து சிவாகம பாடசாலையிலுள்ள ஆதிசைவமாணவர்கள் இருவரால் ஸ்ரீ ஆதிசங்கராசாரிய சுவாமிகள செய்த பஜ கோவிந்தம பாடப்பெற்றது. இவ்வாறு மகனுடைய அன்புப் பெரு வெள்ளத்தினிடையே நீந்திக்கொண்டு சிவானந்தமகாஜ அவர்கள் பேசத்தொடங்கினார்கள. பேசசின் சுருக்கம் பின்வருமாறு :

"உள்ளத்தூய்மை அநேகம் பேருக்கு இருக்கிறதில்லை. ஹடயோகம எல்லாராலும் செய்யமுடியாது. சிவநாமம் உச்சரிக்க வேண்டும். உலகத்தைச் சிவமாக நினைக்கவேண்டும். சிவநாம ஜபம் செய்தால் சிவசாயுஜ்யபதவி உங்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் கிடைக்கும். நன்றாக உள்ளிழுத்து அச்சக்தி உள்ளே இறங்குமாறு ஜபிக்கவேண்டும் இப்பொழுது நாம கொஞ்சம் பஜனை செய்வோம். ("சிவாய நம ஓம" எனற கீதம) வேதாந்திகள் சொல்லுகிறார்கள் மனதில் மூன்று தோஷங்கள இருக்கின்றன என்று. மலம், விக்ஷேபம, ஆவரணம என்பனவை அவை. காமக் குரோத லோப மோக மத மாற்சரியம நீங்கி நிஷ்காமியயோகம் செய்யவேண்டும. சிவநாம ஜபம செய்யும ஒருவனுக்குச்

சிவசாயுஜய பதவி கிடைகக்கிறது. காலையில நீராடி பிராமீ முகூர்த்தத்தில்சிவதத்தியானம, பஞ்சாக்ஷராஜபம, சிவபுராண பாராயணம முதலியன செய்யவேண்டும.”

“ ஆஹார மகறறி ஐம்புலனைச சுடடொரிதது
தூஙகாமல தூஙகிச சுகமபெறுவ தெகாலம ”

“ஆஹாரம கூடாது இதைக சொலலவேணடும கல போல இருகக்கிறது அது, ‘ கல்லெனுமஐய ஒரு காலத்திக் உருதும. என கலநெஞ்சம உருகவிலலே ” என்கிறார் ஒருவர். அது மிகமிக வணமையான நிலம போனறது அதைப பொடியாகக வேண்டும. ஆனல அதை நேராக அடக்கமுடியாது. அடகக்கிறா சதத்துக குனறும் ஆத லின அதைத தன்னிலே அடாகக செய்யவேண்டும. இந்திரியபலம மிகபபொல்லாதாது. அது ஒவவொன்றையும அடகக வேணடும. கண சினிமா பாகக விருமபுகிறது. ஆதலின் அதைப பாதையில் நீகக மான, மழு, தமருகம் முதலியவைகளோடு விளஙகும சச்சிதானந்த ரூபததை தியானம செய்யவேணடும அது சிறநதது. அழுகுக்கு அழகு செய்யும அது. அதைப போலத்தான நாகக்கும; அதுவும் சுவைப்பொருளை விருமபுகின்றது, அதைக கட்டுபபடுதத வேணடும. ஆனல் மற்றொன்று. விரும பும் பொருளை கொஞ்ச கொஞ்சமாகத்தான் விட்டுவிட முயற்சிக்கவேணடும.”

Eat a little
Drink a little,
Sleep a little,
Talk a little,
Jap a little,
Do Bajana a little
Serve a little

நாம அவைகளுககு எஜமானைக இருநது அனைவகளைக கடடுப் படுததவேண்டுமம.

"மனிதனைகப்பிறநத ஒவ்வொருவரும் தியாகபுததியோடு வாழவேண்டுமம. பேதபுத்தி அபிமானம இனைவகள் விட வேணடும். ஒரு கதை சொல்கிறேன் சிதிதவிஜா தவரு செய்யக் காட்டிறதுப் போகவேண்டும் என்கிறா. மனைவி கூடாலேயோ அதை மறுக்கிறுள. ஆனாலும இரவே அவளை விடடுவிட்டு அவா காடு சென்று தவரு செய்துகொணடிருககிறா. மாதமம ஆறு ஆயிறறு. மனைவி கூடாலை ஆகாயத்தில் பறக்கும் சக்தி பெற்றிருநததினால் தான பறநதுசென்று முனிவரின் முனபு காலடி உபாதத்தில் நின்றுள. என ? அவவாறு நின்றுல்தான அவருக்கு யோகி வநதிருககிறா என்ற ஆஸ்திகபுத்தி வரும என்பு. அமமுனிவருககுமம அப்படியே புத்தியும வநதது கூடாலை முனிவரைநோக்கி இன்னுமம தியாகமம உனக்குவரவிலலை. என்றுள். உடனே தனனிடமுள்ள கமண்டலத்தையும தண்டையும எறிநது தியாகி போல நின்றார். அபபொழுதும இன்னும் உனக்குத் தியாகமம வரவில்லை எனறுள. கேட்டமுனிவர் இருப்பது சரீரம ஒன்று தான் அதையும், நீகக்விடுகிறேன் என்று சோலலி மரகதில ஏறிக கீழே விழுநதார். அதுகண்ட கூடாலை "சரீரததை அழிபபது தான் தியாகமா ? தியாகமம என்பது அகங்காரம, வாசனைபி மானம், முதலியன நீங்கி இருக்கல்தான்" எனறு கூறினுள ஆகவே எல்லோருமம தியாக புதியுடன இருக்கவேண்டும. பஜனைசெய்ய வேண்டுமம எல்லோரையும சிவபரா நினைக்கவேண்டுமம நான் பெரியவன அவன் சின்னவன என்று எண்ணைக்கூடாது எலலாருககுமம மரியாதை கொடுக்க வேண்டும். மனைவியானாலும சரி வேலைகாரனானாலும சரி

"வாருங்கள" எனறு மரியாதையுடன் அழைக்கவேணடும அன்பு பாராட்டவேண்டும். நோயாளிகளை நன்கு போஷிக்க வேணடும, அதுதான் முகயிபமான விஷயம். அதிலும முக்கியமான விஷபம அனைவரும சிவநாம பஜனை செய்ய வேணடும். சிவதியானமும அவசியம. வீண்காலம போக்காமல் அந்தநேரதனைச் சிவதியானத்தில் பொழுது போக்கவேணடும."

"அனேகம் பேருக்கு எண்ணத்தின் அடிபபடை திடமில்லை. டாக்டர் என்ன நினைகிறார! ஆஸ்பத்திரியையும் நோயாளியையுமே. வகீல் எணணம் எங்கிருக்கிறது? கட்சியின்மீது. பாட்டிக்கு பேரன்மீது எண்ணம. ஆகவே ஒவ்வொருக்குமம ஒவ்வொரு எணணம் இருக்கிறது. அநத எண்ணங்களெல்லாம நீஙகிச சிவ எண்ணமாகவேணடும அநதச் சிவ நாமத்னை நினைக்க நினைக்க இன்பம் பெருகுகிறது. சிவரூபமாகலாம. மற்றென்று."

"ஒவ்வொருவருக்கும வரையறையான வாழ்க்கை நிலை இலலை. வருணச் சிரமததிற்குத் தகுந்தமாதிரி வரையறை கொளளவேண்டும. பிரமசரியம் தன்னைத்தான அடக்கும சக்தியைக் கொடுக்கும. மற்றம வாழ்க்கையில் ஓய்வுபெற்றவர்களுகதுச் சிவபுராணம் சிவத்தியானம் செய்து முகதியடையும விருப்பம உண்டாவதில்லை. என்ன எண்ணுகிறார்கள? சினிமா கம்பெனி வைகவேணடும, மில் ஏற்படுத்தவேணடும என்றெல்லாம் எணணுகிறார்கள் அதெல்லாம கூடாது நாம் என் பிறந்தோம்? என்று எண்ணி சிவத்தியானம் செய்யவேணடும"

"குரு பணிவிடை ஒவ்வொருவருககும் இன்றியமையாதது அதுதான் மிகத்தூய்மையைத் தரும். ஆகவே

ஸத்மகாசேவை அவசியம தேவை. அதுவே ஆனந்தம தருமம"

"மாயை பல ரூபத்தில இருக்கிறது பிறப்பிலை உயர்வு தாழ்வு இல்லை. ஒவ்வொரு உத்தியோகஸ்தரும தாம தாம் மேல்படிபெற நினைக்கிறாகள. ஆசைபடுகிறாகள அது அமைதியைக கொடுக்காது அது கூடாது. சிவபூஜை செயது அபபாமபொருளமீது ஆசைகாளளவேண்டுமட. தாம=பெறற பொருளெல்லாவறறையும பிறருககுமபகிரது கொடுதது உதவவேணடுமட."

"காது கேட்கிறது, கணபாக்கிறது. கால நடக்கிறது, வாய் பேசுகிறது. ஏன்? எலலாம அவனருள் எல்லாச் செயலும் அவன் செயலே. ஒரு கதையைப் பாருங்கள். காசியிலே அநுமந்தக்கட்டம். உஙகளுகதான் தெரியுமே. அநத இடத்தில் இரண்டு பெணகள் கங்கைநீரில் அமிழ்நதினர். கண்டாகள காசீஜ பிள்ளைகள். உடனே குதித்தாகள். இருவரும் இருவரையும காபபாற்றினர்கள். அதில ஒருவன் கூறுகின்றான். 'நீ என்னை மணஞ்செய்து கொள்' எனறு. மற்றொருவன 'அமமா கடவுள எனக்கு ஒரு சநதர்ப்பங்கொடுததா. சேவை செயதேன' என்றான். இங்குதான் நீஙகள கவனிக்கவேண்டிய விஷயம ஒருவனுக்குச் சித்தசுத்தி ஏற்பட்டது. ஒருவனுக்கு ஏற்படவில்லை. சித்தசுத்தியிலை சிவஜோதி விளங்கும். சிவனருள் பெருகுமம. இதற்கு எனன செய்யவேணடுமம! ஒவவொரு வருமம விடியலில் எழுநது நீராடி சிவததியானம் செய்ய வேண்டுமட. மாலை 5-மணிக்கே உணவு உண்டுவிட்டால் அது ஜீர்ணமாகிவிடுமம. தூகககவேளையில வயிற்றில் கனமிருகக்காது. தூங்கபோகுமம போது தேவையானால் உணவு

உட்கொள்ளாமல் பாலும், பழமும சாபபிடுதல் நல்லது. யோகிகளுககு இது மிகக பயன தருவதாகும. இப்படிச் செய்வது பிராமீ முகூர்த்தத்தில் நமககு விழிபபை உண்டாக்குமே. தியானம கைகூடுமே.''

''தருமபுர ஆதீனம் காசி சாவகலாசாலையைவிட மிக மிகப் பெரியது இதுவே கயிலாசம. ரிஷிகேசத்தைவிட ஆபிரம் மடஙகு இது மேலானது எங்குபார்த்தாலும் குழந்தைகளுடைய வேதபாராயணமும, தேவாரபாராயணமும மகிழ்சசி தருகிறது. எஙகுபார்த்தாலும் ஒரு ஒழுங்கு முறை. சைவ சித்தாநதத்துககே இது ஒரு தலஸ்தானம. இது போல் வேறு எங்குமில்லை. மதுரைபோனற இடஙகளில் முன இருந்தது எனறாலும் இபபொழுது இல்லை. இங்குளள எலலோரும் மங்களம்பெறுக. இவ்வாறு எனகுச் சேவைசெய்யச சந்தர்ப்பம் அளித்ததற்கு மிகநனறி.''

Hai Dharmapuram ! Sacred Dharmapuram,
Sublime Dharmapuram ! Beautiful Dharmapuram !

நமச்சிவாயா ! நமசசிவாயா ! நமச்சிவாயா ! நமச்சிவாயா!

This is the glorious land where Mahasannidhanam dwells!
And Siva Bhaktas also abide !

நமசசிவாயா ! நமச்சிவாயா ! நமச்சிவாயா ! நமச்சிவாயா!

Mahasannidhanam purna guru Adhinam's soul

நமசசிவாயா ! நமசசிவாயா ! நமச்சிவாயா ! நமச்சிவாயா!

Mahasannidhanam purna Siva Yogi ! Sri Jagat Guru !
Soul of Adhinam !

நமசிவாயர ! நமச்சிவாயர ! நமசிவாயர ! நமசிவாயர !

Sri Dharmapuravasi Divine Life Organiser
Long live Mahasannidhanam and Mahalinga Sastri

நடசிவாயர ! ந ச்சிவாயர ! நமசிவாயர ! நமசிவாயர!

And all other devotees

நமசிவாயர ! நமசிவ ாயர ! நமசிவாயர ! நமசிவாயர!

My silent adoratsons, My silent salutations
My silent adorations ! My silent salutations !

நமச்சிவாயர ! நமச்சிவாயர ! நமச்சிவாயர ! நமசிவாயர!

My silent prostrations ! My silent Namaskarams !
Namaste Namaste Jai Jai Sivjiki

போலோ சங்கர போலோ சஙகர சங்கர் போல்
ஹர ஹர ஹர ஹர மகாதேவ சமபோ சஙகர் சஙகர் போல்
சிவ சிவ சிவ சிவ சதாசிவ சம்போ சஙகர் சஙகர் போல்.

வேளூர் கட்டளைவிசாரணை, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள்.

'வேதாந்தம சித்தாந்தம் என்பன இரண்டும வேறு பட்ட கருத்துடையன அல்ல. வேதமாத்தில் விளைந்த ஞானக்கனி வேதாந்தம். அதிலுளள கோதும் கொட்டை யும் தோலும் காமடமும நீக்கிப் பிழிந்தெடுக்கப்பட்ட சாரம் சைவசித்தாந்தம். பொருள் கொள்பவாகளின் கருத்து வேறுபாட்டினாலேயே இவை இரணடும இரண்டு தெறி களாகப் பிரித்துக காட்டப்படுகினறன. அநுபவிக்குமு இரண்டும ஒன்றுதான். இப்பொருள இலக்கணத்தை

எமது ஆதிகுருமூர்த்தியின அநுபவ வெணபா ஒனறு அறி விகக்கிறது பாருங்கள்.

எனனை அறிவென்றுன என் அறிவியல் ஆனந்தம்
தனனைச சிவமென்றுன் சந்ததமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்துவே பாசம என்றுன் இம்மூனறும்
ஆராய்ந்தவர் மூத்தாம.

சமாசம நிகழுமிடத்திலே மதஉணமைகள் அமைந திருகினறன எனபதை சிவானந்தமகாராஜ் அவாகளும சந்நிதானமவாகளும எழுந்தருளி இருகினற நிலையிலேயே அறியலாம. உபதேசமூர்த்திகள இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டுவதும், உணர்த்திக்காட்டுவதுமென இரண்டு நிலையை மேற்கொளளுகிறார்கள என்பது இனறைய நிகழ்சி யின் இனிய விளககம.'

என்று பேசினாகள. பின்னர திரு. ச. தனடபாணிபிளை அவர்கள நனறியுரை கூறக் கடவுள் வாழ்த்துடன கூட்டம இனிது முடிந்தது.

—o—

உ

குருபாதம

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின்

உபசாரமொழி

சுவாமிஜி அவாகளே! மெய்யன்பர்களே!!

ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடந்தது. சிற்ப வேலைகள் கணணைக் கவருகினறன. பிளளையார் உடகார்ந்து இருக்கிறார ஒளவைப பாட்டி வாயில் பாட்டு வழியக கையிலே புஷபத்தை வைதிகொணடு

கணபதி பூஜை செய்கிறான். முகத்தில் அன்பு அரும்பு கிறது. சணடேசர கோயிலிலே சிவபூஜைக்கு இடைஞ்சல் பண்ணின தகப்பனாகாலச் சண்டேசராகும் விசாரசருமர் வெட்டுகிறார். காலில் ரத்தம் வழிகிறது. முகத்தில் அச்சமும தன்பமும தாண்டவமாடுகின்றன. இபபடி எத்தனையோ உருவங்களைச் சிற்பி சிருஷ்டித்து இருக்கிறான். அவன் தன் சிநதனைசக்தியைத தன்கையின் நுனிவழியாக வழியவிடடுக் கல்லிலும சுண்ணாமபிலுமாகக் காநத தக்களைக் காட்டுகிறான். அவைகளில நேற்று காணட காட்சிதான் இன்றைக்கும. இன்றைக்குக கண்ட காட்சி தான் நாளைக்கும. அதில் மாற்றம் இலலை. அன்பால், பிளளை யாருக்கு முன்னே அஞ்சி நிற்கிற பாட்டி நகைகமாட் டாளா? அழுகின்ற ஐயர் ஆனநதப்படமட்டாரா எனறு தோன்றுகிறது. ஆனால் மாற்றநதான் இலலை. மாற்றம காணை இடதில் மகிழ்ச்சி ஏது? உண்டதையே உண்டு, கண்ட தையே கண்டு, உடுத்ததையே உடுப்பதில் உலகம மகிழ் கிறதா? பரிணமத்தில் அல்லவா களிப்பைக்காண்கிறது. ஆதலால் இநத உருவங்களில் நேற்றைய காட்சியையே இன்றும் கண்டால் புத்திலயிக்குமா? ஆதலால் மாற்றம் அவசியம வேண்டும். என் அவைகள மாற்றம் தரவிலலை. உருவங்கள் மனித உருவங்களே. ஆனாலும் அவற்றிறகு ஒன்றுதான் குறைவு. அதுதான் உணர்ச்சி; உணர்ச்சி உயிரின் தன்மை. உயிர் இல்லை; உணர்வு இல்லை. பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி, கோணிவைதத முகத்தைக் கொண்டு, கீறி வைத்த கீறலைக் கொண்டு தன்ப இன்பங் களைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கின்றன. அவை களை மாற்றிக கொள்வதற்கு ஆற்றலில்லை; இவ்வளவுதான் எங்களூர்ச் சிற்பியின கைவேலை. இதுமட்டுமா? அவன்

போட்ட ஆயிரம உருவங்களும பெருமபாலும ஒன்றைப் போலவே ஒன்று அமைநதுளளன. முகததை நீளம் குட்டையாகப போட்டாலும ஐமபது வகைகளுககு மேல் அவறறை மாறறம காட்டமுடியவில்லை அழகான மரதனை-செடியைப் போடுகிறான். பூத்த பூ பூத்தபடியே இருக கிறது காய் என்றும காய்கான். கனியும அப்படியே. அதில மணமும இல்லை; குணமும இலலை. இவவளவுதான் ஊர்ச்சிறபியின் வேலைபபாடு.

ஒருதோட்டத்தில ரோஜா மலர்நதிருக்கிறது. மல்லிகை வெடியருமபு; பன்னீர பூக்கும் நேரம். மற்ற மரங்களும் தத்தம் பருவகாலஙகளில் அப்படி அப்படி. அங்கஙகங்கே அதையதை விரும்புகிற பல நிற வண்டுகளின் ஒலி கண்ணுக்கு-காதுக்கு-மூகுகுக்கு எல்லாம் விருந்து. ஒன்றன் நிறம் மற்றொன்றுககு இல்லை. ஒன்றன் குணம மற்றொன்றுக்கு இல்லை ஒன்றன் மணம் மற்றொன்றுக்கு இல்லை. வாழைப்பழம, பலாப்பழம, மாம்பழம் எல்லாம திதிப்புதான. ஆனாலும திதிப்பில வேறுபாடு இருக கிறது. மாம்பழதில் எதனையோ ஜாதி ஒவ்வொன் றுக்கும் சுவை வேறுபாடு. இவை உலக சிற்பியின உயர் தரவேலை.

சித்திரத்தைக கண்டவுடன் சிற்பியின் ஞாபகம் வருமாறு போல, அதியற்புதமான இந்த சிருஷ்டி அறபுதங களைக் கண்டவுடன செய்தவன்ஞாபகம வரத்தானே வேண் டும்? காரியம் எனபது கருத்தாவை அறிவிககும் கருவி அலலவா! காரியஙகளைக கண்டு கருத்தா ஒருவன் இருக கிறான் என்று எண்ணுத அறிவுமம அறிவா! இயற்கை என்றால் வளர்தலும், தேய்தலும இல்லாததே. அது

உள்ளது செயற்கையே. மலர்ந்து மனத்தைக கவர்ந்து மறைகின்ற மலர்கள-கனிந்து கருத்தைக கவர்ந்து இனிக்கின்ற பழங்கள் எல்லாம வளர்ச்சியும் தேய்வும் உடையன என்பதை யாரால் மறுக்கமுடியும? ஆதலால் இவை செயற்கையே. செயற்கைகள் எல்லாம கருத்தாவை உடையனவே. அந்தக கருத்தா வளர்சசியும தேய்வும் இல்லாமல்-அதாவது தான் செயற்கையாகி விடாமல இருக்கவேணடும். ஆதலால் அவனுக்கு முதல் இல்லை; முதல இலலையாகவே அவனுக்கு முடிவும் இல்லை எனபது தெளிவு. அவனுடைய அருள் விளையாட்டின் ஆகமே இநதக காரணம, மலையும், கடலும், வளமுமட, வயலுமாய எல்லாம்.

சிற்பியில்லாமல் சித்திரம இருந்ததுண்டா? அது போலவே கடவுள இல்லாத காரியப்பாடான உலகம் உண்டு என்பதையும் உணர்ச்சியுடையவன் ஒத்துக்கொள்ள முடியுமா? ஆதலால் அநதச சிற்பியே உலகிற்கு முதல்வன். இதனையே 'பிறபபு, இருப்பு, இறப்பாகிய மூன்று தொழிலை உடைமையால உலகம காரியப்பாடு உடையது. அதனால் ஒரு கருத்தாவை உடையது என்று சிவஞானபோதம் தெரிவித்தது. விரிதூல் செய்த அருணைநதி சிவாசாரிய சுவாமிகள.

"ஒருவனே டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகமெல் லாம் வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே தருபவன் ஒருவன் வேண்டும்"

என்று விளகக்கூறியது.

இத்தகைய பரம்பொருள் உலகதனை ஆகுகிறது. அழிக்கிறது. குழநதை பொழுதுபோக்காக-தன்னுடைய சக்தி சும்மா இருகக விடாமையினாலே, ஓடுகிறது, ஆடு

கிறது, உருட்டுகிறது. உடைக்கிறது. அது அவற்றால் அதற்கு ஏதேனும் பயனுண்டா? பெரியவர்களாவது அதனால் பயன் பெறுகிறார்களா? இரண்டும் இல்லை. அதனால் அது வெறும் வீணை. அப்படிப்போல அல்ல கடவுளுடைய படைப்பும் அழிபடும். அவருக்கு அதனால் பயனிலலை ஆனாலும் உலகத்திலே உள்ள ஒவ்வொரு அழகையும் அனுபவிக்கிற நாம் பயனடைகிறோம என்பதில் சந்தேகமில்லை. பசி தணிந்தோமா என்றால் அது அவன் கொடுத்த தானியத்தின் வினைவுதானே. அதனால் உடுதகி ஆனந்தப்படுகிறோம் என்றால் அதுவும் அவன் செய்த ஆக்கவேலையின் பயன்தானே. ஆகவே அவன் செயல் யாவும் நமக்காகச் செய்யப்பட்டனவே. அவற்றால் அவனுக்கு ஒரு பயனும இல்லை. அவன செயல் எல்லாம் நமக்குப் போகமோட்சங்களைத் தரவும, நாம் அறியாமை நீங்கி ஆனந்தப்படவுந்தான்.

ஒருகாசு கொடுத்தவனை உயரிய வாழ்த்துகிறோம். உபபிட்டவரை உள்ளளவும் நினை' என்கிறது பாட்டிப் பழமொழி. அப்படியிருக்க நமமுடைய காலத்துக்கு-கருதுதுக்கு ஏற்றாற்போல கண் முதலிய இந்திரியங்களுக்கு இன்பத்தை அளந்து அளந்து இறுதிவரையில் கொடுத்துக் கொண்டே யிருக்கிற உபகாரத்தை உபகாரியை மறக்க லாமா. உலக இன்பங்களை அனுபவிக்க கண்ணுக்கு பார்வையையும், காதுக்குக் கேட்கும சகதியையும், உடமபுக்கு தன்னளவில் வியாபகமாகிய ஸ்பரிச சக்தியையும் தந்து காக்கின்ற உபகாரியை மறக்கலாமா. ஆனால் ஒன்று உறுதியாக நாம் நினைவு கூரவேண்டும்; நாம் அதனை மறக்காமல் இருப்பதற்காக அந்த உபகாரி இவற்றைப் படைக்க வில்லை யென்பது மட்டும்.

இவவளவு பேசுகின்ற நாம உலகத்தை இன்பமயமாக்க கண்டு களிக்கின்ற நாம, அந்த உபகாரியை ஏன் மறந்திருக் கிறோம? நமமுடைய சக்திக்கப்பாற்பட்ட அனுபவங்கள் நிகழும் போதுதான் உபகாரியைப்பற்றிய ஞாபகம் எழுமபு கிறது. மறற சமயங்களில் மறைகிறது. மாடு, நாய் முதலிய விலங்கினஙகளுக்குத் தீனி கொடுதத மனிதனை கண்டவுடன் நன்றி கினவு வருகிறது. அன்பு வெளிப் படுகிறது. காணுதபோது அந்தக் கருத்து இல்லை. அது போல விலங்கறிவு படைத்த மக்களுக்கும் நிகழுமல்லவா? பாம்பு புலி கரடி முதலான பொல்லாத பிராணி வர்க்கங் கள் பாதுகாத்தவனையே பதம்பார்த்து விடுகினறன. அந்தக் குணம்படைத்த மக்களுக்கு நாட்டில் இடமில்லாம லிலலை. அதத மக்களை நன்றிகெட்டவர்கள் என்று நாம் குறைகூற விருமபவில்லை. அறிவு விளக்கம் அடையவேண்டி யவர்கள் என்று ஆசீரவாதம செய்வோம். இது நிற்க, இப்படியெல்லாம் உதவி பெற்ற மக்கள் உபகாரியை மறப் பது எதனால் என்பதையும், மறைப்பது எது என்பதையும் அறிந்துகொளவதில் நமகது மறதி கூடாது.

விலையுயர்ந்த மாணிக்கம. அழகாகச் சாணை பிடிக்கப் பட்டுள்ளது. கைதவறிச் சாணியில் விழுந்துவிட்டது. மேலெல்லாம் சாணி ஒட்டிக்கொண்டுவிட்டது. அதனால் அந்த மணி தன் ஒளியிழநதது குப்பைக் கல்லோடு கல்லாகக் கிடக்கிறது. ஆனாலும் மணி மணிதான் நமக் கும் செய்ந்நன்றி அறியும் தன்மை உண்டு. ஆனாலம 'நாமென்ன பிறர் கையை எதிர்பார்க்கிறவர்களா, நமக்கு இயற்கையாக பெருமையில்லையா' என்ற தடிப்பு உண்டான போது விளக்கம் குன்றுகிறது. விளககம் குறைந்த இடத் தில் உபகாரியும் அவர்செய்த உபகாரமும் தோன்றுமா?

ஆகவே அந்தத் தடிப்பு மறைப்புத்தான் உபகாரியை அறிந்துகொள்ள முடியாமல் தடுக்கிறது. அதற்குத் தான் ஆணவம் எனறு பெயர். உயர்ந்த பொருளின் அறிவுடைய பொருளை அணுவாகக்கிழ்ப்படுத்துவதனாலேயே அதற்கு ஆணவம் எனற பெயர் வந்தது. கோவிலுக்குச் சுவாமி குமபிடப் போகிறோம். சந்நிதியில திரை போடப்பட்டிருக்கிறது. சுவாமி தெரியவில்லை. திரை தூக்கப்பட்டதும தீபஜோதியோடு தெய்வ ஜோதியைக் காணகிறோம். அதுபோல நமமிடத்திலும உபகாரியை நாமே காணமுடியும. அப்படிக காண முடியாதவாறு தடுத்து நிற்பது ஒரு தடை. இது சந்நிதியில் திரையைப்போல யாரோ நடுவில் தைத்துப போட்டதன்று. நம்மோடேயே பிறந்து நமமை வருத்துவது. நமகு இருகிறற வியாதிகளெல்லாம வேறு எஙகேயோ பிறந்து வந்தவனல்ல. நம்மோடு பிறந்து நமமை வருத்துவன. 'உடன பிறந்தே கொலலும வியாதி என்ற பழமொழியும உணடல்லவா? தேமல் போன்ற சில வியாதிகள வியாதி எனறே தமமைக் காட்டிகொள்வதில்லை. அழுந்தத் தேமல் என்று நமமையெல்லாம எய்கின்றது. அது போலத்தான் நம்முடைய தடையும். தடை இருக்கிறது என்று தெரிந்தால்தானே தடையை நீக்கி உபகாரியை உணரமுடியும? 'அந்தத் தடை தன்னையும் காட்டிக்கொள்வதில்லை. உபகாரியையும காட்டிக்கொள்வதில்லை. மிகப் பொல்லாதது. எலலாம அறிவான. நான் கண்டதே முடிவு என்ற இறுமாபபுநிகழ்ச்சிகளால் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு நமமையெல்லாம மயக்கி நிற்கின்றது. இந்தத் தடை நீஙகினால்தான இனிய விடையைக் காணலாம். இந்த விடைதான் தரும சொரூபம். இந்தத் தடையைத் தானாக நீக்க முடியாது. நீக்குபவன் ஒருவன் வேண்டும.

கடடிகாரவைத்தியருக்கும் தங்நோயைத் தான் போகஙிக கொள்ளத் தெரியாது. 'ஊருக்கெலலாம் வைத் தியா தமக்குப் பைததியா' என்பது பழமொழி. நமமோடு பிறநதிருக்கிற வியாதியைப் போகஙிக கொள்ள ஒரு வைதியா தேவை வழி தெரியாத நமகது - வைத்தியரை அறிய முடியாத நமகது இன்ப உலகத்தைத் தநத ஆநத உபகாரியே வைத்தியரக வருகிறான். குழநதைதான் அகிறது. அதற்கு மலச சிககல. வயிறறிறகு மருநது கொடுக்க வேண்டுமெ தகப்பனமிட்டாய் கொடுத்தாலும் வேணடாம் என்கிறது. பசியறிநது பால கொடுமெ தாய் எதைக் கொடுத்தாலும் வாய்சிறநது வாங்கிக்கொளகிறது அகனால் தாய் மாத்திரை தருகிறாள் மருந்தாக இல்லை. பாலில் குழைத்து பாலாகவே தருகிறாள். குழநதை மறுக்கிற தில்லை. பருகுகிறது மலம கழிகிறது. காதலியின் வார்தததையை மேல்வரிச் சட்டமாகக் கொளளும் காளை ஒருவன இருக்கிறான. அவனுடைய பருவம் 'தந்தை சொல மிக்க மநதிரம் இலலை' என்றதைத் தளளச் செய் கிறது. 'தாயிற் சிறநததெதாரு கோயிலுமில்லை' என்பது விஷவாகது. அநத நிலையில் அவளை நல்வழிபடுதத அவ னுடைய காதலியின் காதல் மொழிகளெ பயனபடுகினறன. இநத நிலையில்தான நாம அனைவரும இருக்கிறோம். நம்மி டம் உள்ள தடையை நீக்க வருகின்ற வியித்தியன தாயாக வரவேணடும்; அலலது தெயவியாக வரவேண்டும். வநது தன்னுடைய கருணையினால் எதைக்கொடுத்தால் நாம் உண் போமோ அதில அவளுடைய அருள் மருந்தைக் குழைத் துக்கொடுக்கவேண்டுமெ. அப்போதுதான் நம்முடைய காமாலை நோய் நீங்கும்; கண தெரியும். இதுவரையில் மஞ்சளாக இருநத மறைப்பு நீங்கும். எங்கும இன்பக்

காட்சியைக் காண்போம். அந்தத் தாய் நமது குரு. குரு அந்த உபகாரியே. உபகாரி தனலுடைய உண்மையான வடிவத்தோடு வந்தால அவன்தான் அந்த உபகாரி என் பதை நாம் ஒருபோதும நமபமாட்டோம. ஒரு சிறு கதை நினைவுக்கு வருகிறது :—

ஒரு ஊரில ஒரு வியாபாரி இருந்தார். இராத்திரி முழுவதும் தூக்கம இல்லாமல் பொழுது போக்குவதே பணத்தைப் பாதுகாக்கும் வழி யென்பது அவருடைய முன்னேற்பாடான எண்ணம இரவு 11-மணி வரையில் வியாபாரம செய்வதும், 12-மணிக்குக்குக் கணக்கு முடிப்பதும, 1-மணிக்கு மேல் தேக சுத்திசெய்துகொண்டு கோவிலுகுப் போவதும், அதற்கு மேல் உணவு உண்பதும அவருடைய அன்றூட திட்டம். ஊருக்குப் பெரிய செட்டியார். குருகளுக்கும் ஏதோ கொடுப்பார். தாட்சணயம் தள்ளமுடியாது. அந்த நேரம வரையில் திருக்காப்பிட்டுக் கொள்ளாமல் தெய்வமும காத்திருக்கவேணடும குருக களைப்பற்றிக் கூறுவானேன் இப்படி வெகு நாள் நடந்தது. பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? குருக்கள் ஒரு உபாயம் கண்டு பிடித்தார். ஒரு நாள் இரவு 1-மணி இருக்கும். செட்டியார் சிவசந்நிதியில் 'சொல்லுவதறியேன் வாழி. தோற்றிய தோற்றம் போற்றி' என்ற தோத்திரப் பாடலைப்பாடி முடித்து 'பரமேஸ்வரா! என்னை ஆட் கொள்ள மாட்டாயா என்று பரவசமாகி நின்றார். குருக் கள முன் போலவே சிவலிங்கத்தின் பின்னல் மறை வினின்றுகொண்டு இப்பொழுதே ஆட்கொளவோம் என்று உறக்கக் கூவினர். செட்டியார நடுநடுங்கி பின்னலேயே நகர்ந்து மகாமணடபத்தை அடைந்தார். உபாயம கண்ட குருக்கள் பக்க வாயிலாக ஓடிவந்து செட்டியாரிடம் பதட்

டத்தின் காரணத்தைக கேட்டுத தெரிந்துகொண்டார். குருகுகள் 'பரமேஸ்வரன் வெளிப்படும நேரம் இது அதனால் மூனனுடியே தரிசிப்பதுதான் நல்லது' என்று கூறிவைத் தார. இப்படியும பலநாள நடந்து வந்தது. இவருடைய லோப குணத்தையும போகுக கருதிய குருக்கள ஒருநாள் மறைந்து கூறிய வாத்தைக்கு மதிபபு வைத்திருந்தார செட்டியார் கடவுள் நேரே பிரத்யட்சமாகிச் சொன்னால் எனனதான் செய்யமாட்டார எனறு நினைததார். கடவுளைப் போலவே வேஷம தாங்கி வந்து அன்பனே, உடலளவு ஷ்ரதம் பொருள் அளவு தானம என்று பேசியிருக்கிறது. பெரும் பொருள படைத்த நீ பெரும் உபகாரியாக இருக்க வேண்டும். தாராளமாகத் தானம செய்' என்று சொல் லிகொணடே அணுக்கத்தில் வந்து காட்சி கொடுக்க வந தார். இவரோட அவரோட ஓட்டப்பந்தயம் செட்டியார் வீடுவரையில நிகழ்ந்தது. முடிவில் செட்டியார இளகிய மனம இறுகியது. கடவுள் நம்மை விரட்டுவாரா என ற ஆராய்ச்சி ஞானம் பிறந்தது. எதிர்த்து நின்றார்....!

இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறதல்லவா. பண்பட்ட மனம இல்லாதவர்களுக்குப் பரமனே நேராக வந்தாலும் துணிவும் பணிவும் வராது பயன்கொள்ளவும் மாட்டார் என்று. ஆதலால் நம்மைப் போன்ற மக்களுககு அந்தப் பரம உபகாரி நம்மைப் போலவே கண் காது மூக்கு முதலிய உறுப்புக்களோடு மனிதவடிவம் தாங்கி வருகிறார். தடையை நீக்கும் உபாயங்களைச் சொல்லித்தருகிறார். ஆனால் முறையில மாத்திரம் வேறுபாடுகள் உண்டு. ஒரு பள்ளிக்கூடத்தில் மாணக்கர்கள் குறும்பு செய்கிறார்கள். ஆசிரியா கடுமையாகப் பார்ககிறார். பார்வையிலேயே சில மாணவர்கள் அடஙகிவிடுகிறார்கள். சிலரை வாயினால் அடக்கவேண்டி யிருக்கிறது. சிலரைக் கையாலோ கம் பாலோ தொட்டு அடககவேண்டியிருக்கிறது. அதனால் மாணக்கர்கள் குற்றதத்தைப் போக்கிக் குணம் பெறுகிறார் கள். அது போலவே ஞானசாரியனும் கண்ணாலே

பாதத்தச சிலையையும, கையாலே தொட்டுச சிலையையும, உதைத்துட உருட்டியும சிலையையும உணமை வழியில் செலுத்துகிறார. தடை நீங்குகிறது தலைவன் வெளிப் படுகிறான ஆனல ஞானசாரியாகளை நாடிக் கண்டு பிடிப் பதுதான் கஷ்டமான காரியம. தலை வலித்தவுடன் டாக் டரைத் தேடிப்போவது போலல்ல. நம்முடைய பண்பாடு எறபடட ஞானசாரியனுகளுடைய கலைருள பிறந்த இரண்டிற் குமம ஒரு இடைபடு எறபட்டாலொழிய இது முடியாத காரி யம். ஞானசாரியாகள கால தேசஙகளோடு ஒத்துப் பல வேறு வகையில் வந்து காட்சியளிப்பார். அவாகளைப் பயன் படுத்திக கொளவதில்தான் மனிதப பணபு உயர்கிறது தெய்வப்பணபு திகழுகிறது. அபபடி அமரத்துவதனை அளிகுடம அருந்தமானகளை உடையது நமமுடைய பாரத நாடு.

பகத மனடயிலதானே அருள் வெள்ளம வழியும. அருள் வெளளத்தைத் தேதகிவைததிருக்கும் பலகையே ஞானசாரியன் திருநெல்வேலி ஜில்லா பகத மனடயில் பிறந்த சிவாநந்த ஞானசாரியப் பலகை பராசக்தியின அருள் வெள்ளத்தை அவள அவதரித்த இமயததின் உச்சியில் தேக்கி வைத்திருந்தது. ஆனந்த குடாரத்துள அடக்கி வைத்திருநதது. கொஞ்சங் கொஞ்சமாக உலகத்துக்கு வந்தது. இன்று இநதியா முழுவதையும பக்தமனடயாக்க இறங்கி வநதிருககிறது. எங்கும அருள வெளளம பாவு கிறது. அருள வெள்ளத்தால் அறிவுப்பயிர தழைக்கும. சிவபோகம் செழிக்கும. சிவானநத பெருகும இனபம் எங்குட - என்றும.

எங்கும் இன்பம் பெருகும இயல்பினுல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஒங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம.

—o—

ஒ

குருபாதம்

தெய்வநெறிக்கழக ஸ்தாபகா

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த மகாராஜ அவாகள்

5—10—50 வியாழக்கிழமை திருக்கயிலாய பரமபரைத
தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி
தேவஸ்தானத்திற்கு எழுந்தருளியபோது

அளித்த வாழ்த்து இதழ்

1. தூய மெய்ஞ்நெறி யாய சுத்த அத்
துவைத நன்னெறி சொற்றிடின்
பாயு நுணமன மோய உன்னிவல்
பஞ்சபொய்ப்புல னடகுகிலே
மேய வாருயிர் யாவை யாயினும
மெய்ம்மை அன்பு விளைத்தலால்
ஏயு மென்றுல குகங்கும் சாற்றிடும
ஏந்தல் நற்சிவா னந்தனே.

2. சிலைகள் வாயினுற் கைகொல் கீர்மையிற்
செல்வம் மல்கிய தருமை பின்
நிலவு சுபபிரமணிய தேசிகன
நின்மலாப்பதம போறறிற
கலைகள் கற்றிடும் சிறுவ ரோம்நின்
கருணை வாரிதி வாழ்த்தனம்
உலகில் தெய்வநன னெறிப ரப்பிந்
வாழி வாழிய வாழியே

இங்ஙனம்,

ஆசிரியர், மாணவர்கள்,
தேவஸ்தான தேவார வகுப்பு.

உ

ஓம் நமச்சிவாயநம

ரிஷிகேசம்

ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்கள்

தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த திருக்கடவூர்

எழுந்தருளிய சமயம ஷை யூர் தேவஸ்தானம்

T. S. காசிநாத தேசிகர் வாசித்து அளித்த

வரவேற்பு வாழ்த்துப்பா

—o—

பூவுலக தனிற் பொலிநதினி திலங்கும்
காவில்சீர் தனக்கெனத தருக்கொடு திகழும்
வெளளியங்கிரியால் விளங்கிடும் இமயத்
தெளளிய நீரால் திரியுநற் கங்கைக்
கரையினில் தனிமரச் சோலைக ளனேகம்
நிரையினில் தவத்தோர் நிலைத்திடச் சாரும்
சுத்தாத் மாக்கள் சூழ்ரிஷிகேசச்
சித்தாந்தத்தின் சென்னெறிகண்ட
சுத்தசிவாநநத சரஸ்வதி மகராஜ்
ஆங்கிலம் வடமொழி அருந்தமிழறிந்து
ஓம்நமசிவாயத் தண்மை தெரிநது
சீருடன் விளங்கும் சிஷ்யகோடிகளுடன்
பாரெலாந துதிக்கப் பகலவன் நிகராய்
மூக்தனும வகையினில் முதிர்ந்த மகாத்மா
அத்தன்விஸ் வேசர் ஆலய மமைத்தும்
ஆனநதகுடீர ஆஸ்ரமம் செய்தும்
ஸ்ரீகர மந்திரர் கீதத்தியோடெய்தியும்
பகவத்கீதையின் பலன் அறிந்தோர்ந்து
ஐப்புலன் தன்னை அகத்திலடக்கி

மெய்நெறி வழியே மிக்கெனைக் கண்டு
காமக்ரோத லோபமுமை வென்று
ராமநாமத்தின் ரசமனையுண்டு
பாமர மக்கள் பவக்கடல் கடந்து
நேமமாய்க்க கடவுள் நெறிதனைக் காண
நலமுடன் வந்து நலஞ்பதேசம
இதமதாய்ச் செய்யும இறையோய்வ் வருக
தென்னாடுதனில் தெற்றென விளங்கும
பொன்னகர் தருமைப் புனிதன் மகிமை
மின்னெனத் தெரிந்த மிக்கோய்வ் வருக
இடையூ றகற்றும் ரடிலாத் தலமாம்
கடவூர்தனிற் களிப்புடன் வருக
வருக வருக மகரிஷி வருக
வருக ரிஷிகேச வள்ளலால வருக.
வருக சிவானந்த மகராஜ வருக
வருக நீடூழி வாழி. வருகவே சுபம்

திருக்கடவூர்
5—10—50

T. S. K. தேசிகர்.

—o—

இரவு 8 மணிக்குக் குறித்தபடி சுவாமிஜி அவர்கள் திருக்கடவூருக்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள் கோயில் மரியாதையுடன் எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தார்கள். ஆதீன தேவஸ்தான தேவாரப்பாடசாலைகள் சார்பாக ஒரு வரவேற்பும், வித்வான் திரு. காசிநாத தேசிகரால் ஒரு வரவேற்பும் வாசித்து அளிக்கப்பெற்றன. முறைப்படி எல்லா மரியாதைகளுடன் ஆலய வழிபாடு இனிது நடைபெற்றது.

ஸ்ரீ அபிராமி அமைமகரு விசேஷ சுதனைக்காப்பு அலங் காரம் செய்யபபடடிருந்த காட்சி யாவருக்கும ஆனந்தமா யிருந்தது. சுவாமிஜியை வரவேற்கத் திருக்கடவூர்ப் பிரமுகாகள் அனைவரும் பூரணகுமபம் விளக்கு முதலியன வைதது வீடுகளை அலஙகரித்திருநதார்கள. கோயில் வழிபாடு முடிநததும ஸ்ரீமான் கைலாஸம்பிள்ளை அவர்கள தமது வீட்டுக்குச் சுவாமியை வரவேற்றுப் பால் முதலியன கொடுத்து உபசரிததாகள. சுவாமிஜி அவாகள் வழிபாடு முடிநதவுடன 10 மணிகருத் தருமபுரம வநது சேர்ந் தார்கள. அதற்குமேல் உணவும் ஓய்வும்.

மறுநாள் 6—10—50 வெள்ளிக்கிழமை

காலை 9 மணிகரு. கவியோகி ஸ்ரீ சுத்தானநதபாரதி அவர்கள் காரில் தருமபுர ஆதீனதிற்கு விஜயமானார்கள். சாந்த நிலையத்தில் ஆதீன சம்பிரதாயப்படி மாலை முதலியன அணிந்து விபூதி பிரசாதம் வழஙகி வரவேற்கப்பட்டது. 12 மணிகருமேல் விருந்தினர் மாளிகையில் சிவானநதர், மகாசந்திதானம, யோகிபாரதியார் ஆகிய மூவர்களும் சநதிததார்கள. நீண்டநேரம் ஆத்மாநுபாவ விசாரம் நடைபெற்றது அதற்குமேல் பாரதியார் அவர்கள் விருமபிய வண்ணம யோகசாதனஙகளைப் பற்றிய நிழற் படக்காட்சி காண்பிகபபெற்றது.

மாலை 6 மணிக்கு வழக்கமபோலத் தேவார பாரா யணத்துடன மடாலய முகப்பில் கூட்டம் தொடங்கிற்று. ஸ்ரீலஸ்ரீ பகாசந்திதானமவர்கள பேசியதாவது :—

மெய்யன்பர்களே !

இனறு ஒரு நல்லநாள். யோகமே எனபது மன ஒருமைபபாடு. ஒன்றோடு ஒனறை இணைதது வைக்கும் வன்மையே யோகம். பேரொளியாகிய நிதது பொருளை இணைக்கு வைபபதே யோகம். அநத யோகநெறியை மிகச சுருககமாகவும விளகமாகவும அபபரடிகள திருவா ரூதத திருதாணடகததில அறிவிததுளளாரகள. அவா கள காடடியமுறை மூசசை அடக்குஙகள ; கணகளை உள் முகமாக்கி உற்று நோககுஙகள் ; உஙகளுடைய மாச படி யாத உள்ளப்படத்திலே ஓர் உருவத்தை எழுதுங்கள். அவ்வுருவம சசிதானநத சொரூபமாகிய ஒளியும் இன்ப மும் உறதிப்பயனுமாகிய சோமாஸ்கந்த திருமேனியாக இருப்பதைப் பாரபபீரகள ; அங்கேதான அருள் ஜீவநாடி இழைவதையும காண்பீர்கள ; அநத தரிசனங்கண்ட நீஙகள்தான உணமை ஞானிகளோடு ஒருவகுவைதது எணணததகும் தகுதியைப் பெறுவீரகள எனறு யோகத் தின் உறுபயனையும யோகத்தினையும உணாதகின்றார்கள். அநதப் பாடலைப் பாருங்கள்.

உயிராவணமிருந்து உற்றுநோககி
உளளக்கிழியின் உருவெழுதி
உயிராவணஞ்செய்திட்டு உணைநத்தநதால
உணாப்படுவாரோடு ஒட்டுவாழ்தி
அயிராவணம் ஏறுது ஆனேறறி
அமாரநாடாளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என் அம்மானே
நினனருட்கணணல் நோகுமாதா அல்லாதாரே.

நேற்று விபாழகநிழமை; யோகத்துறபயனகிய சிவானந்ததின விளைவு. இன்று வெளளிகநிழமை: யோகமாகிய சுத்தானந்தத்தின தோற்றம். குருவாரம் சிவவாரம். வெளளிவாரம் சக்திவாரம. சக்திவாரத்தில, சுத்தசக்தியைப் பற்றித் தூயவாழ்ககை நடத்தும் யோகியார் வருகை. யோகக்கலை ஞானவாயில். அக்கலையில வெற்றிகண்டு விளககியவர் நமது திருமூலர். அவர் கூறும தெய்வக்கலையில் எதத்னையோ பந்திகள் இனைக்கும் பெரிய பெரிய புலவர்களுக்கும் கூடப் பொருளாழம் காணமுடியாத புதை பொருளாகக் கிடக்கின்றன. அவற்றை விளக்கம காண காட்ட ஒருசிவ யோகியர்தான் முற்படவேண்டும். இநதத் துறையில் இவர்களுக்குளள அநுபவத்தை இவர்களுடைய திருமநதிர விளக்கமே அறிவிக்கும்.

மற்றொன்று பாருங்கள். ஒவ்வொருவரும் நாம எதற்காகப் பிறந்தோம் என்பதை உணரவேண்டும். உணர்ந்து கூறுகின்றார் நமது அருணநதிசிவாசாரிய சுவாமிகள் .—

"மானிடப்பிறவிதானும் வகுத்தது மனவாககாயம்
ஆனிடத்தைதநதும ஆடும் அரன்பணிக்காக அன்றே"

என்று. ஆகவே ஒவ்வொருவரும் அரன்பணி செய்யவேண்டுமம. அரன்பணி செய்யாத மகக்ள் பதரெனப் படுவர். அதுமட்டுமல்ல; சிவமநதிரஜபமும் செய்யவேணடும். அநத மநதிரம உயிர்த்துணை; நாவினுக்கழகு தருவது, நடுக்கத்தைக் கெடுப்பது, நலமிகக் கொடுப்பது; ஆன்மாகக்ளால் செய்யப்படும் பாவங்களை எல்லாம் கணப் பொழுதில் அழித்துவிடும். நமது அபபராடிகள் இதனை வெகு அழகாகக் கூறுகிறார். எப்படி? பூமியிலிருந்து

ஆகாயம்வரை விறகு குவிக்கப்பட்டிருக்கிறது மலைபோல. அக் குவியலை உண்ணுதற்கு நெருப்பு உள் நுழைந்தது. அவ்வளவுதான். விறகுக்குவியல் அப்படியே மறைந்து விட்டது. அதுபோலத்தான் பாவமும் நசிக்கும்.

விண்ணுற அடுகின்ற விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணினின்று அறுப்பது நடச்சிவாயவே

சிவநாமஜபம் செய்யவேண்டிய முறைகளை நமது சிவானந்தர் அவர்கள் நேற்றுச் சொன்னார்கள். இன்று யோகக்கலையைப்பற்றி யோகி பாரதியார் அவர்கள் தெளிவு ஆனந்தமாகப் பேசுவார்கள். எல்லோரும் கேட்டு இன்புறுவீர்களாக,

என்று பேசிமுடித்தார்கள். பின் ஆதீனக்கல்லூரி கௌரவப் பேராசிரியர் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளால் ஆதீனச்சார்பில் ஒரு வாழ்வேற் புரையும் வாசித்தளிக்கப்பட்டது.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் 'யோகக் கலை' என்னும் தலைப்பில் சுமார் $1\frac{1}{2}$-மணிநேரம் சொற் பெருக்காற்றினர்கள். அதன் சுருக்கம் வருமாறு :—

ானருளுமாய் எனக் கெந்தையுமாய் உடன்தோன்றினருய்
மூன்று யுலகம் படைத்தகந்தான் மனத்துள் இருக்க
என்றன் இமையவர்க்கன்பன் திருப்பாதிருப்புலியூர்த்
தோன்றுத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்திற்கும்; சுவாமி சிவானந்தருக்கும், மற்றும் உள்ள ஆன்மகோடிகளுக்கும என ஐக்கிய நமஸ்காரம.

இன்று புனிதமான நாள. என்வாழ்க்கையிலேயே மிகச் சிறந்த நாள். 40 ஆண்டுகளாகச் செய்த தவம் இன்று எனக்குப பலித்தது. பயனளித்தது. தவத்தின் பயன் மூப்பொருளின் உண்மையைக் காண்பதுதான். அந்த மூப்பொருள்தான் இனறு உங்களமுன் காட்சி அளிக்கிறது. இக்காட்சி மிக அபூவமானது. காட்சி கண்டபோது பேச்சில்லை. ஆனந்தக் களிப்பு நெஞ்சில் துள்ளுகிறது. ஆனாலும் இம் மூப்பொருளைக் கூட்டி வைத்த முதற் பொருளைபபற்றிப் பேசுவேன். அவனரு ளால் இன்று எனக்கு இப்பேறு கிடைத்தது.

இநத உலகில நாம் பிறந்திருக்கின்றோம். ஆனால் மூன்று கேள்விகள். எங்குற்றோம்?...., என்னசெய்தோம்? என்ன செய்யவேண்டும்? என்பதைச் சிந்திப்பதில்லை. பிரான்ஸ தேசத்திலே மோர்தாக் என்றொருவர் இருநதார். அவர் பெரும் பணகாரர். மேலும் கலவிமான். ஆனால் மனச்சாநதி இல்லை. இறுதியில இநத மூன்று கேள்வி களுமை எழுநதன. செல்வம முதலியவற்றால் பயனிலலை இன்பமில்லை. இதற்கு அப்பால ஒரு இன்பம் உள்ளது. அதை எப்படி அடைவது? எனறெல்லாம் சிந்திதாா; சிந்தனனர். அதுபோல் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்தால அஞ்ஞானம் நீங்கும். யாவரும் அடைய வேண்டியபொருள் பரம்பொருளே. அப்பரம்பொருள் ா சிவம். அது வெளிப்பட்டு அருளும்.

போகததால பயனில்லை. கடைசியில் நோய்தான். வயித்தியரிடம சென்று இறக்கிறான். குலத்தாலும் பயனில்லை. சிறநத குலததில் பிறநதாலும குலத்தைகெடுகக வநத கோடாரிக்காமமாக ஒரு பிள்ளை பிறநதுவிடுகிறான். வித்தையினாலும், அதனால் பணத்தைத் திரட்டினாலும் பயனில்லை. வரிகள் பல விதிப்பதில பணம் சுரண்டப்படுகிறது. செல்வம் செல்வோம் என்று போய்விடுகிறது. பலத்தினாலுமம துன்பநதான். எப்பொழுது? தன்னைவிட ஒரு பலசாலி வநத பொழுது இன்று வாழ்வான் நாளை தாழ்வான். இப்பொழுதும் பாருங்கள். வடகொரியா தெனகொரியாமீது படையெடுகதது முன்னால். இப்பொழுது தென்கொரியா வடகொரியாமீது படையெடுக்கிறது. ஆகவே உலக வாழ்க்கை நிலையில்லாதது நீர்க்குமிழி எப்படியோ அப்படித்தான்.

'அறத்தால் வருவதே இன்பம' என்றார் வள்ளுவர். அறம் தருமம தருமம் தருமபுரம். தருமபுரத்திற்கும் அறத்திற்கும பொருத்தம. தருமபுரத்தினால தமிழ்நாட்டிற்கு இன்பம. என! மடிக்கிடநத அழிநதுபோனபூட்டப்பட்ட பல நூல்களை எடுத்து அச்சிடடது. தேவாரம் முதலிய நூல்கள் இன்று ஒவ்வொரு சிறுவர் கையிலும் இருந்து பயனளிககின்றனவென்றால அது நமது சநதிகானத்தின் தொண்டல்லவா? இதனால் தருமபுரம் மிகப் பெருமை பெற்றது நிற்க, வாழ்க்கைகக்கும அறமே இன்பமாகும். துன்பமற்றுப் பேரினபநிலையை அடைவதே நமது லட்சியம். அறம் தன்னையும் பூரணமாக்கி மக்களையும பூர்ணமாக்குவது. ஒன்றுபாருங்கள :—

பையன்கள் இருக்கிறார்கள். நன்றாகப் படித்து B A, பரீட்சை எழுதப்போகிறார்கள். ஒருவன் சரியாக எழுதிப்

பரீக்ஷையில் தேறிவிடுகிறான் ஒருவன் எழுதாமல் காலத்தை வீண் போக்குகிறான். மற்றொருவன் காப்பியடித்துத் தணடனைக்குள்ளாகிறான். ஆகவே ஒழுங்காக எழுதியவன் பாஸ் செய்து இன்பம் பெறுகிறான். அது போலத்தான் நமது வாழ்க்கையாகிய பரீக்ஷையும். இப் பரீக்ஷையில் மனிதவாழ்க்கை ஒரு பளிக்கூடம். 'இன்னது செய்' என்ற ஆணடவன் கட்டளையை அறிந்து செய்துவிட்டால் ஜன்மம் ஸாபல்யம பெறும். அறிந்து செய்யாவிட்டால் மறுபிறவி எடுக்கவேண்டியதுதான். 'புனராபி மரணம்; புனராபி ஜனனம்.'

வாழ்க்கை வீணாகிறது. ஒரு பெரிய மகான் கூறுகின்றார் ——ஹே! சமபோ! நான உண்பது, உடுபபது உனது திருவடி பூசிப்பதாக இருக்கட்டும். என் இதயமானது உன்னைச சொல்லடடும். அநத தொணடையே நான் செய்கின்றேன். எதை நினைத்தாலும் பாடுபட்டாலும் ஈஸ்வரார்ப்பணமாகவேண்டும் என்று.

நால்வர்கள் சைவத்திற்காக அரும்பாடு பட்டார்கள் அப்பர் பாடல்கள் சைவசித்தாநதத்தைப் பிழிநதெடுத்துக் காட்டுகின்றன. மணிவாசகர் 'நமசசிவாய வாழ்க்கை நாதன்தாள் வாழ்க, இணைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று கூறுகின்றார். திருவாசகமும் திருக்குறளும சிறநத நூல்கள. திருவாசகம உயிர். திருக்குறள் உடல சுநதரர் சிவனைகூட 'பித்தா' என்று வைதார். ஆனல் அவர்தான் தமபிரான் தோழராஞர். கடவுளை உலக மக்களுககும தோழராகுகிறார். ஞானசம்பந்தரை எடுத்துக்கொளளவாம. அவர இலலாவிட்டால இன்றைக்குச் சைவம் எது? நாம் இனறு நமபி

யில் திருநீறு பூசிக்கொள்ளுகிறோம்என்றால் யார் காரணம் சம்பந்தரல்லவா !

யோகம் என்பது என்ன? சித்தத்தை நிச்சிந்தையாக ஒன்றினில ஒன்றைச்செய்வது யோகம. மன அடக்கத் திற்குச் சரியை, கிரியை, யோகம் என்ற படிகளில் செல்ல வேண்டும். எங்கெங்கு மனம் செல்கின்றதோ அதை விடுத்து ஒருவழிப்படுத்துவதே யோகம். இன் நான்கி னுள சரியையும் கிரியையும் உலகியல். யோகமும் ஞான மும் அதற்கு அப்பாற்பட்டன. மணிவாசகர் மந்திர ஞானமாகிற தியான யோகத்தை 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்' என்று சொல்லிக் காட்டுகிறார் ஆகவே யோகம் என்பது கடவுளிடத்து ஒரு வழிப்படுத்துவதுதான்.

ஹரியூதர்கோ என்ற விஞ்ஞானி இருந்தான். B. A. படித்தவன். விஞ்ஞானத்தில் முதன்மையானவன். ஆனல் மனச்சாந்தி கிடைக்கவில்லை. ஒரு பெரியவரை அணுகி னன். எனக்கு மனச்சாந்தி வேண்டுமென்று இரந்தான். ஆண்டவனைத் தரிசித்தால் உனக்குச் சாந்தி கிட்டும் என்று அவர் சொன்னர். கடவுளைக் காண்பது எங்கே என்று கேட்டான். அவரை எங்கும் பார்க்கலாமே என்றார். கேட்ட விஞ்ஞானி தூரதிருஷ்டி கண்ணுடிமூலம் எங்கும் பார்த் தான். தேடினன். ஒன்றும் தெரியவில்லை. பாதிரியா ரிடம வந்து 'பார்த்தேனே தெரியவில்லை' என்றான். நீ அப் படிப் பார்த்தது போதாது. உன்னுள்ளே பார்த்துக் கொண்டாயா என்றார. விஞ்ஞானி விழித்தான். ஒன்றும் புரியவில்லை என்றான்

[கடவுளுணைமையை நிர்ணயிக்கவும இருக்குமிடத்தைச் சுட்டிககாட்டவும மற்றொரு விருஞானியின் வரலாறும், ஆட்டைத் தோளிமீது போட்டுக்கொண்டு தெடிய கோனுன் வரலாறுமம எடுத்துக கூறப்பட்டன.]

மனிதனுக்கு மன அடக்கமும் பொறி அடக்கமும் அவசியமம தேவை. "யாதனின் யாதனின் நீங்கியான்" என்றார் வள்ளுவர். மேலும் அவரே "ஒருமையுள ஆமை போல் ஐநதடக்கலாற்றின் ஒருவர்க்கு எழுமையும ஏமாப் புடைத்து" என்றும கூறியிருக்கினறார். (எழுமை என் பதற்கு எழுச்சி என்று பொருளகூறிக் காட்டியது, ஆராய்சசியாளருக்கும் பெருவிருந்தாயிருந்தது.) யோகத் தின் படிகள மூனறு. சித்தாநதத்துள நன்கு கூறபபடு கிறது. அவைதாம் நமசிவாய, சிவோகம், சிவமயம். இவை யோகததின் அடிப்படைத் தத்துவஙகள். உலகில் எவனெருவன் பரம்பொருளை அடைகிறானே அவனே யோகி. அநத யோகியும பன்னிரண்டு வருடம் பரமபொரு ளிடததில் கருத்தூன்றி மௌன விரதம் கைக்கொண்டா னுனல் திலலை நடராசப்பெருமான் அவன் மனத்தின்கண் வெளிப்பட்டருளுவார். இது யோகத்தின் ரகசியம். அப்ப ரடிகளும் 'மனமணி இலிங்கமாக' என்று கூறுகிறார். அவனருளாலே அவன்தாள்வணங்கி' என்பது மாணிக்கப் பாட்டு அவன் என்றதுயார்? அவன்தான் பரம்பொருள். 'எனனுள்ளே உயிர்ப்பாய், புறம்போந்துபுக்கு என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ராசன்' என்று தேவாரம் கூறுகிறது. இன்னும் பாருங்கள்.

சிவானந்தர் உடல் வைத்யம் செய்தார். அவர் உள் ளத்தில் 'உயிருக்கு வைத்யம் என்னசெய்தோம்?' என்ற கேள்வி எழுந்தது. சிவயோகத்தில் ரடுபட்டார். உண்மைப்

பரம்பொருளை உள்ளத்திடத்தே கண்டார். எல்லாருக்கும் மேலைவைத்யராகவே ஆகிவிட்டார். யோகம் அவரிடம் சித்தி பெற்றது. யோகத்தால் நரம்புகள் மாற்றமடைகின்றன. ஒவ்வொருவரும் உத்தம யோகம் செய்யவேண்டும். உள்ளத்திலே உணமை ஒளியைக் காண்டலே யோகம். யோகசாதனம் அநதரங்கம் பகிரங்கம் என இரு வகைப் படுகிறது. பக்திக்குப் பொருள் தன்னை அர்ப்பணித்தல் என்பதாம். அரு, உரு, குரு என்ற வணக்கங்கள் அதற்குரிய மார்க்கங்கள். அவனே தஞ்சம் என்று வாழ்தல் தக்க வாழ்க்கை. எல்லாம அவன் அருள்; அவனுடைமை என்ற நினைப்பு தேவை. சாந்த மனமுடையவனே யோகி. சிவசக்தியால் ஆன்மா ஐக்கிய மடைகிறது. காந்தத்துக்கும் இரும்புக்கும உள்ள தொடர்பு போல்வது சிவசக்திக்கும், ஆன்மாவுக்கும் உள்ளதொடர்பு

நமசிவாய-நமக்கு மேல் பரம்பொருள் ஒன்று இருக்கிறது. மார்க்கோனி, ரேடியோ கண்டார். எடிசன் எலெக்டரி கண்டுபிடித்தார். சைகிளோன் அணுசக்தியைக் கண்டார். ஆனால் அவைகளுக்குள் ஒரு சக்தி நின்று இயக்குகிறது என்பதையும் அவர்கள் உணராமல் இல்லை. நமக்கு மேற்பட்ட பொருள் ஒன்று இருக்கிறது என்பதையும் கண்டார்கள். அது இல்லாமல் உடல் ஆடாது. உலகம் இயங்காது. உடலே அர்ப்பணம் செய்; புலன் வழி விடாமல் நிலைநிறுத்து; இது யோகத்தின் முதற்படி. இதற்கு நமசிவாய ஓம் சக்தி என்ற மந்திரங்களை ஜெபிக்கலாம்.

சிவோகம்:—'என்று நீ அன்று நான்' என்ற உணர்வு தலைப்படுதல. உனக்குள் ஒருவன் இருக்கிறான் என்ற உணர்வு இரண்டாம் படியில் தலைப்படவேண்டும்.

"நினைக்க நினைக்க நினைப்பற்று நெஞ்சே நினைப்பற்றி நீயாகி நில்" தியான சக்தி ஒருவனை நினைபபுப்போல ஆக்குகிறது சிவோகமம செய்பவன் அது சிதநித்த உடன்தான் கணனைத் திறக்கவேண்டும். அநத சித்தியை மற்ற வழிகளில் பயன்படுத்தக்கூடாது.

சிவமயம்-யோகத்தின் மூனறும்நிலை சிவமயம் அங்கிங் கெனறதபடி எங்கு பார்த்தாலும அவனேயாய்க் காணும் நிலை சிவமயம். நாம் கடிதங்களில்கூட பிள்ளையார் சுழி யிட்டு சிவமயம் எழுதுகிறோம 'யத்பாவம் தத்பவது.' மனிதன் தான் நினைத்த சக்தியாகவே தான் ஆகின்றான். அதனால்தான் சிவபூசை செய்கிறனர். சிவலிங்கம் ஆகாசமயம. 'மனமணி இலிங்கம்' என்பார் அப்பாடிகள். சிவபூசை செய்யும் ஒருவன் சிவமயமாகின்றான். இன்ப நிலை அடைகினறான். செபசாதனைகளை பபயில். உரிமை களை அவனுடையதாக்கு யாவர்க்கும் நன்மைசெய். பணிவோடிரு. இவை யோகநிலைகளை வளர்க்கும். மனிதன் யோகசாதனைகள் பயின்று சிவபாம்பொருளைக் காண்பா னாக என்று நாம் வாழ்த்துகின்றோம். ஆன்மகோடி களுக்கு என் நன்றி. ஓம்சிவம்.

ஸ்ரீ பாரதியாரவர்கள் பேச்சு முடிநதபிறகு பலர் வேண்டுகோட்கு இணங்க, சுவாமி சிவானந்த மகாராஜ் அவர்கள் முதலுள் பேச்சின் ஒலிப்பதிவு ஒலி பரப்பப் பட்டது. வேலூர் கட்டளைவிசாரணை பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

படக்காட்சி :—இவ்விரண்டு நாட்களிலும் பொதுமக் களுக்கு யோகமம சாதனைகளும், இமயமலையின் இயற்கை

வளமும், கங்கையாற்றின் தெளிந்த நீரோட்டமும படக் காட்சி மூலம யாதரா மண்டலியாரால் அறிவிக்கப்பட்டன. சமய உண்மைகளைப் பரப்புவதற்காக, சிவாநந்தா அவர்கள் நவீன சாதனங்களையும் பயன்படுத்தி வருவதை மககள் மிகமிகப் பாராட்டினர்கள்.

அனறிரவு 11-மணி அளவில் சுவாமி சிவாநந்தமகராஜ் அவர்கள யாத்ராமண்டலியுடன் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களிடத்தில் பிரியா விடைபெற்றுக கொண்டார்கள்.

—o—

தஞ்சை

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த ஸரஸ்வதி இனறு காலை மாயூரத்திலிருந்து தஞ்சை வந்து, ரயில்வே ஸ்டேஷனி லிருந்து சங்கர மடத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல லப்பட்டார். ஊர்வலத்தில் ஏராளமான பக்தகோடிகள் கலந்து கொண்டனர். வழிநெடுக பஜனை செய்யப்பட்டது.

சுவாமிஜி உடல்நிலை சரியாக இல்லாததால் தஞ்சையில் நடக்கவிருந்த எலலா நிகழ்ச்சிகளும ரத்து செய்யப்பட்டன. ஆனாலும், திரளான ஜனங்களுக்கு சுவாமிஜி சங்கரமடத் தில் தரிசனம் கொடுத்தார். அகு ராம பஜனை நடந்தது. நகர பொதுமக்கள் சார்பில் வரவேற்புப் பத்திரங்கள் வாசித் தளிக்கப்பட்டன. சிறிது நேரம் அகு தங்கின பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து முற்பகலிலேயே திருச்சிக் குப் புறப்பட்டார். ஸ்டேஷனிலும் ஏராளமான ஜனங் களுக்கு தரிசனம் கொடுத்தார்.

—சுதேசமித்திரன். 9-10-50

அறிவிப்பு

இமயமலையில் ரிஷிகேசத்தில் அமையப்பெற்றுள்ள ஆனந்தகுடீரத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ மண்டலேஸ்வர சுவாமி சிவானந்த ஸரஸ்வதி மகராஜ் அவர்கள் தங்கள் சிஷ்யமண்டலத்தில் ஒரு சிலருடன் இராமேஸ்வர யாத்திரை யினிமித்தம வருகாலத்தில், பக்தர்கள் பிரார்த்தனைக் கிணங்கி, வருகிற அக்டோபர மாதம 6-ம் தேதி வெள்ளிக் கிழமை ஒருநாள் மட்டும் இவ்வூரில் தங்க இசைந்துள்ளார் கள். ஆனந்தகுடீர் என்ற ஸ்தாபனத்தின் முக்கிய நோக் கங்கள் என்னவெனின் : ஜீவராசிகள் ஆத்மஞானத்தை யடைந்து அனுபவிப்பதும், உலகில் சாரசம், சாந்தம், அன்பு, ஒற்றுமை இவைகளை ஓங்கசெய்வதும் இவற்றிற்கு அடிப்படையாக உளள யோகசாதனத்தை குரு சிஷ்யக்கிரம மாய் அனுஷ்டிப்பதுமாகும்.

ஸத்ஸங்கம், ஈஸ்வரபஜனை, பகதியோகம், வேதாந்த விஷய அறிவு இவைகளால எவரும் ஆத்மஞானம அடையும் படி சுவாமிகள் தென்னடெங்கும் விஜயம்செய்து வருகின் றார்கள்.

ஆகையால் இம்மகான் நமது தஞ்சைமா நகருக்கு வரும் நன்னாளை எதிர்பார்த்து எல்லோரும் ஒன்றுகூடி சுவாமியையும், அவர் கோஷ்டியையும் சிறப்பாக வரவேற்று அவர்களது தரிசனம், ஸத்ஸங்கம், நற்போதனைகள் இவை களால் அவர்களுடன் ஆத்ம சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு இம்மையிலும், மறுமையிலும் க்ஷேமத்தை அடை யுமாறு கோரப்படுகிறது.

இப் பெரியோர்களை வரவேற்க அமைக்கப்பட்டுள்ள ஒரு ஸங்கம் தஞ்சை அய்யனகுளம் கீழ்க்கரையிலுள்ள

மகாராஷ்டிரஸமாஜ் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது இந்த ஸ்தகாரியத்திற்கு எல்லோரும முன்வந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஸ்வாமிகளின் விஜயத்தின சமயம இவ்வூரில் நடக்கும் சமபவங்களின் விவரங்கள் இடம், காலம் முதலியன துண்டுப் பிரசுரங்களின் மூலம் வெளிவரும். மகாராஷ்டிரஸமாஜ் கட்டிடதத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை 6-30 மணிக்கு இது சமபந்தமாக கூட்டம் நடைபெறும ஆஸ்திகர்கள் அனைவரும கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகிறது

அபிமானிகள்

ஸ்ரீ. வெங்கடகிருஷ்ண பிள்ளை, காய்கனி வர்த்தகர்கள் சங்கம் தஞ்சை

,, R. விசுவநாத ஜோஷி ஜவுளி வியாபாரம் ,,

Dr. N. ராமநாதன் M B.B S., மெடிகல் அஸோஸியேஷன் ,,

ஸ்ரீ. சுவாமிநாத பிள்ளை V. M. ராஜராஜசமய சங்கம் ,,

,, J. சதாசிவ தேவ குஜராத்தி அஸோஸியேஷன் ,,

,, T. A. நாராயணசாமி பிள்ளை பழவியாபாரிகள் ,,

,, K. S. கோபாலசாமி அய்யர் ஹோட்டல் முதலாளி சங்கம் ,,

,, மாரிமுத்து பிள்ளை புஷ்ப வியாபாரிகள சங்கம் ,,

,, பஜ்ஜி ரங்கய்யர்
,, பஜ்ஜி சுப்பையா
,, S. V பாகவதர் } சௌராஷ்டிர சங்கம் ,,

,, கிருஷ்ண ஜோஷி மிராசுதார்கள ,,

,, சொக்கலிங்க செட்டியார் மில் ஓனர்ஸ் அஸோஸியேஷன் ,,

ஸ்ரீ சம்பசிவ அய்யா (குன்னியூர்) வைதீக தர்ம சங்கம்,,
,, குப்புசாமி பிள்ளை ஞாலசமபந்த மடாலயம் ,,
,, ராமானுஜதாஸர் கருந்தட்டான்குடி ,,
,, R. ஹரிராவ் (இணமதார்) கோவிலடி, பூதலூர் ,,

S. கலியாணசுந்தரம் அய்யர் தலைவர்.

T. B. சிவசங்கர தேவ
T S சாதசிவ ராவ்
காரியதரிகள்.

தஞ்சாவூர், தேதி 10-8-50

—o—

நமோநாராயண

தஞ்சாவூர் மஹாஜனங்களின் சாபாக தஞ்சைக்கு
6-10-50-ல் விஜயம் செய்த பரமஹமஸ பரிவ்
ராஜகாசாய ஸ்ரீ சிவானந்த சுவாமிகளுக்கு
அளிக்கப்பட்ட
வரவேற்புப் பத்திரம்

தங்கள வரவு நல்வரவு ஆகுக.

தஞ்சை மஹாஜனங்களின் சாபாக, தஙகளை வர வேற்க அமைக்கபபட்ட கமிட்டியார் தங்களை மனப்பூர்வ மாயும் நன்றியறிதலுடனும் சரிதிர வாயிலாயும் பிரஸித்தி பெற்ற இத்தஞ்சை நகருக்கு வரவேற்கிறோம்.

ராச்வர வீர்யத்தை அடைய தாஙகள செய்யும் தபஸ் உலகத்தின் சேஷமார்த்தமாக தங்களால் அமைக்கப்படும் ஸ்தாபனங்கள், சங்கங்கள். தஙகளால் சமஷ்டி பாபத்தை நீக்கி ஜீவகாருண்யம் அன்பு, பரோபகாரம. ஐக்கிய உணர்ச்சி இவைகளை மனிதன் மனதில் வளர்ச்செய்யவல்ல ஸ்ரீ அதிருத்ரம், ஸ்ரீ மகாருத்ரம், இவை போன்ற மஹா எக்ஞங்கள் உபநிஷதங்களில் அமைந்திருக்கும் வேதாந்த உண்மைகளை ஜகத்தில் எல்லோரும் உணர்ந்து அநுபவிக் கும் வழியில் ரிஷீகேச மஹாசேஷத்திரத்தை உலகத்தின் சுத்த ஹிருதய ஸ்தானமாய் தாங்கள அமைக்கும் திறமை

இவைகளைக் கணடுமை அடியோமை, பகதி. ஆச்சரியம், நமது பாக்கியமே பாக்கியம் என்ற உணர்ச்சிகளுடன் பரவசப் பட்டு இருகரமேற்றும் என்ன உயர்ந்த லக்ஷியங்கள். என்ன அற்புத ஸாதனைகள் ஸித்திகள ஒரு வாழ்கையிலே

ஸமஸ்காரமற்ற புதிதி இபபொழுது உலகதில் அணு குண்டு முதலிய நாசகரமான ஸாதனங்களைத் தேடி வருகிறது. இக்காலத்தில அரேஹா, தங்களை ஈனறெடுதத தமிழ் நாட்டின பாகக்கியம. மஹாதபஸ, காமயோகம் இவைகளால் உலகத்தை நல் வாழ்கையில் ஈடுபடசெய்ய பாடுபடுமை, தங்களுடையவும் தங்களுடைய ஆசரம வாசிகளை வளர்க்குமை, ஹிமயபர்வதத்தின் புண்ணியமே புண்ணியம்!

தங்களுடைய தபோ பலுக அணுகுண்டு முதலிய அசேதன சக்தியை வளாக்கும் விஞ்ஞான சாஸ்திரிகளின் மனத்தையும உடைக்க வலல நாசவர வீர்யத்தை மனுஷ மனதின் வாயிலாய உளட்டவல்ல தபோ பலமே பலம்.

ரிஷீகேச கூடத்திரம இனி இந்தியாவிற்கே அல்ல, உலகத்திற்கே ஒரு விசித்திர விக்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நிலையமாகி உலகதில் இன்று வியாபிதிருகுமை தமனையும அதன் பலுக நோடுமை கொடுமைகளையுமை நாஸதிகத் தையும் போகதி தெவ சமபத்தான ஸ்வர்ணத்தை செய்யும் ஒரு ரஸ வாத நிலையமாகும். நாசன தங்களை பாரத வருஷதிற்குமை உலக கூடமதிற்குமை பாடுபட நீண்ட ஆயுள் ஆரோக்கியமை இவைகளை அளிக்க வேணுமென பிரார்த்திகிறோம.

தடுத்தாட் கொணடு வலுவே வநது எங்களுக்கு தரிசனமை கொடுத்து எங்களை புனிதராகியதறகு நாங்கள் ஆழுந்த நன்றி பாராட்டுகிறோம. இநத நகர வாசிகள இதன் பலுக ஈஸவர அணுகிரகதிறகு தகுந்த பாதிராளாக வேணுமென பிரார்திகிறோம.

தஞ்சாவூர்
6-10-50

தஞ்சைநகர வாசிகளின் ஊழியாகளான
வரவேறபுக் கமிட்டியார்.

ஸ்ரீலஸ்ரீ சாது மண்டலேஸ்வர
சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹாராஜ்
6-10-50 அன்று தஞ்சை விஜயம் செய்தபோது
நாகை தெய்வநெறிக் கழகத்தினர் அளித்த

அன்புப் பத்திரம்

"மகமது மலைக்குப்போக முடியாவிட்டால் மலை தான் மகமதைத் தேடி வரட்டுமே" என்பது ஒரு ஆங்கிலப் பழ மொழி. பழமொழி பொய்க்காது என்பதை நாம இன்று திண்ணமாயறிகின்றோம் இமயமலைச் சாரலில் தவஞ் செய்துவரும் சுவாமி சிவானந்தரைத் தென்னாட்டிலுள்ள நாம நேரில்போய்த் தரிசிக்க முடியவில்லையாயினும் சுவாமி கள் நம்மைத் தேடி அருள்புரிய வந்துள்ளார். ஏன்? "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவாக்கும் இறைவா போற்றி!!" என்று கோஷம செய்பவர்கள் யார்? தமிழர்கள் தமிழ்மொழியில் இன்று பாடுகின்றனர். சிவ னில் ஆநந்தத்தைக் கண்ட சிவானந்தர் நமமைத்தேடி வந் தாக வேணடும். அது சிவபெருமான் கட்டளை.

சென்னை:—

ஜாதி, மதம், நாடு, அரசியல் முதலிய பாகுபாடற்ற ஒரு சநியாசிகளு நேற்று சென்னைநகரத்தில் கார்ப்பொ ரேஷன் அங்கத்தினர் சென்னைமாகாணத்தின் சார்பில் உவந் தளித்த அமோக வரவேற்பு தென்னாட்டினரின மனப் பண்பை உலகிற்கு எடுத்துக்காட்டி விட்டது.

தஞ்சாவூர்:—

நம் குருநாதனை டாக்டராகும்படி செய்தபெருமை தஞ்சாவூருக்கே உரியது. உடல் நோய் தீர்க்க வலலவர் என்ற பட்டம் பெற்று இவ்வூரை விட்டுப்போனர். கடல்

கடந்து மலாயா நாடு சென்ற டாக்டர் இமாலயம் சென்று சிவானந்தக்கடலில் மூழ்கித் திரும்பிவந்து தான் படித்த ஊரிலேயே தன்மருந்தை விற்க இன்று நம்முன் வந்துள்ளார். அவர் கொடுக்கும் மருந்து உடல் நோய், உயிர் நோய் இரண்டையும் தீர்க்க வல்லது. மறுமுறை சந்தர்ப்பம் வாய்க்காது. அவரவர் வியாதிக்குத்தக்க மருந்தைக் காசு இல்லாமல பெற்றுகொள்ளலாம.

நாகப்பட்டினம் :—

தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த நாகப்பட்டினத்தில் சுவாமிகள் இட்ட கட்டளைகளைக் கடைபிடித் தொழுகும் தெய்வநெறிக் கழகமொன்று இருந்தபோதிலும சுவாமிகள் செலலும் யாதநிராமார்க்கத்தில் நாகப்பட்டினம் அமையப் பெறுமையால் அங்கு அவர்கள் வர இயலவிலலை. ஆயினும் அடிகளைக்காணை இன்று நாம நூற்றுக்கணக்கில் நாகையிலிருந்து வந்துளளோம சுவாமிகள் நமபால கருணைகூர்ந்து ஆசிபுரிவார்களாக !

ஐவகையாம பொறிகடமைக் கருததுவதே
தொழிலாகி யலைந்து நொநது
மூய்வகையொன் றடைவதற்கு முணர்விலராய்
எணமாறு முலகமாக்கள்
செய்வகைதாந் துயாகதினைச் சேர்வதற்கிங்
கவதரித்த சிவமேயெங்குந
தெய்வநெறிக் கழகமனைதச் செகதிறுவுஞ
சிவானந்த தேவே போற்றி !

நாகப்பட்டினம்,
6—10—50.

இங்ஙனம்,
நாகை தெய்வநெறிக் கழகத்தினர்.

திருச்சி

திருச்சிராப்பளளி வந்து சேர்ந்ததும் ஸ்ரீ சுவாமிகள் 8-10-50 தேதியன்று காலை முதன் முதலாக மலைவாசல் பிளளையார் கோவில் தரிசனம் செய்தார் பின்பு ஊர்வலம் மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றது. அடுத்து உருமி பள்ளிக்கட்டிடத்தில் பாத பூஜை பகதி வினயத்துடன் நடத்தப்பட்டது. அன்றைய தினம் சுவாமிகள் சாவித்திரி உயர்தரப் பளளிக்கும், நேஷனல் கலேஜுக்கும், கோல் டனராக திவ்ய ஜீவன சங்கக் கிளைக்கும விஜயம் செய்து பற்பல அரிய உபதேசங்களையும சங்கீர்த்தனங்களையும் செய்து மக்கள் உள்ளத்தை பரவசமடையச் செய்தார்.

மறுநாள் (9-10-50)ல் ஸ்ரீ சிவானந்தர் உருமி சேஷா சலம செடடியார அக்ரஹாரமதத்துக்கு சென்று தரிசனம் தந்து குழந்தைகளை ஆசீர்வதித்து அருளினர்.

திருச்சி விஜயக் கமிட்டி அறிக்கையும், பாலை நகர் திவ்ய ஜீவன சங்ககக்கிளையார வாசித்தளித்த வரவேற்பு இதழும்; சுவாமிகளின் திருச்சி நிகழ்ச்சி குறித்து 9-10-50 தேதிய 'சுதேசமித்திரன்' தந்த விவரத்தையும் இத்துடன் அளிக்கிறோம். அடுத்துள்ள 'சாதன முறைக் குறிப்பு' அச்சுத் தாள்கள் திருச்சியில அன்பர்களனைவருக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

—o—

ஓம்

ஸ்ரீ சிவானந்த திருச்சி விஜய கமிட்டி—1950

திருச்சிராபபளளி நகரவாசிகளுக்கு தெரிவிப்பது என்ன வெனில் :—

சுவாமி சிவானந்த ஸரஸ்வதி அவாகளால் தெய்வநெறிக் கழகத்தின் தலைமைச் சங்கம், (Divine Life Society) இமயமலையைச் சேர்ந்த ரிஷிகேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டும் அதன் கிளைக் கழகங்கள் பாரதநாடு முழுதும், வெளிநாடு களில் ஐரோப்பா, அமெரிக்கா, மெக்ஸிகோ தேசங்களிலும் ஸ்தாபிகபப்பட்டும் வருகிறது. இப்பால் ஸ்ரீ சுவாமிகள் கங்கோத்திரியின்று கங்கையைக்கொணடு இராமேச்சு வரத்தில் அபிஷேகம் செய்ய உத்தேசித்து, பல கோஷ்டிகளாக் தெரிசித்து வரும் யாத்திரையில், இடையில் திருச்சி ராப்பள்ளியில் 7-10-50 முதல் 9-10-50 வரை தங்கியிருப் பார்கள்.

2. தெய்வீகத்துறையில் மனிதனின் வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய குறிக்கோள்களை அவ்வபோது புஸ்த கங்கள், ஸஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் ஸ்ரீ சுவாமிகள் விடுத்து வருக அரிய பெரிய உபதேசங்களை மக்கள் அறிந்திருப்பார்கள். அவ்வுபதேசங்களினின்று எவரேனும் தெய்வீக லக்ஷியத்தை உணராது இருக்கமுடி யாது. மேலும் ஸ்ரீ சுவாமிகள் கற்போது எல்லோருக்கும் ஜகத்குருவாகவே விளங்கிவருகிறார் எனபது உலகம் அறி யும். ஆகவே திருச்சிவாசிகள் இந்த அருமையான சந்தாப பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அன்னாரை நேரில் தெரி சிப்பதோடு அவர்களுடைய ஆசிகளையும் பெற்று உய்ய வேண்டும்.

3. ஆத்மீகத் துறையில் ஈடுபட்ட ஒவ்வொருவரும ஜாதி, மத பேதமின்றி சிறந்த முறையில் இனிய வரவேற்பு கடைபெறும்படி தாராளமாகப் பொருள் உதவிசெய்து, இந்த அரிய சேவையில் கலந்துகொள்வோமாக.

4. நன்கொடைப் பொருள் எதுவாயினும் அவைகளை "ஸ்ரீ P. ஜம்புநாதய்யர், B. A., B. L., காரியதரிசி, ஸ்ரீ சிவானந்த திருச்சி விஜய கமிட்டி, கெ. 30, இரட்டை மால் தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருசிராப்பள்ளி" என்ற விலாசத்திற்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம.

திருச்சி,
18—5—50

P ஜெம்புநாதய்யர்
காரியதரிசி,
வரவேற்புக்கமிட்டியாருக்காக.

—o—

நமோநாராயணாய
இமயமலை ரிஷிகேசம், மறைதிரு மண்டலேசவரா
சுவாமி சிவரானந்த ஸரஸ்வதி அவாகட்கு
பாலகர் திவ்ய ஜீவன சங்கத்தார் அளித்த

வரவேற்பு வாழ்த்து

சிவானந்த சரஸ்வதி யெனுமச சீர்சால் துறவியே!
வருக, வருக, வருக. தங்களது பெரற்கரிய நல்வரவைப் பெறற யாங்கள் மழை கான் மயிலும் பெறு மகிழ்வு அடைநதுள்ளோம. திசையெலாம் புகழும செந்தமிழ் நாட்டின் திலகமாகிய தாமிரைபரணி நதிதீரத்து இலகும் உததமர் வாழ் பத்தமடையின் கண் மனிந கணம உய்ய அவதரித்த தாங்கள் கற்பனக்கற்று முற்றிய நினைவாற்ற லுடன் இளமையிலேயே ஆத்மீக ஞானம கைவரப் பெற்று

லகூஷியம பெறுவான் வேண்டி துறவாம மேற்கொண்டு இமயம் சாரந்து பலலாண்டு கடுந்தவம் புரிநதுள்ளீர்கள். துறவென்பது குகையுட்சென்று உட்கார்நதிருத்தலன்று. அகங்காரம மமகாரஙகளை ஒழித்தலேயாம். அதனை இல்லைத் திருநதுமம அநுட்டிகளலாம என்ற கோட்பாடுடைய தங்களது துறவின் பெருமை எல்லாம் எடுத்து இயம்புதற்கெளிதோ!

உலகம் போறறும் யோகீஸவரரே!

ரிஷீகேசதது ஆன்மீகம் பரப்பும், உலக ஸதாபனமாய் விளங்கும் ஆனநத குடீர் ஆச்ரமத்தில் வதியும தாஙகள் ஹட யோகம, ராஜயோகம, குண்டலியோகம், முதலியவற்றிற் சித்தி பெறறு வேதாநத சிததாய், விளங்குவதோடன்றி கைலாயயாத்திரையாலும பிறவாற்றாலும, எய்திய அநுபவங் களை சுவாமி விவேகானநதருக்குப் பின் மேனாட்டார முத லிய என்நாட்டாரும் போறறும் நிலையில் ஆங்கில மொழி யில் நூற்றுககு மேலான நூட்கள் எழுதி உலகினர்கு அருளியுள்ளீர்கள். தங்களது நூல்கள் மக்கட்கு வரப்பிர சாதமாக அமைந்துள்ளன இதற்கு உலகினர் செய்யும் கைமாறு தங்களை வாழ்த்துதலன்றி வேறினறு.

பிறர் நலமேபுரி பெற்றியார் அறவோய்!

அமெரிக்கா முதலிய மேனாட்டாரும் ஆத்மீக வளர்ச் சிக்கு யோக முறையே சிறந்தது என மேற்கொளளும் இக் காலத்தில் தாங்கள் யோகமுறையால் மக்களின் மனநோய் கள் தீர்த்து ஒழுக்கமுடையாராக்குவ தோடன்றி லகூஷ மண ஜாலாவில் சத்யசேவாச்ரமம் அமைத்து பத்ரி நாராயணுக்கு செல்லும் யாத்ரீகர்களுக்கு சத்ர சிகிச்சை முதலிய வைத்திய உதவியால் உடல் நோயும் தீர்த்து வரு கின்றீர்கள்! இங்ஙனம் பிறர் நலம் புரியும் தாங்கள் கடவுட்

பேற்றையடைய முதற்படி ஒழுக்கமே எனக்கொண்டு உல
கினர்க்கு ஒழுக்கத்தை உபதேசிக்க உலக யாத்திரை
துவங்கியுள்ளமை! ஆஸ்திகத் தன்மை குறைந்திருக்கும்
இக்காலத்தில் தென்னாட்டாருக்குப் பெறுமை பயனை அளிப்
பதாயுளது! இங்ஙனம அறம் பல புரியும், தாங்கள் எல்
லாமை வல்ல இறையருளால் ஊழிதோறூழி வாழுமாறு
வாழ்த்துகின்றோம்.!

பாலை நகர்
8-10-50

இங்ஙனம்
திவ்ய ஜீவன சங்கத்தார்.

—o—

திருச்சி

திருசசி அக் 7—தெய்வீக வாழ்க்கை சங்க ஸ்தாபகர் ரிஷிகேசஸ்வாமி சிவானந்த சரஸ்வதி இன்று மாலை மதுரை பாஸஞ்சர் மூலம் இங்கு வந்து சேர்ந்தார். தொண்டைடைப்புண் ணினால் ஸ்வாமிஜியால் பேசமுடியவில்லை இன்று பூராவும் ஓய்வுஎடுத்துக் கொள்கிறார். ஒருவருக்கும் தரிசனம் கொடுக்கமாட்டார்.

சுவாமி தரிசனம்

திருச்சிஅக் 8—இங்கு வந்துள்ள ரிஷிகேசஸ்வாமி சிவா னந்த சரஸ்வதி இன்று மலைக்கோட்டை அடிவாரத்திலுள்ள மாணிக்கவிணயகர் கோயிலுக்குச்சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார். பிறகு மலைக்கோட்டையைச் சுற்றி அலங்கரிக்கப் பட்ட காரில்ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார. பிர தானவீதிகள் வழியாக ஊர்வலம் சென்று உருமு தனலக்ஷ்மி வித்யாலயத்தில் முடிவுற்றது. வித்யாலய தலைமை ஆசிரியர் ஸ்வாமிக்கு வரவேற்புப் பத்திரம்•வாசித்தளித்தார். பஜனை நடைபெற்ற பிறகு இரண்டு மணிநேரம் பொது மக்களுக்கு தரிசனம் வழங்கினர். —சுதேசமித்திரன் 9-10-50.

ஓம :
மண்டலேஸ்வர

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி
(ரிஷிகேசம்)

புதுக்கோட்டைக்கு விஜயம்
9—10—50

பிரார்த்தனையின் சக்தி

பிராத்தனை மகத்தானதோர் ஆத்மீக சக்தி. உண்மையான உருக்கத்துடனும, நம்பிக்கையுடனும பிரார்த்தனை செய்யப்படவேணடும். பிரார்த்தனையின் சகதியைப்பற்றி தாக்கம் செய்யாதே. அதன் சக்தி மகத்தானது.

பிராத்தனை செய்யும்போது உன்இதயத்தைத்திறந்து காட்டு, எதையாவது மறைத்து ஏமாற்ற நினைக்காதே. நீ வேண்டுவதெலாம் அடைவாய். உன் பிராத்தனையில் தவறு ஒழுங்குடனிரு. ஒனி, தூய்மை, பக்தி, ஞானம் இவற்றை இறைவனிடம இறைஞ்சி வேண்டு.

திரௌபதி மனமுருகி இறைவனை வேண்டினள் உடனே கணணன் அவளது துன்பம் துடைத்தான். கஜேந்திரனும் அவ்விதமே வேண்டினன். சங்குசக்கரதாரியாக அங்கு விறைந்து வந்தார் விஷ்ணு. மீராவும கணநாணுக் காதலுடன் பிரார்த்தனை செய்தாள். கிரிதாரி அவளுகக்கு சேவகம் செய்தான். இப்பொழுதிலிருந்து உள்ளன்புடன பிரார்த்தனை செய்.

ராதா கிருஷ்ணா! தாமதியாதே. நண்பா! நாளை என்பது வாழ்வே வராது.

வத்ஸலா,

எளிய ஆடை அணிகதுகொள, பகட்டான பட்டாடை யும், மின்னுமை நகைகளுமை விருமபாகே அடகமெனுமை வளையல்களும், தூய்மையெனுமை கழுத்தணியுமை, கற்பெனுமை மோதிரமுமை, பொறுமையெனும் மூக்குகதியுமை, சக்தியெனுமை காதணியும் தரித்துககோள, இவை அனைத்தும் உன்னை அழகிகளுள் அழகியாக்கிவிடுமை. இதைப்பயின்று உணாகது கொள்.

தியானம்செய். அனைத்துக்கும் காரணமான தெய்வீக உற்பகதி ஸ்கானத்தை அறிந்து உபயோகி. அது பேரின்ப முமை, சாகதியும், சந்தோஷமுமை நிறைகதது. அது பரிபூர்ண ஜகதியமுமை, ஆனகமுமாகும். எப்பொழுதும் மகிழ்ந்திரு. இறைவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

சுவாமி சிவானந்தர், ரிஷிகேசம்.

—o—

—சுதேசமித்திரன் பத்திரிகைச் செய்தி

புதுக்கோட்டையில் வரவேற்பு ஏற்பாடுகள்

ஹிகது மகத்தின் உண்மைக் குறிக்கோளை ஜனங்களுக் குப் பரப்பி, இந்துக்களுள் அதிகப்படியாக ஒற்றுமையை வளரவேண்டி அகில இகிய யாத்திரை செய்துவரும் சிவானகத சுவாமிகள் புதுக்கோட்டைக்கு அக்டோபர் 9-ம் தேதி விஜயம் செய்வார அச்சமயம அவரைத் தகுந்தபடி வரவேற்று அவரது கொளகைகளை ஜனஙகளுக்கு அறி முகப்படுத்தி வைக்க புதுக்கோட்டையில் பிரபலஸ்தர் களடஙகிய ஒரு கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது. சனதப் பேட்டையில் பூர்ணகும்பத்துடன் ஸ்வாமிஜியை வரவேற்று

ஊர்வலமாக கீழராஜவீதிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது மாலை ராஜ கலலூரியில் மாணவர் களுகக ஒரு சொற்பொழிவு நடத்துவார். பின் ஸ்ரீகுலபதி பாலையாபள்ளியில ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்வாமிஜி பேசுவார.

புதுககோட்டையில ஸ்ரீ சிவானந்தஜீ நகர மக்களால் மிக ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டார். நகர பொதுமக்கள் சாரபாக கீழ்கண்ட வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது.

பின்னர் சுவாமி ஸம்ஸகிருத வேதபாடசாலைக்கு விஜ யம் செய்து நற்போதனைகள் பலவும் செய்து அனைவரையும் ஆசீர்வதித்தார்.

அடுத்தபடியாக திவ்ய ஜீவன் சங்கக கிளைக்குச் சென்று அவ்வன்பர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு ஆன்மநெறி யின் பல தரங்களையும் அதில் இடையூறின்றி மக்கள் முன் னேற வேண்டிய முறைகளையும் போதித்து சங்கீர்த்தனத் தால் எல்லோரையும் பரவசமடையச் செய்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் புதுக்கோட்டை நகர மன்றத்தார் அளித்த வரவேற்பைப் பெற்று அங்கு சென்று அனைவருக்கும் வாழ்கையின் நோக்கத்தையும் அடைய வேண்டிய குறிக்கோளையும விரிவாக எடுத்துரைத்தும் சங் கீர்த்தன மகிமையையும் அதன் பலனையும் வந்திருநதோர் உள்ளத்தில் பதியவைத்து நல்லாசிகள் வழங்கினர்

இந்நிகழ்ச்சிகளுககிடையே ஸ்ரீ சுவாமிகள திருமூன் சிறுவர்கள் இருவர் சுவாமிகளின் வாழ்க்கைச் சரிதத்தில் ஒரு முக்கிய சம்பவத்தை சம்பாஷணை மூலம் நடித்துக் காட்டினர்கள்.

ஸ்ரீ சதாசிவ பிரமேந்திர ஆஸ்ரமத்திலும் சுவாமிகளுக்கு
ஒரு வரவேற்புரை வாசித்தளிதகனர்.

ஸ்ரீ சுவாமிகள் புதுக்கோட்டை யில பத்திரிகை நிருபருக்கு
பேட்டி யளித்த விவரமும் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளும்
"தினமணி" பதத்திரிகை வாயிலாக அறிவோம்:

ரிஷிகேசம ஆனந்தகுடீரிலிருந்து
தக்ஷிண தேச யாத்திரைக்கு எழுந்தருளும்,

ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சரஸ்வதி

சுவாமிகளுக்கு புதுகோகோட்டை நகரத்துப்
பக்த ஜனங்கள சமாபபிக்கும

நல்வரவேற்புப் பத்திரிகை

இமயத் தவமணியே!

உடம்புக்கு வைத்தியம் செய்து, பரோபகாரம புரிந்து வைத்திய உத்தியோகத்தைத் துறந்து, ஸந்யாச ஆச்ரமத்தை மேற்கொண்டு கங்கைக் கரையில ரிஷிகேச க்ஷேத்திரத்தில் வந்து அமர்ந்து, உள்ளத்துக்கு வைத்தியம் செய்து, சாது ஜனங்களை சன்மார்க்கத்தில் நடத்திச் செல்லும் திருப்பணி பூண்டிருக்கும் தங்களுக்கும் தங்களுடன் தென்னாட்டு யாத்திரைக்காக வந்திருக்கும் சாதுக்களுக்கும் நல்வரவு கூறுகின்றோம்.

ஸாரஸ்வத ஸார்வபௌம!

நமது பாரத புண்ணிய பூமியில் மஹரிஷிகளும், ஆசார்யபரம்பரைகளும், மகாகவிகளும் ஆரிய பாஷையிலே லோகோபகாரத்தமாக அருளிச் செய்திருக்கும் சாஸ்திர ஜாலங்களை யெல்லாம மூல ரூபத்திலே ஐயம் திரிபறச் சேர்ந்து, தெளிந்த அங்ஙனம் அடைந்த அரும்பொருட் செல்வத்தை உலகம பெறவேண்டும் என்ற கருணையால்

ஆங்கில பாஷையிலே நூற்றுக்கணக்கான புஸ்தகளாக வெளியிட்டிருக்கும் தங்கள் திவ்ய கைங்கரியத்தை உலகமே உணர்ந்து போற்றுவதலால் இத்தனை புண்ணிய மூர்த்தியை எம் நாட்டவர் என்று சொல்லிக் கொள்ளும் பெருமை எமக்கு வாய்த்திருப்பது எமது பாக்கியமே என்று கருதுகிறோம். தங்கள் சத்கோஷ்டிக்கு ஸ்வாகதம் கூறுகின்றோம்.

பக்தசிகாமணியே!!

நாம சங்கீர்த்தனமே. கலியுகத்தில் ஆதமா கடைத்தேற எளிய வழி கண்டு, அதனை எழுததாலும், சொல்லாலும், செயலாலும், நமமவர்க்கு விளக்கும் பணிபூண்டு இருக்கும் தாஸகள் ஆத்ம விக்ய விலாசத்தை அறிந்து போற்றும் பெரியோர்களோடு நாங்களும் சேர்ந்து தங்கள் சாது ஜனமகா சமாஜத்தை இருகரத்துகளு வரவேற்கின்றோம். சேதுயாத்திரை திருப்திகரமாக முடியவும் கங்காதீரத்துக்கு இந்த கோஷ்டி ஸமஸ்த சௌகரியங்களோடும மீண்டு சென்று நம் நாட்டின் சத்வித்யாப் பிரசாரம் செய்யவும் ஸர்வேஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

புதுக்கோட்டை,
3-10-50

புதுக்கோட்டை பகத ஜனங்கள்

—o—

ஸ்ரீமதாத்ரீயணைய
தெய்வநெறிக்கழகம் புதுக்கோட்டை

ஸ்ரீ சுவாமி சிவானந்தஜீ இங்கருக்கு விஜயம் செய்தபோது
ஷை கழகத்தின் சார்பாக சமர்ப்பித்த

வரவேற்பு பத்திரிகை

சுவாமிஜீ

ஷை கழகத்தின ஸ்தாபகரும தலைவருமான தாங்கள மிக்க கருணையுடன் ஹிமாலயத்திலிருந்து இலங்கைவரை யாவரும் உஜ்ஜீவிக்குமபொருட்டு வேதாந்தத்தையும சாஸ்த்தையும் பாராட்டாமல பிறர் நன்மையையே பொருளாக எண்ணி எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கருக்கு வந்து எங்களுக்கு அனுக்கிரகம் செய்திருப்பது எங்கள் பாக்கியமே.

இங்கரில் ஷை கழகத்தின் கிளை ஏற்படுத்தி யிருப்பதும தலைவர் இங்கு விஜயம் செய்திருப்பதும ஒரேசமயமாக மிருப்பதும் பெருமையே. அதன் அபிவிருத்திக்கு சுவாமிஜீ அவர்களின் வருகையே முக்கிய காரணமாக இருக்கிறது. ஷை கழகத்தை தலைவர் எந்த நோக்கத்துடன் ஏற்படுத்தி யிருக்கின்றார்களோ. அவைகளைக் கடைப்பிடித்து நடத்தி வருவதற்கு சுவாமிஜீ அவர்களின் பூர்ண ஆசீர்வாதமே கோருகிறோம்.

மிக்க சிறிதாக ஆரம்பித்திருந்தாலும நாளடைவில் இது விருத்தியாகி ஜனங்களுக்குத் தொண்டுபுரிந்து சேவை செய்து யாவரும் நன்னெறியுடன் வாழ்ந்துவர நாங்கள் முயற்சி செய்கிறோம அவ்வப்போது எங்களுக்கு வழி

காட்டி புதிய புகட்டி புஸ்தகங்கள மூலமாகவும பத்திரிகை கள வாயிலாகவும அன்பு ஊட்டுமபடி மிக்க வணக்கத் துடன் பிரார்த்திக்கிறோம.

சிறு குழந்தை பிசகுகள செய்தாலும பெரியோர் பொருட்படுத்தாமல் நல்வழி புகன்று உய்விக்குமாறு நாம் எல்லாம வல்ல இறைவனுடன் நமது தலைவரையும் பிரார்த் தித்துகொள்வது உசிதமே.

நமமுடன் சுவாமிஜீ அவர்கள தங்கும நேரம் குறுகிய தாக யிருந்தாலும் தரிசனம் கொடுத்து கடாக்ஷம் செய் திருப்பது மிக்க பெரிதே.

நமது தலைவரும் குருவுமான சுவாமிஜீ அவர்கட்கு தீர்க்கமான ஆயுளும திடமான தேக ஆரோக்கியமும் அளிக்கும்படி இறைவனை பிரார்த்திக்கிறோம.

27/3 வடக்கு ராஜவீதி,
புதுக்கோட்டை.
9—10—50

தெய்வநெறிக்கழகம்,
புதுக்கோட்டை.

—o—

ஓம் ஆமென அமீன்

அருள் நிறைந்த

ரிஷிகேச ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி

அவாகளுக்கு

புதுகுகோட்டை நகர மன்றத்தார்

மனமுவந்து அளிக்கும் நல்வரவேற்பு

முனிவர் பெருமானே!

வணக்கம்

வருக. வருக. தங்கள வரவு எங்கள பாக்யம். தங்கள தரிசனம் கிடைத்தற்கு மகிழ்கின்றோம் நலலா ரைக காண்பதுவும் நன்றே நல்லார் குணங்கள் உரைப் பதுவும் நன்றே. நலமிகக நலலா சொல கேட்டலும் நன்றே. தங்களால் இன்று முப்பேறுகளையும் பெற்றுப் பெருமைப்படுகின்றோம.

2 துறவிஙல் உயாந்த துயோரே!

தலைப்பட்டார் தீரதறந்தார மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்—

என்ற மறை மொழிகு இலக்காகத் திகழும் தங்கள் தனிப்பெரும் துறவைப் பாராட்டுகின்றோம். பற்றற்றுப் பரிதி எனை எழுந்து பாரிடை மக்களது மனமயக்கங்களையும் மாசுகளையும கைம்மாறு கருதாது களைந்து வரும் கனிந்த அன்பிற்கு பொது மக்கள் சார்பாக எங்கள் நன்றியை ஏற்று அருளுங்கள்.

3. சேவையில் செலுத்துவிக்கும் செம்மலே !

உலகின் உண்மை ஊழியர்கள் நோடிச சேவைக்கு ஏற்றது என எடுத்துக காட்டும் மக்களது மருத்துவ (வைத்ய) சேவையே தஙகளது வாழ்க்கைத் தொழிலாகவும் பணியாகவுமை பெற்று ஷிளங்கினீர்கள். சேவைச் சிறப்பி னலுமை இனை அருளாலும் துறவேற்று தூய்மைக்குன்றேறி தெய்வக்காட்சி பெற்றீர்கள. யாமபெற்ற இன்டம் பெருக இவ்வையகம்—என்ற பொன்மொழிகதேற்ப மீண்டும் தாஙகள் தஙகள் ஆன்மீக இயபானுபவத்தை விட்டு தனிப் பெருங் கருணையால் தூண்டப் பட்டுத் தாணியில் தவிக்கும் மக்களுக்கு தருநல மற்ற சேவை செய்து துப்பரவும் தூய் மையும் துறவும் பெற வழி காட்ட வருது இருக்கிறீர்கள். உண்மைச் சேவைப் பாதையில் உழைத்து உலகின அடிப் படை உணமை கண்டு தடைகளைத் தாண்டித் தெய்வீக நிலையை அடையத் தூண்டி வழிகாட்டும் தங்கள் பேரரு ளுக்கு இவ்வுலகம் பெரிதுமை கடமைப்பட்டுள்ளது. பேரது மக்கள் சேவையில் ஈடுபட்டு எங்களுக்குத் தூண்டுகோ லாகத் திகழும் தங்களுக்கு எங்கள் நன்றியுமை வணக்கமும் கூறுகின்றோம்.

4. தன்னுயிர் தானறப்பெறற தவசியே !

துன்பமை சுடச சுட நோற்றுச் சுடச் சுடரும் பொன் போல் ஒளி விடும் தங்கள் தெய்வீக தேஜஸைக் காணப் பெற்ற பின்னுமது எங்கள் குற்றங குறைகள் நீஙகித் தாங்கள் காட்டும் நலவழியில் இந்நகர மக்களுமை நாங்களும் வாழ்ந்து வாழ்க்கையின் முடிவான அமர வாழ்வாம் அற வாழ்வை எய்த முனையத் தங்கள் நல்லாசியை அளிததிட வேண்டுகின்றோம

5. சமரச சன்மார்க்க சாந்த மூர்த்தியே !

பலவேறு நிலையிலுள்ள பல சமய மக்களும் கூடி வாழும் இந்நகரில் பல முறைப்பணிகள் ஆற்றுவம, உரிமையும் கடமையும் வாய்ப்பும பெற்றுள்ள நாங்கள் எங்களால் கூடிய அளவு நகரமக்களுக்குப் பணிகளைப புரிந்துவருகிறோம். இன்னும் இயற்ற வேண்டிய வேலைகளோ ஏராளமாக உள. இன்றைய உலக நிலையாலும், நாட்டின் நிலையாலும, நகரின் நிலைமையினாலும நலிவு கொண்டுள்ளோம. நாங்களும், செழிப்பும், சேவையில் செம்மையும சேர்ந்து உழைத்துப்பெற தாங்கள் எங்களை வாழ்த்தி அருள வேண்டுகின்றோம் தங்கள புனித பொன மொழிகளால் எங்களுக்கு நற்போதனைகளையும் உற்சாகத்தையும் ஊட்டும் படியும தாழ்மையுடன தங்களை கேட்டுக்கொள்கிறோம்,

6. வரையாது வழங்குட ஞான வள்ளலே !

உலகை உண்மை வழியில் செலுத்தி வாழ்விக்கும் உத்தமர்கள் பரமபரையில வந்து மக்கள் உடல் மன ஊனங்களைச் சீராக்கி உளத்திற்கு உண்மை ஞானத்தை வரையாது வழங்கும் தாங்கள உடல உறுதியுடனும் ஊக்கமிக்க சீடர்களுடனும் நீடூழி வாழ்ந்து உலகை உய்விக்குமாறு அருளபுரிய இறைவனை வேண்டி வழுத்துகின்றோம.

தங்கள் அனபுள்ள,
புதுக்கோட்டை நகர மன்றத்தார்.

—o—

உ

குருதரிசனம்

(நாடகம்)

குப்புசாமி :—ஆஹா வசந்த சவுந்தரியம இமயமலைக காட்சியைக் கொஞ்சித் தவழ்கிறது. எங்கும் மலர்முகு. ஜிலு ஜிலு என்று மந்தமாருதம் சிவநாதம்பாடுகிறது அதற்கு கங்காநதி ஓங்காரசுருதிபோட்டுப் பாவசமாகப் பாய்கிறது. இயற்கையின் எழிலில அமைதி நிலவுகிறது எங்கே திரும்பினலும் சாதுசங்கம். ரிஷிகேசமே உண்மை யில் பரம சாந்தடளிக்கிறது. ஜபம், பஜனை, சிவத தியானம், சாதுசங்கம இவற்றிலேயே காலங்கழித்து வருவது வாழ்க்கையை புதுப்பிக்கிறது. வேறு எதையும சிந்தையில் கொள்ள நினைத்தாலும் இடம் தரவில்லை. அதிலும இநத கங்கையில நீராடுவதே தனி இன்பம். என்னசெய்யலாம். இவ்வளவையும சிநதிக்கையில் "அடடா நிரமப்படி சநயாசம் கொடுக்க எவரும் எதிர்படவில்லையே. யாரைத தேடி இதைக் கேட்பது" என்ற எணணம் என் மனத்தைத் துண்புறுத்திக்கொண்டே இருக்கிறதே. எவ்வளவோ பிரயாசைப்பட்டு இந்தப் பரம் சுகமான சத் சங்கத்தில் கொண்டுவந்து சேர்த்த பகவானுக்கு இநதக் காரியத்தை செய்து வைப்பது ஒரு பிரமாதமா பார்ப் போம். அதோ யாரோ ஒரு பெரியவர் இங்கு நோக்கி வருவதுபோலத் தெரிகிறதே. ஆஹா? யார் இது! மகா தேஜஸ்வியாகக காண்கிறார். இவரைக் கண்டதும ஒரு மன எழுச்சி உண்டாகிறதே! மனமே அவசரப்படாதே. ஓம் நமசிவாய குருப்யோநம (வணங்குகிறார்.)

சுவாமி விஸ்வானநத சரஸ்வதி :—ஐயா, எழுந்திரும் நீர் மஹா புருஷா உயாநத நிலையை அடைநது உலகில அரிய ஞான சேவை செய்வீர

குப்பு :— ஆஹா! சுவாமி வணக்கம். தாங்கள் யார் எனறு அறிந்துகொள்ள மனம அவாவுகிறது

விஸ்வா :— நான ஸ்ருங்கேரி சங்கர மடத்தைச் சேர்ந்தவன் காசியில வசித்துவருகிறேன். என்னை சுவாமி விஸ்வாநந்த சரஸ்வதி என்பார்கள்.

அது இருக்கட்டும். "குருப்யோநம" என்று திடீ ரென எம்மை நீர் குருவாக வரித்தீரே என் மனத்தை நீர் அறியாமல் அவ்விதம சொன்னது சரியா?

குப்பு :— என் மனத்தில் சரியென்று தோன்றியது. அவவாறு செய்தேன். அது என்ன தவறு?

விஸ்வா :— ஆஹா! என் அனுமதியின்றி இன்னார் என அறியாமல் என்னைக் குருவாக வரித்ததுமன்றி அதில் என்ன தவறு என்றும் உத்தண்டமாகவா கேட்கிறாய், இதோ உன்னை சபித்தே தீறுகிறேன் பார்.

குப்பு :— பெரியோரே! ஒருமுறை தங்களை குருவாக வரித்தபின் பின்வாங்கமாட்டேன். சிஷ்யனை குரு சூட் டொரிக்க பாக்யமல்லவோ செய்திருக்கவேண்டும. தங்கள சிததம என் பாக்யம்.

விஸ்வா ;— (மட மட வென்று சிரித்து) அது இருக கட்டும் உனது பெயர் என்ன?

குப்பு :— குப்புசுவாமி.

விஸ்வா :—உனக்குக் கல்யாணம் ஆனதா?

குப்பு :— அவ்விலங்கில அகப்பட வில்லை.

விஸ்வா :— தாய் தகதையர்?

குப்பு :— தாய் பராசக்தி தந்தை பரமசிவம

விஸ்வா :— எங்கிருந்து வருகிறாய் ?

குப்பு :— சென்னையிலிருந்து.

விஸ்வா :— நேரே அங்கிருந்தா ?

குப்பு :— இல்லை.

விஸ்வா :— பின் ?

குப்பு :— சிங்கப்பூரிலிருந்து.

விஸ்வா :— அப்படியா ? அங்கு என்ன உலவலா ?

குப்பு :—அங்கே டாக்டர் உத்தியோகத்திலிருந்தேன்.

விஸ்வா :— அடடா ! அதை விடுவானேன் ?

குபபு :— உலகம் புளித்தது. அனைத்தும் மாயை எனக கண்டேன். சகலமும் அழியக்கூடியது என்று உணர்ந்தேன். சாவு நிச்சயம் என்று கொண்டேன். ஆகவே சாகா நெறியைக் கடைப்பிடிக்க என்மனம் தீ போல் எரிந்தது. அணி, பணி, வீடு, வாசல், பொருள் அனைதையும் சூறையாடினேன். பல இடங்களில் பல நாடகள படாதபாடு பட்டேன். இங்குற்றேன். தங்கள தரிசிக்கும் பாக்யம கிடைத்தது. எப்படியும் என் ஞானக் கண்ணை திறந்து அருள்புரிதல் வேண்டும். அனைதும் உங்கள பாரம.

விஸ்வா :—அப்படினை ! கவலை யொழித்து கங்கையில் நீராடி என்கூட வா. நான் தங்கியுள்ள இடம் சென்று ஆவன செய்கிறேன்.

குபபு .— தன்யன் ! தன்யன் ! (பாட்டு)

பல்லவி

இரவும் பகலும் உந்தன் சரணலயப்பணியில்
இருந்திடும் வரம் தருவாய் (இரவு)

அனுபல்லவி

கருணைமழை போலென் தாகம் தணிக்கவந்த
தாசர் தயாநிதியே சாந்த குணபதியே (இரவு)

சரணம்

தஞ்சம் புகுந்தவர் நெஞ்சக் கவலைதீர்க்கும்
சமய சஞ்சீவி யாவாய்.
பஞ்சகோசாதீத பரம சூரிய நிலைபார்க்கத்
துணைபுரிவாய்
அஞ்சுமடங்கி என்னுள் அறிவாயிருந்திடும்
ஆனந்தம் தந்தருள் ஞான சிகாமணியே. (இரவு)

(இஃது ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தரின் தென் இந்திய சுற்றுப பிரயாணத்தின்பொழுது புதுக்கோட்டையில் சுவாமிஜியின் சந்நிதானத்தில் இரு சிறுவர்கள் நடித்த சம்பாஷணை)

—o—

ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்திர ஆஸ்ரமம்

அய்யர்குளம வடகரை, புதுக்கோட்டை.

ஸ்ரீ சிவானந்த குரு மகராஜுக்கு அளித்த

வாழ்த்துப் பத்திரம்

காம்ரபர்ணி தீரா தமிழ்நாட்டு வீரா
நாம பஜன் சூரா ஞான அதிகாரா
குப்புசாமி நாமனே கூர்புத்தி காமனே
அப்பைய தீக்ஷிதர் வம்சனே ஆத்மஞான ஹம்சமே
பத்தமடையில் பிறந்தவா பாபுகழச் சிறந்தவா
வைத்யகல்வி கற்றவா மலையாநாடு உற்றவா
நத்தும் சுகம் தருதவா மெத்தகருணைகொண்டவா
நிக்கிய சுகம் கண்டையா நிலையைவிட்டு வந்ததேயே
சுற்றியாத்ரை செய்தனை சுகத்தைக்காண வேண்டினை
துக்கநிவிர்த்தி வருதா துறவி வேடம் பூண்டையே
இமயமலை சார்ந்தனை ஏற்க தபசு சாதனை
நியமம் தவராதிருந்தனை நிலைத்த சுகம் பெற்றனை
பெற்ற சுகம் பாக்யனே மற்ற மக்கள் வாழ்கவே
''உற்ற சுகம் உம்முளே'' என்று உலகை எழுப்பினை
கொட்டி முழக்கம் செய்தனை கோடி சீடர் கூடவே
ரிஷீகேச கேஷத்ரி சத்வகுண பாத்ரி
ஹடயோக யாத்ரி தேகதிட காத்ரி
மகாமந்த்ர கோஷி மக்கள் பக்தி போஷி
சுகானந்த ரூபி சுத்த அன்பு சோபி
தெய்வ கழகம் நாட்ட மெய்யில் கருத்தைக் கூட்ட
உய்யும் வகையைக் காட்ட புகழ்மாலையைச் சூட்ட
சிவானந்த நாமா தெய்வநெறி காமா
பவார்ணவ நாவா பரமப்பிரேம சீமா
வாழி வாழி யோகி வாழி வாழி சீலர்
வாழி வாழி கழகம் வாழி வாழி உலகம்

ஓம்

தினசரி காலை மாலை பஜனை

ஸ்ரீ நாராயண	ஹரிநாராயண
ஜயநாராயண	நாராயண
லட்சுமி நாராயண்கி	ஜேய்
சிவாய நம ஓம்	சிவாய நம ·
சிவாய நம ஓம்	நம : சிவாய
உமாபதி சஙகர்கி	ஜேய்
வாணி சரஸ்வதி	வாக் தேவி
பசுபதி பாரதி	மாமபாஹி
சரஸ்வதி மகாமாயிக்கு	ஜேய்
ஸ்ரீராம் ஜயராம்	ஜயஜயராம் ஓம
ஸ்ரீராம் ஜயராம	ஜயஜயராம
சீதாபதி ராமச்சந்தர்கி	ஜேய்
ஜயகுரு சிவகுரு	ஹரிகுரு ராம்
ஜகத்குரு பரமகுரு	ஸத்குருசயராம
ஸத்குரு மகராஜஜிக்கு	ஜேய்
ஓம்சக்தி ஓம சகதி	ஓம் சகதி ஓம
ஆதி சக்தி மஹாசக்தி	பராசகதி ஓம்
சகதி மஹாமாயிககு	ஜேய்
ஓம நமோபகவதே	வாஸுதேவாய
ஓம் நமோபகவதே	நாராயணய

ருக்மணி சத்யபாமா ராதாகிருஷ்ண மூர்த்திக்கு ஜேய்

மஹாமந்திரம்

ஹரே ராம ஹரே ராம	ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண	
	க்ருஷ்ணக்ருஷ்ண ஹரே ஹரே.

ஆஸ்ரமத்தில் தினசரி மாலை சுமார் 5 மணி முதல் 6-30 வரை சதகாலட்சேபம் நடைபெறும்.

அனபர்கள வருக ஆனநதம் அடைக.

K. R. சஙகர அய்யர்
காரியதரிசி

K. ரங்கசுவாமி அய்யர்
தலைவர்

ஓம்

ரிஷிகேச சுவாமிகள் சிவானந்த சரஸ்வதி மகராஜ்

அவர்கட்கு 9—10—50 அன்று புதுககோட்டையில்

பிருந்தாதேவி இயற்றி அளித்த பாமாலை

அறிவி னாற்றே ! ஆனந்தப் பேறே !
ஐமபுலனும் வென்ற நிறைவே !
நெறி நின்ற திருவே ! நோய்டையின் வருவே !
நினைவார்க் கருளும் குருவே !
குறிப்புடைக் குணமே ! கோதிலா ஞானமே !
கோவே ! குவலயப் பெருவானமே !
சிறியோர்க் கிரங்கும் செழுஞ்சுடரே !
சிவானந்தப் பாரசே போற்றி !
இமயத்தின் எல்லை சேர்ந்தாய் போற்றி !
சமயத்தின் ஒற்றுமை கண்டாய் போற்றி !
நேயத்தே நின்றருள பெற்றாய் போற்றி !
மாயப் பிறவிதனை யறுத்தாய் போற்றி !
ஓங்காரத் துள்ளுருகினாய் போற்றி !
ஆங்காரத்தை வென்றடக்கினாய் போற்றி !
ரீங்காரத் துள்ளினிதமர்ந்தாய் போற்றி !
தீங்கிலா பிருந்தை பணியும் சிவானந்தமே !
போற்றி போற்றி போற்றி !

சி. பிருந்தாதேவி

வந்தே மாதரம் ஜெய்ஹிந்த்

சமதர்ம சங்கம்

பிச்சத்தாம் பட்டி

புதுக்கோட்டை, ரயிலேவஸ்டேஷன்

தேதி 9—10—50

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

பிச்சத்தாம்பட்டி சமதர்ம சங்கத்தில்

சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களுக்கு

வாழ்த்துரை

நேர்மையும், அன்பும், அஹிம்சையும் சேர்ந்தொளிர் ஐயா,

வருக, வருக, தங்கள வரவு நல்வரவாகுக. தங்கள், பல அலுவலகளின் மிகுதியிலும் எங்கள் ஊர் வேண்டு கோளுக்கிரங்கி நகர மக்களுக்கு தெரிசனம் தந்துள்ளமைக்கு மகிழ்கின்றோம்.

எங்கள் பிச்சத்தாம் பட்டியில் உள்ள விவசாய மக்களுக்கும், பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் தெரிசனம் கொடுத்ததிற்கு மகிழ்கின்றோம். எங்கள் ஊரை எப்பொழுதும் தங்கள் நினைப்பாக இருக்க வேண்டுகிறோம்.

எங்கள் நம்பிக்கை காந்திஜி வழிப்படி வெற்றிபெற தாகங்கள் எல்லா நலன்களையுட எய்தி இனிது வாழ, வாழ்த்திபடும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

பிச்சத்தாம்பட்டி சமதர்ம சங்கத்தார்கள்

ஆண்டவனிடம் நம்பிக்கை வையுங்கள்

மகளுகு சுவாமி சிவானந்தர் செய்தி

காரைக்குடி அக். 10—சுவாமி சிவானந்த சரஸ்வதியை "தினமணி" நிருபர் பேட்டிகண்டபொழுது இந்திய மகளுகாக கீழ்கண்ட செய்தியொன்றை யளித்தார். ஆண்டவனிடம் உறுதியான நம்பிக்கை வைகவேண்டும. இந்த நம்பிக்கை யில்லாமல் மனிதன் விஞ்ஞானத்திற்கு அடிமையாகி விட்டால மனிதனுக்கு ஏற்படும் அல்லல்கள் யாவற்றிற்கும் விஞ்ஞானமே காரணமாகிவிடுகிறது. சர்வ வல்லமையுள்ள ஆண்டவனிடம் நம்பிக்கை குறைந்துவிட்டதால் மனிதன் சுலபமாக மிருகத் தன்மையை அடைந்து சுயநலம், காமம், பொறுமை, பல்காரம் முதலியன புரிய ஆளாகின்றான். ஒவ்வொரு வரும் சுய அறிவைக்கொண்டு காண வேண்டும். சுய அறிவால் ஜயம் பெறலாம். சுய அறிவை நம்பிக்கை, பக்தி, இதய சுத்தி முதலியவற்றால் அபிவிருத்தி செய்யலாம். இதயசுத்தியானது பக்தி, பிரார்த்தனை, ஜபம், கீர்த்தனம் புனித நூல்களைப் படித்தல் எல்லாவற்றிலும் முக்கியமாக மனித சமூகத்திற்கு தன்னலமற்ற சேவை செய்தல் இவைகளால் பெற முடியும். எல்லோருக்கும் சேவை; எல்லாரிடமும் அன்பு இவற்றால் எல்லோரிடமும் ஆண்டவனைக் காணலாம் இதனால் வாழ்க்கையிலேயே வெற்றி மட்டுமலலாது சித்த சுத்தியையும பிறகு ஞானத்தையும் பெறமுடியும். இத்தகைய ஆடவரும் பெண்டிரும் அடங்கிய சமூகம் முன்னேற்றமும் பெருமையும் அடையும். இந்த லட்சியத்தை நோக்கித்தான் பாரதநாடு செல்ல வேண்டும். பண்டைய ஞானிகளின் செய்தியை பாரத தேசம் மனத்திற்கொண்டு இப்பொழுது உலகிற்கே அறிவிக்க வேண்டியது கடமையாகும்.

ஆண்டவன் நாமஸ்மரணையே ஐசுவரியம் ஆகும்

செட்டிநாட்டில் சுவாமி சிவானந்தர் பிரசங்கம்

காரைக்குடி, அக். 10—ரிஷிகேசம் சுவாமி சிவானந்த சரஸ்வதி தமது யாத்ரா மண்டலியுடன் புதுக்கோட்டையிலிருந்து அரிமளம் வழியாக காலுகாத்தான் வந்து சேர்ந்தார் அங்கே காலுகாத்தான ஸ்ரீ வெ. வீர. நாகப்பச் செட்டியார் எம். எல். ஸி. காரைகுடி டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்லூரிகரஸ்பாண்டெண்ட் ஸ்ரீ கே. வீ. ஏ. எல். எம். ராமநாதன செட்டியார் ஆகியோர் சுவாமிஜியை வரவேற்றனர்.

இன்று காலை காலுகாத்தான் பொதுக்கூட்டத்தில் சுவாமிஜி கூறியதாவது ; சிவபெருமான் என்றால் ஸ்ரீ ராமனுக்கும், ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் வேற்றுமைபபட்டவரல்ல மூடப் பக்தியை விட்டுவிட்டு கிருஷ்ணன், ராமன், விஷ்ணு· தேவி இவர்களெல்லோரையும் சமமாக நினைத்து பக்தி கொள்ளவேண்டும். எல்லா ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர், முஸ்லிம்கள் உட்பட எல்லோரும் சென்றால்தான் சிவபெருமானிடம் உண்மையான பக்தியை வளர்க்க முடியும்.

ஆண்டவனது ஸ்மரணையே உண்மை ஐஸ்வரியமாகும். மற்றவை எல்லாம் நிலைத்து நிற்கக்கூடியவையல்ல. தோட்டம் தரவு உண்மையான ஐஸ்வர்யமாகாது.

ஏராளமான பணத்தை சம்பாதித்தாலும் தான தருமங்களை நிறையச் செய்யவேண்டும். ஏழைகள்பொருட்டு சேவை செய்யவேண்டும.

அதிகாலை 4 மணிக்கு எழுந்து தியானம செய்யவேண்டும். ஆண்டவனின் நாம ஜபம் உங்களிடமுள்ள ஆதம சக்தியை கிளப்பும். ஆண்டவனது நாமஸ்மரணைசெய்து உலகில் அன்பை வளருங்கள். கலப்பறா பேரின்பத்தையும், மனச்சாந்தியையும அனுபவிப்பீர்கள்.

கீதையைக் கிரமமாகப் படித்து அதில உட்கியுள்ள சிறந்த கருத்துக்களை அனுஷ்டானத்திற்கு கொண்டு வாருங்கள.

ஜபம் கீர்த்தனை முதலியன செய்தால் சுலபமாக தெய்வ சாயுஜ்யமடைய முடியும் ஆண்டவன உங்களுக்கு ஆரோக்கியம, நீண்ட ஆயுள் அமைதி வெற்றி பேரின்பத்தை அருள்புரிவாராக.

இராமேசுவரம்

பின்னர் யாத்திரா மண்டலி தமது யாத்திரையின் மிக முக்கியமான கட்டமாகிய இராமேசுவரத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கு சுவாமிகளை ஆலய நிர்வாகிகளும், பொது மக்களும் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்ற காட்சி கண் கொள்ளாததாக இருந்தது.

நமோநாராயணாய

பாரதத தாயின அருந்தவப் புதல்வரும் தென்னாட்டு திலக
முமான மஹாசன்னிதானம மண்டலேஸ்வர
ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தஜீ மஹாராஜ அவர்கட்கு
இராமேஸ்வரம் வாசிகள அன்புடன் வாசித்தளித்த
நல்வரவேற்பு

உபசார வாழ்த்துப் பத்திரம்

பாரதத தாயின் தவப் புதல்வ வருக, வருக. நாட்டு மக்களின் நலம கருதி தவமிருக்கும யோகீஸ்வரரே இப் பாரத நாடும உலக மகளும சிறபபுற்று வாழ ஹிமாலயத்தில் தவமிருந்து வரும தங்கள வருகை நல்வரவாகுக.

தளர்ந்தவயதில் தன்நாட்டு மக்கள் பால தயை கொண்டு ஆசீர்வதிக்க சுற்றுப் பிரயாணம் செய்யும் எங்களன்புள்ள மஹாத்மாவே!

இநது மதம் சிறப்புற்று ஓஙகவும் உலக மக்கள் சுபிக்ஷமாக வாழவும் அல்லும் பகலும சலியாது மக்களுக்கு வழி காட்டியாக தாஙகள் பாரத நாட்டின் பல பாகங்களில் சுற்றுப் பிரயாணம செய்து மக்களை விழிப்புறச் செய்யும் தஙகள மேனாபிஷேடம நிறைவேறவும், தாங்கள் கண்ட தெய்வநெறிக கழகம மேன்மேலும் திகழவும், தங்கள் கொளகைப் பல பாகங்களில் பரவவும, அம்பிகை பரமேஸ்வரி பருவதாவர்த்தனியும சாக்ஷாத ராமநாதனும் தங்கள் பால் அருள பிராாத்திக்கிறேம்.

இநத பாரத பூமியின் புண்ணிய விசேஷங்களை பல மஹரிஷிகளால வேத, சாஸ்திர, இதிகாச புராணங்களில்

கூறப்பட்டிருக்கும அரிய வேதாந்த தத்துவங்களை பாமர மக்கள அறிந்து நன்னெறியைக் கடைபிடித்து ஒழுகவும, மேல்நாட்டார்கள அறிந்து கண்டு வியக்கவும, யோகாப்பியாசத்தை, தேகாப்பியாசமாக நினைக்காமல, மக்கள் இறைவனடியை கடைபிடிக்கும், மார்க்கமாக உபதேசித்தும, லௌகீகதர்மத்தை அனுசரித்து, எளியநடையில் ஞானதத்துவத்தை போதித்து ஞானவெளளம பெருகெடுக்கச் செய்யும் பணியில் இந்தியாவின் சிகரமான மேருவில நிஷ்டிக்கத்தில் வாழ்ந்து வரும மஹரிஷியே!

தங்கள ராமேஸ்வரம விஜயத்தால் எங்கள வாழ்க்கை புதிய சகாப்தமாக ஜ்வளிக்கவும் தங்களின் பொன் மொழிகளால் மனித வாகத்தினர் கடைதேறும் மார்கத்தை எங்களுக்கு உபதேசித்து ஆசீர்வதிக்க பிரார்திக்கிறோம.

இராமேஸ்வரம இங்ஙனம்

10–10–50 இராமேஸ்வர மஹர ஜனங்கள.

இராமேஸ்வர நகரம் வைகுண்டம் போன்று விளங்கிற்று: மலர் மாலைகளால் அழகு செய்யப்பட்ட பல்லக்கில் ஸ்ரீ சிவானந்த மகரிஷி எழுந்தருளிய தோற்றம் பார்க்கப் பரமானந்தமாக இருந்தது.

முதன் முதல் ஸ்டேஷனிலேயே சுத்சங்கம் ஒன்று இனிமையாக நடந்தது. மறுநாள் தக்கோரத்தில் சுவாமிகள் ஸ்ரீ ராமலிங்கேசுவர தரிசனத்தை நாடி ஆலயம் புக்கனர். உடன் கொண்டு வந்த புனிதக் கங்கை நீரால் அபிஷேகம் செய்யப் பெற்றார் இறைவன்.

தவச் செல்வராம சிவானந்த முனிவர் இராமலிங்கேசுரரை மனமொழி மெய்களால் வழுத்தி மெய்மறந்த காட்சி அனைவர் மனத்தையும ஈர்த்துச் சென்று இறையருளின்

பாலாக்கியது. பூசனை முடிந்தவுடன் புனிதா ஆற்றிய சங்கீத சத்சபகதனில் எல்லோரும கலந்து பரவசமுற்றனர்.

அன்றை மண்டலி இராமேசுரத்திலிருந்து தனுஷ் கோடி சென்றது.

தனுஷகோடியில் வரவேற்புக் குழுவினர் பூரண கும்பத் துடன தவமுனிவரை வரவேற்றனர். அவர்கள் செய்த முன்னேற்பாடுகளனைத்தும கீழக்கண்ட அறிக்கையிற் காண லாம.

ஓம

ஸ்ரீ சிவானந்தா யாத்ரா வரவேற்புக் குழுவினர்

தனுஷ்கோடி

1 மண்டலேஸ்வரர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி ஹிமயமலைச சாரலிச்சாரந்த ரிஷிகேசத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் தலைமை தெயவ நெறிக் கழகத்தின் தனிப் பெரும ஸ்தாபகர்.

2. தன் நலந் துறந்து மானிட ஜாதியின் மேம்பாட் டுக்காகவே உழைத்துவரும் உத்தமா. சத்தியம, தயாளம், பரோபகார சிந்தை, பிறருககு இன்ன செய்யாமை, இன்ன செய்தாரையும் அவர் நாண நன்னயம் செய்துவிடல், தொணடு, சத்தியம், புலனடகம், நன்னெறி இவற்றை தன வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டு நடைமுறையில் அனுஷ்டித்தும அவ்வப்பொழுது புஸ்தகங்கள், சஞ்சிகை கள, துண்டுப் பிரசுரங்கள் எழுதியும், ஆழ்ந்த கருத்துடைய பிரசஙகங்கள் ஆக்காற்று நிகழ்த்தியும, மனித சமுதாயம் உய்வான்வேண்டி ஆற்றிவரும் சீரிய தொண்டினை ஆத்மீகத் துறையில் ஈடுபட்டவருமின்றி மாறுபட்டவரும் ஆவலோடு

எதிர்நோக்கி வரவேற்கின்றனர். இதனையாம அறியும் பொழுது புளகாங்கிதமடைகின்றோம்.

3. தீர்க்கதரிசியான சுவாமிகளையும் அவாகளது, குழுவினரையும, வரவேற்று, உபசரிதது, அவர்கள் திருவாய் மலர்ந்தருளுமு அருள்மொழிகளையும் அன்புறச் செவி மடுதது உயவோமாக.

4. யாத்ரா மணடலி 1950ம் வருடம் அக்டோபர் மாதம் 11ந தேதி புதன்கிழமை சுமார 11-55 மணிக்கு கணுக்கோடி வநது சேரும். மகரிஷி சிவானநத சரஸ்வ திகு பூரண கும்பத்துடன் வரவேற்பளிக்கப்படும்.

5. யாத்ரா மண்டலி சில மணி நேரம கணுகோடி யில் தஙகி அன்று சாயங்காலமே கப்பலில இலங்ககைகுப் பிரயாணமாவார்கள். மண்டலி இலங்கைப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு 14-10-50 சனிக்கிழமை திரும்புவார் கள். அன்று மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சுவாமிகள் உபந்நியாசம நிகழ்த்துவார்கள. அன்பர்கள் அனைவரும் இவண ஏகி, சுவாமிகளின் அருள் மொழிகளைச் செவிமடுதது பயனுற வேண்டுகின்றோம். பினபு அன்று சாயநதிரமே 6-25 ரெயிலவண்டியில் மதுரைக்கு பிரயாண மாவாகள.

6. கணுக்கோடி, இராமேஸ்வரம், பாம்பன், மண்ட பம் முதலிய பிராநதியங்களில வாழும மகாஜனஙகள் இந்த அருமைபான சநதர்ப்பத்தைப பயன்படுததிக்கொண்டு இமமஹானை நேரில் தரிசிப்பதோடு அவர்களுடைய ஆசியை யும பெற்று உய்ய வேணடுகின்றோம்.

7 சுவாமிகளின் வருகைக்கான செலவினத்திற்குப் பொருளுதவி செய்வதுடன் கணுக்கோடி இரயிலவே

ஸ்டேஷனில் திரளாக வந்திருந்து ஆர்வம் கலந்த ஒத்துழைப்பையும் தந்து சிறப்பித்துப் பயனுற வேண்டுகின்றோம்.

தனுஷ்கோடி
5—10—50

V. நாராயணசாமி நாயுடு,
காரியதரிசி,
வரவேற்புக் குழுவினர்.

இங்குள்ள தெய்வநெறிக கழகக் கிளைக்கும் சுவாமிகள் விஜயம செய்தபின் அன்று மாலையே (11-10-50) கப்பலேறி கடலை கடந்து தலைமன்னார் சென்றடைந்தார்.

தலைமன்னரிலும் இமாசல முனிவருக்கு அதிவிமரிசையான வரவேற்பு நடந்தது. அன்பர்கள் அளித்த உபசாரத்தை ஏறறுக்கொண்டு அனைவருக்கும் ஆசி வழஙகி அன்றிரவில் தாளை மண்டபிக்காக ஏற்பாடு செய்திருந்த ஸ்பெஷல வண்டி மூலம் புறப்பட்டு அக்டோபர 12ந் தேதி காலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொழும்பில் பல மாதங்கள முன்னிருந்தே நடந்து வரலான வரவேற்பு ஏற்பாடுகளையும பத்திரிகை அறிக்கைகளையும ஒரு சிறிது காணுவோம.

ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் இலங்கை விஜயம்

அக்டோபர் 12, காலை 8 மணி :- கொழுமபுக் கோட்டை ஸ்டேஷனில் தலைமன்னார புகை ரத மார்க்கம் வந்து சேருதல்.

3-00 பி. ப. :—கொழும்பு நகர சபை வரவேற்பு.

4-15 ,, :—இலஙகை சர்வகலாசாலை இந்து மாணவர் சங்கத்தின ஆதரவில் பிராந்தினை கூட்டம்.

5-30 ,, :—கொழும்பு நகர சபை மண்டபத்தில் பொது வரவேற்பு.

7-30 பி.ப. .— வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண மடகதில் பிரார்த்தகனைக் கூட்டம்.

அக்டோபர் 13, 7-30 மு.ப. :—கொச்சிக் கடை தமபையா சதகிரத்தில் பிரார்த்தனைக் கூட்டம்.

10-30 மு. ப —சைவமங்கையர் கழக மண்டபத்தில் உபந்நியாசம்.

4-30 பி.ப.—கொழுமட விவேகானந்த சபையினர் வரவேறபு.

7-00 ,, தலைமன்னர் புகைரத மார்க்கம் புறப்படுதல்.

இந்த வைபவங்கள் நடக்கும் மண்டபங்களிலெல்லாம் போதிய இடவசதியில்லாதபடியால அன்பர்கள் சுவாமியின் தரிசனத்தைப் பலவிடங்களில் பெற விரும்பாது தங்கட்கு வசதியான ஒரு இடத்தில மாத்திரம பெறுவதற்கு குறித்த சபையினருடன் கலந்து ஒழுஙகு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கோட்டை ஸ்டேஷனிலும் அதன் அருகிலுள்ள பாதைகளிலும் சுவாமியை வரவேறபதற்கு யாவரும் அன்புடன அழைக்கப்படுகின்றனர்.

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெறும் பொது வரவேற்புக கூட்டத்தில் பிரவேசச் சீட்டு பெற்றவர்களுக்கு மாத்திரம், இடவசதி யுண்டு. அச்சீட்டுகளை வரவேற்புச சபையின் காரியதரிசிக்கு கீழ்க்கண்ட விலாசப்படி எழுதிப பெறலாம. உளளே இடமின்மையால், நகர சபை மணடபத்தின் வெளிமுற்றத்தில் நிற்கும் அனபர்கள் சுவாமியின் தரிசனம் பெறுவதற்கும் அவரின் உபதேசத்தைக் கேட்பதற்கும் பிரததியேக ஒழுஙகுகள செய்யப்படும்.

60-டீன் பிளேஸ், கொழும்பு 3.

சுவாமி சிவானந்தாவுக்கு வரவேற்பு

விசேஷக் கமிட்டி நியமனம்

கொழும்பு, ஜூலை. 1 ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சிவானந்தாவை வரவேற்பதற்கான ஒழுங்குகளைச் செய்யும் பொருட்டு ஹிந்துக்களடங்கிய விசேஷக் கமிட்டியொன்று கொழும்பு விவேகானந்த சபை நிர்வாக சபையால தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாபக் கமிட்டியில் இன்னும் அதிக அங்கத்தினர்களும் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா, ஸ்ரீமதி எல். நல்லநாதன் ஸ்ரீ கே. ஆளவாப் பிள்ளை, ஸ்ரீ எஸ். சிவசுப்பிரமணியம், ஸ்ரீ பி. முத்துலிங்க சுவாமி, டாக்டர் டி. நல்லநாதன், டாக்டர் ராஜதுரைரத்னம, ஸ்ரீ எம எஸ். திருவிளங்கம், ஸ்ரீ கே. குமார வேலு (எம். பி) ஸ்ரீ டி. மயில்வாகனம், ஸ்ரீ ஏ. சுப்பிரமணியம, ஸ்ரீ வி. கவமணி, ஸ்ரீ என். முத்தையா, ஸ்ரீ கே. ராமசந்திரன் ஆகியோர கமிட்டி அங்கத்தினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப வரவேற்புக் கழகத்தின் முதற் கூட்டம திங்களன்று மாலை சைவ மங்கையர் கழகமண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

—o—

தூய அறிவினுல்தான் துயரை அழிக்கலாம்

(சுவாமி சிவானந்தா சரஸ்வதி)

ஸ்ரீ சுவாமி சிவானந்த மஹராஜ் தமது மண்டலீகரு டன் ரிஷிகேசத்திலிருந்து இராமேஸ்வரம்வரை சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார்கள். செப்டம்பர் 9ந் தேதி புறப்படுகிறார்கள். சீரிய ஆத்மீக-தத்துவத் தைப பரபபி உலக மக்கள் சாந்தியோடு சுபீட்சத்தைப் பெறவேண்டி இப்புனித பிரயாணத்தை தொடங்கு கிறார்கள். கொழும்புக்கு அக்டோபர் 12ந தேதி விஜ யம்செய்ய ஒழுங்குகள் நடைபெறுகின்றன. சுவாமிஜி குருஞகல சைவ மகாசபையின் 20வது ஆண்டு நிறைவு விழாவுக்கு கீழ்க்கண்ட ஆசிச் செய்தியை அனுப்பியுளளார்.

இறைவனின் அருட் குழந்தைகளே!

ஆழ்ந்த ஞான ஊற்றிலிருந்து தான் வாழ்க்கையின்பம் பிறக்கிறது; மனிதன் தன் தெய்வாம்சத்தை உணருகிறான் இறை மாட்சியை அடைகிறான்.

அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருப்பவனுக்கு 'இவ்வுலகமு மில்லை, அவ்வுலகமுமில்லை.' நிலைதளரும்பாத உள்ளத்தின் அமைதியும் அவனுக்குக் கிட்டாது; இகபர சுகங்களை அஞ் ஞானி அனுபவிக்க முடியாது.

தொழில நுட்பத் துறைகளிலும் ரஸாயன ஆராய்ச்சி களிலுமே முன்னேற்றமடைந்த இன்றைய மனிதன், தனது மூதாதையர்களைவிடத் தான் அறிவில் சிறந்தவனுகவும் நாகரிகத்தில உயர்ந்தவனுகவும் மார்புதட்டி வீம்புபேசு கிறான். ஆனல் இன்றைய மனிதனின் விஞ்ஞான அறிவு மூதாச்சியானது, மக்களினத்தைப் பூண்டோடு அழித்து விடக் கங்கணம கட்டியுள்ளதாகவே படுகிறது.

இன்றைய மனிதனின் பழிப்புக் கிடமான மூதாதையர்களோ, இயற்கையோடியந்த வாழ்வு நடாத்தினர்கள்; மனிதத் தன்மையுடன் வாழ்ந்ததால் தெய்வத் தன்மையை அவர்களுடைய வாழ்க்கை பிரதிபலித்தது. இன்றைய மனிதன் அசுரதன்மையுடன் நாச லீலைகள் புரிவதில் அக்கறை காண்பிக்கிறான்.

புறவுலக மோகத்தில் மனிதன் இன்று மயங்கி 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்று போதை யுற்றுத திரிவதிலேதான் உலகத்தில் இத்தனை குழப்பமும நிலவுகிறது.

உலோகாயத விஷயங்களிலும அன்றாட வாழ்க்கை வர்த்தமானங்களிலும் சிந்தனையைச் சிதறவிட்டு, தூய அறிவின் அன்புமார்க்கத்தினின்றும் இன்றைய மனிதன் பிறழ்ந்துவிட்டான். சுயமாக எழும் சிந்தனை ஊற்றை செயற்கை முறையான வாழ்க்கையிலுல் உளளே அடங்கியிருக்கும்படி செய்துவிட்டான். சிந்தனை ஊற்று தடைப்படடு, தூய அறிவின் பிரகாசம் மங்கியதும புன்பிணக்குகளும், இன்னல்களும், குழப்பங்களுமத தலைதூக்க ஆரம்பித்துவிட்டன.

அணுகுண்டு, ஹைட்ரஜன்குண்டு ஆகிய ஊழிகால ஆயுதங்களைக கண்டு பீதியடைந்த மக்களின் அகவுலக அந்தகாரத்தில் ஒளிர்விடும் துருவ நட்சத்திரம்போல் சமய கலாச்சார ஸ்தாபனங்களும் சபைகளும் திகழ்கின்றன. அவதியுறும் உங்களுக்கு ஆறுதலையளிக்கின்றன; வாண்ட பாலவனம் போன்ற உள்ளங்களில் பாலவனச் சோலைகளாக விளங்குகின்றன. ப்ரஹ்மஞான உபதேச மூலம் இச்சமய

ஸ்தாபனங்கள் மக்களின் மனதில் நம்பிக்கையையும் சாந்தத்தையும் வளர்க்கின்றன. அண்ட சராசரங்கள் அனைத்தினையும் ஊடுருவி நிறைகும தனிப்பெரும சக்தியே நம்முடைய ஆதாரப பொருளென்று போதிகினறன.

இந்து தாமத்தைப் பரப்புங்கள்

உங்களுடைய சைவ மகாசபை ஆற்றிவரும பலவகையான பணிகள் என்னுளளதைதக் கவர்ந்துவிட்டன. அளப்பரிய ஆனந்தமடைகிறேன். வீர புருஷர்களே! வீறு கொண்டு எழுஙகள! உயரிய லட்சியஙகளை உன்னிப் பிடியுங்கள்! சக்தியின் நிலைக்களனை விளங்குஙகள்! 20வது ஆணடு நிறைவு விழாவைக் கொணடாடும இப்புனித தினமமென்மேலும் இநது தர்மத்தைப் பரபபுவதற்கான ஊக்கதையும உழைப்பையும் உங்களுக்கு அருளட்டும்.

சிறிய அணு உட்பட சகலகோடி சீவராசிகளும, அசேதனப பொருட்களாகிய கல்லும மண்ணும் இறைவனின இதயத் துடிப்பைப் பிரதிபலிககின்றன. நீங்களும் அதே சக்தியிலைல்தான சூழப்பட்டு இருககிறீர்கள; அநத சக்தி பிரவாகத்தின் சிறு குமிழிகளே நீங்கள.

இறைவனை உணாருது இறைவாழ்க்கை நடத்துவதே வாழ்கையின் நோக்கமாகும்.

ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள்; தியானம் செய்யுங்கள்; வேத புராணங்களை ஓதுங்கள். தூய உள்ளம நிர்மலமான இதயம, தன்னலமற்ற சேவை ஆகியவை மூலமே இறை இன்பத்தில வாழலாம்.

நேர்மையாக இருங்கள்; அஞ்ஞானத்தை எதிர்த்துப் போராடுங்கள; தியானம் பண்ணுஙகள்; உய்த்துணருங்கள்; தர்மத்தைப் பரப்பும் நிலையஙகளாகப் பிரகாசியுங்கள்

"உங்களது வாழ்நாளை இன்புறச் செய்வதே எனது நோக்கம்"

—சுவாமி சிவானந்தர்

இமயமலையிலிருந்து இலங்கை வரும் தபோதனர்
பூரீ சிவானந்தாவின் அரிய சேவை
(கே. ராமச்சந்திரன்)

பதினைந்தாம் நூற்றாண்டில் வடநாட்டில் வேதாந்தப் பணியில் தலை சிறந்து விளங்கியவர் சதானந்த யோகீந்தராவர். இந்த மகான் சங்கரர் நிறுவிய சிருங்கேரி சாரதா என்ற மடத்தைச் சேர்ந்தவர். இவர் எழுதிய 'வேதாந்த சாரம்' என்னும் நூல், மிகவும் அரியதொன்றாகும். சங்கர பத்மபாதர், ஹஸ்தாமலிகர், சுரேஸ்வராச்சாரியார் முதலிய பெரியார்கள் வரைந்துகுவித்த நூல்களெல்லாவற்றிலு முள்ள கருத்துக்களை வேதாந்தகேசரி எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. 'சுபோதினி' 'அத்வைதசித்தி' 'பிரம்மானந்தியம்' முதலியவைகள் இதன் வழி நூல்களாகும். நரசிம்மசரஸ்வதி, மதுசூதன சரஸ்வதி, பிரம்மானந்த சரஸ்வதி ஆகியோர்களும் இதே குரு பரம்பரையைச் சேர்ந்தவர்களே.

இவர்களெல்லாருஞ் சேர்ந்து வெவ்வேறு காலத்தில் செய்த வேதாந்தப் பிரசாரத்தை ஒரே காலத்தில் தன்னந் தனியாய் பதினைரும் நூற்றாண்டில் செய்து முடித்தவர் அப்பையதீட்சிதர் வேதாந்த கேசரியாய் விளங்கியதோடு நின்றுவிடாது, சிவாத்வைத செல்வராயும் சித்தாந்த சரபமாயும் சிறப்புற்று, சைவ-வைஷ்ணவ சண்டைகட்கு அற்புத சித்தியால் சமாதானங் காட்டி வேதாந்தமே சித்தாந்தம்

என்னும் இரு பெரிய நதிகளுக்கிடையே அழிக்க முடியாத பாலத்தை அமைத்துச் சமாசங் கண்டவர இநத அரிய சிவ பக்தரேயாம். அவர் அருளிய 'சதுர் மத சாரசஙகிரத் தின்' அருங கருத்துக்களை தாயுமானர் பாடல்களிலும் அருட்பிரகாச வள்ளலாரின் மகா தேவமாலையிலும் பரக்கக் காணலாம். அப்பைய தீட்சிதர் அஸ்திவாரம போட்டெ ழுப்பின சமரச நெறிக் கோட்டைக்கு கோபுரங்கள் கட்டிய பெருமை பிந்திய இரு மகாத்மாகளைச் சேர்ந்ததாகும் அப்பைய தீட்சிதரின் ஐடந்தி தினம் காந்தியடிகள் பிறந்த காளாகிய அக்டோபர் மாசம் இரண்டாம தேதியாகும். இன்னும இரு வாரங்களுள, இலங்கைவாழ் இந்துக்கள் செய்த புண்ணியத்தின பயனைக் கொழுமபில் காட்சி தந் தருளப் போகும் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அப்பையதீட்சி தரின் பதிமூன்றுவது சந்ததியில் தோன்றியவரென்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

ஆத்மீக சேவை

எழுத்தாணிப் பணியால் உலகின் நன்றிக்கு என்றென் றைக்கும் உரித்தானவர் வியாசர். அதேவித உரிமைபெற்ற தீட்சிதரின் மரபில் வந்துதித்த சிவானந்தர் இன்று வியாச ரின் புகழையும் புலமையையும் வென்று நிற்பதில் வியப் பொன்றுமில்லை. அப்பையரே குப்புசாமியாகப் பிறவி யெடுத்து ஜகத் குருவான சிவானந்தராக விளங்குகிறா ரெனப் பலர் கருதுகின்றனர். பாரத நாட்டின் பரமார்த் திகப் பண்பு காலத்துக்காலம் மறுமலர்ச்சி பெற்று உலகின் கவனத்தை ர்ப்பதின் காரணம் இவ்வித மகான்களின் தோற்றமேயாகும். மக்கள் மறந்துவிடும் உண்மைகளை காலதேவி வேண்டிநிற்கும் புதுநடையில் விளக்கி அவர்கட்கு உய்யவழிகாட்டுவதே இந்த மகாத்மாக்களின் உன்னதலட்

சியம். இந்து மதமென்னும் கற்பகதருவில் தோன்றிய இலைகள், மலர்கள், காய்கள, கனிகள யாவற்றையும் ஒருவர் அறியவிருமபின் சுவாமி சிவானந்தர் எழுதியுள்ள நூல்களைக் கறக்வேண்டும். உலக மொழிடான ஆங்கிலத்தில் எளிய நடையை அவா வேண்டுமென்ற கையாளுகிறா. பண்டிதாகள் மாத்திரமின்றி, பாமராகளுட பாலாகளுங்கூட எமது மஹரிஷிகள விட்டுப்போன பக்தி, ஞான, யோக ரகசியங்களை அறிந்து அவற்றை சாதனைக்குக கொண்டு வரவேண்டுமெனபதே இநதப் புண்ணிய புருஷனின பேரவா. அவர் இன்று உடல்கொண்டு உலாவுவது உலகின் நன்மை ஒன்றிற்காகவேயாம். முப்பத்தாறுவது வயசில் ஆயிரகணக்காக மாசம் வரும்படி கொடுதத டாக்டர் உத்தியோகத்தைவிட்டு துறவு பூண்டது அதன பொருட்டேயாம. தமது அறுபதது நான்காவது வயசில், ஆறுகலாய் ஆசரமதத்தில் வாழ்வதை விட்டு, சென்றமாசம் அகில-இந்தியா யாத்திரையை ஏறறுக கொண்டது மக்களின் உள்ளத்தில் உறுதிகிக கிடைகும் ஆதமீக உணாச்சியைத் தட்டி எழுப்புவதற்கேயாம.

என் கடன் பணி செய்து கிடப்பதே

"உங்கள் யாவருக்கும் பணியாற்றவே யானுளென. உங்களது வாழ்நாளை இனிதாக்கி இன்புறவாழச் செய்யவே யானுளென். அறியாமையை அகற்றி பிறவிப்பயனை அடைவதற்கேற்ற பாதையில துணை புரியவே யானுளென"

"இந்த வேட்கை மிக்குள்ள அன்பர்களுக்கு அருமபணியாற்றுத லொழித்து வேறொரு கடவுளும், புனிதபூசனையும் எனக்கில்லை. அவர்களுக்குத் துணையாக இருந்து உதவி புரிதலே எனது மேலான யோகம்—யானடைந்த அருளொனி."

என உணர்ச்சி பெருக்குடன் அடிக்கடி கூறும் இப்பரம ஹம்ஸரின் கருணை உள்ளத்தை எவ்வாறு எழுத்தால் விவரிக்கமுடியும் ?

இமயமலைச்சாரலில் தாம் வதியும் ஆச்சிரமஞ் சென்று தம்மை தரிசிக்கும் தமது அமிர்த வசனங்களைக் கேட்கும் பாக்கியம் பலகோடி மக்களுக்குக் கிடைக்காது என்பதை உத்தேசித்தே இக்கருணையே உருவான பெரியார் அறுபது தின நீண்ட யாத்திரையில் புறப்பட்டுள்ளார். அயோத்தியா, காசி, கயா, ஜகந்நாதம், சிதம்பர மாகக்கம இராமேஸ்வரம் வந்து மஹாளய அமாவாசை யன்று கங்கோத்திரியிலிருந்து கொண்டுவரப்படும் புண்ணிய தீர்த்தத்தில் இராமநாதபெரு மானுக்கு அபிஷேகம செய்து, அன்றைய தினமே தனுஷ் கோடியில் கப்பலேறி அடுத்த நாட்காலையில் (12-10-50 வியாழகிழமை) கொழும்பு கோட்டை ஸ்டேஷனில் வந்து இறங்குவார். இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் அன்பர்கள அத்தருணம் ஆயிரக்கணக்காகத் திரண்டு வந்து அவரின் திவ்ய தரிசனம் பெறுவார்களாக.

ஆணைகிப் பெண்ணைகி வடிவு தோன்றும்
ஆக்மாலு பூதிக்கோர் அணியுரு தோன்றும்
வாணிலை வீணைக்கும் வழக்கை நீக்கி
வந்தவினை தனை முடிக்க வழியுந் தோன்றும
காணுத காட்சியெல்லாங் கண்முன் தோன்றும்
கைலையைப்போற் கம்பீரக்காட்சி தோன்றும்
சேணுக உயர்ந்த பெருஞ்சிறப்புத் தோன்றும்
சிவானந்த ஜகத் குருவைக் கண்டபோதே.

ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் அகில இந்திய யாத்திரை

அக்டோபர் 12-ல் கோழும்பு மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளிக்க ஏற்பாடு

அணுகுண்டுச சக்தியின் ஆதிகத்தில நாததழும்பேற நாஸ்திகம பேசப்படும் வேளையில், மகளிடையே முக்கிய மாக மாணவ, மாணவிகளின் உள்ளத்தில் பாரதநாட்டின் மதிப்பற்ற பொக்கிஷமான ஆத்மீகக் கலையைப் பரப்ப வேண்டுமென்ற உன்னத நோகுடன் ஸ்ரீ சிவானந்த மகான் இமயமலைச் சாரலிலுள்ள தமது ஆச்சிரமத்தை விட்டுச் செப்டம்பர் மாதம் ஒன்பதாம் தேதி புறப்பட்டு ஓர் அகில இந்திய யாத்திரையை ஆரமபித்துள்ளார்.

அவா சென்ற கேஷத்திரங்களிலெல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் வழிபாடுகளிலும், பஜனையிலுங் கலந்து, அவரது ஞான மொழிகளையுங் கேட்டின்புறுகின்றனர். அயோததியா, காசி, சாரநாத், காயா, கலகத்தா மார்க்கம் யாத்திரை செய்து, நேற்று சென்னையை சேர்ந்தபோது நகரசபையினால் வரவேற்புபசரணை அளிக்கப்பட்டது. அங்கே மூன்று தினங்கள் தங்கி நகரின் பல இடங்களில் உபதேசஞ் செய்கின்றார்.

சிதம்பரத்திலும் தருமபுர ஆதீனதிலும் குதூகல மான வரவேற்புகள் அவரை எதிர்பார்க்கின்றன. அண்ணா மலைச் சர்வகலாசாலையில் 4ந்தேதி புதன்கிழமை போராசிரி யாகள் மாணவர்கள, ஒன்று சேர்ந்து ஏழுமணித்தியால நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாய் நடாத்தத் திட்டஞ் செய்துள்

னனர். இதில் பஜனை சமய மகாநாடு, யோகாப்பியாச வினக் கங்கள், கூட்டுவழிபாடுகள் முடிந்தபின ஸ்ரீ நடராசர் தரிச னத்திற்காக அனைவரும் ஆலயஞ் சென்று ஆராதனை செய் வர். இறுதியில சுவாமிஜியின் உபந்நியாசம் நடைபெறும் சிதம்பரத்திலிருந்து தர்மபுர ஆதீனம் வழியாக பல ஸ்தலங் களை தரிசித்துக்கொண்டு சுவாமிகள் 10ந தேதி மாலை இரா மேஸ்வரம் சேர்வார். மஹாளய அமாவாசை பொருந்திய சுபதினத்தில் ராமநாதப் பெருமானுக்கு கங்கோத்திரியி லிருந்து யாத்திரை கோஷ்டியினரால் கொண்டுவரப்பட்ட தீர்த்தத்தினல் அபிஷேகம் நடைபெறும்.

அன்று மாலை சுவாமிகளும் அடியார்களும் தனுஷ் கோடியில் கப்பலேறி அடுத்தநாட் காலை எட்டு மணிக்கு (12-10-50) கொழும்பு கோட்டை ஸ்டேஷனில் வந்திறங்கு வார்கள். அப்போது இந்த நகரம் இந்துமதச் சார்பில் இதுவரையில கண்டிராத ஓர் அற்புதக் காட்சியை தருமென வும் அதனைக் கண்டின்புறவும் சுவாமிகளின் தரிசனம்பெற்று அவரது ஞான மொழிகளைப் பருகவும், இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்க ளெனவும் கொழும்பு வரவேற்பு சபையின் காரியதரிசி திரு க. இராமச்சந்திரன் அறியத்தருகின்றார்.

—தினகரன், 1—10—50

ஸ்ரீ சுவாமி சிவானந்தரவர்களின் இலங்கை விஜயம்

பொது மக்களிடத்திலும், முக்கியமாகக் கலாசாலை மாணவர்களிடத்திலும, ஆத்மீக உணர்ச்சியை உண்டுபண் ணுமு நோக்குடன இநத மஹான் சென்ற மாதம் 9-ந்தேதி யன்று ரிஷிகேசத்திலுள்ள தமது ஆச்சிரமத்திலிருந்து ஓர் அகில-இநதிய யாத்திரையை ஆரமபித்தனர். அயோத்தியா, காசி, கயா, கலகத்தா முதலாய இடஙகளில் வழிபாட்டுக் கூட்டஙகளில் உபநிய்யாசஙகள நடைபெற்றன. சென்னை யில் 30ந் தேதி சுவாமிகள சோநதபோது ந-கரசபையினரால் வரவேறபு அளிக்கப்பட்டது. மூன்று தினங்களாகச் சென்னையில் தஙகி காநதி ஜயநதிபிலும் வேறு பல நிகழ்ச்சி களிலுமு பங்கு பற்றினா.

சுவாமிகளின இத் திக்குவிஜயத்தில் முக்கியமான சம்பவமு ஒன்று நாளைய தினம் சிதம்பரத்தில் நடைபெறும். பிற்பகல் 2-30 தொடக்கம் 8 மணி வரைக்கும் அண்ணா மலைச் சர்வகலாசாலையில், வழிபாடு, பஜனை, மகாநாடு, யோகாப்பியாசக் காட்சிகள் தொடர்ந்து நடைபெறும். இரவு எட்டு மணிக்கு சுவாமிகள் சர்வகலாசாலை பேராசிரி யர்கள், மாணவர்கள், ஏனைய பக்தர்கள் சூழ ஸ்ரீ நடராசர் சந்நிதி சேர்நது அங்கே விசேட அபிடேக ஆராதனைகள் முடிநததும ஓர் சொற்பொழிவு செய்வார்.

சிதம்பரத்திலிருநது கருமபுர ஆதீனஞ்சென்று, அங்கே மகாசந்நிதானத்தின் உபசரணை நடைபெற்றபின் சுவாமிகள தொலைடுப் பல கூஷத்திரங்களைத் தரிசித்து ஆங்காங்கே வழிபாடுகளும் உபந்நியாசங்களும் செய்த பின் னர் அக்டோபர் 10-ந் தேதி இராமேஸ்வரம் சேர்வர்.

அடுத்த நாள் மஹாளய அமாவாசைத் தினத்தில் ஸ்ரீ ராம நாதப் பெருமானுக்கு கங்கோத்தரியிலிருந்து கொணடுவரப் பட்ட தீர்த்தங்களினால் அபிஷேகம நடைபெறும். அன்று சாயந்திரம் தனுஷ்கோடி மார்க்கம யாத்திரைக் கோஷ்டி தலைமன்னர் சேருமு. மன்னரிலும் அதன் சுற்றுப்புறங களிலுமுளள பக்தர்கள் தருந்தவரவேற்பு அளிக்க ஒழுங்கு செய்கின்றார்கள். இதில் கலந்துகொள்ள யாழ்பாணத்திலிருந்தும கொழும்பிலிருந்தும பலர் செல்கின்றார்கள்.

12-10-50 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கொழும்பு நகரத்தில் இதுவரையிற் காணடிராத காட்சி நடை பெறுமெனவும் அனைத்த கண்டின்புறுதல் இந்துக்கள் சகல ரதும் முக்கிய கடமையெனவும் வரவேற்புக்கழக காரியதரிசி திரு. க இராமச்சந்திரன் அறிவிக்கின்றார். அடிகள் கொழும்பில் தங்கும் முப்பத்தைந்து மணிநேரத்தியாலங்களுள் ஏழு பிரதான இடங்களில் கூடடு வழிபாடுகள், சங்கீர்த்தனம், உபந்நியாசங்கள் நடைபெறும். நகரசபை மணடபத்தில் நடைபெறுமு பொது வரவேற்புக் கூட்டதில் இந்துக்களல்லாத பிரமுகர்கள் பலரும் கலந்து கொளவார்கள

அடிகளின் இமயம் நோக்கிய யாத்திரை தனுஷ்கோடியில் ஆரம்பித்து, மதுரை கன்னியாகுமரி, மைசூர், பம்பாய், பரோடா, டில்லி மார்க்கம் நவம்பர் மாசம் 8ந்தேதி நிறைவேறும். இனி வரபோகும் இந்துமத சரித்திரத்தில் இந்த யாத்திரை ஓர் தனி அத்தியாயம் எடுக்குமென நிச்சயமாகக் கூறலாம். இலங்கை சிவானந்தர் வரவேற்புக் கழகத்தின் தலைவராக தொண்டாற்றும், சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கட்கு இந்நாட்டு இந்துக்களின் நன்றி உரித்தாகும்.

—இந்து ஸதன், 30—10—50

அன்புருவான சுவாமி சிவானந்தர்
ஆத்மீகத்தை பரப்பும் அற்புதஒளி

சுதந்திர காலம் ஆரம்பித்தகிலிருந்து பாரத புண்ணிய பூமியானது அமைதியான வாழ்வினையும் சமாதானத்தை யும் கல்வினைக்கத்தையும் பெரிதும ஓம்பிவரும் தியாக பூமி யாகும்.

ஜனநாயக அரசியல் முதன் முதலாக இந்தியாவில், கிறீஸ்தாப்தத்திற்குப் பல்லாண்டுகட்கு முன்னோ நிலை பெற்று வந்தது.

சமய வாழ்வே எல்லோாக்கும் புரதானமான குறிக் கோளாக வேண்டுமெனபதையும வற்புறுத்தி வந்துளது.

இப்பெரும் போதனையைக் காலத்துக்குக் காலம் இந் தியாவில் எத்தனையோ பரமாத்மாக்கள் தோன்றி நன்கு விளக்கி நிலைநாட்டியுள்ளார்கள். இக்காலத்தில் மகாத்மா காந்தியடிகள் நமக்கு வழங்கியுள்ள அமிர்த போதனைகளை எவரும் மறக்கமுடியாது.

இபபடியான உண்மைப் பெரியார் பாம்பரையைச் சேர்ந்தவர்தான் இருஷிகேசத்தில் வசிக்கும் சுவாமி சிவா நந்த சரஸ்வதி எனபவர் வேதகாலங்களிலிருந்த பெரிய மகாத்மாக்கள எடுத்துக்கூறிய தேவவாக்குகளை உதாரணத் தால் விளக்கி நல்லறிவுச் சுடரைக் கொளுத்தி மக்களை உய் யச் செய்யுந தொண்டினை இவர் ஏற்றுள்ளார். "எங்கள் நாட்டின் பாரம்பரைச் செல்வமாகும ஆத்மஞானத்தைப் பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறி மனிதவர்க்கத்தை ஈடேற்றுந் தொண்டினைச் சுவாமிகள் ஏற்றுள்ளார்" என்று

சமீபத்தில், இந்திய இராணுவப் பெருந் தலைவர் தளபதி கரியப்பா கூறியுள்ளார். இவரது அருள் மொழிகள் இந்தியாவில் மாத்திரமன்று உலகம் முழுவதும் பரந்து செல்கின்றன.

பெரிய அற்புதம்

தென்னிந்தியாவிற் பத்தமடை என்னும் கிராமத்தில் தோன்றிய இந்தச் சாதாரண மனிதனின, பேரும், புகழும்; சக்தியும உலகமெங்கணும எப்படி வன்மையுடன் பேரலாங்கிச் செல்கின்றதென்பது உள்ளபடி அற்புதந்தான. மலாய் நாட்டில் வைத்தியராக இருந்த இவர், மிக்க கீர்த்தியையும் வருவாயையும வருவித்த அத்தொழிலைச் சடுதியிற் கைவிட்டு, 1924-ம் ஆண்டு சந்நியாசத்தைக் கையேற்றது மிக விந்தையாகின்றது. அபபோது இவருக்கு வயது 36 ஆகும்.

அன்று தொடக்கம் இருஷிகேசத்திலிருந்து அருந்தவம் இயற்றிவந்தார். பன்னிரண்டு வருட காலமாக இவா பட்ட கஷ்டங்கள். அனுபவங்கள், பரிசோதனைகள், இலகுவிற் கூறிவிடமுடியாது. அதன்பின் உலக நன்மையை நாடி, மக்களின் மீட்சியை இலக்காகக் கொண்டு, தொண்டு புரிய எண்ணி 1936-ம் வருடம் 'தைவீக வாழ்க்கைக் கழகம்" என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தனர். இப்போது இந்த ஸதாபனம் மிகவும் ஆதிகமடைந்து உலகின் பல பாகங்களிலும் விளங்குவதைக் காணலாம். இதன் மத்திய சங்கம் இமயமலைச சாரலில் இருஷிகேசத்து அண்மையிலுள்ள முனிக்கற்றி எனனும் பளத் தாகில் உளது. இபபோது இந்த ஸ்தாபனம இவரது இடையறாத

முயற்சியால் இனிது ஓங்கி வளர்ந்து வருவதை எவருங் காணலாம். கங்கைக கரையிலுள்ள இந்த ஆச்ரமத்துக்கு அணித்தாகவுள்ள கற்பாரிலிருந்து இவர் தவஞ்செய்வது நோக்குவோாக்கு அற்புதமாகும். இவர் என்றும் முயற்சியுடையராய் இருப்பது இவரது இயற்கை. அதிகாலையில் நித்திரை விட்டெழுந்ததும் கடன்களை முடித்துகொண்டு ஆசிரமதத்தின் இலவச வைத்தியசாலைக்குச் சென்று நோயாளர்களை நன்று நோக்கிச் சிகிச்சைச செய்வார். பின்னர் மலையுசியிலுள்ள வித்யாசாலையில் மாணவர் மத்தியிற் காணப்படுவார். அதன் பின்னர் தமது ஆச்சிரமத்தையண்டியுள்ளவன பல்கலைக கழகத்தில யோக சாதனைகன், வேதாந்த போதனைகள நடத்துவார் இங்கே உலகின் பல தேசங்களிலிருந்தும வந்துள்ள மாணவ வேதபரம்பரை முறையில் ஆத்ம ஞான ஆராய்ச்சி செய்வர். இவ்வாறே சுவாமி சிவானந்தர் தமது ஆனந்தகுடீர் என்னும் ஆச்ரமத்தில் அரிய தொணடு புரிந்து வருவதைக் காணப்பெறுவது அரிய காட்சியாகும். உலகிலுள்ள எல்லாச சமயங்களுக்கு மிடையில ஒற்றுமையையும நல்லிணக்கத்தையும நிலைநாட்டும நன்நோக்கத்துடன சுவாமி சிவானந்தா இரு பெரிய ஸதாபனங்களை இங்கேயமைத்து நடத்துகின்றனா 1—சர்வசமய சமரசனை மம. 2—சர்வதேச சாது சங்கம. அன்றியும் இங்கே ஒரு யோகசாலை யுணடு. அதன் உதவியால் யோக சாதனை முறைகளை கடைமுறையில கற்பது மிக இலகுவாகும்.

நல்வாழ்வில் ஆர்வம்

இவைகளன்றிப பொதுமக்களின் நல்வாழ்வில் இவர்க்கு மிக ஆர்வமுண்டு. பொதுமக்களின் நாளாந்தரத்தில் அடையும் கஷ்டங்களை நிவிர்த்தி செய்வதில மிக்க அபேட்சை

யுடையார். சென்ற 20 வருடங்களாக அததுறையில் அரியதொண்டு இவர் புரிந்து வருவது யாவரும அறிந்த விஷயமம. நற்போதனைகளைப் புரிவதுமன்றி, அரிய நூல்களை எழுதி வெளியிட்டதுமன்றி, தமது உதார வாழ்ககையால் உண்மையான புராதன இநதிய வாழ்க்கை எவ்விதமென் பதை நன்கு காட்டி வைத்துள்ளார். அவர் எழுதி வெளி யிடும் விஷயங்கள் எல்லோருக்கும் ஆத்மக் கிளர்ச்சியை உண்டாககுமென்பதில் ஐயமின்று. இவர் வெளியிட்ட நூலகள நூற்றுக்கு மேலாகும. இநதியாவில மாத்திரமன்று மேலைத்தேச நாடுகளிலும அவைகட்கு விசேஷ மதிப்பும் ஆதரவும் இருந்து வருகினறது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியர் அவரது நூலைப்பற்றி அபிப்பிராயங் கூறுமிடதது, 'பரி சுத்தமான மாற்றுயர்ந்த பொன்னையடித்துச் செய்யப்பட்ட பல வடிவங்கள். இவரின் சகதி மிகவும் அபாரமானது' என்றார். காங்கிரஸ் தலைவராகும் பட்டாபி சீதாராமய்யா என்ன சொன்னர்? 'உஙகள் புத்தகங்கள் எப்போதும் எனது பககத்தில் இருக்கும். பொதுவாக எல்லா விஷயங் கட்குப் அவைகளை நான் புரட்டிப் பார்க்கவேண்டிய தாகின் றது. புராதன ஞானங்கட்கும் அவை களஞ்சியம போன் றன! தற்கால மக்கட்கு நல்லறிவினை உண்டாக்கக்கூடியன.'

அமெரிக்காவிலுள்ள சில பல்கலைக்கழகங்கள் இவர் நூல்களை உயர்தர வகுப்புகட்குப் பாடப் புத்தகங்களாக அமைத்துள்ளன.

அவர் ஏற்ற பணி

அற்புதமான மனிதர் சுவாமி சிவாநநதர் என்பதை நம்மனதில் பதித்துக் கொள்ளல் வேண்டும், உண்மைச் சந்நியாசி, உண்மையான யோகி என்பவர்கள் தமது ஆற்

றலை வெளிப்படையாகக் காட்டுவது அவசியமென்றார். தேடிச் செல்வோருக்கு மாத்திரம் தமது சமயவுணர்ச்சியை ஆற்றலை, காணபித்தால் அது வீணாய்ப்போய்விடும். ஆனால் உண்மையை மறைத்து வைக்கவியலாது. சுவாமி சிவானந்தரின் ஒப்பற்ற, ஆச்சரியமான, அந்தரங்கமான, அரிய ஆத்ம சக்தியின் பெருமையைக் குறித்து, இடைவிடாது ஆச்சரியத்தோடு கூடிய நம்பிக்கை வாக்குகள், புகழுரைகள் உலகின் நாலா பக்கங்களிலுமிருந்து வந்து கொண்டிருக்கின்றன. அவரது அற்புத சகதியைப் பற்றி இவரை நேரே சந்திப்பவர்கள் கேட்டாலும் மௌனமாய்ச் சாதித்து விடுகின்றனர். வேறு சில அரிய சந்தர்ப்பங்களில் இவர் புன்னகை செய்து மகிழ்ச்சியுடன் தாழ்மையாக, "எல்லாம் கடவுள் அருள்தான்" என்று கூறிவிடுவர்.

இப்படியாகச் சுவாமி சிவானந்தர் தமது அபார சக்தியை உபயோகித்து இந்தியாவின் பெருமையை எங்கும் அறியச் செய்து வருகின்றனர். நவ நாகரிக உலகத்துக்கு உற்ற முறைகளையே இவர் உபயோகப்படுத்துவது இங்கே குறிப்பிடாதிருக்க முடியாது. யோக சாதனைகளை விளக்கும் படங்கள, இசைத்தட்டுகள், ஒலிபரப்பிகள், மாசிக வாசிகப் பத்திரிகைகள் என்பனவே இவர் உபயோகிக்கும் சாதனங்களாகும்.

ஒரே யொருவழி

கடவுளறிவும், உலக சமாதானமும், அன்பும் உலகமெங்கணும் பரப்பவேண்டுமென்பதுதான் இவரது பிரதம நோக்கமுங் கொள்கையுமாகும். சமாதானத்தை நிலைப்படுத்தலும், நல்லிணக்கத்தை யுண்டாக்கலும், இன்று

போல் என்றும் உலக வலாரசினர்க் கிடையில தேவைப் பட்டதா யிருந்திருக்கவில்லை. சன்மாக்கங் குன்றிப பெரிய கொடிய அழிவுகள் உணடாவதற்குக் காரணமாகுமப மூன்ரு வது உலக மகாயுத்தம் தடுக்கப்பட வேண்டுமாயின் ஒரே யொரு வழிதான் அணுட்டிக்க இருக்கிறது. பீஹராமாகா ணத்தேதசாதிபதி கூறியதாவது : " உலகம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் சிவானந்தா போன்ற ஆத்மயோகிகள் தமது அபார சக்தியை உபயோகித்தாற் ரூன மகாகளுக்கிடையில் எழுந்த கலகங்கள் சாந்தியடைந்து அவர்களுக்கிடையில் சகோதரத்துவம நிலநாடடப் படலாம. "

சுற்றுப்பிரயாணம்

மனித சமூகம் மீட்சியடைய வேண்டுமாயின் யாவரும் இவர் போதனைகளைக் கேட்டு அதன்படி நடக்கச் சித்தங் கொள்ளவேண்டும். தமது உண்மை உரைகளை விரைந்து மக்கள் யாவருக்கும் விளக்கவேண்டிய அவசியத்தை இவர் நன்கு உணர்ந்துள்ளார். அந்த காரணத்தால் ஆன்மகோடி களின் ராடற்றத்தில் இரங்கி இந்தியா எங்கணுஞ் சென்று தமது நற்போதனையை வழங்க உடன்பட்டுளளார். அவரு டைய யாத்திரை, சென்ற மாதம் 9-ம தேதி சனிவாரம் ஆரமபமாயிற்று. அன்னரின 64-வது பிறந்ததின திகதிக்கு முந்தினமாகும். பிரதானமாக இருஷிகேசம், கல்கத்தா, சென்னை, பம்பாய், டில்லி, இலங்கை முதலிய இடங்களிற் தரிசித்து வருகின்ரூர்.

—ரழுகேசரி, 8—10—50

சுவாமி சிவானந்தரின் இலங்கை விஜயம்

பொதுமக்களிடையே ஆத்மீக உணர்ச்சியை ஊட்டும் நோக்குடன் இம மகான சென்ற மாசம் 9-ந் தேதி யன்று ரிஷிகேசத்திலுள்ள தமது ஆசிரமததிலிருந்து அகில-இந்திய யாத்திரை செய்வதற்காகப புறபபட்டனர். அயோத்தியா, காசி, கயா, முகலிய ஸ்தலங்களில அடியார் கூடடத்துடன் வழிபாடுகள செய்துவிடடுச் செப்டம்பர் மாசம 30-ந் தேதி சென்னை சோந்தபோது நகரசபையின ரால ஒரு வரவேற்பு உபசாரம அளிகக்பப்பட்டது. அகடோ பர் 4-ந் தேதி அண்ணாமலைப் பலகலைக் கழகத்திலும, சிதம் பரம் நடராஜப் பெருமான் சந்நிதியிலும் பிரார்த்தனை, ஆரா தனைகள் விசடமாக நடநதன.

தெற்கிலுள்ள ஏனைய பல ஸ்தலங்களைத் தரிசிதது க் கொண்டு மஹாளய அமாவாசை தினத்தன்று (11-10-50) இராமேச்சுவாத்தில் கங்கோத்திரியிலிருந்து கொண்டுவரப் பட்ட தீர்த்தத்தினால் அபிடேகமும் விசட ஆராதனையும் முடித்துக்கொண்டு, அன்று மாலையே தனுஷ்கோடியில் கப்பலெடுத்து அடுத்தநாட் காலை (வியாழக்கிழமை) கொழும் பில் கோட்டை புகைராத ஸ்தானத்தில், அன்பர்கட்குக் காட்சி யளிப்பார். அவர் கொழும்பில் தங்கியிருக்கும் இரு தினங்களின் நிகழ்ச்சி அட்டவணை சென்ற வார ஈழகேசரி யில் வெளிவந்துள்ளது. யாத்திரையைத் தொடர்ந்து தனுஷ்கோடி யிலிருந்தே 14-10-50 ஆரம்பிக்க ஏற்பாடுகள் முன்னேரோயே நிச்சயம் செய்த படியாற் சுவாமிகள் இலங் கையில் வேறு எப்பாகத்திற்காகவது செல்லக் காலம் போதாதென விசனத்துடன் தெரிவித்துவிட்டதாக அறி

கின்ருேம. அவரது இமயம் நோக்கிய யாத்திரை கன்னியா குமரி, திருவனந்தபுரம், மைசூர், பம்பாய், டில்லி மார்க்கம் நவம்பர் மாசம் 8-ந தேதி முடிவு பெறுமென இலங்கை சிவாநந்தர் வரவேற்புச் சபையின் காரியதரிசி திரு க. இராமச்சந்திரன் தெரிவிக்கின்ருர் இச்சபையின் தலைவராகப் பணியாற்றுகின்ற சர் கந்தையா வைத்தியநாதன் அவர்கட்கு இந்துக்களின் நன்றி உரித்தாகும்.

—ஈழகேசரி.

இவ்வளவு ஆடம்பரமான ஏற்பாடுகளோடு நம் ஞான வள்ளலே எதிர்பார்த்திருந்த கொழும்பு பக்தகோடிகள ஸ்ரீ சுவாமிகள் கொழும்பு ஸ்டேஷனில் வந்து சேர்ந்தவுடன் என்ன செய்கிறர்கள் என்பதையும் பத்திரிகைகளின் மூலம் விவரித்திருப்பது காண்க.

—

சுவாமி சிவானந்தாவுக்கு பக்தி தழும்பிய வரவேற்பு

கொழும்பு கோட்டை ஸ்டேஷனில் கண்கொள்ளாக் காட்சி

ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் நடைபெற்றகூட்டுப் பஜன.

கொழும்பு, அக். 13—" அரோகரா " என்ற பக்தி கோஷங்களுக்கிடையே, சுவாமி சிவானந்த சரஸ்வதி தமது யாத்ரா மண்டலியுடன் நேற்றுக் காலை சரியாக 8மணிக்கு தலைமன்னர் ரயிலில் கொழும்பு கோட்டை ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்கள. மேயர் டாக்டர். குமாரன் ரத்னம், வெளி நாட்டு இலாகா நிரந்தரக் காரியதரிசியும், வரவேற்புக் கமிட்டித் தலைவருமான சர். கே. வைத்தியநாதனும், சுவாமி

கருங்கு மாலை போட்டு, பாதங்களை தொட்டு வணங்கி வரவேற்றனர்.

கோட்டை ஸ்டேஷனில் அதிகாலை முதல் ஜனங்கள் கூட ஆரம்பித்துவிட்டார்கள். இது ஒரு கோவில உற்சவமோ என்று சொல்லும முறையில், ஸ்டேஷனை மகாதோரணங்களாலும, புஷ்பங்களாலும அலங்கரித்திருந்தனர். ஒவ்வொரு தூணிலும ஸ்வாமியின திருவுருவப்படத்தை ஒட்டியிருந்ததுடன், பூகொத்துக்களால் சிங்காரித்திருந்தார்கள. பூர்ண கும்பமும் குத்துவிளக்கும் மங்களகரமாக ஏற்றிவைத்திருக்கபபட்டது.

சுவாமி சிவானந்தா வரும் தலைமன்னர் ரயில் 8மணிக்கு வருகின்றது என்ற தமிழ், சிங்களம, ஆங்கிலம இம்மூன்று மொழிகளிலும் ஒலிபெருக்கிகள் மூலம் ரயிலவே அதிகாரிகள ஒரு மணி நேரத்துக்கு முனபிருந்தே அறிவித்து வந்தனர. வரவர கூட்டம் திரண்டு விட்டது. வேறு பல ரயில்களில் வந்தவர்களும் சுவாமியை தரிசிக்கக் கூடினர்.

முதல் நாள் இரவு நல்ல மழை. நேற்றும் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சுவாமிகள் வருவதற்கு 10 நிமிடத்துக்கு முன் வருணன் சற்றே பூ மாரி பொழிந்து நின்றுவிட்டான். அதலால் மக்கள் சிரமமின்றி, சுவாமிகளை தரிசிக்க வசதியாக இருந்தது.

ரயிலிலிருந்து இறங்கும்போது சுவாமிகள் முகம் சற்றேகளைத்துப் போய் இருந்தது. ஆனல் அங்கு அமைந்திருந்த விசேஷ மேடை மீதேறி, பக்தி வெள்ளத்தில் மூழ்கிய ஜனங்கள் பஜனவளி செய்வதைக் கண்டதும், அவர்

முகம் புதிய ஒளிபெற்று மலர்ந்தது. சுவாமிகளும் பஜனையில் கலந்து பாடினார். அதை கூடியிருந்தவாகளனைவரையும் ஆசீர்வதித்து, நடந்து படியேறி, மேல் பாலதனின் வழியே நடந்து, ஸ்டேஷன் முன்புறத்தில் காத்திருந்த மக்களுக்கு காட்சி அளித்தார்.

அங்கிருந்து, கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து, மண்டபத்தில் சற்றே அமர்ந்தார். அவரது சிஷ்யர்களில் ஒருவர் சுவாமியின் கட்டளைப்படி ஒரு பஜனையை சில நிமிஷங்கள் நடத்தினர். ஸ்டேஷனில பக்தியுடன அவ்வளவு மக்கள் கூடியிருந்ததைக் காண சுவாமிகளுக்கும, உளளம் பூரித்ததென்றும, மககள் தவகளுக்குளனும வெளியிலும் ஆனடவனைக் கணடும், உயரிய லட்சிய வாழ்க்கை நடத்தி உய்ய வேண்டுமென்பதே சுவாமிகளின் நோகமென்றும், தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசினர்.

சுவாமிகளின் உபதேசஙகளடங்கிய ஒரு பிரசுரம், அங்கு கூடியிருந்தவர்களுக்கு வழஙகப்பட்டது. ஜனங்கள் சுவாமிகளின் பாதங்களைத் தொட நெருங்கி வந்தனர். கூட்டத்தை ஒதுக்கி சுவாமிகள காரில், திரு கே. வைத்திய நாதனுடன் ஹார்டன்பிளேஸிலுள்ள ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையாவின் பங்களாவுக்குச் சென்றார். சுவாமிகளுடன் மொத்தம 17 பேர வந்திருகின்றார்கள்.

போலீஸ் ஏற்பாடுகள் எலலாம வெகு கசகிதமாய் இருந்தன. —வீரகேசரி, 13-10-50.

ஹிமாசல யோகிக்கு கொழும்பு முனிசிபல் சபையின் வரவேற்புபசாரம

சுவாமி சிவானந்தரின் ஆத்மோபதேசம்

திரள் திரளான மகக்ள் சுவாமியை தரிசித்தனர்

சுவாமி சிவானந்தாவின் பிரசங்கத்தைதக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று மாலை கொழும்பு நகரமண்டபத்தில் வந்திருந்தனர் அங்கு இலங்கை வாழ் ஹிந்துக்கள் சுவாமி சிவானந்தாவுக்கு பொது வரவேற்பு ஒன்று அளித்தனர்.

இலங்கை மக்களின வரவேற்பை ஏற்க சுவாமி சிவானந்தர் மண்டபத்திற்குள் நுழைந்தபோது மக்கள் அனைவரும எழுந்து நின்று "ஹரோ ஹரா" கோஷத்துடன் வரவேற்றனர்.

நேற்றுக் காலை சுவாமிகள தலைமன்னர் கோச்சு மூலம் கொழும்பு வந்து சேர்ந்த போது சுமார் 3000 மக்கள் கோட்டை ஸ்டேஷனில் குழுமி "ஹரோஹரா" கோஷத்துடன் அவரை வரவேற்றனர். சுவாமிஜி கோச்சை விட்டு இறங்கியதும் சர் கருதையா வைத்தியநாதன் தலைமையின் கீழ் ஸ்ரீ சிவானந்தா யாத்ரா மண்டல வரவேற்புக் கமிட்டியும் கொழுமபு மேயர் டாகடர் குமாரன் ரத்னம் வரவேற்றனர். ஸ்டேஷனை விட்டு புறப்பட்டு சுவாமிஜி கப்பிதவத்தியிலுள்ள கைலாசநாத சுவாமி கோவிலுக்கு விஜயம் செய்து பிரார்த்தனை நடத்தினர.

முனிசிபல்சபை வரவேற்பு

சுவாமி சிவானந்தாவுக்கு கொழும்பு முனிபல்சபை நேற்று பிறபகல் 3 மணிக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தது இவ்வரவேற்பு வைபவத்தில் விசேஷ அழைப்பின் பேரில் நகர பிரமுகர்கள பலரும் கலந்துகொண்டனர். சுவாமியைக் காண ஏராளமான மக்கள சபையின் நாலா பகங்களிலும் குழுமியிருந்தனர். சபை மண்டபத்தில் மேயா டாக்டர் குமாரன் ரத்தினத்திற்கு இடது பக்கத்தில் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகாவும், கணமு குருணைகல் மேயர்களும் அமர்திருந்தனர். வெளிநாட்டு ஸ்தானீகராலய அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

சுவாமியை சபைக்கு வரவேற்று பேசுகையில் டாக்டர் குமாரன் ரத்னம் சுவாமிஜியை வரவேற்க ரெயில்வே ஸ்டேஷனிலும் நகர மண்டபத்திலும் கூடிய ஏராளமான கூட்டத்தைக் குறிப்பிட்டார். சுவாமியின் ஆற்றலும், புகழும எவ்வளவு தூரம பரவியிருக்கிற தென்பதற்கு இது ஒரு அத்தாட்சி என்று அவர் கூறினர். சுவாமிஜி அவருடைய அகில இந்திய சுற்றுப்பிரயாணத் திட்டத்தில் கொழும்பையும் சேர்த்துக் கொண்டதற்கு நன்றி கூறிய மேயர் சுவாமி அவர்கள கொழும்பில் இரண்டு நாட்களே தங்கியிருக்கிறரென்றும அறிய நாங்கள் வருந்துவதாகக் கூறினர்.

அதன் பின்பு மேயர் வரவேற்பு பத்திரத்தை வாசித்து சுவாமிக்கு அளித்தார்.

சுவாமிஜியின் பதில்

சுவாவஜி ஆங்கிலத்தில் எளிய நடையில வரவேற்பு உபசாரத்திறகுப் பதிலளிகையில் முதலில் "ஓம்" என்ற

பரணவ மகாத்மாவின் உட்கருத்தை சுருக்கமாக விளக்கிக் கூறினார். இராமர், சீதை, லக்ஷ்மணன், புத்தர் போன்ற பெரியோர்களை வந்து பாதத்தூளி பட்ட இலங்கைக்கு விஜயம் செய்ய தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததுப் பற்றி தான் மிகவும் மகிழ்ச்சியுறுவதாகக் கூறிய சுவாமிஜி இலங்கையின் பெருமையை விளக்காமாக எடுத்துக் கூறினார். மாணிக்க கங்கையும் சிவனடிபாதம், கதிர்காமம் போன்ற க்ஷேத்திரங் களுமுள்ள புனித இலங்கைக்கு தனக்கு விஜயம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்ததற்கு தான் மகிழ்சியடைவதாக சுவாமிஜி கூறினார்.

மூன்றிபல சபை வரவேற்பு முடிந்ததும் நகர மண்ட பத்தில் சுவாமிஜிக்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. விருந்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் சுவாமிஜிக்கு அறி முகப்படுத்தி வைக்கப்பட்டனர்

பொதுஜன வரவேற்பு

"எல்லா மதங்களின் அடிப்படைத் தத்துவங்களும் ஒன்றே. அத்தியாவசியமற்ற விஷயங்களில் தான் பேதங் கள இருக்கின்றன பிரதான அம்சாகளில் அபிப்பிராய பேதமே கிடையாது. எந்த ஒரு மதமும மற்றதைவிட உயர்ந்ததில்லை. விஷயம் தெரியாதவர்கள் தான இதுபற்றி தகராறு செய்வாகள்" என்று சுவாமி சிவானந்தஜி நேற்று டாலி நகர மணடபத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட பொதுஜன வரவேற்புக்குப பதிலளிக்கையில் கூறினார்.

சுவாமிகள தமது பிரசங்கத்தில மேலும கூறியதாவது:-

"மதம் விவாதத்துக்குரிய ஒரு விஷயமல்ல. மதமென் பது செயல் முறையில கொண்டுவரக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லா மதங்களின் லட்சியமும ஒன்றே.

உண்மை பேசுங்கள். எலலோருக்கும் சேவை செய்யுங்கள். உங்கள் மனதிலுள்ள அழுக்குகளை அகற்றுங்கள். நல்லெழுக்கங்களை மேற்கொள்ளுங்கள். எல்லா மதங்களுமை இதையே போதிக்கின்றன. தினமிட்டு வாழ முற்படுங்கள வாழ்நாள் முழுவதும் உலக ஆசைகளில் ஈடுபட்டிராமல் அதிய காலத்திலாவது பிரார்த்தனை செய்ய முற்படுகள

தினசரி வாழ்கையில நீங்கள் சிறுக உண்டு, சிறிது தூங்கி, சிறிது பிரார்த்தனை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள தவறுகளை எடுத்துக காண்பிப்பவர்பால் ஆத்திரம கொளளாமல் நன்றிகூற முன்வாருகள். பல்வேறு மதகளைப்பற்றியும மகான்களின் போதனைகளைப்பற்றியும் படித்து சிந்திக முயற்சி செய்யுங்கள் ''

அதன பின்பு சுவாமிஜி எல்லோரும் எல்லாத் துறைகளிலும மிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்திதான் இயற்றியுள்ள இரு ஆங்கிலப் பாடலகளைப் பாடிக்காண்பித்தா. சுவாமிஜி பிரசங்க இறுதியில் '' ராம நாம பஜனை '' நடத்தினா.

யோகாசனங்கள்

கூட்ட ஆரம்பிதில் சுவாமிஜியின் சிஷ்யர்களில ஒருவர் யோகாசானங்களைக் கூட்டத்தினருக்கு செய்து காண்பித்தா

ஸ்ரீ சிவானந்தா யாத்ரா மண்டலி இலங்கை வரவேற்புக் கமிட்டியின் சார்பில சர். கந்தையா வைத்தியநாதன் சுவாமிஜிக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்தளித்தார். சா. கந்

தையா வைத்திய நாதன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துகை யில் மதத துறையில் இலங்கையும் இந்தியாவும் ஒன்றே என்பதை வற்புறுத்திக் கூறினர்.

அதன் பின்பு சுவாமிஜி வெள்ளவத்தை ராமகிருஷ்ண மடததிற்கு விஜயம் செய்து அங்கு அளிக்கப்பட்ட வர வேற்பை ஏற்றுக்கொண்டார்.

—o—

“ பணத்தை நம்பவேண்டாம் ; ஆண்டவனை நம்புங்கள் ”

ராமகிருஷ்ண மிஷனில் சுவாமி சிவானந்தா

கொழும்பு, அக. 13 “ பாஙகியில போட்டுள்ள பணத்தை நம்பியே பலர் வாழ்கினறனர். அஸ்ஸாம பூகம் பததில கோடீஸ்வரர்கள் திடீரனப பிச்சைகாரர்களாகி விட்டனர. ஆகவே வெறும் பணத்தை நம்பி வாழாமல், ஆண்டவனை நம்பி வாழவேணடும். ‘நான்’ என்ற ஆண வத்தை விட்டு ஆண்டவனுக்காகவே வாழ்வோமாயின நமக்கு வேண்டியதெல்லாம ஆணடவன் கொடுப்பான். இரணடு மோட்டார் இருநதால் நானகு மோட்டார் கொடுப் பான். துறவு என்பது எல்லாவற்றையும் விட்டுவிட்டு காட் டுக்குச் செல்வதல்ல. ‘நான்’ என்ற அகமபாவத்தை விடு வதுதான உண்மையான துறவு ” என்று சுவாமி சிவானந்தா நேற்றிரவு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன மண்டபத்தில் பேசுகை யில் குறிப்பிட்டார. மணடபத்திலும வெளியிலும் தாங்க முடியாத கூட்டம். இதுவரை இவ்வளவு பெரிய கூட்டம் அங்கு நடநததில்லை. ஜஸ்டிஸ் வி. நாகலிங்கம தலைமை வகிததார்.

வாழ்க்கையில் ஒரு லட்சியமிருக்க வேண்டுமென்றும் ஹிட்லர், முசோலினி, காந்திஜி, சிவாஜி இவர்களை எல்லாம் மறந்து விட்டதால் வாழ்வு நிச்சயமில்லை என்றும் ஆகவே தியானம், பஜனை முதலியவை தினசரி கொஞ்சநேரமாவது செய்து அன்பை வளர்த்து பிறருகாக வாழ முயலவேண்டு மென்றும் கூறி ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் செய்து வரும் அருமையான சேவைகளைப் பாராட்டினர்.

ஆசிரம பஜனையும் நடைபெற்றது. சுவாமி சித்காத் மானந்த வந்தனோபசாரம கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

—o—

ஓங்காரத்திலிருந்தே அண்ட சராசரங்களும் உதித்தன

ஆத்மாவிற்குள் இருக்கும் ஆண்டவனை அடைவதற்கு சரியான வழி

கொழும்பு முனிசிபல் சபை வரவேற்பில் சுவாமி சிவானந்தர் பிரசங்கம்

கொழும்பு, அக்டோபர் 13 முனிசிபல் சபையின் காலா பக்கங்களிலும் பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர். ரைட் ஆனரபிள் திரு. டி. எஸ். சேனநாயகாவும், கண்டி, காலி மேயர்களும் கொழும்பு மேயரின் இடது புறத்தில் அமர்ந் திருந்தனர். வலது புறத்தில் காலி வஸ்திரத்தாலான நீண்ட அங்கியையும், அங்கவஸ்திரத்தையும் தரித்து சுவாமிஜி அமர்ந்திருந்தார்.

கொழும்பு மேயர் டாக்டர் குமாரன் ரத்தினம் வரவேற்பு உபசாரத்தை வாசித்தளிக்கும் முன்னர் முன்னுரையாகப் பின்வருமாறு கூறினார்.-

"இன்று இங்கு கூடியிருக்கும் ஜனத்திரளைப் பார்க்கும் இடத்தும், காலையில் ரயில்வே ஸ்டேஷனில் கூடியிருந்தவர்களைப் பார்க்குமிடத்தும் சுவாமிஜி இலங்கைக்கு வருவதற்கு முன்னால் அவருடைய புகழ் எவ்வளவு தூரம் இங்கு பரவியிருக்கிறதென்பது நன்கு புலனாகின்றது. போர்களாலும், பிணக்குகளாலும் பிளவுபட்டிருக்கும் இன்றைய உலகில் சமாதானம், அமைதி ஆகியவற்றின் உறைவிடமாக விளங்கும் இவ்வழகிய தீவுக்கு தங்களை நாம் அன்புடன் வரவேற்கிறோம்"

(வரவேற்பு உபசாரப் பத்திரத்தின் முழு விபரமும் வேறொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

சுவாமிஜி மெல்லென எழுந்து சுற்றும் முற்றும் ஒரு கணம் பார்த்தார். அவருடைய பார்வையில் அன்பும் கனிவும் நிரம்பியிருந்தது. நான் பெற்ற இன்பத்தைப் பெறுவாருங்கள் என்று அழைப்பது போல் இருந்தது. 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை உச்சரித்தபடியே சில கணம் அந்தர் முகதியானம் செய்தார். சபையில் இருந்த சிலரும் ஓங்கார சப்தத்தில் ஈடுபட்டு பிரணவத்தை உச்சரித்தனர். கம்யூனிஸ்டு அங்கத்தவர்கள் உட்பட ஏகமனதாக சுவாமிஜிக்கு நகர வரவேற்பு அளிக்க நிச்சயித்த முனிசிபல் சபை மண்டபத்தில் தூய்மையான அமைதி நிலவிற்று. படம் பிடிப்பவர்களின் 'கிளிக்' என்ற சப்தமும் மின்னல் ஒளியுமே சூழ்நிலையை மேலும் முக்கியமாக்கியது.

ஓங்காரத்தின் மகத்துவம்

சுவாமிஜி பின்வருமாறு கூறினர்: உலகோற்பத்திக்கு முன்னர் ஓம என்ற சொல்லே இருந்தது. அச்சொல்லினின்றே அண்டசராசரங்களும் தோன்றின. 'ஓம்' என்ற சொல்லில் இருந்துதான் எல்லா மொழிகளும் பிறந்தன.

இலங்கை ஒரு புனிதமான தீவு. இராமபிரான், இலட்சுமணன், சீதை, ஹனுமான், புத்தபிரான், அரஹாத்தர்கள் ஆகிய இன்னோரன்ன மகான்களின பாத தூள் பட்ட இடமல்லவா இலங்கை! சிவனொளி பாதமும கதிர்காமக் கந்தரமும திகழும இடமல்லவா இலங்கை! பல வினைகளையும் தீர்க்கும் மாணிக்க கங்கை பாயும இடமல்லவா இலங்கை! பல்லாண்டுகளாக எத்தனையோ அற்புதங்கள், சுப்ரமண்யப் பெருமான் சோதி நடனம புரியும் கதிர்காமத்தில் திகழ்ந்திருக்கின்ற நாலு வைத்தியரும இனிமேல் நமபுதற்கில்லையென்று கைவிடப் பட்டவர்களும் இழந்த ஆரோக்கியத்தை மீணடும அப்புனித ஸ்தலத்தில் பெற்றிருக்கிறார்கள்.

ஏகனே, மூதலவனே இருந்ததனை இவ்வண்ணத்தின் என்று குறுகிய மனதனைதகொணடு அளந்து அறிந்து விட முடியாது சத்தாகிய அப்பொருள் என்றென்றும உளளது; சாசுவதமானது. "அகம ஸ்மி" 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வை நாம் மறக்க முடியாது.

ஆத்மாவினுள் இருப்பவரே ஆண்டவன்

இறந்துபோய் விட்டதாக சிறிது நேரம் கணனை மூடிக்கொணடு யோசியுங்கள்; (இங்கே சுவாமிஜி கண்களை மூடி பாவனை செய்து காண்பித்தார்) சித்த உடல் பகுத்தி

இருக்கிறதாகவும் நினைபடாதபடி இருபபதாகவும் உணர்ச்சி னைந்தியிருக்கிறது. கனவு காணுமபொழுது ஓளவு உணர்சசியை இழந்தபோகிலும, கனவில் நாம் அழுவும சிரிக்கவும செய்கிறோம் இவற்றினின்று எனன புலனாகின் றது, ஆத்மா என்றும உளளது. அதனுள் ஒளிர்பவனே இறைவன்.

இறைவன் சச்சிதானந்த 'சொரூபிசத' எனறால என்ற மூளளது; சாசுவதமானது. 'சித்' என்றால் உணர்ச்சி, மற்றது ஆனந்தமட. ஒரு பொருள இருந்தால் அதற்கு உணர்சசி யிருக்கும; உணர்சசியிருக்குமிடத்தில் ஆனந்தம் நிலை பெறும. துக்கம் இருப்பதின காரண மென்ன? பூரணத்துவம பெறாத இடத்தில்தான் துன்பம் இருக்க முடியும. பூரணமான சச்சிதானந்தப் பொருளே இறைவன் அவனை நீங்கள "தத்துவமஸி" "நீ தான் அது."

பாலில் வெண்ணெய் போல, விறகில் தீ போல, விதையில் எண்ணெய்போல, இறைவன் உங்களுக்குள் உறைகிறான்.

ஒழுக்கமே பக்தி மார்க்கத்தின் வழி

வாழ்கைசாலைகளிலிருந்து ஏடுகளைப் புரட்டுவதினால் இறைவனை உணர்ந்து விடமுடியாது. நல்லொழுக்கம் வேண்டும ஆத்ம விசாரணையினால் தான் நல்லொழுக்கம் பிறக்கும். ராஜஸ்வ சேவைக்கே ஒழுக்கம் பிரதானமா யிருக்கும் பொழுது ஆத்மீகசேவைக்கு ஒழுக்கம் எவ்வளவு முக்கியம். ஆத்ம விசாரண நிஷ்காமிய கர்மயோகம், உபாசனை, பிராணயகாமம் ஆகியவைமூலம் மனமென்னும்

குரங்கை அடககி உளளுக்குளளே உள்ள மாணிக்கத்தை அடையலாம். மனமென்னுமகள்வன் இம்மாணிகக்கதை உள்ளுக்குள்ளே ஒளித்து வைத்திருக்கிறான. மனமாசைப் போககினால் தான் மாணிகக்கத்தை மீண்டுமெ பெறலாம்.

சிற்றின்ப சொகுசுகளுமெ இன்பங்களுமே துன்பத்தின் பிறபபிடமாகுமெ ஆனதினால ஐம்புலன்கள் வழியே செல்லுமெ மனசை எகாகக்கிர சிந்தனை மூலம் ஒருவழிப் படுத்தி இறைவனுடன் லயிகக்ச செய்யவேண்டும்.

அல்லா, புத்தா ஆகிய பெயர்கள் எல்லாம் ஒரே தன்மையன அகண்ட, அத்துவைத, பர, சித்தினைவைப் பெறுவதே வேத நூத்தின் போதனையாகும். வேதாந்தமெ ஒனறே எல்லாச சமயங்களினுடையும, மக்களையும ஐகியபபடுதத ஒனறாக இணைக்கவலலது.

கோபதனை அடக்கி பற்றற்று தொழில் புரியுங்கள். அடக்கம் 'அமரருள் உய்க்குமெ' என்பதை மறவாதீர்கள். 'நீதான் அது' என்பதை மறவாதீர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்திலல் அவதியுற்றபோதிலும் பாங்கியில் பணமற்றிருந்தபோதிலும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த இறைவன் உள்ளுக்குள் உறைகிறான் என்பதை உணருங்கள். அதை உணரப்பெறறால் ஒன்றும் உங்களுககு தீங்கிழைக்க முடியாது.

நீங்கள் எல்லோரும் ஆரோக்கியமாகவும் சகல சுகங்களுடனுமெ இருப்பீர்களாக."

இதன்பிறகு முனிசிபல் மண்டபத்தில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. பிரதமரும், சர். வைத்தியநாதரும் பிரசன்னமாயிருந்தாகள்.

மனிதனிடம டீலவாது; மலையிடமதான மனிதன் வரவேணடுமெனறுட சொலலுவா. ஆனல் சுவாமி சிவானந்தா. இமயமலையிலிருந்து, இந்த தீவாந்தரத்திலுளள நமமைப பாரக்கவும, நமககுத தரிசனம கொடுக்கவும் வந்துளளதைக் கண்டதும, "நம்மைப் பார்க்க மலையே வந்துவிட்டது" என்றார்.

"இமயமலைகுபடோய் சுவாமியைக் காண நமமில் எத்தனைபேருககு முடியும்? இதை உணாநதுதான சுவாமிகளே, நமக்குக் காட்சி அளிக்க நேரில் வந்துவிட்டார்; இமயமலை இப்படி வருமா? கம்பீரத்தில் இமயமலை போன்றவா, அன்பும் கருணையும நிறைநதுளளதால், இமயமலைக்கும மேம்பட்டவரே!" என்று அவர் வாதித்தார். இதற்கு என்ன பதில் சொல்வது?

சுவாமிகளைத் தரிசிக்க யாழ்ப்பாணம், மட்டக்களப்பு கணடி பகுதிகள் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஏராளமானவர்கள் கொழும்புவநதுள்ளனர்.

வயதான தன் தாயையும, சின்னக் குழந்தையையும் கூட்டிககொண்டு வந்த ஓர் அன்பர், தாம் சுவாமியை தொட்டு வணங்கியதாகப் பெருமையுடன் சொன்னர். அவருடைய தாயும கூட சுவாமியைத் தொட்டதாக உளளம பூரிக்கத் தெரிவித்தார். ஆனல் எல்லாரும் சுவாமியை இப்படியே தொடுவதாயின், அவர் பாடு மிகவும் சிரமமாகிவிடும். ஆகவே தயவுசெய்து அவரைத தொட முயற்சிக்காமல், தூரத்திலிருநதே தரிசிக்கும்படியும் சிதமபரத்திலே ஏகக்குழப்பம ஏற்பட்டதுபோல் செய்யாமல், எல்லாரும ஒழுங்காக அமைதியாக இருக்கவேணடுமென்று வரவற்புக் காரியதரிசி பன்முறையும் ஒலிபெருக்கிமூலம் கூட்டத்தினரை வேண்டிக்கொண்டார்.

ஆனல் நமது மேயரே, சுவாமியின் பாதத்தைத் தொட்டு வணக்கி வழிகாட்டியதைப் பார்த்த மற்றவர்களுக்கு காரியதரிசியின் உபதேசம் காதில் ஏறுமா? இதுச சமயம் அவரைத் தொடாவிட்டால் வேறு எப்போதுதான் தொடுவது!

கூட்டத்தின் தள்ளுமுள்ளு தாங்க முடியவில்லை. சுவாமியின் பக்கத்திலேயே சா. வைத்தியநாதன் இருந்து வந்தார். காலையில் புதுப்பட்டு ஷர்ட்டும் வேட்டியும் கட்டியிருந்தார்.

பின்னர் கைலாசநாதர் கோவிலில் அவர் ஷர்ட்டு பின்புறத்தில் கிழிக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து, தள்ளுமுள்ளுகள் எவ்வளவு பலமாக இருந்திருக்குமென்பதை உணரலாம.

போலீஸ் பாதுகாப்புதுகள பலமாக இருந்தது. என்னதான் அவர்கள் என்ன செய்ய முடியும்? இந்து தொண்டர் படையை அமைத்தால், இவ்வித சமயங்களில் அவர்கள் நல்ல சேவை செய்யலாம். இவ்விஷயங்களில் கிறிஸ்தவர்களைப் பார்த்து, இந்துக்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகமுண்டு.

குருஞானசம்பந்தர் சைவ மகா சபையினர் இன்று இரவு 9 மணிக்கு ஸ்டேஷனில் இந்தியா வண்டி வரும்போது, அதில் வரும சுவாமியை தரிசித்து, அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்க ஏற்பாடு செய்துள்ளனராம

—o—

"புதிய சகாப்தத்தின் அருணோதயமாக வந்திருக்கிறீர்கள்"

சுவாமி சிவானந்த சரஸ்வதிக்கு கொழும்பு மேயரின் நகர வரவேற்பு

கொழும்பு, அக்டோபர்—13, ரிஷிகேச தபோதனரான ஸ்ரீமத் சுவாமி சிவானந்த சரஸ்வதிக்கு கொழுமபு மேயர் டாக்டர் குமாரன் ரத்தினம், நேற்றுப் பிற்பகல் கொழும்பு முனிசிப்பல் சபையில கொழும்பு நகரமக்கள் சார்பாக வரவேற்பு உபசாரப பத்திரமொன்றை வாசித்தளித்தார். முனிசிப்பல் சபை அங்கத்தினர்களும், மற்றும் பிரமுகர்களுமம பிரசன்னமாயிருந்தனர்.

வரவேற்பு உபசாரப் பத்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

"ஸ்ரீ லங்காவின் தலைநகராகிய கொழும்புமாநகருக்கு விஜயம்செய்துள்ள தங்களுக்கு, கொழும்பு நகர மக்களின் சார்பாக எமது மனமார்ந்த வரவேற்பை அளிக்கிறோம்.

"சமாதானம், அன்பு, சாந்தம், ஐக்கியம் ஆகிய வற்றின் தூதராகவும், புதிய சகாப்தத்தின் அருணோதய மாகவும் நம்மிடையே இன்று வந்துள்ளீர்கள்.

"சாசுவதமான ஆன்மீக சாந்தியை அடையப்பெற்ற தாங்கள், கடந்த 20 வருடங்களாக உலகின் நாற்புறங் களுக்கும், ஒன்றுடனொன்று மோதுண்ணும் தேசங்களுக் கும், மதப்பித்துப் பிடித்தவர்களுக்கும், சமாதானத் திறகும, அமைதிக்கும், சுபீட்சத்திற்கும் இட்டுச் செல்லும் உண்மைவழியைப் போதித்துள்ளீர்கள.

"தாங்கள் துறவறத்தை மேற்கொள்ளு முன்னர், பன்னிரண்டு ஆண்டுகளாக ஏழைகளென்றும், தனவந்தர்க ளென்றுமே பாகுபாடு காணபிக்காமல் புகைழையும், பொரு ளையும கவனிக்காமல டாகடராக வைத்தியத் தொண்டாற்றி வந்ததைக் கேள்விப்படுமபொழுது நாம் பேருவகை அடை கிறோம டாக்டர் தொழிலுக்கே பூஷணமாக விளங்கி அதன் அந்தஸ்தை உயர்த்தியிருக்கிறீர்கள.

லௌகீக வாழ்க்கையை ரீதது, பல்கோடி மக்கள் போனந்தம எய்துவதற்கு வழியைக் காண்பிப்பதற்காகத் துறவறத்தை மேறகொண்ட பிற்பாடும், தன்னலமற்ற பணிபுரியும் இலட்சியத்தைக கடைப்பிடித்து வந்திருக் கிறீர்கள்.

"கர்மம் புரிவதே பிரார்த்தனை"

"கர்மம் புரிவதே பிராத்தனை செய்வதாகும்; எத் தகைய கருமங்களைசசெய்தாலும் அவற்றை இறைவனுக்கு 'அர்ப்பணம் செய்துவிடு' என்று சமீபத்தில் தகைளுடைய அன்பர்களுக்கு உபதேசித்திருந்தீர்கள். சத்தியம், அஹிம் சைமூலமே மனிதவர்க்கத்தின் இன்றைய பிரசனைகளைத் தீர்க்க முடியுமென்று வலியுறுத்தி யிருந்தீகள. தங்க ளுடைய இந்தப் போதனையானது மகாத்மா காந்தியின் போதனையை ஒத்திருக்கிறது. அன்னை இங்கு வரவேற் கும் பாக்கியம 23 வருடங்களுக்கு முன்னர் நமக்குமுன் இங்கு பதவி வகித்தவர்களுக்கு இருநதது.

ஜாதி, மத பேதமின்றி சாதாரண மக்களிடையே ஆன்மீகப் பிரசாரத்தைக் கூட்டுப் பிராத்தனைகள், பஜனை கள்மூலமும், உபந்நியாசங்கள மூலமும், தண்டுப்பிரசுரங்

களை விநியோகிப்பதன்மூலமும் செயவதறகாக 2 மாத அகிலஇந்திய யாத்திரையை ஆரம்பிததீர்கள. அந்தத் திக் விஜயத்தில் கொழுமபையும் மனதுவநது சேர்த்ததற்கு நமது டனமாநத நன்றியைத தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

தாங்கள் பல்லாண்டுகள் திட ஆரோக்கியத்துடன் வாழ்ந்து, தாங்கள் மேற்கொண்டுளள உயரிய லட்சியத் தைத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டுமென்பதே நமது அதிகியநத விருப்பமும், பிராாததனையுமாகும்."

—வீரகேசரி 13—10—50

—o—

இலட்சிய வாழ்வு

பணத்தை நம்ப வேண்டாம்

சுவாமி சிவானந்தரின் அமுதமொழி

வேதாந்த போதனை ஒன்றுதான் சகல சமயங்களையும் இணைக்குமை சக்தி வாய்ந்ததென சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் கொழும்பு நகர சபையினர் அன்னருக்கு அளித்த வரவேற்பின்போது குறிப்பிட்டார். அவர் தொடர்நது பேசியதாவது :

இலங்கை ஒரு புனிதமான தீவு. இராமபிரான், புத்த பிரான் போனற மகான்களின் பாதமபட்ட இடமல்லவா இலங்கை! சிவனெளிபாதமும் திருக்கதிர்காமமும், திகழும் இடமல்லவா இலங்கை? இறைவனை, முதல்வனை இந் நிறத்தன் என்று குறுகிய உளளத்தால் அளந்து அறிநது கொள்ள முடியாது.

புதகக நிலையகளிலிருநதுகொண்டு ஏடுகளைப் புரட்டுவதனல் இறைவனை உணாநது கொள்ள முடியாது. நல்லொழுக்கம் மிக முக்கியமாகும். இந்த நல்லொழுக்கமானது ஆகட விசாரணையாறலன் பிறக்கும. இராணுவ சேவைகது ஒழுகுகம மிக முககியமாக இருகும்போது ஆத்மீக சேவைகது ஒழுக்கம எவ்வளவு முக்கியமென பதைப்பற்றிச சொல்லவேணடியதே இல்லை.

சிறறின்ப சுகபோகஙகளுமு, இனபஙகளுமே துன்பதகினை பிறப்பிடமாகுமு. எனவே, ஐம்புலன்கள் வழியே செல்லுமு உளளதனைதத தியானத்தினமூலம ஒருவழிப படுததிக கொள்ளவேணடும.

இலஙகை இநதுக்கள இருஷிகேசத்தில் வசிக்கும் அடிகளாருக்குக் கொழும்பு நகர மண்டபத்தில் அளித்த வரவேறபின்போது அவர் கூறியதாவது .—

“ உளளதனை ஒரு வழிப்படுத்துவதற்கு உணவு பேருதவி புரிகின்றது. தூய்மையான உளளமே நமக்கு உற்ற நண்பனுமு. அதுவே மிகச் சிறநத குருவுமாகும். வாழ்க்கையில் ஒரு திட்டம அவசியமாகும். குறிதத ஒரு காலதினை பின்னா இறை வழிபாட்டிலுமு தியானததிலுமு காலதைக் கழிப்பதறகுத திட்டமிடவேண்டுமு. வாழ்க்கையிற் குறிதத ஒரு காலமு வரை உலகதது்துக்காக உழைத்தாற் போதுமானது.

“சொற்ப உணவை உட்கொள்ளுங்கள்; சொற்பபானம் அருநதுங்கள; சொற்பமாகப பேசுங்கள்; தக்கவருடன் சேருஙகள; சாந்தத்துடனுமு கட்டுப்பாடுடனும் வாழுஙகள.”

பல்கலைக் கழகத்திற் சுவாமி பேசும்போது எளிய வாழ்க்கையும் உயரிய சிந்தனையுமே ஒவ்வொருவரதும இலட்சியமாக இருக்கவேண்டு மெனப போதித்தார்.

வெள்ளவத்தையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திற் சுவாமி சிவானந்தா பேசியதின் சாரம வருமாறு :—

பாங்கியிற் சேமித்து வைக்கும பணத்தை நம்பிப் பலர் வாழ்கின்றனர். அஸ்ஸாம பூகம்பத்தின் விளைவாகப் பெரும் பணக்காரர்கள் திடீரெனப் பிச்சைகாரராகளாகி விட்டனர். எனவே, வெறும் பணத்தை நம்பி யிராமல் இறைவனை நம்பி வாழவேண்டும் 'நான்' என்ற ஆணவம அகன்று விடவேண்டும். 'துறவு' எனபது அனைத்தையும் அகற்றிவிட்டுக் காட்டுக்குச செல்வதல்ல. 'நான்' என்ற அகம்பாவத்தை விடுவதுதான் உண்மையான துறவாகும்.

ஆத்மீக மறுமலர்ச்சி

கொழும்பு நகரமண்டபத்தில நடைபெற்ற பகிரங்க வரவேற்பின்போது சர். க. வைத்தியநாதன் அவர்கள் சுவாமி சிவானந்தருக்கு வாசித்து வழஙகிய உபசாரப் பத்திரத்தின் ஒருபகுதி வருமாறு :—

ஸ்ரீராமர், கௌதமபுத்தர் ஆகியோரின் பாதங்கள் படிந்த புனிதத் தீவாகிய ஸ்ரீலங்காவுக்குத் தங்களை வரவேற்கின்றோம். இப் புனிதத் தருணத்திற் சொற்ப காலத்துக்கு முன்னர் அமெரிக்க—ஐரோப்பிய யாத்திரை செய்து திரும்பிய சுவாமி விவேகானந்தர் அவர்களை வரவேற்ற வைபவம் எமக்கு நினைவுக்கு வருகின்றது 50

வருடங்களுக்குப் பின்னர் இமாசலத்திலிருந்து உதிக்கும் ஆத்மீக மறுமலர்ச்சியின் உதயதாரகையான தங்களை வரவேற்கும் பாக்கியம் கிடைக்கப்பெற்றுள்ளோம்.

எங்கள் தமிழ்

இதன்பின்னர் சர். வைத்தியநாதன் பேசியதாவது :

இலங்கை இந்துக்களாகிய நாங்கள் சிறப்பாகச் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களாவோம்..... நாங்கள் பேசும் தமிழ் கலப்பற்ற தூய தமிழ் என்று சில சமயம் நாங்கள் பெருமையடைவதுண்டு. ஆனால் இதன் காரணமாக நவீன சக்திகளுக்கு இதைப் பயன்படுத்துவதிற் சிரமம் ஏற்படுவது உண்மையே.....

கௌதம புத்தரின் போதனைகளையும், சைவ வைஷ்ணவ அடியார்களின் அருள் உபதேசங்களையும் இலங்கையிலிருந்து பிரித்தெடுத்து விட்டால், இலங்கையில் ஏதாவது நாகரிகம், பண்பாடு என்பன எஞ்சியிருக்குமெனக் கூற முடியுமா?

—ஈழகேசரி, 15—10—50

—o—

கோட்டையிற் பக்தகோடி

சிவானந்த சரஸ்வதிக்கு வரவேற்பு

இந்தியா முழுவதும் யாத்திரை செய்து வரும் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் இன்று காலை (12—10—50) கொழும்பு, கோட்டைப்புகையிரதஸ்தானத்தில் வந்திறங்கி

ர்கள். கொழுமடு மேயர் டாக்டர் குமாரன் ரத்தினம், சா. கந்தையா வைத்தியநாதன் முதலியோர் உட்பட 3000 இந்துக்கள் கோட்டையிற் சுவாமி யவர்களை வரவேற்றனர்.

சுவாமியவர்கள இன்று காலை கப்பித்தாவதையி லுள்ள கைலாசநாதர் கோயிலில் ஒரு பிரசங்கம் செய்வார் கள. இன்று சாயந்திரம் நகரசபை வரவேற்பு வைபவம நடைபெறும். அநேக இந்துக்கள் கோட்டையில் வந்து நின்றபடியால், எல்லாருக்கும் தரிசனம் கொடுக்கும பொருட்டுச் சுவாமியவர்கள் ஒரு மேடைமீது சிறிதுநேரம ஏறி நின்றார்கள.

அதிகாலையிலேயே கோட்டைப் புகையிரத ஸ்தானத் திற் பக்த கோடிகள் வந்து சேர்ந்து விட்டனர்.

சுவாமி அவர்கள் புகையிரதத்தினின்றும் இறங்கியது தான தாமதம் 'அரோகரா அரோகரா' என்ற சத்தம் எழுந்தது. புகையிரத ஸ்தானம் மலர் மாலைகளாலும் தோர ணங்களாலும் நன்கு அலங்கரிகக்பட்டிருந்தது.

சுவாமியை வரவேற்பதற்கு விசேஷமான ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. பக்திரசம் ததும்பும் பாடல்கள் இன்னிசையுடன் ஓதப்பட்டன.

சர். கநதையா வைத்தியநாதன் சுவாமிகளுக்கு மலர் மாலை சூடி வரவேற்றார்.

சுவாமியின் தரிசனத்தைப் பெறுவதற்கு ஆண்களும் பெண்மணிகளும் குழநதைகளும் வரிசையாக நின்றனர்.

புகையிரத நிலையத்துக்கு வெளியேயும் மக்கள் திரண்டு நின்றனர்.

பிறபகல 3 மணிககுக் கொழுமபு ஈகாசனையின் சாஸ்பில் வரவேறபு உபசாரம நடைபெறறது.

பல்லேகல கழுகதகிற் சுவாமி சொறபொழிவு நிகழ்த்தியபின, ஈகர மணடபதில் அன்னருககுப் பகிரஙக வரவேறபு நடைபெற்றது. ஈரோச சாபநதிரம விவேகானநதசனையில ஒரு பிரசஙகம் செய்வார்கள

ரழதேகசரி, 15—10—50.

13-10-50 தேதியன்று காலையில ஞானச் செல்வர் ஸ்ரீ சிவானநதருக்கு பக்தகோடிகள பாதபூஜை செய்து பணிநதார்கள். பினனர் ஸ்ரீமதி சிவானந்த தமபையா அவர்களின் சந்திரதகுகு விஜடம செய்துவிட்டு கெலனியா புத்த ஆலயதகுகுச் சென்று தரிசிததார. பினனர் சைவ மஙகையர கழுகதகுக்கும் திருவாளர்கள K.V., K.A., பிள்ளை, டாகடர பத்மம, S. K. மூர்தகி ஆகிய அன்பர்கள் இல்லங்களுக்கும் அன்னருடைய அன்புக்கிணங்கிச் சென்று ஆசிகள வழஙகினர்.

அடுத்தபடியாக விவேகானநத சொசைட்டிக்கு விஜயம் செய்தார்.

இத்துடன் கொழும்பு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன இரவு பக்தகோடிகளால் பிரியா விடை தந்தனுப்பப்பட்டுப் புறப்பட்டார்.

தலைமன்னர் வரும் வழி மத்தியில் குருணைக்கல் என்னுமிடத்தில் ரயில் நிலையத்திலேயே ஸ்ரீ சுவாமிகளை சைவ மகாசபையினர் தரிசித்து ஆசி பெற்றுச் சென்றனர்.

14-10-50 ரயில் வண்டி தலைமன்னரை யடைந்தது. மறுபடியும் யாத்திரா மண்டபி கப்பலேறி தனுஷ்கோடி வந்து திவ்ய ஜீவன சங்கக் கிளையில் ஒப்புவிதுதுக் கொண்டனர்.

ஸ்ரீ சுவாமிகளின் இலங்கை விஜயத்தால் அம்மக்கள் பெற்ற பெரும் பேறை வியந்து 'ஈழகேசரி'யின் தலையங்கம் கூறுவதாவது :—

சுவாமி சிவானந்தர்

இருஷிகேசத்திலிருந்து பல்லாண்டாகத் தவஞ்செய்து வந்த சுவாமி சிவானந்தா அவர்கள் இப்போது தமது யாத்திரை மார்க்கத்தில் இலங்கைக்கும் வந்து சென்றுள்ளார். அவர் இலங்கை விஜயம் சகல நலங்களையும் நல்குவதாக. இலங்கைககு இவர் விஜயம் செய்ய நேர்ந்தமை இலங்கை மக்களின் நற்றவப் பயன் போலும். இலங்கைப் பிரதம மந்திரியார், கொழும்பு நகர சபைத் தலைவர், சர். கந்தையா வைத்தியநாதன் முதலிய பிரமுகர்கள் இவரை வரவேற்றனர். இவரின் அரிய நல்லுரைகள் மக்கட்கு நல்லறிவுண்டாக்கும் என்பதில் ஐயமின்று. தாம் மாத்திரமன்று உலக மக்களனைவும் உய்யவேண்டுமென்ற பரோபகார சிந்தையுடையவர். இக்காரணத்தாற்றான் யாத்திரையை ஆரம்பித்து நற்போதனைகளை எடுத்துரைக்கின்றனர். சமாதானம் நிலைபெற வேண்டில் உண்மையும் அஹிம்சையும் கைக்கொள்ளப்பட வேண்டுமென்றனர். இறை வழிபாடும், சமய வாழ்க்கையும் ஏற்பட்டவிடத்துச் சன்மார்க்கநெறி வளர்ச்சியுறுமெனத் தெரிவித்தார். அப்போதுதான் உலக சமாதானமும் அமைதியும் தளர்ச்சியின்றி நிலைபெறக்கூடுமென்றனர். இப் பெரியார் இந்துக்கள் அதிகமாக வசிக்கும் யாழ்பாணத்தைத் தரிசியாது திரும்பியது பெருங் குறையேயாகும். என்றாலும் யாழ்பாண மக்கள் அவர் நல்லுரைகளை நற்போதனைகளைப் பத்திரிகைகள்மூலமாக அறிந்து ஆறுதலடைந்தனர். இவருக்கு நமது வணக்கம் உரியதாகுக.

ஈழகேசரி. 15-10-50.

கொழுமபுஷில் அன்பர் பாடியளித்த சில பாடல்கள்.

பல்லவி

குருநாதன் அவனே அவனீ
கும்பிடு நன் மனமே

அநுபல்லவி

இருவினைப் பகையின் இடர்களைக் களைந்தவன்
இருநதபடியிருக்கும் ரகசியம் அறிந்தவன் (குரு)

சரணம

யாரையும் இகழாமல் யாரையும் புகழாமல்
யாரையும கெஞ்சாமல் யாரையும் கொஞ்சாமல்
ஊருக்குபகாரியாய் யாருக்கும் பாரமின்றி
உணமைப் பொது வெளியில் உலவும் யோகியாம்.

உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள
உயிராகி உயிர்க்குயிராம ஒளிதாணகிப்
கலகநிலையறியாத காட்சியாகி
கதியாகி மெய்ஞானக் கண்ணதாகி
இலகு சிதாகாசமதாய் பரமாகாச
இயலபாகி யினையொன்று மில்லாதாகி
அலகிலறிவானநதமாகி சச்சிதானநத
மயமாகி அமர்ந்தேதவி.

மோனமாங் கையாயத்தின
முகட்டில் ஊற்றெறநத்துவேத
கானகத் தோடுறங்குற கங்கைக்
கரைதனில் தவத்தமாநதே

தினமை காப்பதற்காய் திவய
ஜீவியதனை காட்டி
ஞானமுதளிகும் சுத்த சிவானந்தர்
திருததாள் போற்றி.

—o—

ஓம்

(1) சத்தியமும் அன்புமை எநதச் சமயத்திற்கும் பொதுவாய்
எத்திசையும் பரவச செய்வோமை எலலையில் பேரின்பம்.

(2) கீனதையும் குருனும் குறளுமை கிருஸ்துவர் நாதர்சொல்
சாதிபேதமில்லாச் சுத்த சமரச சன்மார்க்கம. [லும்

(3) ஒருயுரிக் குலமே இந்த உலகமெனறறிநதால்
பேர்வடிவ பேதம் பேசுமை பிரிவினைகள் உண்டோ.

(4) சாமிபோல் சாதிமதச் சண்டைகளை மூட்டிப்
பூமியைக் கெடுத்த தெல்லாம போதும், போதும், போதும்.

(5) அதவித வஸ்துணருமை அறிவதனை வளர்த்தே
எத்திசையும் பரவச்செய்வோம் எல்லையில பேரின்பம்.

(6) இந்த அரிய உபதேசதனை எமக்களிக்க வநத
சுவாமி சிவானந்தர் பாதமை என்றும் வாழி வாழி.

—o—

ஓம்

ஆத்ம ராமா

ஆத்ம ராமா ஆனநத ரமண அக்சுதா கேசவா ஹரி நாரா
[யண

ஆத்ம ராமா ஆனந்த ரமண அச்சுதா கேசவா ஹரி நாரா
[யண

(1) அன்பும் அருளும் ஆண்டிட அருள்வாய்
இன்பும் எழிலும் இலங்கிடச் செய்வாய்.
(2) சாதி மத வெறிச் சண்டையைத் தீர்ப்பாய்
நிதியும் அறிவும் நிலமிசைக் காப்பாய்.
(3) பூத்த மலர் போலே புன்னகை புரிவாய்
பூரண சக்தியை மழையெனப் பொழிவாய்.

—o—

ஓம்

சிவானந்தர் வாழ்த்து

வாழ்க ! வாழ்க ! வாழ்க ! வாழ்க !
வாழ்க ! வாழ்க ! வாழ்கவே !
வாழ்க ! சிவானந்தர் என்றும்
வாழ்க ! வாழ்க ! வாழ்கவே !

1. பத்த மடை சிறக்க வந்த
பகவன் நாமம் வாழ்கவே !
சுத்த சத்சிதானந்த
சொரூபன் பாதம் வாழ்கவே !

2. பத்தி ஞான கர்ம யோகப்
பாதை செல்லும் சாதகர்
சித்தி சோரச் சக்தி கல்கும்
சீரோன் பாதம் வாழ்கவே. !

3. சத்தியமும் அன்புங் கூடில்
சாந்தி தானே வருமென்று
எத்திசையும் கேட்கச் சொல்லும்
ஏந்தல் நாமம் வாழ்கவே !

4. கீதையுட குராணும் குறளுமெ
கிறிஸ்து நாதா செய்த
போதனையும் ஒனறே எனற
புனிதன பாதமெ வாழ்கவே !

5. வேதாநதத்தின் ஜீரகாஜனெ
விளக்க வநதோன வாழுகவே
போதாநதத்தின நிலையுணாந்த
புணையன நாமம் வாழ்கவே !

6. சகல உயிர்கள உய்யவும
சுகோதரத்வம் பரவவும்
அகில இநதிய யாத்திரை ஏறற
அணணல பாதமெ வாழ்கவே !

7. பாரதத்தின பரமார்த்திகத்தைப்
பரபப வநதோன் வாழ்கவே !
பார்வதியின் தவதனுதித்த
பரமஹம்ஸன் வாழ்கவே. !

ஓம்
சாநதி ! சாநதி ! சாநதி !

—o—

சிவாந்தர் அர்ச்சனை மாலை

பத்த மனைதனிற் பாவதி தனக்கு
உத்தம மகனை யுதித்தனை போற்றி !
தாசில் தாராந தவமுனை வெங்குனின்
மாசிலா மணியாய் வந்தனை போற்றி !

அப்பைய தீட்சிதர் ஆண்ட நல்மரபில்
குப்புச் சாமியாய்க் குலவின போறறி !
அன்னவர் ஆத்மாவே உனதுட லுற்றதாய்
பன்னுல கேத்த மன்னினை போற்றி !
தந்தையைப போல களரா மூறையில்
சிந்தனையில் சிவனுரு வைதனை போறறி !
சின்ன வயசில் சிவநாம ஜபத்தை
உன்னத நெறியா யுணர்ந்தனை போற்றி !
திருச்சியை யடைந்து திறமுடன கற்றே !
மருத்துவ நூல் பயில் மருகதே போற்றி !
மக்களுடற் பிணி மாற்றுந் தொழிலில்
மிக்கவுஞ் சித்தி யடைந்தனை போற்றி !
சிங்கப் பூரிலுஞ் செம்பி லானிலும்
எங்கும கீர்த்தி எயதினை போறறி !
கண்ணளி கொண்டு தாய்போற் பேணி
புணயவான் பட்டம் பெற்றனை போற்றி !
விவேகா னந்தரின் வீர காசசனையால்
விவேக வைராக்கிய மூற்றனை போறறி !
பகவான் ரமணரின் பார்வை பெற்றபின்
சுகவாழ்வு துறந்த சுத்தனை போற்றி !
சிவநா மத்துடன் சேவையி பிறகு
நவமான சித்திகள் நண்ணினை போற்றி !
பவப்பிணி போக்க பத்திரிநாத் செல்லுந்
தவத்தின் குடற்பிணி தவிக்கும நோக்கால்
சுவர்க்காஸ் ரம சேவை சுமந்தனை போற்றி !
அஷ்டாங்க யோகம் அனைத்தையும் பயின்று
இஷட சித்திகள் எய்தினை போற்றி !
வேதம் ஆகமம் வேறுள கலையெலாம்

ஓதும் முறைகளில் ஓப்பிலாய் போற்றி !
எம்மதத்தினரும் ஏற்றிடும் முறையில்
எம்மதக் கொள்கை இயம்புவாய் போற்றி !
வசிஷ்டர் தொடக்கம் வள்ளலார் வரைக்கும
விளம்பரும் ஞானிகள் விளம்பிய வெலலாம்
தெளளித் தநதருள் தேவே போற்றி !
பகவத் கீதையின் பாதை நான்கினையும
சகமுழு தறியச சாற்றுவாய் போற்றி !
சரியை கிரியை சாறறிடும யோகமம
உரிய நல்ஞான மெனும்படி நான்கையும்
சரிவர விளககும் சைவனே போற்றி !
ஆதி சங்கரர் ஆரிய மொழியில்
ஓதிய தெல்லாம் உலகு நன்கறிய
ஆங்கிலந் தன்னில் அருளுவாய் போற்றி !
ஆனந்த குடிரில் அடியரோ டுறைந்து
ஞானம் பொழியும் நாதனே போற்றி !
அன்புடன் வநது அடைகலம் புகுவோர்
தன்பந துடைக்கும் துரையே போற்றி !
தன்னைய டைபவர் தாளினை தொடுமுன்
அன்னவ ரடிபணி அண்ணலே போற்றி !
இருளிடர் போக்கு மிரவி போலிருந்துங்
குருவெனுஞ் செருக்கிலாக் குணமே போற்றி !
தெய்வ நெறியாந திருக் கழகத்தால்
உய்வழி உலகுக் குணர்த்துவாய் போற்றி !
நாயினேன் உடலம் நடுக்கா றுறுது !
காய்போற் காத்த தற்பரா போற்றி !
அத்தனே போற்றி ! அழகனே போற்றி !

முத்தனே போற்றி! முதல்வனே போற்றி!
பக்தனே போற்றி! பகவனே போற்றி!
சித்தனே போற்றி! சிமலனே போற்றி!
சிக்தனே போற்றி! சிவானந்த போற்றி!
போற்றி! போறறி! நின் பூவகழல் போற்றி!
வாழ்க! வாழுக! சிவானந்த ஜோதி!
வாழ்க! வாழ்க! யாத்திரை கோஷ்டி
வாழுக! அன்னர் அத்யாத்ம சேவை!
வாழ்க! என்றும் பாரத மாதா!
வாழ்க! வாழ்க! அவனி யெல்லாம!

க. இ.

—o—

கொழும்பு பொது வரவேற்பில் சுவாமி சிவானந்தரின் அறிவுரை

இலங்கை இந்துக்களின் சார்பாக வரவேற்புக் கமிட்டியின் தலைவர் சர். கந்தையா வைத்தியநாதன் வாசித்தளித்த உபசாரப்பத்திரத்தின் ஒரு பகுதி வருமாறு:—

"ஸ்ரீ ராமர், கௌதம புத்தர் ஆகியோரின் பாததூளி பட்ட புனிதத் தீவாகிய ஸ்ரீ லங்காவிற்கு தங்களை மனமுவந்து வரவேற்கிறோம். இப்புனித தருணத்தில், சொற்ப காலத்திற்கு முன்னர் அமெரிக்க-ஐரோப்பிய திக் விஜயத்தின் பின் திரும்பிய சுவாமி விவேகானந்தரை வரவேற்றது நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. 50 வருடங்களுக்கப் புறம் இமயமலையிலிருந்து உதிக்கும் ஆன்மீக மறுமலர்ச்சியின் உதய தாரகையான தங்களை வரவேற்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றுள்ளோம்."

மேற்படி உபசாரப் பத்திரத்தை வாசித்து முடிந்ததும் சர். கனகையா வைத்தியநாதன் பின்வருமாறு கூறினார்.

"இலங்கை இந்துக்களாகிய நாம முக்கியமாக சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாவோம; நம்முடைய சமயத்தின் புனிதத் தன்மையில் ஆழ்ந்த நம்பிக்கையுடைய எளிய மகன்கள் நம்முடை சமயத்தின் அகண்ட தனமையிலுமம அதில் பொதிந்து கிடக்கும் அரும பெரும் தத்துவங்களிலும் நாம் சில சமயஙகளில் மலைத்து தடுமாறுவதுமுண்டு.

"நாம் பேசும் தமிழ், கலப்பற்ற தமிழ என்று சில சமயம் நாம் பெருமையடைவதுமுண்டு. ஆனல் இதன் காரணமாக நவீன சக்திகளுக்கு அதைப் பயன்படுத்துவதில் சிரமம இருப்பதும் உண்மையே, இது சம்பந்தமாக நம்முடைய தமிழ்மொழி சிறிது 'தூசு தட்டப்படவேண்டியது' அவசியமாயினும் 'பிரம்பை' உபயோகிக்கவேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய புராதன எளிமையிலல் பயனும் இருக்கத்தான் செம்கிறது. அன்பும், அநதரங்க சக்தியுமே ஒரு குருவுக்கு நாம் அளிக்கக்கூடிய காணிக்கையாகும்"

மாயா பந்தக் கட்டுகளெலலாம் அறுத்தெறிந்த ஞானதீர வீரபுருஷராகிய தங்களின் ஆதரவையும் வழிகாட்டலையும் நாம் வேண்டி நிற்கிறோம். தயவு செய்து 'தடுத் தாட்கொள்ள வேண்டும்.'

ஆசியாவில் இன்று நடைபெறும் புரட்சிகளின் மத்தியில், இந்தியாவும் இலங்கையும் ஆன்மீகத்துறையில்

ஒன்றென்பதை நாடு டனதில பதிக்கவேண்டும். கௌதம புத்தரின் போதனை செல்வாக்கையும் சைவ வைஷ்ணவ அடியார்களின அரச உபதேசங்களையும் இலங்கையி லிருந்து பிரித்தெடுத்துவிட்டால, இலங்கையில் எதாவது நாகரிகமு, கலாசாரமு, பண்பு ஆகியவை எஞ்சியிருக்கு மெனறு கூறமுடியுமா? நாசெதை, மெக்கா ஆகிய இடங் களில் உதித்த சோதிப்பிழம்புகள்கூட பாதகண்டத்தில் கும்பித்து, பின்னர் இலங்கைக்கு ஒளியைப் பரப்பியுள் ளது. பாதகண்டதனை சமயமே நம்முடைய சமய மாகும்'. இமயமுமு, கங்கையும் நம்முடைய ஆன்மீக புகலிடங்களாகுமு.

—வீரகேசரி 13—10—50

—o—

தனுஷ்கோடிக்கு அடுத்தபடியாக மதுரை நகரில் ஸ்ரீ சுவாமிகளை வரவேற்க மிகப் பெரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கீழ்க்கண்ட மதுரை D. L. S. கிளை அறிக்கையால் அவ்வேற்பாடுகளை அறியலாம்.

மதுரை

மதுராபுரி வாசிகளான மகனீயர்களுக்கு

பெரியோர்களால், பூஜிக்கத்தக்குந்தவர்களே!

ஆச்சரியம், இதுபோல் கிடைக்காது. இதுவரை இது போல் ஏற்படாதது. ஸ்ரீசிவானந்த யாத்ரா மண்டலி மதுரை மாநகரத்திற்கு விஜயம் செய்கிறது. வருகிற அக்டோபர்மீ 14உ நடுராத்திரி முதல் 17உவரை மதுரையில் தங்கும். செம்டம்பர்மீ 9உ ரிஷிகேசம் ஆனந்த குடீரி விருந்து ராமேஸ்வரயாத்திரையாக புறப்படுகிறது. 12உ முதல் 14உ சாயங்காலம்வரை ராமேஸ்வரம் தனுஷ்கோடி முகாம் அக்டோபர்மீ 31உ ரிஷிகேசம் சேரும்.

மண்டலியின் பொதுவான முக்கிய நோக்கம், அளவு கடந்த சக்தி வாய்ந்த அத்யாத்ம பிரசாரமே.

நோக்கங்களும், உத்தேசங்களும் :-

1. பொதுக்கூட்டங்கள் ஸத்ஸங்கங்கள் ஸங்கீர்த்தனம். சாதனங்கள் மூலம் மிகுதியான ஆத்மிக க்ஷேமம் ஜனங்களிடையே உண்டாக்கிவைப்பது.

2. தீராத நோயுள்ள வியாதியஸ்தர்களுக்கு பலமுறைகளின்படி தகுந்த ஔஷதோபசாரம் குணமடையச் செய்து வைப்பது.

3 பத்திரிகைகள் வேதாந்தங்கள் ஸம்பந்தமாக எல்லா பாஷைகளிலும் துண்டுப்பிரசுரங்கள் அச்சடித்து எல்லோருக்

கும் இலவசமாக அளித்து ஜனங்களிடை தைஷீக அறிவை பாவச் செய்தல்.

4. பள்ளிகள் கல்லூரிகளிலுள்ள மாணக்கர்களுகது அறிவைப் புகட்டி யோகஸாதன முறைகள் மூலம் அவர்களினிடை அத்யாத்மசக்தி புத்துயிர்பெற்று விளங்கும்படி செய்வதும்.

உலகத்தின் தற்கால நிலை யாவரும் அறிந்ததே. எங்கும குழப்பமே ஒழுங்கின்மையே. பலமுள்ளவனே ஜயமுள்ளவன். பொது மக்களிடையே சாந்தியில்லை, திருபதியில்லை ஸம்ருத்தியில்லை. சண்டைகளில் த்வேஷம் மோசடிதாண்டவமாடுகின்றன. பயம், அபாயம், வறுமை பஞ்சம, பிணி, துக்கமேதான் உலாவிநிற்க காணப்படுகிறது. கணடே காட்சி கொண்டதே கோலம் என்பதை அடிப்படையாக உள்ளம உலகவாஸீன ஜச்வர்யங்களே கொண்டாடப்பட்டு வருகின்றன. பரலோகம், பகவானெருவரிருக்கிறார் என்ற ஞாபகமே இல்லாது ஆக்கப்பட்டுவருகிறது. ரிஷிகள் ஞானிகள் நிரைந்துள்ளதும் ஸம்ருத்தியே பொங்கிவரும் புனிதமான இந்த பாரத நாடும் 150வருஷ அன்னிய அரசாகூயிலல் மற்ற தேசங்களைப் போலவே ஆத்மசக்தியிழந்த தர்தசையை அடையும்படி செய்யப்பட்டு விட்டது. ஏதும் பகவதவதாரம் ஏற்பட்டு தர்மம் நிலைநாட்டப் பட்டாலன்றி நாடு மூந்திய மேஹான்னத நிலைமையை அடையாதென்றும் ஒவ்வொருவருமே உணருகிறார்கள். விரும்பவும செய்கிறார்கள். குறைவு இருப்பதுமட்டும் எல்லோராலும அறியப்படுகிறதேயன்றி தகுந்த பரிகாரம் சொல்லுவாருமில்லை. செய்வாருமில்லை. ஸரியான ஸந்தர்ப்பம் வந்துவிட்டதை உத்தேசித்து கருணை மூர்த்தியான பகவான் தாமத்தை நிலைநாட்டிவைத்து, சாந்தி ஸமாதானம் உலாவச

செய்து நாடுசெழிக்கச்செய்து ஜனங்களை ஆத்மோன்னதி அடையச்செய்ய தற்காலம் அவதரித்து ரிஷிகேசத்தில் ஆனந்தகுடீர் ஆச்சரமத்தில் ஸன்யாசி சிரேஷ்டரான ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி மகாராஜின் உருவத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். அவர்களை புதிதாக அறிமுகப்படுத்திவைக்க தேவையில்லை. தற்காலத்தில உதித்த ஒரு உத்தம மஹாஞான வ்யகத்தியாகவே யாவரும் அறிந்து கொண்டு விட்டிருக்கிறார்கள். அவர் ஒருவருடையவரென்று மட்டுமில்லாது உலக முழுவதற்குமே சொந்தமானவராகி நிற்கின்றார். அதனாலேயே கிழக்கு, மேற்கு, எல்லா திசைகளிலும் அவருடைய மகத்வத்தை அறிந்து அவரை எல்லோருமே ஏகமனதுடன் போற்றி வருகிறார்கள். 'ஜகத் ஜோதி' யென்றும் உலக ஆசான் யென்றும் பட்டங்கள் கொடுக்கப்பட்டுவருகிறார். அவர் ஞானிகளில் சிறந்த ஞானியாகவும் உத்தம பக்தராகவும உயர்வான யோகியாகவும் ஒப்பில்லாத காம யோகியாகவும எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற ஸ்வரூபத்துடன் விளங்கிவருகிறார். அவர் எல்லாமே தான், எதுவாக அவர் இல்லை யென்பதைத்தான் சொல்ல முடியாது. ஆனல் ஆத்ம ஸாக்ஷாத்காரமடைந்து கருணையினல் அன்பினல் துக்கஸாகரத்தில உழன்று உண்மையறியாது தத்தளிக்கும் ஜீவர்களை கைதூக்கிவிட்டு அவரவருக்கு சொந்தமான ப்ரம்மானந்த நிலையில் ஸ்தாபித்து வைக்கதானகவே முன்வந்துள்ள மஹானிடத்தில் இவைகள் பிரகாசிப்பது ஒரு அதிசயமல்ல. பாரத நாட்டில் இதுவரை தோன்றி மறைந்த மஹனியர்களின் தற்காலத்திற குரிய திரண்ட புதிய உருவமென்றே கொள்ளவேண்டும். ஸ்ரீசைதன்ய மஹாப்பிரபு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர், ஸ்ரீரமணபகவான் இன்னும் எத்தனையோ மஹானீ

யர்களின் ஸ்வாபவம குணக்கள் தன்மை நிரம்பப்பெற்றவர், எல்லா மதாச்சாரியர்களின் ஒருங்கே சேர்க்கப்பட்ட ஸ்வரூபமே கணக்கிலடங்காத அவருடைய வ்யாஸங்கள் உபன்யாஸகள் ஸம்பாஷணைகள் உபதேசங்கள் அவருடைய ஸர்வஞ்ஞத் தன்மையைக்காட்டியும் மிகவும் தைகக்க கூடியவைகளாகவும் சிறந்த பலனை அளிக்கக கூடியனவாகவுமிருப்பதை இதுவரை எத்தனையோ ஜீவர்கள் அடைந்து நல்வழிப்பட்டு ஆத்ம லாபம் பெற்றுமிருக்கிறார்கள். இதபபுனிதமான நம் நாட்டை அதற்கேற்பட்ட துர்தசையிலிருந்தும் காப்பாற்றி அதன் மூலம் உலகத்தையே க்ஷேம மடையச் செய்துவைகக்கூடியவர் மஹாராஜ் ஒருவரேதான். அவர் ஒருவரேதான் நாட்டின் இடுக்கண்களைப் போக்கி மீண்டும் சாந்தி ஸமாதானம் ஸுகக்ஷேமம் ஸம்ருத்தி உலாவச்செய்து வைக்கக்கூடியவர்

அப்படிப்பட்ட மஹான் ஸ்ரீ சிவாநந்த மஹாராஜ் அவர்களை நேரில் தரிசித்தும் அவருடன் இரண்டு தினங்கள் கூடியிருந்து ஸத்ஸங்கம் செய்து மேல்கண்ட உத்தம லாபங்களை அடைந்து கொள்ளும் பாக்கியம் இந்த தக்ஷிண பாரதத்திலுள்ளவர்களுக்குக் கிடைக்கப்போகின்றது. மஹாராஜ் அவர்களின் விஜயம் ஸாமான்யமாக ஏற்படக்கூடியதல்லவாகையால் ஒவ்வொருவரும் இந்த அரிய சந்தர்ப்பத்தை கைவிடக்கூடாது. இந்த உத்தமரை உண்டாக்கி உலகத்திற்கு அளித்ததும் இந்த தக்ஷிண பாரதமேதான். அவரை நேரில் தரிசிக்ககக்கிடைத்து ஆசீர்வாதம் பெறுவது நம்முடைய பாக்கியமென்றே கருதவேண்டும்.

மஹாராஜரை வரவேற்று உபசரிக்க வடக்கே உள்ள உயர் நகரங்கள் எல்லாம் போட்டிபிட்டுக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக தென்தேசத்திலுள்ள நாமும் அவரை

தகுந்தபடி வரவேற்று சிறந்து உபசரித்து அனுப்புவது நம்முடைய ஹிந்து தர்மத்தைச் சார்ந்த முதல் கடமையாகும். தாமசிந்தனை உள்ளவாகளுக்கு அவரவர்கள் மனதில் விரும்பியபடி தாமகாரியங்களை செய்து முடித்து குறித்த பலன் நன்மையை அடைந்து கொள்ள இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும மஹராஜ் அதற்கு தகுந்தபடி உதவி யளித்து காரியங்களை இனிது முடித்துக்கொடுக்கக் கூடு மாகையால் எல்லா தர்மங்களையும் நடத்திக்கொள்ள மஹரா ராஜே உத்தமமான பாத்திரமுமாகிறார்.

மஹராஜின் இந்த ஒப்பில்லாத புனித கோஷ்டி யாத் திரைக்கு தகுந்த அமைப்புகள் ஏற்பாடுகள் செய்துகொள்ள ஏராளமான பொருள் தேவையாக விருக்கும. அதற்காக தக்ஷிண பாரதத்திலும் எல்லோரும (1) கோஷ்டியின் யாத்திரையில் பொது ஜனங்களுக்கு மிகுந்த லாபம் க்ஷேமம் கிடைக்கவேண்டியும் (2) அந்த அந்த தேசபாஷை களில் துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாக அச்சடித்து இலவச மாக ஜனங்களுக்கு வழங்குவதற்காகவும் (3) வைத்திய உதவிக்கு போதுமான அளவு மருந்துகள தயார்செய்து வைத்துக் கொள்ளுவதற்காகவும் ஏராளமாக, விட்டுப்பொரு தவி செய்து இந்த ஸத்காரியத்தில் ஈடுபட்டு அதன் உத்தம பலனையும புண்ணியத்தையும் அடைந்து கொள்ள மிகவும் வணக்கத்துடன் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

15-10-50 தேதியன்று காலை ஸ்ரீ சிவானந்தர் மதுரை வந்ததும் பெருத்த வரவேற்பு நடந்தது. பாத பூஜையும் விமரிசையாக செய்யப்பட்டது. பின்னர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்தார். ஆலய நிர்வாகிகளால் தவச் செல்வர் ஆடம்பரமாக வர வேற்று உபசரிக்கப்பட்டார்.

சிறிது ஓய்வுக்குப்புறம் சேதுபதி உயர்தரப் பாடசாலையிலும், திவ்ய ஜீவன சங்கக்கிளையிலும் ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில் பிரகாரத்திலும் அரிய சொற்பொழிவுகளும் சங்கீர்த்தனமும் நடைபெற்றன. பல நல்லுபதேசங்களை அன்பர்களனைவருக்கும் ஸ்ரீ சுவாமி வாரி வழங்கினர். மதுரை மாநகர் மகாஜன சார்பிலும், ஸ்ரீ சாயிபாபா பக்த சபையாராலும் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டன.

—o—

பூமண்டல சத்குரு

ஸ்ரீ ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி ஜீ மஹாராஜ் அவர்களுக்கு மதுரை மாநகர் மஹாஜனங்களால் வாசித்தளிக்கப்பட்ட

வரவேற்பு

உபசாரப்பத்திரம்

தென் நாட்டின் தவச்செல்வரே வருக! வருக!

நெல்லை ஜில்லாவை ஜன்மபூமியாய்க் கொண்டு உலக பூஜிதரான அப்பைய தீக்ஷிதரின் அரும் பெரும் மரபிலுதித்து, பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப் பிரஸ்த மாகிய ஆஸ்ரமங்களைத்தாண்டி, நான்காவது ஆஸ்ரமத்துக் கணிகலனுய் ஆன்மப் பிரகாசம் அகில உலகும் ஒளிபரப்ப வெள்ளிப்பனி மலைச்சாரலில் ரிஷீகேசமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஆனந்த குடிரில் அமர்ந்தவாறே தெய்வீக வாழ்க்கை நெறியை உலகுக்களித்துவரும் உத்தமரே வருக! வருக!

பண்டைப் புகழ் படைத்த பாண்டி மன்னருக்குத் தலை நகரமாகிய இம்மதுரை மாநகருக்குப் பரிவார சகிதமாய் உங்கள் வரவு நல்வரவாகுக!

சேது ஸ்நானமுடித்து சிங்களத்தீவையும் கண்டு களித்து உற்சாகத்துடன் வரும உங்களை வரவேற்கும் பாக்கியத்தைப் பெற்றது இம்மதுரை வாசிகளாகிய எங்கள் பூர்வ புண்ணிய விசேஷமென்றே கருதுகின்றோம. நடமாடும் தீர்த்த ரூபமாய் விளங்கும் உங்களுடைய பாத ஸ்பர்சமும் அருள் நோக்கும் அபூர்வமாய்க் கிடைக்கும் அரும் பேறுகளேயாகும.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரே !

நான்கு வேதங்களிலும் ஜீவாதாரமாயுள்ள பிரணவத்தை பண்டிதர், பாமரர் யாவரும் ஓதவும், பாடவும் பண்ணிவைத்த பேருதவிக்கு உலகம் செய்யும் கைம்மாறு யாதுளது.

பத்திரிகை வாயிலாகவும், புத்தகங்களின் வாயிலாக உங்களுடைய அரும் பெரும உபதேசங்களைப் பார்த்துப் படித்துணர்கிறோமாயினும், நேரில் பொழியும் வாக்கியாமிருதத்தைக் கேட்கும் பேறு இன்றுதான் அடைந்தோம். மூன்றுவித தாபங்களால் வாடி வதங்கித் தவிக்கும் எம்போன்றோர்க்கு உங்கள் மணிவாசகம் பரம ஔஷதமாயிருக்குமென்பது ஒரு தலை.

இப்படிக்கு,
மதுரை மஹாஜனங்கள்.

ஸ்ரீ K. M. S. லக்ஷ்மணமய்யர்,
வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

பூரீ ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி

மஹாராஜ அவர்களுக்கு மதுரை பூரீ ஸாயிபாபா

பக்த சபையார் வாசித்தளித்த

வரவேற்பு இதழ்

ஆனந்தக் குடிரில் மிளிரும் ஞானச்சுடரே வருக ! வருக !!

என்னுட்டினும சிறந்த தென்னாடாகிய பாண்டிய நாட்டினர்களின் தலைநகராய் விளங்கும் இம் மதுரையம்பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பூரீ மீனாட்சிசுந்தரேசப் பெருமானின் கிருபாகடாக்ஷத்தால் தங்களை தரிசிக்கும் பாக்கியம் பெற்றது குறித்து அகமகிழ்ந்து தங்களுக்கு நல்வரவு கூறுகிறோம்.

பிறர்க்கென வாழும் பெருந்தகையீர் !

தங்களின் பிறப்பிடமாகிய அருள்தீப மலேப்பிராந்தியத்தின் புகழுக்கொப்ப மானிடவர்க்கத்தின் பிணியைப் போக்கும் பண்டிதனாய் உண்மைத்தொண்டை இளம்பிராயமுதலே செய்துவந்துள்ளீர். தாங்கள் மூன்று ஆசிரமங்களைக்கடந்து நான்காவது ஆசிரமத்திற் கணிகலனாய் விளங்கி, மக்களுக்கு பத்திரிகை வாயிலாகவும், புத்தகங்களின் வாயிலாகவும், ஆத்மீபோதம்செய்து வருவதுடன், தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை, அகில இந்தியாவெங்கும் ஸ்தாபித்து தொண்டுசெய்து வருகிறீர்கள்.

தங்களின் ஜீவாதார ஞானபோத விளக்கம், பண்டிதனும், பாமரனும், சிறுவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும் முறையில் எல்லோர் மனதிலும் பதிந்து வருகிறது. "ஸாயிஸுதா"வில் தங்கள் எழுதிவரும் ஞான

போதக் கட்டுரையைப் படித்து பயனடைந்து வருவதுடன் ஜாதிமத பேதமற்ற சமரஸ சன்மார்க்கத்தை அனுபவத்தில் இமயமுதல் குமரிவரை பரப்பி வருவதைக்கண்டு களிப்புறுகிறோம்.

ரிஷிகேசமென்னும் திவ்விய தெய்வீகபதியாகிய தங்கள் ஆச்ரமத்தை அனுக்ரஹனவந்தாகளால்தான் முடியுமென்றிருந்ததை எல்லாமக்களும் தங்களின் தரிசனத்தைப் பெற்ற தங்கள் பரிவாரங்களுடன் எழுந்தருளி காக்ஷியளித்ததை எண்ணி பெறும்பேறெய்துகிறோம.

தங்களின் தரிசனமும், திருவாசகமும் மக்களுக்குபோர் ஆறுதல அளிக்குமென நம்புகிறோம்.

மதுரை
15-10-50

தாங்கள் அன்பிற்குரிய,
ஸ்ரீ ஸாயிபாபா பக்த சபையார்.

அறிஞர் தொ. ரா. ப. அவர்களால் செந்தமிழ்ப் பாமாலை ஒன்றும் சூட்டப்பட்டது.

அஃது வருமாறு:—

மஹாத்மா சிவானந்த சுவாமிகள்
திவ்விய சமூகத்திற்கு

சேது தரிசனஞ் செய்திங் கெழுந்தருளும்
சாதுசிவா னந்த சரஸ்வதி நமம—பாதமலர்
இன்றுயாம சேவித்தோம் இம்மதுரை நன்னகரில்
நன்று பெருகிடவே நாம்.

நாமத்தைக் கேட்டிருந்தோம் நல்ல தெய்வீகநெறி
தாமத்தை அங்கங்கு தாபித்தீர்—நேமத்தால்
பண்டுபயந் தானே பகலிரவு பாடுபட்டீர்
கண்டனந்த வையகத்தைக் கண்டு.

கண்டதே காட்சி கடவுளிலே என்றறற்றும்
சண்டிகள் தாமலிந்த தாரணியில்—பண்டைநாள்
மேன்மை விளங்கிடவே வெற்றிமிகு நாமத்தைத்
தான்மொழிந்தீர் சந்ததமும் தான்.

தானந்தவம வேள்வி தான்மறவா தாற்றியக்கால்
ஆனந்த வாழ்வெய்த லாமென்றே—ஆனந்தக்
கண்ணனருள் வாக்கியத்தை கண்டெவரும் தாம்
பண்ணினீர் அன்புடனே பார்த்து. [தெளிய
பார்த்தோதாம் பரிசித்தோதாம் பாதமலர் பூசித்தோதாம்
சேர்த்தெமம்மை ஆட்கொள்வீர் என்றுரைத்தோதாம்—சோதிகழும்
அவ்விருஷி கேசமதில் ஆச்சிரமம் கொண்டவா!
செவ்வியற்கருணை செய்.

தொ. ரா. ப.
அடிமை
தொ. ரா. ப.
30, மால் 1-வது தெரு மதுரை.

ஸ்ரீ சுவாமிகள மதுரையில் டாக்டர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் இல்லத்துக்கும் D. L. S. கிளைத் தலைவர் ஸ்ரீ C. S. விஸ்வநாத அய்யர் அவர்கள் வீட்டுக்கும் சென்று அனைவரையும் ஆசீர்வதித்து வந்தார்.

இத்துடன் மதுரை நிகழ்ச்சிகள் முடைவடைந்தன.

மதுரையில் சிவானந்தர்

மதுரை, அக், 15— இன்று காலையில் மதுரை வந்து சேர்ந்த சுவாமி சிவானந்த சரஸ்வதிக்கு ரெயில்வேஸ்டேஷனில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் சிவானந்த சரஸ்வதி நகர வீதிகளின் வழியாக ஊர்வலமாகச் சென்று மீனாட்சியம்மன் கோவிலுக்கு விஜயம் செய்தார்.

—தினமணி, 16-10—50

விருதுநகர்

விருதுநகரில் விசேட வரவேற்பும் ஊர்வலமும நடநதன. பல வரவேறபு இதழகள் வாசித்தளிக்கப் பட்டன. அவற்றிறகெல்லாம் ஸ்ரீசுவாமிகள் தக்கவாறு பதிலளித்து ஆசிபுரிநதார.

ஸ்ரீசுபபரமணிய சுவாமி ஆலயத்துககு உள்ளூர் கோவிலுக்கும் சென்று தரிசிதததார.

விருதுநகர் காரைக்காலம்மையார் பெண்கள
வைதீக வித்தியாலய சங்கத்தார
பணிவுடன் வழங்கிய வரவேற்பு

வாழ்த்துப் பா மலர்

நேரிசை யாசிரியப்பா

தெய்வ மணகுமெ செநதமிழ் நாடு
செய்தவப் பயனுய்த் தீமபுனல் பொருநைத
தண்கரைத் தோன்றித் தண்டமிழ்க குறுமுனி
விணபொரு குடுமி மிளிர்கயி லாயப்
பொருப்பினை நோககிப் புறப்பட்டாற்போல்
தமியராச் சென்று தமனிய இமய
மலையினற் சாரலில வளஞ்சாரா பூம்பொழில்
வருடிய சூழல் இருடிகே சம்தனில்
பற்பல ஆண்டுகள் பொற்புற யோகம
பணணிய மாதவப புண்ணிய மூர்த்தி!
பவானநத ஞான சிவானநத சரஸ்வதி
திருப்பெயா மக்கள் சிரத்திற் கொண்டு
போற்றிட வந்த புவன சற்குரு!
வேதா கமமும வேதாந்த சாகாரம்
ஆங்கிலம் செந்தமிழ் ஆரியம் பல பல

மொழித்தூறை யாவுமே பழுத்ததெய்க கருத்தெல்லாம்
எழுத்தெணிப் படித்த விழுத்தவ முனிவ!
உலகியல் மதங்களின் உண்ணடக னெல்லாம்
பிரமம் ஒன்றினையே பேசுவ தென்ன
அனைகையின் நெல்லிபோல அழுதமா மொழியால்20
மனமுவெனப் பொழியுமே செழுமுகில்! யாண்டும்
தெய்வ நெறியாம் செகதிர் பரப்பும்
ஞாயிறே வருக! ஞாலம ழுழுதும்
வணங்கியும வாழ்த்தியும் வாழ்நதிட
வருக வருக! வாழி வாழியவே! 25

திருச்சிற்றம்பலம்

விருதுநகர்
16—10—50

காரைக்காலம்மையார் பெண்கள்
வைதீக வித்தியாலய சங்கத்தார்.

—o—

விருதுநகரிலுள்ள சமூகங்களும் சங்கங்களும்
சேர்ந்து வாசித்தளித்த

வரவேற்பு இதழ்

உலகம் உய்யவந்த உத்தம தவ சிரேஷ்டரே!

தங்களை இவண் வரவேற்று உபசரிக்கக் கிடைத்த பாக்கியம் நாங்கள முற்பிறப்பில் செய்த நற்பயனே. நம் நாடு வியாசர், யாக்ஞவல்கியர், கபிலர், சங்கரர், புத்தர், வள்ளுவர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலிய ஆத்ம ஞானிகளை ஈன்றெடுத்த நாடு. அவர்கள் ஏற்றிய விளக்கு இன்னும் அணையவில்லை. அவற்றை தாண்டி

இன்னும் ஒளி மினிரச் செய்யும திருப்பணியில் வாழ்க் கையை அர்பபணித்திருகதும் தங்களை வரவேற்றுக் களிப் படைகிறோம்.

கண்ணன் காட்டிய வழியில் செல்லும் கர்மயோகியே !!

"தீயைப் புகைசூழ்வது போலவும், கண்ணுடியைக் களிமபு மூடுவது போலவும் கர்பபத்தைக் கர்ப்பப்பைமூடி நிற்பது போலவும் ரஜோ குணம் மனிதன் அறிவைச் சூழ்ந்துகொள்ளுகிறது" என்று கண்ணன் சொல்லியது போல அகங்காரம் இன்று அகில உலகத்தையும் ஆட்டி வைக்கிறது. உலகம் மெஞ்ஞானத்தை மறந்து விஞ் ஞானத்தை நம்பி அஞ்ஞானத்தில் விழைந்து சென்று கொண்டிருக்கிறது. என்று அழிவு வருமோ என்று மக்கள் அஞ்சி நிற்கின்றனர். இச்சமயத்தில் தங்கள் உப தேசம் ஊற்றெடுத்து உலகெங்கும் பரவி உண்மை ஞானத் தைப் பாப்பி உய்விக்குமாக.

உபநிஷத்தின் உண்மைச் சிகரமே !!!

"ஞானிகள், வெவ்வேறு பெயரும் உருவமும் கொண்ட பொருள்களின் ஒருமையைக் கண்டு வேற்றுமை யுணர்ச் சியை அகற்றிவிட்டு ஒளிரும் பரம்பொருளை அடைவார்கள்" என்று முண்டக உபநிஷதம் கூறுகிறது. அவ்வாறு வேற் றுமையில் ஒற்றுமையைக்கண்ட தாங்கள் உலகிற்கும் அவ் வுணர்ச்சியை ஊட்ட இமயம் முதல் குமரிவரை திக்விஜயம் செய்துகொண்டிருப்பது கண்டு மக்களின் கலி நீங்கிவிடு மென ஓர்ந்து நாங்கள் பேருவகை கொள்கின்றோம்.

"யோக முறையில் நின்று பற்றை நீக்கித் தொழில்களைச்

செய்" எனறு நான் என சொனனேபில் மூனசொதி கொட்டு யது இன்னுமு எட்கள் காதுகளில் ஒலித்துகொனடுருக் கிறது.

வேதாநத விற்பன்ரதே!!:

வேதத்தின் உட்பொருளையும் புராணங்களின் சூக்கூடப் பொருள்களையும் சாதாரண மனிதனுக்கும எளிதில் புரியம படி சொறபொழிவுகள் நிகழ்த்தியும, பல நூல்கள் எழுதி யும் தெய்வநெறிக்கழகங்களை உலகத்தின் பல பாகங்களிலும் ஏற்படுத்தி ஆக்கபூர்வ போதனைகளை பரப்பிவரும் தவ சிரேஷ்டராகிய தாங்கள் இன்று எங்கள் மத்தியிலிருப்பது கண்டு இநநகர் சமூகங்கள் சமயங்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் இறும்பூது எய்துகிறோம்.

தவத்தில் சிறநத யோக சிரேஷ்டரே!!"!

தாங்களை ஞானயோகி, தாங்களை ராஜயோகி, தாங் களை பக்தியோகி, தாங்களை கர்மயோகி, தாங்களை எல்லாம். இமயத்திலிருநது வீசும் தங்கள் ஞானஒளி உலகெங்கும் சென்று இருளைப் போக்கி ஆத்ம ஞானத்தை நிரப்பி சாந்தியை அளிக்குமாக. சாந்தி! சாந்தி!! சாநதி!!!

இப்படிக்கு

சமரச சன்மார்க்க சநகம்.

அருணகிரிநாதர் திருப்புகழ்.

சத்தியஞான சபையைச் சேர்ந்த ஜோதி பக்திப் பெண்கள் கழகம்.

காளைக்சாலம்மையார் சங்கம.

வேலைய மாதர் சநகம.

தெய்வநெறிக் கழகம்.

காராகாத்தார் கல்வி முன்னேற்ற சங்கம்.
ஆயிர வைசிய காசுக்காரச் செட்டியார்கள்.
தேவர் மகாஜன சங்கம். எர்ரகொல்ல ராஜகம்பள மஹராஜன சங்கம்.
விஸ்வகர்ம வாலிபர் சங்கம், விஸ்வகர்ம சங்கீத பஜனலயம்.
ஸ்ரீகனகசபாபதி சுவாமி கோவில் தேவஸ்தானம்.
செட்டியார் சமூகம்.
அலமபட்டி தேவாங்கர் தொழிலாளர் சங்கம்.
சீர்குடி வேளாளர் சமூகத்தார்.
சாமிபார் நாகப்ப நாயக்கர் சாதுக்கள் சங்கம்.
தெலுங்குச் செட்டியார் சமூகம்.
தேவேந்திர குலத்தார். அருந்ததியார் சமூகம்.
மருத்துவ குல சங்கம் ஆதித்திராவிட சமூகம்.

விருதுநகர்,
16—10—50.

—o—

அருட்பெரும்சோதி, தனிப்பெருங்கருணை.

ரிஷிகேசம் பூமண்டல சத்குரு ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் விருதுநகருக்கு எழுந்தருளியபோது விருதுநகர் சமரச சன்மார்க சங்கத்தார் உவந்தளித்த வரவேற்பு நன்மொழி.

உயர்ஞான சத்குருவே !

உலகமெல்லாம் உண்மை நெறியாகிய தெய்வ நெறியைக் கடைபிடித்து உய்யும்படி அகில உலகத் தெய்வநெறிக்

கழகத்தை ரிஷிகேசத்தில் நிறுவி உயர்ஞானத்தைப் பரப்பி வரும் தபசுள அருந் செயலினை எம்மனோரால் என்றும் போற்றுதற்குரியதே.

அருள் அமுதம் பொழியும் தவக்கடலே !!

நிஷ்காமிய கர்மயோகம், நவவித பக்தி, அஷ்டாங்க யோகம, துவைதம் விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், அதவைதம் ஆகிய சாஸ்திர ஞானங்களை கருணையோடு திருவாய் மலர்ந்தருளியும், நூலின் வாயிலாக எழுதியும் உலகினர் சத்விஷயங்களை உணர்ந்து நடக்க அருளும். தவத்திற் சிறந்தோங்கும் நம் வரவால் எங்கள் ஆன்மா புனிதமடைகின்றன.

உடல், உயிர, மருத்துவரே ! வருக ! வருகவே !!

உடலுக்கு வரும் பிணிகளைப் போக்கும் மருத்துவராகவும் உயிருகுகு வரும் பிறவிப் பிணிகளைப் போக்கும் ஞான மருத்துவராகவும் திகழ்ந்து உடலையும் உயிரையும் காக்கும் அருளாளரே, வருக ! வருகவே !!

விருதுநகர்
16—10—50

இங்ஙனம்
சமரச சன்மார்க்க சங்கத்தார்.

—o—

தக்க நிவர்த்தியே, பரமானந்த ப்ராப்தி

ரிஷிகேசம் பூமண்டல சத்குரு

ஸ்ரீமத்

சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹாராஜ் அவர்கள் திரு முன்புக்கு விருதுநகர் கைவல்லிய மாதர் சங்கத்தார் பணிவுடன் வழங்கிய வரவேற்பு தோத்திரபாமாலை.

1) வேதநெறி விரித்துரை செய் வியாசமுனி யென்கோ
மாதவ சிரோமணி வசிட்டமுனி யென்கோ
ஓதுமுறை யுணர்த்துமிவர் ஒருகுருவ மென்கோ
சோதி சிவானந்த சரஸ்வதியுருவ மென்போமே.

(2) குறுமுனிவன் நெடியவுருக் கொண்டுலவு மென்கோ
சிறுவுவட லூர்முனிவன் சோதனவுருவெனகோ
சிறுமைமதி யேம்தவந திரணடவடிவென்கோ
உறுதவசி வானந்தஒரு முனிவ னென்கோமே.

(3) பொன்மலிநற் கொன்றைபுனை புரிசடையீலங்கு
நின்மலசற் கயிலாயம நிலைபெயர்த்துவந்த
தன்மயநல் உருவடிவாம சாதுதவஞான
சின்மயசி வானந்தசரசு வதிதோற்றம்.

(4) சீவனெல்லாம் பிரமமயம தெய்வநெறி மார்க்கம்
பாவனைதி யானமென்ப பண்பிதேறி கூறி
ஆவலோடு மகக்கள்தமை அன்புநெறி யுய்க்கும்
தேவசி வானந்தசரஸ்வ திகுரவ! வாழ!

(5) விருதுநகர் செய்ததவ மினிர்வடிவ தாகிக்
கருதுபுகழ் ஞானதவ கண்பமொடு புண்ய
திருவுருவி னன்புமலி சிவானந்த ஜோதி
வருகவரு கின்பநிறை வழங்கிடுகவாழி.

விருதுநகர் கைவல்ய மாதர் சங்கத்தார்.
16—10—50

தெய்வநெறிக் கழகத்தின் ஸ்தாபக தலைவரும் லோக குருவுமான ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மகாராஜ் அவர்களின் விருதுநகர் விஜயத்தின்பொழுது மாலைப்பேட்டை மகமை டிரஸ்டிகள் வாசித்தளித்த வரவேற்பு இதழ்.

பூமண்டலம் போற்றும் புனித குருவே. வருக! வருக!

[illegible] வரவேற்கிறோம். காந்தி குரும்பேரன் கான்
நிகும் பேரறிஞர் என்ற பெருமையுடனும் இமயத்திலிருந்து
ஆசிரியர் அனுப்பிவைத்த ஞான அறிவுச் சுடரை
ஏந்தி மக்களின் நலனாகவும் ஏற்றமிகுவாகவும் வாழ்ச்செய்
யும் தெய்வ நினைப்பை காட்டுமன, தேவ, தேவா, உங்கள்
வரவு கண்டு நாங்கள் இருமாந்திருக்கிறோம்.

ஆயிரமாயிரத்து ஆண்டுகள் கொடுக்கவந்த ஆன்மீக குருவே,

இருமைத்தினை பெறுவைகளை அவ்வப்போது உலக
மறிய செய்வதற்கு ஏற்பட்ட புருஷர்களாக சுவாமி
தயானந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேக
னந்தர் போன்ற ஆன்மீக அறிவுக்களஞ்சியங்களாக பல
ஆன்றோர்கள் தோன்றினர். அவர்கள் போலவே தென்
னாட்டிலே தோன்றி வடநாடு சென்று உபநிஷத்துக்களின்
உண்மைகளை நிஷ்டைகூடத்திலிருந்து உலகறிய செய்யும்
உத்தம குருவே, தங்கள் எடுத்த சத்சங்க காரியம் இனிது
முடிய எங்கள் ஆதரவை தங்களுக்கு என்றும் அளிப்போம்
என்னும் மனவுறுதியைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.
பரப்பிரமத்தின உட்பொருளுணர்ந்த பரமார்த்த குருவே!

அணுகுண்டு போன்ற அற்புத ஆயுதங்கள் நிறைந்த
இவ்விருபதாம் நூற்றாண்டிலே எங்களை ஆத்மாவூதி
யடையச் செய்து அனுக்கிரகிக்க வேண்டி தென்னாட்டுத்
திக்விஜயத்தில் எங்கள் கோவிலே பெரிதென மதித்து இங்கு
விஜயம் செய்து எங்களை ஆசீர்வாதம் செய்யவந்த முனி
சிரேஷ்டரே! எங்களின் பயபக்தியுடன் கூடிய மகிழ்ச்சி
யுள்ள வரவேற்பை தங்களுக்கு பேருவகையுடன் சமர்ப்
பிக்கின்றோம்.

விருதுநகர்
16—10—50

இவண்ணம தங்கள் பணிவுள்ள
மாலைப்பேட்டை மகமை டிரஸ்டிகள்

ரிஷிகேசம் ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதிஜீ மஹாராஜ் அவர்கள் விருதுநகருக்கு தரிசனம் தந்தபோது வெற்றிகர் சத்யஞானசபையின் தருமச் சாலையைச் சார்ந்த ஜோதி பக்தி பெண்கள் கழகத்தார் வாசித்துத் தந்த வணக்க வசனம்.

தமிழ்நாடு பெற்ற தவக்கொழுந்தே வருக, வருக!
கைலயங்கிரியில் கனகசபேசன் தூக்கிய திருவடியின்கீழ்
வீற்றிருக்கும் ஞானவாழ்வே வருக. வருக.
எம்போல்வார் நெஞ்சக் கலகம் அழித்து கதிவழிகாட்டும்
கலைக்குருவே வருக! வருக!

சுவாமிஜியின் வருகையால் நாட்டிலுள்ள பஞ்சமும் பிணியும் பறந்தோடவும் கல்வியும் ஞானமும் கதிர்த்து ஓங்கவும் எல்லாம் வல்ல இறைவனின் திருவடி முன்னிலையில் உங்கள் பொன்னர் திருவடியை கும்பிடுகிறோம்.

விருதுநகர் சத்யஞான பபையின் தருட்சாலையை
16—10—50 சார்ந்த ஜோதி பக்தி பெண்கள் கழகத்தார்.

—o—

திருநெல்வேலி

அங்கு நடந்த முன்னேற்பாடுகள் குறித்து வெளிவந்த அறிக்கை.

பாளையங்கோட்டை திவ்ய ஜீவன சபை சங்கத்தின் (Divine Life Society) ஆதரவின் கீழ் (7-5-50)ல் அடியிற் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மே சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் தாம் பிரசாரத்திற் காக பாரத தேச முழுவதும் தம் சிஷ்ய குழாங்களுடன் திக் விஜயம் செய்ய உத்தேசித்திருப்பதால் மே யாத்திரைக்கு ஆதரவு கொடுத்து சுவாமிகளின் ஜனன ஜில்லாவாகிய திருநெல்வேலியிலுள்ள பல முக்கியமான இடங்களிலும் ஆத்மபிரசாரத்திற்குவேற்பாடுகள்செய்யவும், மேதகாஷ்டியாருக்கு இடவசதி, போஜன வசதி, போக்கு வரவு வசதிகள் செய்யவும் போதிய பொருளுதவி, மற்றும் வேண்டும். உதவிகள் அவசியமாயிருப்பதால் மே சங்கத்தினர் ஒரு வரவேற்புக் கமிட்டி ஏற்படுத்தவும் மே கமிட்டிக்கு கனவான்களை நிர்வாகஸ்தர்களர் யிருக்க கேட்டுக் கொள்ளவும் ஏகமனதாக தீர்மானித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர் ஒரு லோக குரு. உலகத்திலுள்ள சர்வ மதங்களையும், சர்வ தேசங்களையும் ஐக்கியப் படுத்த முயற்சித்துக் கொண்டு வரும் ஒரு பெரிய ஆத்ம ஞானி. தீர்க்கதரிசி. உலகத்தில் பல்வேறு பாகத்திலும் அவருக்கு சீடர்கள் இருக்கிறார்கள். அவர் அசுர குணம் படைத்தவர்களை மஹான்களாக்கியிருக்கிறார். நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக்கி யிருக்கிறார். ஹிமயத்திலுள்ள ரிஷி கேசத்திலிருந்து ஆத்ம சக்தியை உலகெங்கும் பரப்பி

அருள் புரிகிறார். திவ்ய உலகப் புனருத்தாரணத்திற்கு தேச யாத்திரை புறப்படுகிறார். அவர் செய்யும் தாமப் பிரசாரம், அமோகமான வெற்றியைக் கொடுக்கும் என்பதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அவருடைய யாத்திரையின் முக்கிய நோக்கம உலகில் ஒற்றுமையும், சாந்தியும், சமாதானமும், தெய்வீகமும் நிலவச்செய்ய வேண்டுமென்பதே. அவர் ஹிந்து தாமத்தை சரியான முறையில் ஸ்தாபிக்க முயற்சிப்பதோடு நிறுத்தவில்லை. உலகத்திலெல்லாம் பரந்த சமரச ஞானம் நிலவ முயன்று வருகிறார். மகாத்மா காந்தி ஆரம்பித்து விட்ட "ராம ராஜ்யம்" அல்லது "பரலோக ராஜ்யத்தை" பூர்த்தி செய்து தேசத்தையும உலகத்தையும ரட்சிக்கப் பிறந்தவர! ஒரு பெரிய ஆத்யாத்மிக வீரர், சமாதான தூதர்! எல்லாம வல்ல இறைவன் அவருடைய தன்னலமற்ற தியாகம் நிறைந்த புனித சேவையை வெற்றி பெறச செய்வாராக!

ஆகையால் மகா ஜனங்கள் அனைவரும் இமயமுயற்சிக்கு ஆதரவு கொடுத்து அம்மாவரனின் ஆசியைப்பெற்று தேசத்திலுள்ள நாஸ்திகத்தை தட்டியெழுப்பி மக்களிடையில் வெறுப்பையும் குழப்பத்தையும நீக்கி அன்பையும், ஒற்றுமையையும் நிலைநாட்டி பரமானந்தத்தை அடையும்படி இச்சங்கத்தார் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறார்கள். அதற்கு வேண்டிய பொருளுதவியும்; உழைப்பும் ஆதரவும், நல்கவேண்டுமென்று பொது ஜனங்களைப் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

விருதுநகரிலிருந்து திருநெல்வேலி வருமிடையே ஸ்ரீ சுவாமிகள் சோயில்பட்டி அன்பர்களுக்கு ரயில்வே பிளாட்பாரத்திலேயே தரிசனமளித்து நல்லுரைகள் வழங்கி

ஆகி புரிந்தார். பின்னர் ரயில் வண்டி திருநெல்வேலி வந்து சேர்ந்தது. ஏராளமான பக்தர்களும் ரயில்வே நிலையத்தில் ஜனசமூகநிலையத்தில் திரண்டிருந்தார்கள். ஸ்ரீசுவாமிகள் அங்கேயே நெடுநேரம் அவர்களுக்கு தன் தரிசனம் கொடுத்தார்.

நகரபிரமுகர்களும் வரவேற்புரைகளும் பல வாசிக்கப்பட்டன.

—o—

திருநெல்வேலி மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தார்

அன்பும், பணிவும், உவகையும், கொண்டளிக்கும்

வரவேற்புப் பத்திரம்

அன்பெனும் அறிவுரை பரப்பும் அண்ணலே!

மன்னுயிரைச் சேர்வதனில் கொன்றமிழத்தி, மமதை விஷம் குதிரம்போல் தலைக்கேறி, வறுமையிலே மக்களையே ஆழ்த்திவிடும், மாந்தர்கள் வலுத்துவிட்ட இந்நாடதனில், சத்தியமும் சாத்வீக அன்புரையும, நன்னெறியும கல்லுரையும் மிகப் பெற்ற மாதருக்குள் ஜோதியென, பத்தமடை புனிதபூமி பெற்றளித்த, பார்புகழ் புண்ணியனே வருக, வருக!

"மாத வீரர் மலிந்ததின்றாடு, மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்றாடு!" என்று பாடிய, பாட்டுக்கொரு புலவன பாரதியின் பொன் வாக்கு, பலிதகத்து கண்டு பரம உவகைபெற்றோம். தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தன்னில்

பார்புகழ் காந்திஜி அவதரித்தது கண்டோம். அரசியல் வாழ்விலே விடுதலை தந்து, அஹிம்சை, மெய்யெனும் உரைகள் ஈந்து அவனியோர் புகழும் அமராளர் காந்திஜி. அண்ணவன் தோன்றிய அருமை பெரும் நாட்டினிலே, அன்பினை மட்டும் அளித்திடாமல், ஆத்மீக ஒளியை அல்லலுறும் மாந்தர்க்கு, அளித்திட வந்தனை, அன்பின் சுடரென

நன்னெறி காட்டும் நாயகமே!

வாழ்வின் மாயைகள் யாவும் வெறுத்து, மருந்துக்கும் உதவாத கல்வியை உதறி, கடல் தாண்டிச் சென்ற நாடதனில் செய்த, அரும்பெரும் மருத்துவப் பணியையும் தள்ளி, அமைதியைத் தேடி அன்றொரு நாளில் ரிஷிகேசம் சென்று, ஒன்பது ஆண்டுகள் ஓயாத் தவம் செய்து, உண்மையை உணர்ந்து உத்தமனாகி, உலகினைக் காக்க முன் வந்த குருவே! அல்லல் மேகமும், வறுமை இருளும், சாதிச் சண்டையும், பணவெறிப்பேய்களும், நாட்டினைக் கலக்கிடும் இந் நாளிலே நினது, அன்புரை பாம்பிடும் அமைதியைக் கண்டு, அவனியிற் பிறந்த அரும்பலன் பெற்றோம்!

அஞ்ஞானம் அகற்றிடும் அறிவின் ஒளியே!

காலம் செய்திடும் மாயைகளிலே, கைப் பொம்மையாகி கடமை மறந்து, தெய்வத்தின் சக்தியைச் சிறிதும் அறியாது, சிந்தியாது செயல்படும் மாந்தர்கட்கு 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றதோர் உண்மையை, எடுத்துரைக்கவே எங்கும் விரைந்திடும், தங்கள் திருமுக தரிசனம் கண்டும், பொன்னென மிளிரும் நல்லுரை

கேட்டும், மனதிலே மகிழ்வு நிரம்பப் பெற்றோம்; பிறந்த தின் பயனைப் பெரிதுமுணர்ந்தோம்.

தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடும் தொல்கலை வாணரே! நின் அரும்பணி, அல்லும் பகலும் வளரட்டும்; அல்லல்படும் அவனியோர்க்கு அமைதி அளிக்கட்டும்; மாந் தர்கள் உய்ந்திட மார்க்கம் தரட்டும். இதுவே எங்கள் மனதின் முடிவற்ற ஆசை. உலகிலே மாந்தர் அனைவரும் சோதரர்; உண்மத்தர்களாகி, உற்ற தோழமை பூணுது. வீணிலே பகைத்திடும் மனித சமூகம், உண்மை நிலை அறிந்து ஊக்கமும் உள்வலியும் பெற்று, உயரப் பிறவிக ளாய் வாழ உயரிய தத்துவ போதனை நாடெங்கும் பரப்பி வருகின்றனை. எல்லோரும் ஓர் குலம் எனும் இன்பப் போதனையை துலங்கச் செய்கின்றனை. நீங்கள் செய்து வரும் செப்பரிய தொண்டதனை, எவ்விதத்தில் செப்பிடு வோம்?

மாந்தருக்குள் மாமணியே!

அங்கிங்கெனாதபடி எங்கும் தங்கள் உரை பரவட்டும். ஆனந்த வாழ்விலே, அமைதியுடன் வாழ, அனைவருக்கும் வழி காட்டட்டும். அன்பெனும் கதிரவன், தங்கள் வருகை யாலே, அணையாத ஒளியுடன், அவனியெங்கும் சுற்றி வந்து, இன்பமெலாம் பரப்பிடவே, இறைவனருள் வேண்டுகின்றோம்.

திருநெல்வேலி,
16—10—50

இங்ஙனம்,
நெல்லை மாவட்ட நாட்டாண்மைக்
கழகத்தார்.

—o—

மேலப்பாளையம் நகர் மன்றத்தாரால ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சரஸ்வதி அடிளாரவர்கட்கு வாசித்து வழங்கிய வரவேற்பிதழ்.

அடிகளார் அவர்களே

மேலப்பாளையம் பொதுமக்கள் சார்பில் நகர்மன்றத் தலைவரும் உறுப்பினரும் தங்களை வரவேற்கும் பொறுப் பேற்றதற்கு பெரிதும் மகிழ்சியடைகின்றோம். எங்களது நகர மன்றம அண்மையில் தான் துவக்கப்பட்டது. சமய சார்பற்ற நம் அரசாங்கத்தின் ஒரு சிறு கிளையாகிய இம் மன்றத்திற்கு இந நகரின் பெரும்பான்மை குடிகளாகிய முசலமான்கள் சார்பில நாங்கள் எம்மதமும் சம்மதம் என எண்ணிப் பணியாற்றும் தங்கட்கு வரவேற்பு வழங்கும் வாயபளை பெற்றதற்கு நாங்கள் பெருமை யடைகின்றோம். பல்வேறு சமயததாரும் இங்கே வேறுபாடின்றி உடன் பிறந்தோர் போலவே வாழ்கின்றோம.

நாட்டில் நலிவுற்று வாடும் மக்களினத்துக்கு அமைதி அளிக்க அவ்வப்போது தோனறும் அண்ணல்களில் தாங் களும வொருவராய் திகழ்கின்றீகள. தங்களது நுண் ணிய ஆக்மார்த்த அறிவையும் புனிதத்தனமையையும் மக்களிடையே பரப்பி மன்பதைக்கு மருந்தென விளங்கு கின்றீகள். இயல்பாகவே அமைந்த ஆற்றலின் காரண மாகத் தாங்கள் எதையும் ஆழ்ந்து சிந்தித்து கண்ட முடிவு களை மக்களுக்குப் பயன்படுத்தியுள்ளீர்கள். எனவே தன் பிறப்பால் பொருனையாறு பாயும் பகுதியைச் சேர்ந்தவ ரெனினும் தங்களை அறிவு ஆராய்ச்சி நிறைந்த மக்கள் வாழும் மாநிலமே தமதென உரிமை பாராட்டுகிறது கற்றோரும் மற்றோரும் போற்றுகின்றனர்.

இன்று நாம் உலகில் காணும் காட்சி என்ன, எங்கும் இருள சூழ்நதே இருக்கிறது. வாழ்க்கை நெறியிலும் ஆத்ம துறையிலும் மக்கள் செல்லாது மாக்களைப போன்று மதியிழநது மாளகின்றனர். 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மாநதரை நினைதது விட்டால்' இன்நிலையில் மக்களை செமமைபடுத்தி நலவழியில் இட்டுச செல்லத் தங்களைப்போன்ற அண்ணல்களும் இருகின்றார்கள். என்பதை எண்ணி ஆறுதலடையத்தான் வேணடி யிருக்கிறது. இன்று தாங்கள் எகளிடையே இருப்பது எங்கட்கு பேராதரவாய் இருப்பதுடன் எகளை உள்ளொளி கட்கு தூண்டுகோலாகவுட இருக்கின்றீகள. தகள் அருளொளி மக்களை நல்வழிப்படுதத பயன்பட வேண்டும் என்பது எகள் அவா ! வணக்கம்.

மேலப்பாளையம்
16—10—50

இகனம்,
தகமன்றத்தார்.

—o—

நெல்லையில் சிவானந்தருக்கு குருகலமான வரவேற்பு

எல்லா வதுப்பினரும் கலந்து கொண்டனர்

பாளையங்கோட்டை, அக். 17—பாளையங் கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் நேற்றுமாலை ஏராளமாக ஹிநது முஸ்லிம், கிறிஸ்தவ ஆண் பெண் குழந்தைகள் கூட்டம் ஸ்வாமி சிவானந்தஜியைப் பார்க்கவும். அவருடைய உபதேசங்களைக் கேட்கவும் வந்திருந்தனர்.

ஸ்ரீ சிவானந்த யாத்திரை கோஷ்டி வரவேற்புக் கமிட்டி சார்பாகவும், பாளையங் கோட்டை நகரசபை

சார்பாகவும் அதன் தலைவர் ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய பிளளையும், மேலப்பாளையம் நகரசபை சார்பாக ஸ்ரீ. வ செ க. முகம்மது இபுராகீம் நெல்லை ஜில்லா போர்டு சார்பாக ஸ்ரீ டி. எஸ். ஆதிமூலமும் வரவேற்பிதழ்களை படித்துக் கொடுத்தனர்.

ஸ்வாமிஜி வரவேற்புகளுக்கு நன்றி கூறிவிட்டும் பேசியதாவது: எல்லா மதங்களும் சம்மதமே. ஒன்றுக் கொன்று ஏற்றதாழ்வு என்று நினைக்கக்கூடாது எல்லா வற்றிலும் அடிபடைதலம் ஒன்றேதான். மதமென்பது ஒய்வு நேரங்களில் சர்ச்சை செய்யும் விஷமல்ல. ஸ்வானு பவமாகும். அதை உணர எப்பவும் உண்மையாக பேசி அதன்படி நடக்கவேண்டும். அன்பால் எல்லாரையும் அணைக்கவேண்டும். எல்லாருக்கும் மேலான கடவுளை எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள்.

ஸ்ரீ ஸ்வாஜி மேலும் கூறினர்:— எல்லா தீர்க்கதரிசி களையும் நாம் த்யானம் செய்யவேண்டும். சகிப்புத் தன்மையே ஞானத்தையும் நுண்ணிய அறிவையும கொடுக் கும். அதன் அடிப்படையில்தான உலக சமாதானமும் உலக சமத்வமும் உருவாகும்.

தியானத்தாலும், சமாதியாலும், மோக்ஷம் நிச்சய மாகக்கிட்டும். விரிவான போகமார்க்கம் வேண்டுமென்ப தல்ல. ஏதாவது ஒரு தெய்வத்தின மனதைப் பதித்து தியானம் பண்ணினால் போதும். வீட்டிலேயே கோவி லென கருதி, மனமுருகி ஆனந்த சாகரத்திலிருக்க பழக வேண்டும்.

ஸ்ரீ டி. ஆர். கணபதிராமய்யர் வந்தனம் கூறினர்.

நேற்று மத்தியானம ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி ரயிலில் வந்தார். ரயில்வே ஸ்டேஷனில அவரை சிவானந்த யாத்திரை கோஷ்டி வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியப்பிள்ளை உபதலைவர் ஸ்ரீ டி. ஆர். கணபதிராமய்யா, ஜில்லா நீதிபதி ஸ்ரீ கே. எஸ். வெங்கட்டராமன் முதலியவர்கள் வரவேற்றனர்.

நெல்லை ம. தி. த. ரா. ஹிந்து கலாசாலையின் மாணவர்கள் சுவாமிஜியை வரவேற்றனர். சமஸ்கிருதப் போராசிரியர் ஸ்ரீ ராமமூர்த்தி ஸ்வாமிஜியை வரவேற்றுப் பேசினர்.

மாணவருக்கு உபதேசம்

ஸ்வாமிஜி தனது மாணவர்களுக்குச் செய்த உபதேசத்தில கூறியதாவது :—

மனதை பக்குவப்படுத்திக்கொண்டு தியானம் பண்ணினால்தான் மோக்ஷம் கிட்டும். வாலிப பருவத்தில் படிக்கும் பொழுதே ஆத்மஞான விச்சை ஊன்றிவிடவேண்டும். ஏனெனில் பின்னல் வாழ்க்கையில் கிடந்து பலவித இடைஞ்சல்களில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படும் பொழுது ஒரு நிமிஷம்கூட தியானம் பண்ண வசதியில்லாமல் போய்விடும். ஆத்ம ஞானம் வபதான பிறகு தேடிக் கொள்ளலாமென்றால் அது பெருந் தவறுதலாகும். தியானம் பண்ணும்பொழுது நிம்மதியாயிருக்க வேண்டும்.

ஸ்வாமிஜி மேலும் கூறினர் :— மாணவர்கள் நாயிற்றுக் கிழமைகள் தோறும் 1008 காயத்திரி ஜபம் பண்ணவேண்டும். மாணவர்கள் பஜனை செய்து பக்தியைப் பெருக்கினால், பிற்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்துப் போரானந்தமடையமுடியும்.

"மாணவர்கள், சமூக சேவை செய்வதில் ஈடுபட வேண்டும. உங்கள ஆகமாவுக்குள புத்தி விவேகம் ஞானம் பெரிய களஞ்சியமாயிருகிறது. இரவு ஆகாரம் லேசா யிருந்தால்தான, காலையில் சீக்கிரம் எழுந்திருந்து ஸ்வாமியை தியானம் செய்பவும் படிக்கவும் முடியும.

யோகாசனங்களின் மகிமை இவ்வளவு அவ்வளவு என்று கூற முடியாது. அவைகளுக்கு ஈடான தேகத்தை வலுப்படுத்தி பாதுகாக்க வேறு வழி கிடையாது என்றும் உங்களை வாலிபாகளாகத் திகழச்செய்யும். ரத்தத்தை சுத்தி செய்து சகதியைப் பெருக்கும.

ஸ்வாமிஜி மேலும் கூறினர் :— நம்மீது எத்தனையோ அன்னிய நாட்டார பிற மதஸ்தர்கள் படையெடுத்து ஆண்டு ஆதிக்கம செலுத்திலும் இன்று ஹிந்து மத மாகிய புராதன நாகரீகம அழியாமலிருப்பதற்குக் காரணம் ஸ்திரீகள தான் ஆகவே ஸ்திரீகள் பகவன் நாம வைபவ பஜனை செய்யவேண்டும.

—தினமணி 18—10—50

இவ்விரு நிகழ்ச்சிகளுக்கிடையே சுவாமிகள் தர்மபுரம் ஆதீன மடத்துக்கு விஜயம் செய்து அவர்கள் உபசரிப்பை ஏற்றுக்கொண்டார். மறுநாள் (17-10-50) மிகவும் விசேட மான முறையில் பாத பூஜை நடைபெற்றபின்னர் சுவாமி கள் நீ நெல்லையப்பர் ஆலயத்துக்குச் சென்று தரிசித்தார். மந்திர தீக்ஷை விரும்பியடைந்த பக்தர்கள் பலருக்கு அவர்கள நிலையை யனுசரித்து தீக்ஷைகள் செய்யப் பட்டன.

—o—

ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் ஆசி

ஆண்டவனின் அருமைக் குழந்தைகளே!

இன்று புனித நாள். நம் தெய்வ நெறிக் கழகத்தின பக்தி, அறிவு, தொண்டு புத்துயிர் பெற்று புது ஒளி பெறுமை நாள். இந்த நாளில நீங்கள் ஆண்டவன் ஜோதியில் மலர்ந்த இதயத்தோடும், விரிந்த எண்ணதோடும் புக வேண்டுமை தினந்தோறும், மணிதோறும், ஏன், நிமிடந் தோறும் இறைவனோடு பேசுங்கள அதில்தான் நிரந்தர இன்பமும், அழியா வாழ்க்கையும் அடங்கியிருக்கிறது. இப்போது உங்கள் வாழ்க்கை நக்ஷத்திரங்கள் அவைகளின் உச்ச நிலையை எட்டிப்பிடிக்கின்றன. உன்னதமான எதிர் காலம் உனகுனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் கடவுளின் செலவக் குழநதைகள். வரப்போகும் சத்ய யுகமாகிய புது உலகில் இன்பமும் சாநதமும் அடையப் போகிறவர்கள்.

தெயவீக ஜோதிச் சுடரே! நான் எப்போதும் உங்கள் அடிச்சுவடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். இன்று முதல் கிடைக்கும் போானந்தத்தில் எனக்கும் பங்கு உண்டு. கடவுளின் நாமமாகிய தேவாமிர்தக்தைப் பருகி, புயல் நிறைநத வாழ்க்கைக் கடலைத் தாண்டி, அமைதியும் ஆனநதமும் நிறைந்த இன்ப உலகை இப்போது அமை யுங்கள்.

தெய்வீக வாழ்வாகிய ஒளியில் கலக்கும் வரையில் தங்கள் ஆத்மீக வளர்ச்சிக் காரியங்களைத் தொடர்ந்து செய்க. உங்கள் மனக் கோயிலில் எரியும் பக்தி ஒளியை மேலும் சுடர்விட்டு எரியச் செய்யுங்கள். அப்படியானால்

இப்பூலோகத்திலே சுவர்க்கத்தைக் காணமுடியாது. நீங்கள் அயர்ச்சியடையாமல் முயற்சியுடன் தெய்வ சக்தியை உணர்ந்தால் இறைவன் பேரொளியால் பிரகாசித்து அவர் ஞானத்தையும், சக்தியையும் பெறமுடியும். அழியாக்குழந்தைகளே! இதுதான் நான் விடுவிக்கும் செய்தி! முயன்று உணருங்கள்.

தெய்வீக வாழ்க்கை வெறும் தத்துவங்களில் மூழ்கி இருப்பது அல்ல; வெறும் சிந்தனையில் ஆழ்ந்து இருப்பது இல்ல; ஆனல், விருப்பு வெறுப்புக்களைக் கடந்து ஞான வழியில் நடப்பதுதான தெய்வீக வாழ்க்கை. உங்கள் பார்வையில் அன்பும் அமைதியும் திகழட்டும். மனிதவாக்குகாயங்களில் ஞான ஒளியும், பக்தி ஒளியும் வீசவேண்டும். இதுதான் நான் விடுகதும் செய்தி!

ஆனல், தெய்வீக வாழ்வு எளிதல்ல. அதை அடைய அதிக விலை கொடுக்க வேண்டும். நீங்கள் மனிதத் தன்மையிலிருந்து அமரத்தன்மையடைய அரும்பாடுபட்டு தகாத வைகளை ஒழித்து வாழ்க்கையை அமைக்க வேண்டும். வாழ்க்கையின் நோக்கமே உலக சுகதுக்கங்களைக் கடப்பதுதான். அதற்கு நாம் கடவுளின் பாத கமலத்தில அடைக்கலம் அடைய வேண்டும். எனவே உங்கள் வாழ்க்கையை அன்பிலும், ஊழியத்திலும், பஜனையிலும், ஜபத்திலும், சிந்தனையிலும் செலவிடவேண்டும்.

எனவே, நீங்கள் புது வாழ்க்கைக்குத் தயார் செய்து கொள்ளவேண்டும். இறைவன் நியதிப்படி உள்ளத்தைச் சுத்தமாக வைக்க வேண்டும். உங்களுக்குள் ஒருவித ஞான சக்தி ஓடுவதை உணரவேண்டும். எல்லோருக்கும் தொண்டு செய்து ஆத்மீக வறுமையில் வாடும் மக்களுக்கு ஆத்மசக்தியை ஊட்டவேண்டும். தெய்வ நினைவில் மூழ்கி வறுமை

யில் அல்லற்படுமை மக்களைக் கைதூக்கி அறிவு ஒளியையும், இன்ப ஒளியையும் பாய்ச்ச வேணடும். எனவே, கடமை யைச் செய்து கடவுளை உணருங்கள்!

கடவுள் உங்களை ஆசீர்வதித்து உங்கள் குறைகளை நீக்கி பூரண வெற்றியை அளிப்பாராக!

—o—

சுவாமி சிவானந்தரின் சிறந்த கருத்துக்கள்

கடவுள், அல்லா, ஈசுவரன் அல்லது பரமன் என ஒருவர் இருக்கிறார். இவ்வுலக இன்பங்களைத் துறந்தும் பிரமஞானத்தைப் பெற்றும் அவரை அடைதல் வேண்டும்.

சமயமென்பது கடவுளையறியவும் அவரை வழிபடவும் வேண்டும் என்ற நம்பிக்கையே சங்கப் பலகைகளின் சர்ச் சைக்குரிய விஷயமல்ல அது. உண்மை ஆத்மாவை அனுப விக்தறிவதே அதுவாகும். அதுதான் மனிதரின் ஆழ்ந்த இச்சையின் பூர்த்தி. ஆதலால், சமயத்தை நமது வாழ்க் கையின் உயர்ந்த வெகுமதியாகக் கொள்ளவேண்டும். தங்கள் ஜீவிதத்தின் ஒவ்வொரு நிமிடமும் அதை அனுபவித் தர் பொருட்டு வாழவும். சமயமற்ற வாழ்கை மரணத்திற் கொப்பானதே!

முக்கியாம்சங்கள் எல்லா மதத்திற்கும் சமமானதே. முக்கியமில்லாதவைகள் தான் வித்தியாசப்படுகின்றன. முக்கியமில்லாதவைகள் அளவசியமானவைகளே. உண்மை உரைத்தல, எல்லோரிடத்தும் அன்பு கொள்ளுதல், ஒருத் தருக்கும் தீங்கினையுணணுமை, ஒன்றையும் கொள்ளாமை, ஒரு பொருளையும் கள்ளாமை, பிரமச்சரிய விரதத்தைப் பேணுதல், மனித சமுதாயத்திற்குத் தொண்டு புரிதல், கடவுளை வழிபடுதல், கடவுளை யடைதலே ஜீவிதலக்ஷ்ய

மாகக் கொள்ளுதல், புனிதத்தன்மை வாய்ந்த நூற்களைக் கற்றல், தானதர்மம் செய்தல், சரியான ஒழுக்க முறைகளை அப்பியாசித்தல், சரியான சிந்தனை, மனிதக் கடவுளின் உருவமெனப் பாராட்டுதல், மனதையும் பஞ்சேந்திரியங்களையும் கட்டுப்படுத்தல், இதயத்தைப் பரிசுத்தமாக்குதல், முதலிய வைகள் தாம் எல்லா சமயங்களிடையவும் முகியதத்துவங்கள்.

சரீர உணர்ச்சியை விட ஒருவன் மேற்சென்றபின் தான் உண்மைச் சமயம் ஆரம்பமாகிறது. அற்பமான பழக்கவழக்கங்களையும் சகவாசத்தையும் ஒருவன் தாண்டிச் சென்றபின் தான் உண்மை மதம் ஆரம்பமாகிறது. சரீர உணர்ச்சியை விட்டுத்தளளாமல் இன்னமும் பற்றிக்கொண் டிருப்பவர்களுக்கு இவைகளெல்லாம் அர்த்தமற்ற சடுக விலங்குகளேயாகும். விகாசமடைந்த மனிதனுக்கு இவை களை பொருட்டன்று. ஒரு உண்மை சன்னியாசியோ, சாதுவோ இவைகளுக்கெல்லாம் அப்பார்ப்பட்டவனாகயிருக் கிறான். பிராரம்பிக சடுக அல்லது சமய விலங்குகளுக்கு விகாசமடைந்த மனிதனொருவன் கட்டுப்படுவான் என்பதை உலகிலுள்ள யாவரும் எதிர் பார்க்க மாட்டாகள்.

உலகப்பற்றுடையோனே! ஆஸ்திகனையும, உதாசீனையும, சமஸ்தாட்சண்ய வாதியாயும், எல்லாவற்றையும் போற்றுபவனையும, எல்லாவற்றிற்கு மடங்கினவனையும் இரு. எல்லாரிடத்தும் அன்புடனிரு. எல்லாவற்றினிடத்தும் இரக்கம் காட்டு. விகாசமடை. விரிவடை. தனக்கு விஷம் கொடுக்க எணணும் ஒருவனுக்கும் தன் கழுத்தையே யறுக்கக் கோடாரியை உருவும் ஒருவனுக்காக வேண்டியும் கூட, உன் இருதயத்தில் இடமளி. அப்பியாசியாயிரு. வீணத்தனத்தை விட்டொழி. அற்பத்தனமான பழக்க

வழக்கங்கள், சடங்குகள், ஸ்பரிசனத்தன்மை, அடுக்களைத் தனமை சமயக்குறிகளணியும் தன்மை, இவைகளுக்கப்பார் பட்டவனாக விளங்கு. உள்ளடங்கிய மூலாதாரக் கருத்துக் களையோ, முகிய தத்துவங்களையோ நோக்கு. அப் பொழுது சமய ஒற்றுமையையும் ஆத்ம ஐக்கியத்தையும் காண்பாய். அதே சமயம் நீ உயர்ந்த பேரானந்தத்திலிருப் பாய்!!

தெய்வச்சுடர் தங்களிடம் தெளிவுடனே திளங்கிடுக!
தெய்வக்களை தங்களது திருமுகத்தை யலங்கரிக்க!!
தெய்வவொளி தங்களது தவவழியைத் தெளித்திடுக!
தெய்வஇனை தங்களுடை திருவுளத்தை நிரப்பிடுக!!

ஓம் தத் ஸத்

—o—

(அடுத்தபடியாக மகரிஷி சிவானந்தர் கோபால சமுத் திரத்துக்கு விஜயம் செய்து ஆண்டு குழுமியிருந்த அன்பர் களனைவருக்கும் அருளுரை வழங்கி கீர்த்தன ரசத்தைப் பருகுமாறு செய்தார்.

அங்கிருந்து ஸ்ரீ சுவாமிகள் தமது பூர்வாசிரம பிறப் பிடமெனப் பெருமைப் பெற்ற பத்தமடைக்குச் சென்றார் அங்கும் திரளான மக்கள கூடி வரவேற்றுப் பத்திரம் வாசித்தளித்தனர்.

ஸ்ரீ சிவானந்தசுவாமி சந்நிதானத்திற்கு

உலகம் போற்றும் உத்தமரே வருக! வருக! வருக!!
அண்ணலே!!! தங்கள் வரவு நல்வரவாகுக;
பாரதம் பரவும் புண்ணியரே வருக! வருக! வருக!! வருக!!!
எங்கள வாழ்வு நலம் பெறுவதாகுக.

பாரதத் தாயின் அருந்தவப் புதல்வரே, பற்றற்ற புண்ணியமூர்த்தியே, தங்களைக் கண்ட இந்நாளே நன்னாள். இன்றே நாங்கள் பிறவிப்பயனை அடைந்தோம்; கண் பெற்ற பயனைப் பெற்றோம், எங்கும் போரும, பொறுமையும், பசியும், பிணியும் மலிந்து மக்களை வாட்ட, மக்கள் இவ்வுலக மாயையில் ஈடுபட்டு ஆதமானுபவத்தை மறந்து கடல்நடுவே திசையறியாது தவிக்கும் கப்பல்போலத் துன்பக் கடலுள் தத்தளிக்க, அறியாமையாகிய இருளில் வழியறியாது திகைக்க, அம்மக்களை உய்விக்க, கலங்கரை விளக்கம்போலவும், செஞ்ஞாயிறு போலவும் தாங்கள் அருள்கூர்ந்து இப் புண்ணிய பூமியாம் பத்தமடையில் அவதரித்தீர்கள. தங்கள் பிறப்பிடமாகிய இப்பத்தமடையில் வசிக்கும் எங்கள் பாக்கியமே பாக்கியம். தங்களது பிறப்பால் இவ்வூரும நாங்களும் பெற்ற பெருமையை ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடனும் அளவிட முடியாதென்றால், அப்பெருமைக்குக் காரணம் தங்கள் அருளே அல்லவா ?

ஹே பரப்பிரும்மமே! இவ்வுலகில் பல மதங்கள் தோன்றி தனித்தனி தங்கள் கொளகைகளை நிலைநாட்டின. ஆனல் அம்மதங்களிடை ஒற்றுமையைக் கண்டுகளித்து, அவற்றை ஒன்றுபடுத்தி யாவரும் போற்றும் திவ்விய மதம் ஒன்றைக் கண்டு, இவ்வுலகிலேயே மறு வுலக இன்பத்தை அடையலாம் என உலகுகு எடுத்துக் காட்டிய தங்கள் ஆத்ம பலத்தை என்னென்பது !

தாங்கள் இமயமலைச் சாரலிலிருந்து, அவ்வப்பொழுது வெளியிடும் பொன்மொழிகளைப் புத்தகங்கள் வாயிலாக அறிந்த நாங்கள், தங்கள் திருமேனி அழகை என்று கணுகளிப்போம் என ஏங்கினோம். அத்தகைய எங்களுக்கு இன்று தங்களது திவ்விய தரிசனம் அளிக்கும் மகிழ்ச்

சிவை எவ்வார்த்தைகளால் வர்ணிப்பது? ஞானத்தை அடையவிரும்பும் ஒருவனை நல்ல ஆசிரியனே தேடி வந்தால் அவன் எவ்வாறு மகிழ்வானோ, காடு சென்று நாடு திரும்பிய இராமனைக் கண்ட அயோத்தி மக்கள எவ்வாறு மகிழ்ந்திருந் தார்களோ அவ்வாறே நாங்களும் மகிழ்கின்றோம் என ஒரு வாறு கூறலாம்.

எங்கள அன்பைக் கொள்ளை கொண்ட சாந்தஸ் வரூபியே! என்றும் இம்மகழ்ச்சி நிலைத்திருக்க அருள்புரிய வேண்டுகின்றோம். தங்கள் பொன்னுடல் என்றும் இன்று போல் நிலைப்பெற்றிருந்து மக்களை ஆத்மானுபவத்தில் ஈடு படுத்த அருள்புரிய வேண்டுகின்றோம்.

" தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேயமிகக் குடையோராகி நெஞ்சினில் உவகை பூப்ப "

எங்களது மனம் உவந்த நல்வரவைக் கூறுகின்றோம்.

பத்தமடை
17-10-50

பத்தமடை மகாஜனங்கள்

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீசுவாமி மக்கட் பிறவியின் நோக்கமும் அதை யடையவேண்டிய சாதன மார்க்கங்களையும் அனைவருள்ளத்திலும் பசுமரத்தாணி போலப் பதியுமாறு போதித்தனர். ராமநாம சங்கீர்த்தனத் தில் அனைவரும் பகு பெற்றுப் பரவசமடைந்த பின்னர் அங்குள்ள ராமசேஷய்யர் உயர்தரப் பள்ளிக்கு விஜயம் செய்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஆசீர்வதித்து அங்கிருந்து அடுத்துள்ள காவல கிணறு தர்மஸ்தாபனத் தைப் பார்வையிட்டார்.

அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ சிவாசாருத மகரிஷிகள் நேராக நாகர் கோவிலை நோக்கிப் பிரயாணமானர்

—o—

நாகர்கோவில்

17-10-50 தேதி இரவு ஸ்ரீ சுவாமிகள் நாகர் கோயிலை அடைந்தபோது நகரமக்களனைவரும திரண்டுவந்து பூரண கும்பத்துடன் அவரை எதிர்கொண்டழைத்து ஊர்வலமாக இருப்பிடத்துக்கு இட்டுச்சென்றனர்.

மறுநாள் 17—10—50 காலை அங்குள்ள ஆலயத்தில் நாம சங்கீர்த்தனம் பக்தி பரவசத்துடன நடந்தது. பின்னர் கன்யாகுமரி சென்று குமரியம்மையை ஆலயத்தில் போய் வழிபட்டார். அடுத்து மகாதானபுரம் ஆலயத்திற் கும் சென்று வழிபட்டனர். திருமபிவரும் வழியில சுசீந் திரம் சென்று ஸ்ரீ தாணுமாலயனையும் மனமொழிமெய் களால் அழுத்திவிட்டு மறுபடியும் நாகர் கோவில வந் தடைந்தனர்.

சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டதும் ஸ்ரீ சிவானந்தர் சொற்பொழிவு நடைபெறவேண்டிய பந்தரை அடைந்து அங்கு திரண்டு இருந்த பக்தகோடிகளனைவருக்கும் ஆன்ம ஒளியின் ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துத் தெளி வான உரையில் வழங்கி இடையிடையே நாம சங்கீர்த் தனத்திலும் அனைவருள்ளத்தையும் ஆழவைத்தனர். பிரசங்கம் முடிந்ததும் மக்களுடைய வந்தனோபசாரங்களை ஏற்றுக்கொண்டு எல்லோரையும் ஆசீர்வதித்துத் திருவ னந்தபுரத்துக்கு பிரயாணமானார்.

கீழே நாகர் கோவிலில் வரவேற்புக் கழகத்தார் விடுத்த முன்னறிக்கையும் பின்னர் வாசித்தளித்த உப சாரப் பத்திரமும் இலவச விநியோகப் பிரசுரமும் தரப் பட்டுள்ளன.

—o—

ஸ்ரீ சிவானந்தா யாத்திரை மண்டலி

(ரிஷிகேசம் முதல் குமரிவரை)

"அவன் படைத்த பாரினில் ஆஸ்திகம் ஓங்கவும் நாஸ்திகம் அகலவும், அதற்கு மூலகாரணமாம தர்மம் நிலைக்கவும், ஒவ்வொரு யுகத்திலும் அவனே தோன்றி, வழிகாட்டுவான்" என்பது தெய்வமொழி. இதை தெய் வமே அவனியே வழிபடும் ஞானிகளாக, அதது காலங் களில் நிறைவேற்றுகிறார். தன்னையறியாது மக்கள உழலும்வேளை தானே அறிவினமகற்றி தன்னைக் காண் பிக்கிறார்.

தற்போதைய உலகம் அவரைக்காண அலறும் அரிய வேளை. மக்களின் நாஸ்திக கொள்கையும், அறிவற்ற ஆர்பாட்டமும் ஒருபுறம், ஹிம்சை எனும் பேய்பிடித் தாடும் மக்கள் சண்டையால் இறக்கும் கோர காட்சிகள் மற்றொருபுறம். கருணைகடலாம் கடவுள் உதயமும் ஆனது.

ஸ்ரீ சுவாமிஜி சிவானந்த சுவாமிகள் இந்திய மாற பல்லாண்டுகள் இமயத்தில் திரிந்து யோகாப்பியாசத்தாலும், தபத்தாலும், சகல 'மதவேங்களாலும் விடைகண்டார். 1936-ல் ரிஷிகேசம் என்ற புண்ணிய பூமியில் ஆனந்த குடீரத்தில் "The Divine Life Society" என்ற கழ கத்தை ஸ்தாபித்து உலகத்தின் எல்லா பாகங்களிலும் பரவ ஆங்காங்கு இதன் கிளை ஸ்தாபனங்களையும் உண்டு பண்ணினார் ஆத்ம சாந்திக்கு கணக்கற்ற மக்கள் இவரது ஆசிரமத்தை அடைகின்றனர். 1845-ல் (All World Religions' Federation) எல்லா மதங்களின் முன்னேற் றத்திற்கும், 1947-ல் (All World Sadhus' Federation)

அகில உலக சாது முன்னேற்றத்திற்கும் வழி, காட்டு வித்தார்.

தூர தேசத்தில் ஆசிரமம் கொண்டதால் இவருள்ள மக்களின் ஆவலை தணிக்கவே வருகிற அக்டோபர் மாதம் 17-ம் தியதி இவரு வந்து தரிசனம்தர இசைந்துள்ளார். அவரது யாத்திரையின் முக்கியம் இறைவன் பெருமையை வெளிப்படுத்தவும் சாந்தியை பரப்பவும் மத ஒற்றுமையை புகட்டவும் தான்.

ஆகவே ஸ்ரீ சிவானந்த சுவாமிகளையும், சிஷ்யகோடி களையும் தரிசிக்க ஆவல் கொண்டிருக்கும் பக்த கோடி களிடம், இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் வந்திருந்து, சுவாமிகளின் அருள் பெற்று யாத்திரையை சிறப் பிக்க அன்போடு வேண்டிக்கொள்ளுகிறோம்.

அக்டோபர் 17, 1950. சிவாமிகள் அடியாருடன் திருநெல்வேலி நின்றும் புறப்படுதல். பத்தமடை வழி நாகர்கோவில் வருகை. பூரண கும்பம், வேதபாராயணம், நாதஸ்வரத்துடன் எதிர்கொண்டழைத்தல்.

அக்டோபர் 18. 1950. கடலில் நீராடி தரிசனம் செய்ய குமரிக்கு யாத்திரை செய்தல். குமரியினின்றும் வருகை. விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம், பூஜை வேதபாராயணமும், பாத பூஜையும் 3 முதல் 4 வரை சொற்பொழிவு பொதுக்கூட்டம் 4-30 மணிக்கு திருவ னந்தபுரத்திற்கு யாத்திரை.

பொறுப்பாளர்

D கிருஷ்ணய்யர், ரிட்டயர்ட் அஸிஸ்டண்டு அக்கவுண்டண்டு ஜெனரல்.

A. ராமனுஜ சர்மா, அக்ரகாரம், நாகர்கோவில்.

நாகர் கோவில் விஜயத்தன்று சமர்ப்பித்த

வந்தேஸபசார மங்கள பத்திரம்

பூஜிக்கத்தக்க மஹாதத்துவ ஞானியாகிய ஸ்ரீ சுவாமிகள் விக்ருதி வருஷம் ஐப்பசி மாசம் 1உ (17-10-50) அன்று நாகர்கோவில் விஜயம் செய்தும் மறுநாளும் பக்தகோடிகள் இஷ்ட பூர்த்திக்காக தரிசனம் தந்தது யென்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படியான புனித நாட்களாக கொண்டாடவும் சுவாமிகளின் திவ்ய உருவத்தை தரிசித்த தவர்களுடைய இருதயங்களில் ஆத்மாராமாக பதிந்ததும் மஹாஜனங்களின் பாக்கியமே சுவாமிகளின் யாத்ரா மண்டலி பூர்ண சௌகயத்துடனும் மிகுந்த புகழுடனும் ரிஷிகேச ஆனந்தகுடீர் ஆச்ரமம் சேர்ந்து உலகமக்கள் பூராவும் மேன்மை பெற திவ்ய ஆத்மஞானத்தை பரப்பு கிற சுவாமிகளும் அடியார்களும் தேவ ஜீவசங்கங்களும் என்றும் அழியாப் புகழுடன் உலகெங்கும் ப்ரகாசித்து எல்லோரையும் தெய்வநெறியில் நடக்கும்படி தூண்டவும் சுவாமிகளுக்கு தீர்காயுசும் கணக்கற்ற பக்தர்களையும் அளிக்கும்படி நாகர்கோவில் மஹாஜனங்களும் மேல தரிசனம் கோப்பு தேவஜீவசங்கமும் கிராமவாசிக ளனை வரும், மனமார கடவுளைப்ராத்தித்து வந்தனத்தை தெரிவிக்குமு அறிகுறியாக இந்த மங்கள உபசார பத்திரம் ஸமர்ப்பித்து சந்தோஷ குளிரச்செய்ய விரும்பியதுபோல் இருப்பினும் இதை ஏற்று சகலரையும் ஆசீர்வதித்து அடியார்பால் சுவாமிகளின் பூர்ண கடாக்ஷத்தை வர்ஷிக்கும்படி தாழ்மையாய் அபேக்ஷிக்கின்றோம்.

வாயுரயமேக்னிர் வருணச் சசாங்க :
ப்ராஜாபதிஸ்த்வம் ப்ரபிதா மஹச்ச

நமோ நமஸ்தேஸ்து ஸகஸ்ராக்ருத்வக
புனச்ச பூயோபி நமோ நமஸ்தே
நமப் புராஸ்தா தப ப்ருஷடதஸ்தே
நமோஸ்து தே ஸாவ,க ஏவ ஸர்வ
அனந்த வீர்யா மித விக்ரமஸ்த்வம்
ஸர்வம ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ :

விச்வ ரூபத்தை கண்டு அர்ச்சுனன் நமஸ்காரமாத் திரமே செய்ததுபோல் நாங்களும் ஏக மனதுடன் ஸ்ரீபரப் ரஹ்ம ஸத்குரு சுவாமிகளின் சரணார விந்தங்களை அர்ச் சித்து நமஸ்கரிப்பதையும் தேவஜீவநெறியில் ஒழுகுவதை யுமே ப்ரதானமாகக் கொண்டோம்.

ரா. சங்கரநாராயணய்யர்
பிரஸிடெண்டு
தேவஜீவசங்கம் கிளை
மேலதெரிசனங்கோப்பு

D. கிருஷ்ணய்யர்
ரிட்டயர்டு ஆஸிஸ்டெண்டு
அகௌவுண்டெண்டு ஜெனரல்
வரவேற்பு கமிட்டி ஆர்கனைஸர்
நாகர் கோவில்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

அன்பர்களுக்கு அளித்த அமுதகளி என்ற

20. ஆத்மார்த்த போதனைகள்.

(1) முனிவர் மொழியும் பிரம்ம முகூர்த்தத்தில்
இனிது துயிலெழுவா யென்னும்

(2) கற்கப்ராணயாமம் ஆசனங் கற்றபின்
நிற்க அதற்கு தக

(3) மனதிற் கிசைந்த தொரு மந்திரத்தை
தினமும் ஜபித்தல் நலம்

(4) சாதனைக் கேற்றது சாத்வீகம் அஃதடைய
சாத்வீக உணவைக் கொள்

(5) பூசனைக் கெனதனித்து எக்கணமு மோர் அறையை
மாசிலாது வைத்தல் நன்று

(6) பெருஞ் செல்வம் செல்வமல்ல பத்திலொரு பங்கு
தருமநதான் செய்யாவிடின்

(7) வேதமும் கீதையும் நுண்ணிய நூற்களும்
ஓதுவாய் நாளும் உவந்து

(8) சோவு விடுத்துச் சுயேச்சை பெறவுதவும்
வீரியம உயிரினும் மேல்

(9) தோத்திரஞ் செய் ஆத்ம சிந்தனைக கமருமுன்
ஏத்தியே நிற்பவனைகி

(10) குடித்தலும் ஊனுண்ணல் தீ நட்பும் சூதும்
விடுத்துமே நல்வினத்தைதச் சேர்

(11) பட்டினியாயிருந்தால் ஏகாதசி தனில்
கிட்டுமாம சித்த சுத்தியே

(12) இரவும் பகலு மொருமாலையைக் கழுத்தில்
பிரியாமலணிதல் நன்று

(13) மனச் சாந்திதானடைய தாளுமிருமணி
மோனமிருத்தல் நலம்

(14) உண்மை யுரைப்பாய் மிதமாய் அளவாய் நன்
றெண்ணி இனிதுரைத்தல் மேல்

(15) வேண்டியது நான்கெனில் அன்புடனுங்களு
மூன்றுகவே குறைத்தல் மேல்

(16) இன்னைசெய்யாமை இனிதென எவ்வுயிர்க்கும
இன்புறுதல் ஆனந்தமாம்

(17) தன்கை தனக்குதவி யென்று முற்றுப்பெற
தன் கருமஞ் செய்தல் நலம்

(18) அநநாட் செயுமனைத்துமை ரசனடி சேர்த்துமே
எநநாளுமை நாட்குறிப்பைக் கொள

(19) காலன் வருமுன் கடைடமையை நன்றுக
காலமறிந்து செய்தல் நன்று

(20) சரணம் துயிலுறுமுன்னும் எழுந்த பின்னும்
சரணமென ரசனடிச் சேர.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(இதைக் கண்ணாடி சட்டமிட்டு தினம் ஒருமுறை படியுங்கள்)

சுவாமிகள் நாகர்கோவில் விஜய ஞாபகார்த்த இலவச வெளியீடு.

கன்யாகுமாரியிலிருந்து திருவனந்தபுரம்

நாகர்கோவில் பஜனை வெகு மும்மரமாக நடந்தது. அதில் சுவாமிகள் கலந்து பாடினர். அது முடிந்ததும் கன்யாகுமாரிக்குப் போவதற்காக, காலை 6½ மணிக்கு சுவாமிகள் தயாரானர். இந்த யாத்திரை ஒரு பெரிய ஊர் கோலமாகக் காணப்பட்டது. ஆறு மோட்டார் கார்களும் ஒரு ஸ்டேஷன் வாகனும் ஜனங்களைக் கொண்டு சென்றன. கன்யா குமாரி முனையைக் கண்டதும் அங்கு எத்திசையிலும் பரந்து கிடந்த சமுத்திரத்தைப் பார்த்து சுவாமிகள் வெகு ஆனந்தமடைந்தார்.

பின்னர் கோவிலுக்குள்ளே போய் தேவியைக் கும்பிட்டு, உட்பிரகாரம் முற்றும் சுற்றி, வெளிவந்து ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு தரிசனம் அளித்தார்.

திரும்புமபொழுது மகாதானபுரத்தில் ஒரு தர்மசாலையில் சிறுஉணடி ஏற்றுககொணடபின் சுவாமிகள் கீர்த்தனம் நடத்தினர். அங்கிருந்த ஒரு சிறு ஆலயத்துக்குட்போய் தெய்வதனைத் தொழுதார். ஊருக்குள்ளே சென்ற பொழுது சுவாமிகள் போனது ஊர்கோலமாக இருந்தது. அவ்வூர் மக்கள அதற்காகவே தெருககள்தோறும் வெண் மணலைப் பரப்பியிருந்தனர்.

சுசீந்திரம் வந்து சேர்ந்ததும சுவாமிகள் அங்கிருந்த முக்கிய ஆலயத்தையும் வேறு பல சிறு கோயிலகளையும் சென்று பார்த்தார். பெரிய ஆலயத்தின் முன்பு வைத்திருந்த அனுமான் சிலை வெகு கம்பீரமாக இருந்ததைப் பார்த்த சுவாமிகள மகிழ்ச்சியுற்றார்.

அங்கிருந்து வந்தபொழுது சுவாமிகள் மோட்டாரிலிருந்து கீழே இறஙகி கீர்த்தனம் நடத்தவேண்டியிருந்தது; ஏனெனில் வழியை மறித்து சுவாமிகள் தரிசனத்துக்காக நின்றுகொண்டிருந்த ஜனஙகள் தொகை அளவிட முடியாததாக இருநதது. அப்பொழுது எழுப்பப்பட்ட ராமநாமத்வனி விண்ணுலகத்தையே பிளந்து சென்றது எனலாம்.

நாகர் கோயிலில் பாதபூஜை முதலிய சடங்குகள் நடைபெற்றபின்பு கனம் பரமேசுவரன் பிள்ளை அவர்கள் முன்வந்து ஸ்வாமிகளைத் திருவனந்தபுரம வர அழைத்தார். அவர் திருவிதாஙகூர் மகாராஜாவால் அனுப்பப்பட்ட மேஜர் ஜனரல் V. N. பரமேசுவரன்பிள்ளை-ஓ-பி-இ. வெளியே மகாராஜா அனுப்பியிருந்த மோட்டார்கார் நின்றுகொண்டிருந்தது. அதன் உருவம் தெரியாதவாறு புஷ்பங்களால் அலஙகரிக்கப்பட்டிருநதது. சில நிமிஷங்

களுக்குள்ளே சுவாமிகள் திருவனந்தபுரம் போகத் தயாராய் விட்டார்.

வெகு மரியாதையாய் அமைக்கப்பட்டிருந்த சிமிண்டு ரஸ்தாவிலே மோட்டார் கார் அதிவேகமாகச் சென்றது. வழியிலே பரமேசுவரன் பிள்ளையுடன் சுவாமிகள் சில வார்த்தைகள் பேசி யதிலிருந்து அவருடைய மரியாதை வெளியாகையால் சுவாமிகள அவரைப்பார்த்து "நீங்கள் அவசியம் ரிஷீகேசம் வரவேண்டும். வயது 56 ஆகியும் 35 வயதென்று மதிக்குமபடி இருக்கிறீகள். ஆத்ம விசாரம் செய்துகொண்டு உங்களுடைய வாழ்நாட்களைக் கழிக்க அங்கே வாருங்கள்" என்றார். தாம் அப்படிச் செய்வதாக ஏற்கனவே தீர்மானம் செய்திருப்பதாக பிள்ளை கூறினார்.—

சுவாமிஜியின் திருவனந்தபுரம் விஜயத்தையொட்டி நடந்த ஏற்பாடுகள் குறித்து 20—8—50 சுதேசமித்திரன பத்திரிகை கூறுவது:

திருவனந்தபுர விஜயம்

வரவேற்க கமிட்டி நியமனம்

திருவனந்தபுரம் ஆக. 19—தமது அகில இந்திய ஆத்மீகப் பிரசார சுற்றுப் பிரயாணத்தின்பொழுது அக் 18ந் தேதி திருவனந்தபுரத்திற்கு விஜயம் செய்யும் ரிஷிகேசம் சுவாமி சிவானந்தருக்கு ஒரு குதூகல வரவேற்பளிப்பதற்காக பலத்த ஏற்பாடுகள் திருவனந்தபுரத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ கே. பி. கோபால மேனன் தலைமையில் ஒரு வரவேற்பு கமிட்டி நியமிக்கப்பட்டதும் மேஜர் ஜெனரல் ஸ்ரீ வி. எ. பரமேச்வரன்பிள்ளை

ஸ்ரீ கே சங்கர சுப்பைய அய்யா ஆகியோர்கள் பேறபடி கமிட்டியின் உபதலைவர்கள். கிராம பஞ்சாயத்து மாஜி டைரகடர் ஏ. பிச்சுமணி அய்யங்கார் ஸ்ரீ கே. நீலகண்ட அய்யா ஆகியோர்கள் கூட்டுக் காரியதரிசிகளாகவும் ஸ்ரீ. எஸ். பரமேஸ்வரன் பொக்கிஷதாராகவும், இருப்பர் பல பிரபலஸ்தர்கள் இக்கமிட்டியின மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

—o—

சுவாமி சிவானந்தரின் திருவனந்தபுரம் விஜயம்

திருவனதபுரம், செப். 29—அகடோபர் 18-ம் தேதி யன்று இகு விஜயம செய்யவிருக்கும ரிஷிகேசம் சிவானந்த சரஸ்வதி சுவாமிகள், இகு 2 தினங்கள் தங்குவா ரெனறும அவர் வெளிவெ யமபலம அரண்மனையில் தங்கி யிருப்பாரென்றும் சிவானந்தசரஸ்வதி யாத்திரா மண்டலி வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி அறிவிக்கிறார்.

திருவனந்தபுரத்தில் அனந்தபத்மாலய சுவாமிகள் கோவில் முன் பூர்ணகும்பத்துடன் சுவாமிகள் அழைக் கப்பட்டார். அவர்கள் வரவை யெதிர்பார்த்து கோவி லிலே தங்கியிருந்த பேர் தொகை ஏறக்குறைய மூவாயிரம் இருகுமம. உயர்வாகச் செய்யப்பட்டிருந்த ஓரிடத்தில் சுவாமிகள் இருத்தப்பட்டார. அங்கே இருந்துகொண்டு கீர்த்தனம் ஆரமபித்தார். அது முடிந்ததும் நாம ஸங்கீர்த் தனத்தின் மகிமையைப பற்றியும மகாமந்திரக்கீர்த்தனத் தின் அருதாத்தைப் பறறியும் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

திருவனந்தபுரத்தில் சுவாமிகள் தங்க ஒரு பெரிய அரண்மனை ஒதுக்கப்பட்டிருந்தது. அது மகாராஜா

வுடைய சொந்தக்காரர்களுக்கு மாத்திரமே விடப்படுவது. அங்கே போக சுவாமிகளை ஒரு திறந்த காரில் அமர்த்தி, பிள்ளை அவர்கள் அழைத்துச் சென்றார். இப்படிச் சென்ற தால் திருவனந்தபுரம் வாசிகள் யாவரும் சிரமமின்றி சுவாமி களை பார்க்கமுடிந்தது.

டௌன் ஹாலின் வெளிப்புறத்து பிரகாசத்தால் ஜவலித்துகொண்டிருந்த "ஓம்" என்னும் எழுத்து வெகு தூரத்திலிருந்தே காணக்கூடியதாக இருந்தது. அவ்விடம் சென்றதும திருவனந்தபுரத்து மேன்மக்களுள பலரும் ஸமஸ்தானத்து உத்தியோகஸ்தர்களும் முன்வந்து சுவாமி களை வரவேற்றார்கள். அப்பொழுது இரவு மணி ஏழு. சுவாமிகளைக்கண்ட ஜனங்கள் மெய்மறந்து உரக்க ஜய மொழிகள் உரைத்தார்கள்.

பிரார்த்தனை முடிந்தபின் இரு பெண்கள் ஒரு பாட் டைப்பாடினர்கள். அது திருவனந்தபுரம் மகாராணியால் எழுதப்பட்டது, அதில் சுவாமிகள் சரித்திரம முற்றிலும கூறப்பட்டிருந்தது.

பின்பு வைகக்கோர்ட்டு ஜட்ஜாக இருந்து பென்ஷன் வாங்கிகொண்டிருந்த ஸ்ரீ கே. பி. கோபாலமேனன் எனற பெரியார் சுவாமிகளைப் பற்றிய புகழ்மொழிகள் சில விடுத்தார். அவர் அதறகுமுன் ஒரு சமயம் ரிஷிகேசம் வந்து சுவாமிகளின் அன்புட அலுவல்களைப் பார்வையிட் டிருந்தவர். அப்பொழுது அவர்கொண்டிருந்த அபிப்பிரா யங்களை இந்தச சந்தர்ப்பத்தில் கூறினர்.

அதன்பின் வரவேற்புப் பத்திரங்கள் ஆங்கிலத்தி லொன்றும், ஸம்ஸ்கிருதத்திலொன்றும் படிக்கப்பட்டனர். அவை வெகு நேர்த்தியான வெள்ளிப் பேழையிலிட்டு

சுவாமிகள் கையில் கொடுக்கப்பட்டன. அந்தப் பெரு மினமேல ஸ்ரீ பத்மநாப சுவாமிகள் உருவம் செதுக்கப்பட் டிருந்தது.

இவற்றைப் பெற்ற சுவாமிகள விடையாக ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில புகுதப்பட் டிருந்த வேதாந்தக்கூறுகள நெடுநாளாகத தாம் நிகழ்த்தி வந்த தவத்தின பயனாகக் கிடைத்த அனுபவங்கள் நிறைந் திருந்தன

கூட்டம கலைந்ததும, பெரிய கடைத்தெருவழியாக சுவாமிகளுடைய கார் மணிக்கு 70 மைல வீதம் செல்லும் வேகத்தில் போயிற்று. வழிமுற்றிலும் நிறுத்தப்பட் டிருந்த மிலிட்டரிக்காரரும் போலீசுக்காரரும் ரஸ்தாவைக் காலிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். இறுதியில் அரண் மனையின் முன்பு கார் நிறுத்தப்பட்டது. மகாராணியம்மை யார் மேடைப்படிகளின் மேல கைகளைக் கூப்பி நின்று கொண்டு சுவாமிகளை வரவேற்றார். "இங்கே நடக்கின்ற 'வேட்டை"யைப் பார்க்க உங்களை அழைத்துவந்தது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது" என்று ராணியார் கூறியதிலிருந்து மோட்டார் என் அவ்வளவு வேகமாக வந்தென்று தெளிவாயிற்று. இரண்டொரு நிமிஷங்கள் கழித்து வந்திருந்தால கார் உள்ளே வந்திருக்க முடியாது. "வேட்டை' உற்சவம் முடிந்த பின்பே வந் திருக்க முடியும்

திருவனந்தபுரத்தில் அரசாள தொன்றுதொட்டு ஆதரித்து வரும் மத நடபிகையைப்பற்றி சுவாமிகள் இரண்டொரு புகழ்மொழிகள கூறினர். அப்பொழுது மகாராணியார "சுவாமிஜி, இந்த நாட்டில் எதுவும் மதத் தையே ஆதாரமாக வைத்துகொண்டிருக்கிறது" என்றார்.

"வேட்டையும்" தொடங்கிற்று. அந்தச் சடங்கை சுவாமிகள் முற்றிலும் பாதத்தார். மிகுந்த ஆனந்தம் கொண்டார். வரிசை வரிசையாக வந்துகொண்டிருந்த பட்டாளத்துக்காரர் அவரவருக்கு ஏற்பட்டிருந்த ஸ்தானங்களிலே அமர்ந்து நின்று தத்தம கடமைகளைச் செவ்வனே செய்து வந்ததைப் பார்க்க அழகா யிருந்தது. உதவ விக்கிரகங்கள் மூன்று எடுத்து வரப்பட்டன. அவற்றினு முன் மகாராஜாவும் வந்தார். அவர் ஆலயத்துக்குள் போனதும், மிகுந்த பக்தியுடன் அமபு எய்ததும பாதத் தவா மனதை உருக்கின. எங்கும் ஜனக்கூட்டம; ஆனால ஒரு சிறு சத்தமும் இல்லை. அப்படிச் சில நிமிஷங்கள் சென்ற பின்பு "பாண்டும" நாதஸ்வரமும் கேட்டன. ஊர்கோலமும ஆரம்பித்தது. மகாராஜாவும் யுவராஜாவும மௌனமாக வெறும் காலோடு நடந்து சென்றார்கள்.

இந்தக் கண்காட்சி விருந்து முடிவுற்றதும சுவாமி சிவானந்தர் மகாராஜாவிடத்தும் ராணியாரிடத்தும் விடை பெற்று தம் இருப்பிடம் சென்றார்.

மறுநாள் காலை (19—10—50) அரண்மனையிலே ஆயிரகணக்கான ஜனங்கள கூடிவிட்டார்கள. கனம பரமேசுவரன் பிள்ளையவர்கள் வந்து சுவாமிகளை அழைத்துச்சென்றார். அரண்மனையில் சுவாமிகள ஒரு சிறிது பிரசங்கம் நடத்தினர்; சுவாமி சிவானந்தா த்யானத்தைப் பற்றியும், ஸாதன முறைகளைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்.

இதனிகழ்ச்சிக்குபபின், சுவாமிகள டத்பநாப சுவாமி கோவிலுககுப் போனர், அங்கே டன்னிரண்டிருந்து மிகப்பெரிய விக்கிரகத்தைப் பாதத்தார். ச்சாவில் அர்ச

சுகர் புஷ்பமாலையிட்டு, அவ்ஷிக்கிரகத்தின் கலை, வலக்கை இடக்கை, நாபிக்கமலம், பாதம் என்னும் உறுப்புக்களை யெல்லாம் காண்பித்தார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது சுவாமிகள் மாததிரமே உள்ளே அழைத்துச் செல்லப் பட்டார்.

பின்பு மற்ற கோஷ்டத்திரங்களுக்கும் சுவாமிகளைக் கூட்டிக்கொண்டு போனர்கள். எவ்வளவோ பெரிய கூட்டம் கூடியிருந்தபோதிலும் போலீசாரும் தொண்டர்களும் வெகு சாமர்த்தியமாகவும் அமைதியுடனும் கூட்டத்தை அடக்கினர்கள்.

கோவிலிலிருந்து வெளியே வந்ததும் திவ்ய ஜீவன சங்கத்துத் தலைவர் ஸ்ரீ நீலகண்டய்யர் வீட்டுக்குப்போய் அங்கே பார்வையிடவேண்டியவற்றையெல்லாம் பார்வை யிட்டு அதன்பின்பு கனம் ராமேசுவரன் பிள்ளை அவர்கள் வீட்டுக்குச் சென்று அங்கே பிள்ளைக்கும், அவர் மனைவிக் கும சுவாமிகள மந்திர தீக்ஷை கொடுத்தார். அங்கே கீர்த்தனையும் ஆரம்பித்தார் அது பிள்ளை யவர்களுடைய பூஜை அறை. பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் உண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. அவர்கள் அன்புடன் அளித்த பிக்ஷையை சுவாமிகள் ஏற்றுக்கொண்டார் அவர்கள் மகனை ஆசீர்வதித்தார்.

இவை யெல்லாம் முடிந்தபின்பு, சுவாமிகள் மீண்டும் அரண்மனைக்கே போனர். பாதபூஜை செய்வதற்காக அங்கே சுமார ஐந்நூறுபேர் காத்திருந்தார்கள். ஒருமணி நேரம சுவாமிகள் சும்மா இருந்தார். வேண்டியபேர்கள் ஒவ்வொருவராக வந்து பாதத்தில் புஷ்பம் இட்டுச் சென் றார்கள் போகும்பொழுது சுவாமிகள அனுக்ரகித்து

அவர்களுக்குப் பிரசாதம கொடுத்தார. வெகு ஒழுங்காக இந்தக் காரியம நடைபெற்றது.

பின்பு, ஸ்ரீ டாம்டசுவான பிள்ளை சுவாமிகளை மகாராஜாவிடத்துக்கு அழைதது சசென்றார. அரண்மனை வாயிலண்டை பூமாலையுடன் காதது்துக்கொண்டிருந்தார்; மகாராஜா. அவா முகததில் பக்தி தெளிவாகக் காணப் பட்டது. அவரும் பாதபூஜை செய்தார். பிறகு சில நிமிஷங்கள் குசலப்ரசினஙகள் நடநதன. இரண்டு சிஷ்யர் களும் சுவாமிகளும அரண்மனையிலே பிகைஷ ஏற்றாகள. மகாராணியாரும ப ாஜாவும் யுவராஜாவும ஒரு பாய்மீது உட்கார்ந்து சுவாமி டன பேசிக்கொணடும விருநதை மேற்பார்வை யிடதெ ண்டும இருந்தார்கள். அப் பொழுது ஹடயோகத்தைப்பற்றியும ஆஸனப் பயிற்சியைப் பற்றியும் ராணியமமையார் சில கேள்விகள் கேட்டதி விருந்து அவர் யோகத்தில் சில முறைகள பயின்று வருவ தாகத் தெரியவந்தது.

உணவுககுப் பின்பு இருபது நிமிஷநேரம் யாததிரை சினிமா காண்பிக்கப்பட்டது. அதைப்பாாத்த ராணி யம்மையார் மிகவும் சநதோஷமடைநதார். அபபால சுவாமிகள் கீாதனம் ஆரம்பிததார. ஆங்கிலத்திலும் தாமியற்றியிருக்குமம கீாத்தனைகள பாடினார. அவற்றை யெல்லாம கேட்ட மகாராஜாவும் ராணியமமையாரும மகிழ்ச்சிபெற்றார்கள்.

—o—

கொச்சி

ஆலப்புழை ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் சுவாமிகளுடன விமானத்தில் யாத்திரை செய்தார. கொச்சியைச் சேர்ந

தகும் ஆலப்புழை, கொச்சி, முதலிய இடங்களைச்சார்ந்த பல பெரியவர்கள முன்வந்து சுவாமிகளுக்கு மாலை யிட்டனர். அங்கே சிறிதுநேரம கீர்த்தனம் செய்து அதன்பின்பு மீண்டும் விமானமேறி இரண்டுமணிக்குக கோயமபுத்தூரில் இறங்கினர். இப்படிக் கோயம்புதூரில் இறங்குவதற்குச சம்மதிக்கவேண்டுமென்று விமான அதி காரிகளை முன்னதாகவே கோயம்புத்தூர வாசிகள் கேட்டுக கொண்டிருந்ததனாலேயே அங்கே சுவாமிகள் சில நிமிஷங கள் தங்க முடிந்தது. அச்சிறு சந்தாப்பத்திற்குளளே சுவாமிகள் ஒரு சிறு ஸத்ஸங்கம நடத்திவிட்டார். கீத தனையும் உபந்யாசமும் நடைபெற்றன. ஈசுவரன் நாமத்தை உச்சாரணம் செய்துகொண்டே வாழ்க்கையை தெய்வீக மாக நடத்தவேண்டுமென்று சொன்னர். அத்தருணத திலே கோயமபுத்தூர் வாசிகள் வாசித்த வரவேற்புப் பத்திரிகை இது :—

புனிதவதியார் மாதர் சன்மார்க்க சங்கம் திருப்பூர

ரிஷிகேஸ் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களுக்கு

—o—

வரவேற்பு

போன்புகொண்ட ஆத்மஜோதியே வருக, வருக. வணக்கம்

எங்கள் கோவை ஜில்லா தலைநகருக்கு தாங்கள் வர பெரும் பாக்கியமுற்றோம். தங்கள் உபதேச ஆத்ம விளக் கத்தை பத்திரிகை மூலம் அறிந்துள்ளோம். ஈங்கோய்மலை அத்வையானந்த சுவாமிகள் வாக்கின் மூலமாயும் தங்கள மகிமையை உணர்ந்துள்ளோம். தாங்கள் அருட்பணி மேழிபுரிந்து மக்களுக்கு சாந்திநிலவ இறைவன் அருள்

புரிவாராக. எங்கள சிறபபாராகிய திருப்பூருககு தங்களை அழைத்துவரவும் நாங்கள விரும்பி இருநதோம. அருள் வாயக்கவில்லை. தஙகள் அருட்பெருஙக கருணையை யாசிகக்ள பொரிதும் வேண்டுகின்றோம.

இங்ஙனம் அன்புமிகக
சிதம்பரம் சிவகாமி அமமை புனிதவதியார
மாதா சன்மாாக்க சங்கம், திருப்பூர.
கோவை ஜில்லா

—o—

பெங்களூர்

கொசசி விட்டதும விமானம கிளம்பி 3-30 மணிக்கு பெஙகளூர் அடைநதது. மைசூர் முதிய மகாராணியார தம்முடைய ஆள ஸ்ரீ வேணுகோபால் என்பவரை மாலை புடன் அனுப்பியிருந்தார. அவர் மாலையுடனும் சில மோட்டார காகளுடனும் விமான நிலையத்திற்கு வந்து சுவாமிகளையும் அவர் சிஷயர்களையும் வரவேற்றார.

டெக்கான் ஏரவேஸ் அதிகாரிகளும் வரவேற்றார்கள் அவர்களிடத்தும் மாலை பெற்று சுவாமிகள் உயர்வான ஒரு மேடையிலிருநது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு தரிசனம அளித்தார். மேடையில் நின்றுகொண்டு கீர்த்தனமும் செய்தார். தெய்வநாமம் சொன்னபொழுது சுவாமிகளைப் பின்பற்றி எல்லோரும் நாமஸங்கீர்த்தனம் செய்தார்கள். ஒரே முழக்கமாயிற்று. பலர் மெய்ம் மறந்து ஆனந்தக்கண்ணீர் விடுத்தனர். சுவாமிகள் அப் பொழுது செய்த சிறு உபந்யாசத்தில் ஜனங்களுடைய பக்தியைப் புகழ்ந்து பேசினர். நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டுமென்றும், ஆஸனம் பயில வேண்டுமென்றும்

அஹிம்ஸை, ஸத்யம், பிரமசரியம் என்பவற்றை ஒரு பொழுதும் கழுவவிடக்கூடாது என்றும் வற்புறுத்தினர். இசறு உபநிஷத்தைதக்கேட்ட ஜனங்கள் பெரு மகிழ்ச்சி யுற்றனர்.

—o—

மைசூர் தர்பார்

சுவாமிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இடம் ஸம்ஸ்கிருதக் கல்லூரி அதற்கும் மைசூர் அரண்மனைக்கும உள்ள தூரம் மிகவும் கொஞ்சம். அக்கல்லூரியிலுள்ள போதகாசிரியர் களை அனைவரும் சுவாமிகளை வந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவார்கள்.

மாலை 7 மணிக்கு சுவாமிகள் அரண்மனைக்குச் சென்றார். அவ்வரண்மனையில் எங்கே பார்த்தாலும் மின் ஸார விளகுகள பிரகாசித்து இரவைப் பகலாக மாற்றிக் கொண்டிருந்தன.

அரண்மனை வாயிலிலேயே நின்றுகொண்டிருந்தார். ஸ்ரீ கே. நரசிம்மய்யங்கார். அவர் மகாராஜாவுடைய அஸிஸடணடு ஸெக்ரடரி தாபார் உள்ளே நடந்து கொண்டிருந்தது. சுவாமிகள் அதனைப் பார்ப்பதற்காக அவர்களுக்கென்று உயர்வான ஓரிடம அமைக்கப்பட்டிருந் தது. (அது பால்கனி) இங்கே இருந்துகொண்டு மைசூர் மகாராஜா நிகழ்ததிவந்த தர்பாரை சுவாமிகள் பார்த்துக் கொணடிருந்தார். மகாராஜா ஒரு ஸிம்மாஸனத்தில் உட் கார்ந்திருந்தார். அரசாங்க உத்தியோகஸ்தர்களிற் சிறந தோர் ஒருவர்பின் ஒருவராய் வந்து காணிக்கைகளை ஸமர்ப் பித்தனர். அவற்றை மகாராஜா தம்முடைய கதையால்

தொட்டார். அதுவே அகக்காணிக்கைகளை ஏற்றுக கொண்டதன் அறிகுறி. பின்பு, பல்வகையான ஆட்டங்கள் முதலியன நிகழ்ந்தன. உதாரணமாக, பாட்டு, பாண்டு, குஸ்தி, குதிரைக்காட்சி, ஸாக்கஸ் வித்தைகள முதலியனவாம.

தர்பார் நடந்துகொண்டிருக்கும்பொழுதே முதிய மகாராணியம்மையார் பாலகனிக்குவந்து சுவாமிகளுக்கு நமஸ்காரம் செய்தார. "நீங்கள் வந்தது எங்களுக்கெல்லாம் பரமானந்தம் விளைவிக்கிறது" என்றார். பினபு சுவாமிகளுக்கு அரச குடும்பத்தார் யாவரையும அறிமுகப்படுத்தினர். ஒவ்வொருவரையும் ஸ்வாமிகள் ஆசீர்வதித்தார்.

தர்பார் முடிந்ததும், ஸ்ரீநரசிமமய்யங்கார் வந்து சுவாமிகளை அரண்மனை முற்றும் கூட்டிச்சென்று அங்குளள படங்கள், சிங்காதனம் முதலிய எல்லாவற்றையும காண்பித்தார "ஸ்வாமிஜி! இதுவே ஸ்வர்ண ஸிம்மாஸனம். விசேஷ தினங்களில மகாராஜா இதிலேதான் கொலுவிருப்பார். இதிலே எழுபடிகளிருக்கினறன அப்படிகள் ஏழாக இருப்பதில் ஏதோ அந்தராத்மம இருப்பதாகக் கேள்வி" என்று ஐயங்காரவர்கள் சொன்னார. அபபொழுது சுவாமிகள் "இந்த எழுபடிகளும எழுஞான பூமிகளை உணர்த்துகினறன. அவையாவன சுபேசசை, விசாரணை, தனுமானஸி, ஸத்வாபத்தி, அஸம்ஸக்தி, பதார்த்த அபாவனை, துரியம, என்பவை இவற்றைதாண்டின பிற்பாடு ஸாதகன் பரமபதத்தை அடைகிறான். பரமபதம் என்பதே மகாவிஷ்ணு வீற்றிருக்கும் பதம். அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம். இந்தத் தத்வத்தைத்

தான் இங்கே அறியவேண்டியது" என்று விளக்கிக் கூறினர்.

அன்றிரவு 10-30 மணிக்கு சுவாமிகள் தம்மிருப் பிடத்திலிருந்து கிருஷ்ணராஜ அணைக்கட்டையும் பிருந்தா வனத் தோட்டத்தையும் பார்வையிடச் சென்றார். அணை அஸிஸ்டண்டு எஞ்சினீயிர் சொன்ன விளக்கங்களைக் கேட்டு சுவாமிகள் வெகு சந்தோஷம் அடைந்தார். சாதா ரணமாக அங்கே விளக்குகளெல்லாம் இரவு 10 மணிக்கே அணைக்கப்படுமாயினும் அன்றிரவு சுவாமிகளுக்காக அவை அணைக்கப்படாமல் இருந்தன. பிருந்தாவனத் தோட்டத் தில் அழகுமிகுந்த அருவிகள் மின்சார வெளிச்சத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தவற்றை சுவாமிகள் பார்த்து பெருத்த மகிழ்ச்சிகொண்டார். மயில்போன்ற ஒரு மின்சார ஜாதி இரக்கைகளை விரித்தும் சுருக்கியும் காட் டிக்கொண்டிருந்தது. மைசூர் ஸமஸ்தானத்துக் குலதெய் வப் பக்ஷியான கண்டபெருண்டர் என்பது மின்சாரத் தால் விளக்கிகாட்டப்பட்டு அது தோன்றியும் மறைந்தும் நின்றது இவற்றை எல்லாவற்றையும்விட அங்குசோத்தியாக இருந்தவை ராதாகிருஷ்ண உருவமும் காவேரியம்மனுமே

இவை யெல்லாம் சுவாமிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுத்ததுமன்றி ஆழ்ந்த தெய்வச் சிந்தையிலும் அவரை அமர்த்தின இவற்றைப் பார்த்து பின்னர் ஸம்ஸ்கிருதக் கல்லூரிக்குத் திரும்பிவந்தபொழுது நள்ளிரவாயிற்று.

அக்டோபர் மீ 20ஆ காலையில் சுவாமிகள் பஞ்சகவி மடத்துக்குப் போனபோது அங்கே அவர்களை கௌரி சங்கர் சுவாமிகள் வரவேற்றார். அந்த மடத்தை வெகு சிரத்தையுடன் முதிய மகாராணி பாவித்துவருகிறார்.

அங்கே சுவாமி சிவானந்தர் பஞ்சாக்ஷர கீர்த்தனம் செய்தார்.

பின்பு காலை 10 மணிக்கு சுவாமிகள், அரண்மனைக்குத் திரும்பிவந்தார். மகாராஜா முன் செல்ல அவர் பின சென்றுகொண்டிருந்த ஊர்கோலத்தை அவர் பார்த்தார். அங்கே ஐரோப்பிய தம்பதிகள இருவா சென்றுகொண் டிருந்தார். சுவாமிகள் அவர்களிடம "ஆனந்தகீதை" என்ற புத்தகத்தைக் கொடுத்தார். அந்த ஐரோபபிய அம்மையார் ஒன்றும தெரியாதவளாய்த் திகைத்து நின் ரூள். அப்பொழுது அஙகிருந்த ஒரு பெரியவா அந்த அம்மையைப்பார்த்து "இவர் ஹிமாலயா பர்வதத்தி லிருந்து வந்திருக்கின்ற ஒரு பெரிய சுவாமிகள" இவர் இந்தியா முழுவதும் சுறறுப் பிரயாணம் செய்துகொண்டு ஆத்மீங் ஞானம் பரப்பிவருகிறார்" எனறு அறிவித்தார். அப்பொழுது அந்த அம்மையார் சுவாமிகளை மிக வணககத் துடன் நமஸ்கரித்தா

விநாயகர் கோவில் சென்று வழிபட்டபின்பு சிவா னந்த சுவாமிகள் அரண்மனைக்குள்ளே கொண்டுபோகப் பட்டார். எலட்ரிக் எலிவேட்டர்விட்டு கீழே இறங்கின உடனேயே முதிய ராணியார் முன்வந்து "உங்களுக்காக இங்கே கார்த்துக்கொண்டே இருக்கிறேன்" என்று கூறி வரவேற்றார். அதன் பின் ஒன்றரைமணி நேரம் சுவாமி கள் உள்ளே அரசகுடும்பத்தாருடன் இருந்தா. நேரிலே கண்டபொழுது கேட்டுக்கொள்ளவேண்டுமெ என்று நெடு நாளாக நினைத்திருந்த கேள்விகளெல்லாம் ராணியமமையார் கேட்டிருப்பார். அவற்றிற்குத் தக்க விடைகளை சுவாமி கள் அளித்திருப்பார் என்று மாத்திரம் ஊகிக்கலாம். ஆனல் சுவாமிகள் கூறிய சில வார்த்தைகளிலிருந்து ராணி

அம்மையார் யோகத்திலேயும் தத்வஞான நூல்களிலும பயின்றுவந்திருந்தா என்பது மாத்திரம் தெளிவாயிற்று.

அச்சந்தர்ப்பத்திலே மகாராஜா அவர்கள் சுவாமிகளுக்கு ஸால்வைகளும், வைரமோதிரமும பரிசளித்தார்.

அதன்பின் சுவாமிகள் முதிய மகாராணியார் பூஜை அறையில் கீர்த்தனை நிகழ்த்தினர். அவ்விடம் விட்டு சுவாமிகள் வெளிப்போந்தபொழுது மாலை $1\frac{1}{2}$ மணி யாயிற்று.

—o—

மாண்டியா

மூன்று மணிக்கு சுவாமிகள் மைசூர்விட்டுப் புறப் பட்டார். மகாராணியார் வேண்டுகோளுக்கிணங்கி அவ ருடைய காரிலேயே சுவாமிகள் பெங்களூருக்குப் போனர். அப்படிப் போகும்போது வழியிலே மாண்டியா என்னும் இடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வழியில் நின்று கொண்டு சுவாமிகளைப் பார்க்கவேண்டும் என்று முறை யிட்டனர். சுவாமிகள கீழே இறங்கினர். அங்கே ஒரு விநாயகர் கோயிலிருந்தது. அதிலே சுவாமிகள் கீர்த் தனம செய்ய ஆரம்பித்தார்.

—o—

பெங்களூர்

பெங்களூருக்குப் போனபொழுது அங்கே ஆண்மணி யொன்று தயாரிக்கப்பட்டு சுவாமிகள் தங்க அளிக்கப் பட்டது. சாதாரணமாக அங்கே அரச குடும்பத்தார் மாத்திரமே தங்குவது வழக்கம். அது அறுநூறு ஏகர்

கொண்ட ஒரு விசாலமான தோட்டத்தின் மத்தியிலே கட்டப்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் சோலைகளும் மரங்களும் இருந்தமையால் அவ்விடம் மிகவும் ரமணீயமாயிருந்தது.

சிறிதுநேரம் ஓய் வெடுத்தபிறகு ஸ்வாமிகள் அங்கிருந்த கமலாபாய் பளனிக் கூடத்துக்குப் போனார். அங்கே வந்து கூடியிருந்த ஜனங்கள ஆயிரகணக்காக இருந்தார்கள். வாயிலிலே கொட்டை எழுத்தில் "சிவானந்தர் நீடூழி வாழ்க" என்று எழுதப்பட்டிருந்தது. வேறொரு வாயிற்பக்கம் "சாந்திக்வாரம்—சிவானந்தருக்குஜய்" என்றும் மற்றோரிடத்தில் இரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டு அவற்றில் "சேசி, பணிசெய், த்யானம்செய், அனுபூதி பெறு" என்றும், எழுதப்பட்டிருந்தன. இந்த வாயிலைத் தாண்டிச் சென்றதும் உள்ளே கொடிகளாலும் தோரணங்களாலும் அமைக்கப்பட்ட ஒரு சுவர்க்கம் போன்ற நகர் காணப்பட்டது. அத் தோரணங்களுக்கிடையே சிவானந்தருடைய படமும அதைச்சுற்றி "உள்ளே யிருக்கிறது ஆனந்தம்" என்ற எழுத்துக்களும் காணப்பட்டன. பல வகையான நன்மொழிக் கூறறுகள் தோரணங்களுக்கிடையே அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் சில "தாழ்மையாகவும் எளிமையாகவும் இரு," "உன்னைப்போலவே உன் அண்டைவீட்டுக்காரனையும் நேசி," "ஏழைகளிடத்துத் தெய்வதனைக்கண்டு தொழு," "மோசம் நினைக்காதே," "நல்லவனுயிருந்து நன்மைச்செய்," "பணிசெய், நேசி, கொடு," "சேவையே அன்பின் அறிகுறி," "தைரியமாயிரு" "எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிரு" என்பவை.

முதலில் ஸ்வாமிகள "சாந்தித் வாரத்தின்" வழியாய்ச் சென்றார். போகும்பொழுதே திடீரென்று ஸ்வாமிகள் மீது ஒரு பூமாரி சொரிந்தது, அது வெகு நேர்த்தியாக அமைக்கபட்ட ஒரு விநோதச் செயல்.

உள்ளே சென்று ஸ்வாமிகள் தமமிடத்திலமர்ந்ததும் அவரைக் காணவந்தவர்கள் ஒவ்வொருவராக உள்ளே விடப்பட்டார்கள். அவர்களுக்குள ஒருவர் பஞ்சாப் தேசத்திலிருந்து வந்திருந்த ஒரு கணக்கர். அவரைக்கண்ட மாத்திரத்திலேயே ஸ்வாமிகள் "நான பலவருஷங்களுக்கு முன் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தேனல்லவா! உங்கள் வீட்டில் எல்லா விடத்திலும் வேதாந்த மொழிகள் பதித்த பலகளை மாட்டியிருந்தீர். ஸதாகாலமும நீங்கள் ஓம் என்று உச்சாரணம செய்வது வழகமாயிருந்தது." என்று சொன்னர். ஸ்வாமிகளுடைய ஞாபக சக்தியைக் கண்டு அந்தப்பிரபு மிகவும் ஆச்சரிய மடைந்தார்.

பின்பு கூட்டம் கலைந்து ஸ்வாமிகள ஆர். பி.ஏ.என். எம்-ஹைஸ்கூலுக்குப போவதற்காக வெளியேவந்தார். அவர்மீது ஜனங்கள வந்து விழாமல் தடுக்க கயிறுபிடித்த பல தொண்டர்கள் இரு வரிசைகளாக நின்றனர எனினும் யாரோ ஒரு ஸிந்தி அம்மையார் அக்கயிற்றை யறுத்து உள்ளே போய் நூற்றொன்று ரூபாய் வைத்திருந்த ஒரு காகிதக் 'கவரை' ஸ்வாமிகளிடம் கொடுத்து வெளியே போய் விட்டார. அவர் பெயர எதிலும் எழுதியிருக்க வில்லை. அது வன்றோ உண்மையான தர்மம்!

ஹைஸ்கூலில் தமிழிலும கன்னடத்திலும் வரவேற் புப் பாடல்கள பாடபபட்டன. ஸ்வாமிகள் செய்த பிரசங் கமே வழக்கமபோல் வேதாந்த உணமைகள நிறைந்த சொல் மாரியாக இருந்தது—இறுதியில் கீர்தனமும செய்த

பொழுது கூட்டத்திலிருந்தவர் யாவரும் கலந்துகொண்டமையால் வெகு நேரம் நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. நேரம்சென்றது ஒருவரும் கவனிக்கவில்லை அதற்குமேல் யாத்திரை சினிமா காண்பிக்கப்பட்டது. இரவிலே களைப்பாறுவதற்கு அரண்மனைக்குச் சென்றபொழுது எவ்வளவோ நேரமாய்விட்டது.

அக்டோபர் 21 உ பகல் பன்னிரண்டுமணிவரை ஸ்வாமிகள் ஒவ்வொரு இயக்கத்தையும் அனுக்கிரகம செய்துகொண்டே இருந்தார். யார் யார் அழைத்தாரோ அங்கே போய் கீர்த்தனம செய்வது, பேசுவது, வாழ்த்துகிறது என்ற தொழிலையே செய்துகொண்டிருந்தார். அப்படி அவரை அழைத்துசென்ற இயக்கங்களுக்குள சில திவ்ய ஜீவன சங்கங்கள், விசுவேசு வரபுரத்து ஆஸ்தான போஷகஸபை, பஸவங்குடியிலுள்ள சங்கரமடம, சாலை ரஸ்தாவிலுள்ள யுவனவசிய ஸமாஜம் எனபவை.

மாலையில் பத்திரிகை நிருபர்கள வந்து தரிசனம் செய்து ஸ்வாமிகளிடம பொன் மொழிகளைப் பெற்றுச் சென்று, அவற்றைப் பிரசுரம் செய்தனர்.

இவை முடிந்தபின்பு ஸ்வாமிகள் நாடகம் ஒன்று பார்த்தார். கெடில கௌடா ரோடிலுள்ள எஸ்.எஸ். நாடக மண்டலி ஸ்வாமிகளை அழைத்துசென்று தங்களுடைய விந்தையை ஸ்வாமிகளுக்குக் காண்பித்தார்கள். அவர் நடத்திய நாடகம அம்பரீஷ சரிதம். சிவானந்தரோ நாடக சாலையில் கண்டது அம்பரீஷரின பக்தி ரஸத்தை மாத்திரமே. அங்கே ஸ்வாமிகள் இருக்கும்பொழுதே பள்ளிக கூடத்துப்பிள்ளைகள ஸ்வாமிகளுக்காகக காத்திருக்கின்றனர் என்ற செய்தி வந்தது. அதைக்கேட்டு ஸ்வாமிகள நாடகமண்டலி நண்பரிடம் விடை பெற்றுக்கொள்வதற்

காக அரங்கத்தின மேலே ஏறிச்சென்றார். உடனே எல்லா நடிகர்களுமே ஸ்வாமிகளைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர் பாதத்தில் விழுவதும் கால்களைப் பற்றி வருடுவதுமாய் அவர்கள தபக்கள அன்பை வெளியிட்டார்கள். ஸ்வாமிகள அபபொழுது வெகு அழகாக ஒரு சிறிய உபந்யாசம் நிகழ்த்தினர் குறிப்பாக அவர் ஸாதனையின் எட்டுப் பாகங்களைக கூறினர். அவையாவன சுத்தம செய்துகொள்ளல், தாரணை, மனனம், தபானம், வஸ்துவை அறிதல். அதனுடன கலத்தல், ஒன்றுதல், விடுதலை பெறுதல், இதைக் கூறினபின்பு சில பாடலகளைத் தமமுடைய அழகிய குரலில் பாடினர். "நீங்கள சிவானந்த ஸ்வரூபிகள என்பதை மறக்காதீர்கள்" எனறும், "அமபரீஷரைபோல்பக்தியை வளர்த்துங்கள்" என்றும, அவர்களுக்கு எடுத்துக் கூறினர். பினபு அவர்கள ஆடடதைப்பற்றிப் புகழ்ந்து பேசினர். இந்த நாடகம எழுதியிருகக்கும நாஹரிசாஸ்திரி மிகவும் சாமர்த்தியசாலி, அறிவாளி." எனறார். சாஸ்திரியார் எழுந்து "ஸாக்ஷாத நாராயணரே இந்த நாடகத்தைப் பாக்க வந்திருக்கிறார" என்று சொல்லி ஸ்வாமிகள் பாதத்தில விழுந்தார.

பின்பு ஸ்வாமிகள பள்ளிக் கூடத்துக்குப் போனார். அங்கேயும பிரசங்கம, கீர்த்தனம், பஜனைஎல்லாம் வெகு விமர்சையாக நடைபெற்றன. பல பெண் மணிகளும் கலந்து கொணடார்கள. அவர்களைப்பார்த்து ஸ்வாமிகள் "நீங்கள பக்தியைக கைப்பற்றவேண்டும். புருஷர்கள ஞானத்தைத விபரீதன்று நினைத்து பக்தியை மறந்து விடுவார்கள ராகவாலுக்குக கண உண்டா மூக்குண்டா என்று தாக்கம செயவார்கள் நீங்கள விரதமான பக்தியு

டன் இருக்கவேண்டும். நாம ஸங்கீர்த்தனம் எவ்விதத்தி லும ராஜயோகம், ஞானயோகம என்பவற்றுக்கு குறைந்த தல்ல" என்றார். பிற்பாடு அவர்களுக்கு "சொட்டி"க் கீர்த் தவட கற்றுக் கொடுத்தார.

மறு நாட்காலை (22-10-50) ஸ்வாமிகள் மல்லே சுவ ரடி போய் அங்கே திவ்ய ஜீவனசங்கத்தை ராம பந்திரம என்ற இடத்தில் ஸ்தாபனை யிட்டார். அங்கேயும் ஆயிரக ணக்காக ஜனங்கள வந்திருந்தார்கள். நேரம் மிக குறை வாக இருந்தபோதிலும் ஸ்வாமிகள் ஒரு சிறு சொற்பொழி வும கீர்த்தன ஸத ஸங்கமும நடத்தினர.

அதன்பின் ஜலஹல்லிக்கு வந்து அங்கே அமைக்கப் பட்டிருந்த பந்தலுக்குளளே புகுந்து ஸ்ரீ-டி-கே-கணேஷ் என்பும பிரபு அளித்த வரவேற்பைப் பெற்றார. பட்டா ளத்துத் தலைவர்களும் சிப்பாய்களும் கூடியிருந்த அந்தக கூட்டத்தில் ஸ்வாமிகள் நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்குக் கொடிய வெயில் தங்கள்மீது காய்ந்து கொண்டிருந்தது தெரியாமலிருந்தது. ஸ்ரீ கே.ச ராஜஸிங என்னும் நண்பர் பாட்டு பாடிக் கொண்டே ஸ்வாமிகளை வரவேற்றார். அவருக்குப்பின் கணேஷ் முதலிய சில பிரபுக்கள் புகழ் மொழிகள் கூறின களை ஸ்வாமிகளும் அருமையாக விடை கூறினர். அறிவுரை, ஸ்தவம் முதலிய குணங்களை வளர்த்தவேண் டுமென்று வற்புறுத்தினர்.

இந நிகழ்ச்சிகளுக்குப் பின் ஸ்வாமிகள் அமெரிக்க மாது ஸ்ரீமதி ஷமாஷ் அம்மையார இருக்குமிடம் சென்று தரிசனம் அளித்தார். அந்த அம்மையார் நெடுநாளாய் அனுபவித்துவரும் நோயிலிருந்து இன்னும் விடுதலை

பெரிய தனிமையாக கண்டு ஸ்வாமிகள் அவருக்குத் தேறுதல் மொழிகள, கூறி விடைபெற்றார் மாலை அநேகா சுவாமிகள் பள்ளிக்கூடத்தில் வந்துபாத்தார்கள. அவாகள வெகு ஒழுங்காக ஒருவர் பின ஒருவராக வந்து மரியாதை பெற்றுச சென்றாகள.

பினபு டௌன ஹாலிலே ஒரு பெரிய கூட்டம கூடிற்று. இதறகுமுன இவவளவு பெரிய கூட்டம் கூடினதே யில்லையென்று மேயர் சொன்னர். குருஸ்தாத்திரம சொல்லிக கூட்டம ஆரம்பித்தது. இதுவே ஒரு புதுமை. மேயர வரவேற்புப் பத்திரிகையை வாசித்தார். ஸ்வாமிகளும் தக்க விடையை ஒரு சொற்பொழிவாக ஆளித்தார். அதன் முடிவில் கீர்த்தனம சாந்திபாடம முதலியவற்றைச் சொல்லி முடித்தபொழுது பொதுக்கூட்டம பிரார்த்தனைக் கூட்டமாக முடிவு பெறறது. வந்து கூடியிருந்த ஜனஙகளுகுண்டான ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

—o—

ஹைதராபாத்

அக்டோபர் 23உ அதிகாலை 5 மணிக்கு டாஸ்கா டௌன் D.L S. பிராஞ்சைச் சார்ந்த தொண்டர்கள ஸ்வாமிகள தரிசனத்துகாக வந்தார்கள். இரவு பகலாக வேலை செய்திருந்த இவாகள் இதுவரை ஸ்வாமிகளிடம் வந்து பேசமலவா நமஸ்காரம் செய்யமலவா அவகாசம் இல்லாமல் தவித்திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் வந்து அவாமிகளுக்கு மாலையிட்டார்கள். அவர்களை அன்புடன் ஆத

ரித்த சுவாமிகள் "ஒத்துழையுங்கள். பேத புத்திக்கு ஒரு பொழுதும் இடம் கொடாதீர்கள். நீங்கள கூட்டுறவினல் எவ்வளவோ சாதித்துக்கொளள முடியும" என்று ஆரம பித்துப் பல பொன் மொழிகள கூறினர்.

அவர்களுக்கு விடை கொடுத்தபின்பு சுவாமிகள் பெங்களூர் விட்டு புறப்படச சித்தமானர். அப்பொழுது மைசூர் பிரதமமந்திரி கே-ஸி-ரெட்டியாரும அவர் மனைவியாரும் விமானஸ்தலத்துக்கு வந்து சுவாமிகளை வணங்கினர். அவர் சுவாமிகளைப்பார்த்து "இன்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இங்கே இருக்கிறார். தங்களைப்போன்றகுரு இப்பொழுது இந்தியாவுக்கு மிகவும் அவசியம் என்று சொன்னர்." என்றார். சுவாமிகளும் "அவர் இந்தவார்த்தை சொன்னதற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன் அவருக்கு என் வந்தனங்களை அறிவியுங்கள்" என்றார். அதற்குப்பிறகு ரெடடியார் அரைமணி நேரம்வரையில பேசிக்கொண்டே இருந்த தம் மனைவியாரையும கூட்டிக் கொணடு விடைபெற்றுச் சென்றார.

அவர் போனபின்பு சுவாமிகளை நாகப்பூர பிரபுவின் மனைவி பார்க்க வந்தார். அவர் "சுவாமிகளுக்குத் தமிழ் தெரியாதென்றே நினைத்திருந்தேன். நேற்று சுவாமிகள தமிழ்ப் பாடல்களைக் கேட்டபின புதான் சுவாமிகள் தமிழ் தெரிந்தவர் என்று அறிந்தேன்" என்றார். அவருடன் சில வார்த்தைகள் பேசி அவர்களுக்கு சில உபதேச மொழிகள கூறி விடை கொடுத்தனுப்பினர்.

காலை $7\frac{1}{2}$ மணிக்கு விமானம் கிளம்பியது. இரண்டு மணி நேரத்தில் ஹைதராபாத் போய் சேர்ந்தது. ஹைதராபாதிலே பேகம்பேட்டை நிலயத்தில் விமானம் இறங்கி

யது. அங்கே ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள் சுவாமிகள் ஸ்ரீரங்கராஜபாதில் ஒரு நாளதான் தங்குவார் என்று தெரிந்திருந்த காரணத்தால் அங்கே கூடியிருந்த கூட்டத்துக்குக் கணக்கில்லை. வந்தவர்கள் புஷ்பங்கள் பழங்கள் முதலியவற்றைக் கொண்டு வந்திருந்தார்கள்.

சுவாமிகளை வரவேற்றவர்கள் லேபர் மந்திரி ஸ்ரீ-வி-பி-ராஜு அவர்கள். மஹாராஜ் புராண்தாஸ்ஜீ, ப்ரொபஸர் துரைஸாமி அய்யங்கார். முதலியவர்கள் தொண்டர்களும், சாரணர்களும் இருவரிசைகளாக நின்றுகொண்டு மரியாதை செய்தார்கள. வழியிலே நடந்து சென்றபொழுது சுவாமிகளை மாலையிட்டுச் சென்றவர் நூற்றுக்கணக்கானவர்.

ஸ்ரீரங்கராஜபாதிலே தங்கின சமயம பிரதாப்கிரி அரசர் தம்முடைய விடுதியை சுவாமிகள் தங்குவதற்குக் கொடுத்தார். அக்கட்டிடத்துக்குப் போகுமுன் சுவாமிகளைப் பூரண கும்பதுடன வரவேற்றார்கள். நாகஸ்வரமும் வாசிக்கப்பட்டது. பஜனையும நிகழ்ந்தது. கட்டடத்துக்குள்ளும ஆயிரக்கணக்கான ஜனங்கள் காத்திருந்தார்கள். அவர்களுக்குத் தரிசனம் அளித்து நாம சங்கீர்த்தனமும் செய்து சுவாமிகள் ஓய் வெடுத்துக் கொண்டார.

மாலை மூன்றுமணிக்கு ஊஸ்மானியா ஸர்வகலாசாலைக்குப்போனர். அங்கே சுவாமிகளை போராசிரியர எம்-எஸ்-துரைசாமி என்பவரும், வேறு பிரபலப் பிரமுகர்களும வரவேற்றார்கள. ஸ்ரீ துரைசாமி சுவாமிகளைப் புத்தகசாலைக்குக் கூட்டிச் சென்றார பிறகு வெளியே வந்து ஹாலிலே கூடியிருந்த மாணக்கர்களுக்கு ஒரு சொற்பொழிவு அளித்தார். அதற்முன் கனம் துரைசுவாமி அவர்கள் சுவாமி

களின் குணதிசயிங்களைப்பற்றிச் சில வாத்தைகள் சொன்னர்.

உஸ்மானியா ஸர்வகலாசாலையிலிருந்து ராஜாம் கல லூரிக்கு சுவாமிகள் சென்றா. அங்கே மாணக்கா மாத்தி ரமன்றி, பொது ஜனங்களும கூடியிருந்தாகள. அகே சுவாமிகள் பேசின பிரசங்கத்தில மற்ற விஷயங்களுக் கிடையே யமதர் மாஜன் அனுப்பும் நான்கு அழைப்புப் பத்திரிகைளாகிய வெண்மயிர், திருஷ்டிக் குறைவு, பல் விள கல், ஊன்று கோல் என்பவற்றைச் சொன்னா. சுவாமிகள் பேசினது வேடிக்கை நிறைந்திருந்ததால் ஜனங்கள சிரித்த வண்ணமே இருந்தார்கள்.

பிரசங்கமுடிவில் கீர்த்தனங்களில எல்லாரும கலந்து கொண்டார்கள். சுவாமிகள் தம்முடைய ஆங்கிலக் கீர்த்த னைகளையும் பாடினர்.

அதற்குப் பிறகு லைகந்தரா பார்கில் மாப்பூப் காலேஜ் ஹைஸ்கூலுக்கு சுவாமிகள் போனர். அங்கே கட்டடத் துக்குள்ளே இடமில்லாமையால் எல்லோரும் திறந்த வெளி யிலே கூடினர்கள். பல்லாயிரம் ஜனங்கள் வந்திருந்தார் கள். சில வாவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டதில் ஒன்று ஓரழகிய குழாய்க்குள்ளே வைக்கப் ட்டிருந்தது.

மேடைமீது சுவாமிகள் இருந்குப்பொழுது கணக் கற்ற போட்டோக்கள் எடுக்கப்பட்டன. 'பளிச்' பளிச் சென்று மேலும் மேலும் வெளிச்சம் தம் முகத்தில் அடி கப்பட்டும் அவற்றை முன்ன மெல்லாம் பொறுத்தாத சுவாமிகள் இப்பொழுது பொறுத்துக் கொண்டிருந்தார். போட்டோக்காரர்களும் ஓயாமல் இந்த வெளிசங்களால் சுவாமிகளைத் தாக்கிக்கொண்டே இருந்தார்கள்.

ஸ்வாமிகள் அளித்த சொற்பொழிவு வழக்கம் போலவே தத்துவங்கள் நிறைந்திருந்தது. அதற்குப்பின்பு கூட்டம் அதிகமாக இருந்ததால் பக்கத்திலே சுவாமிகளை வெளியே கொண்டுபோக வேண்டியிருந்தது. அங்கே ஒரு சிவன் கோவிலிருந்தது. அதற்குள் புகுந்து அங்கே கீர்த்தனம் செய்தார். அப்பொழுது ஜனங்கள் ஓடிவந்து அங்கேயும் ஆபிரகணைகளாக கூடி விட்டார்கள். எப்படியோ ஒரு விதமாக வெளியே சுவாமிகள் சென்று விட்டார்.

திரும்பித் தம்மிடத்துக்குப் போகும்போது தாகசாந்திக்காக ஒரு சோடாக்கடையண்டை கார் நிற்க வேண்டியிருந்தது. அதுவேசமயம் என்று பலர் கூடிவிட்டார். சோடாக்கடை முதலாளியும் பணமுபற மறுத்துவிட்டார். மீண்டும கூட்டத்தைவிட்டு விலகி சுவாமிகளும அவர சிஷ்யர்களும் காருக்குள புகுந்தார்கள்.

பிரதாப்கிரி கோடிக்குள்ளே நுழைந்தபோது சுவாமிகளுக்கு மிகுந்த களைப்புத் தட்டியிருந்தது. "நான் இனி மேல் ஒரு நிமிஷம்கூட தங்கமாட்டேன், நேரே ரிஷிகேசம் போய்விடுவேன்" என்றார். ஆனல் அரைமணி நேரத்திற் கெல்லாம் கீர்த்தனம் நடக்குமிடதுக்கு வந்துவிட்டார். யாத்திரையில் சுவாமிகளுக்கு ஓய்வேது? அன்றிரவு காலு மணிநேரம் நித்திரை செய்தார். மறுநாட் கலை (24-10-50) வழக்கம்போலத் தம் காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார். தாம் இருந்த இடத்திலோ ஆண பெண் குழந் தைகள் என்று கணக்கற்ற ஜனங்கள் வந்து தரிசனத்துக் குக் கார்துகொண்டிருந்தார்கள். ஆகையால் சுவாமி

ஸ கீர்த்தனையும நடத்தி ஸன்னடக்ஷையைப் பறறி ஒரு பிரசங்கமும செய்தா.

பின்பு அ இ ரே. ஸ்டேஷனுக்கு சென்று ஒரு பேச்சைப் பதிப்பித்தா அங்கு இருந்தபோது ஒரு பெரிய தனவான் தம்முடைய மோட்டார் காரை சுவாமி கள் உபயோகத்துக்குக கொடுததார். அநதப் பிரபுவுகுச் சில நாட்களுக்கு முன் பக்ஷவாதம் தோன்றியிருநதது அவர் சுவாமிகளுக்கு பாதபூஜை செயதா. சுவாமிக ளும அவர் வீட்டிலே மிருதயுஞ்செய ஜபம செய்ததுடன் அம மநதிரத்தை அப் பிரபுவிக்குக கற்றுக கொடுத்தா அவர் மக்ஷலைப் பாத்து "நீங்கள் உக்கள் தகப்பனரைச சொம்மையாயத் தெய்வம்போலப் பார்த்துகொள்ள வேண் டும்" என்றா. அவரைப் பார்த்து "நீங்கள் உங்கள் வேலை யாட்களை பிள்ளைகளென்று நினைகக வேண்டும்" என்று உப தேசம செய்தா.

இந நிகழ்ச்சிகள எவ்லாம் நடைபெற்று முடிநததும மணி $11\frac{3}{4}$ ஆயிற்று. அதன்பின் ஓய் வெடுத்துக கொள ளாமலே கொளளிபுரம சென்று அங்கிருந்த திவ்ய ஜீவன சங்கக்கினையையும், புத்தக சாலையையும், வைத்யசாலையை யும பார்வையிட்டா. கீர்த்தனமும நடத்தினர். ஜனங் கள கூடிநின்ற பநதலுக்குப் போனர். மணி ஒன்று. அது வரையிலும ஆகாரம் எதுவும எடுத்துக் கொள்ளவிலலை ஆனல் அதைப்பற்றிய சிந்தையே யில்லாமல் பநதலுக் குள்ளே சென்று உபந்யாசம் செய்ய ஆரம்பித்து விட்டார். இதெல்லாம முடிந்தபின்பு பிரதாப் கோடிக்கு வநதபோது மணி இரண்டு.

ஏதோ சிறிது ஆகாரம் முடித்தபின், மீண்டும் தரிச னம கொடுக்கச் சித்தமானர். அநேகர் ஒவ்வொருவராய்

வந்தார்கள். பிரதாப்கிரி ராஜாவும் அவர் குடும்பத்தாரும் வந்தார்கள்.

மாலை 5 மணிக்கு சுவாமிகள் கோடியிலே கீர்த்தனம் நடத்திவிட்டு ரெயிலுவே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார். அங்கே ஸ்டேஷன் மாஸ்டரே சுவாமிகளை வரவேற்றார். நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து கூடினர். முதல் வகுப்பு வண்டியிலே வாடிவரை பிரயாணம செய்து நள்ளிரவில் நிஸ்டகாருகளுள் மீண்டும் சுவாமிகள் நுழைந்தார். அங்கே ஆவலுடன் காத்திருந்த பூனேபோது முக்கிய சிஷ்யர்களை காணுமற் கண்டெடுத்த புதையல் போல சுவாமிகளைப் பெற்றனர்

—o—

புனே

அக்டோபர் மாதம் 25ம் தேதி காலை 10 மணிக்கு சுவாமிகள் புனே வந்து சேர்ந்தார் அஸிஸ்டண்டு ஹெல்த் ஆபீசர் டாக்டர் டி. கே. விசுவநாதன் அவர்கள் வரவேற்றார். ரெயில்வே ஸ்டேஷனிலேயே வந்து கூடியிருந்த பெருத்த ஜனசங்கிணையைப்பார்த்து சுவாமிகள் ஆச்சரியமடைந்தார். ஏனெனில் புனேயிலே சுவாமிகள் வருவார் என்று பழைய நிகழ்ச்சிப் பத்திரத்தில் எழுதப் பட்டிருக்கவில்லை. ஆயினும் பகதஜனங்கள் எப்படியோ விஷயத்தை தெரிந்து கொள்கிறார்கள். யாத்திரை வண்டி கொண்டுபோகப்பட்ட இடத்தில் ஸ்டேஷனில் இரண்டுவரிசையாக தொண்டர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் ஒருமேஜை வைகக்பட்டிருந்தது சுவாமிகள் அதன் மீது ஏறி நின்றார். அப்பொழுது. எல்லாவரும சுவாமி

கனைப் பார்க்க முடிந்ததுடன் அங்கே சுவாமிஜி கீர்த்தனம் ஆரம்பித்து விட்டார். கலவரம் அடங்கவும் எல்லோரும் ஒன்றுகத் தெய்வத்தை நினைக்கவும் அதுவே வழி எனறு சுவாமிகள் யாத்திரையில் அறிந்திருந்தார். புணவில சுவாமிகள் பல மராத்திக் கீர்த்தனங்களைப் பாடினர். "விட்டல" "பாண்டுரங்க" "ஞானேதவ்" "துகாராம்" என்ற பெயர்களைக் கேட்கக் கேட்க அவ்கு கூடியிருந்த மராத்திய ஜனங்களுக்கு ஆனந்தம் பொங்க ஆரம்பித்தது.

ரயிலவேஸ்டேஷனிலிருந்து சுவாமிகள் ஸாஸ்வதி வித்யாலயத்துக்குப் போனர். அங்கேயும கீர்த்தனமும் பிரசங்கமும் நிகழ்ந்தன, கீர்த்தனம் செய்து கொணடிருந்தபொழுதே வெளியே பெண்மணிகள் வெய்யிலில் நிற்பதும புருஷர்கள் நிழலில் நிற்பதும் சுவாமிகள் திருஷ்டியில் பட்டுவிட்டது. அது அனுசிதம் என்று அவருக்குத் தோன்றிற்று. உடனே அத்தவறுதலை எடுத்துக்கூறி, "நாம் சொல்வது ஸீதாராம். ராம்ஸீதா அல்ல. ராதேஷ்யாம், ஷ்யாம்ராதே யல்ல" என்று விளக்கிக் காட்டினர்

பின்பு மஹாமந்தரம் பாடி, ஆங்கிலம் தமிழ் முதலிய பாஷைகளில் தாம் இயற்றிய பாடலைப் பாடினர்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பின் பம்பாய் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த மலேரியா ஆர்கனைஸஷன் காரியலயத்திற்குச் சென்றார் அங்கே டாக்டர் விசுவநாதன் அவர்கள சுவாமிகளை அங்கிருந்த ஆபீசர்களுக்கு அறிமுகப் படுத்தினர் அவ்விடத்தில் பார்க்க வேண்டியவற்றையெல் லாம் பார்வையிட்டபின் அங்கேயும் மகா மந்திரக் கீர்த்தன மும் மிருத்யுஞ்ஜய ஜபமும் செய்தார். பின்பு ஒரு சிறு பிரசங்கமும் செய்தார். அவர் கூறியவற்றில் முக்கியமானவை பின் வருமாறு :—

"உழையுங்கள், நேசியுங்கள், கொடுங்கள், சுத்தம் செய்து கொள்ளுங்கள், தியானம் செய்யுங்கள், அனுபூதி பெறுங்கள். நன்மையே செய்யுங்கள், நல்லவர்களாகவே யிருங்கள், கருணை காட்டுங்கள், இரக்கம் காட்டுங்கள், இவையே போதும். இவையே எல்லா மதங்களும் கூறும் போதனைகள். உழைப்பு கர்மயோகம், நேசித்தல் பக்தி யோகம, சுத்தி செய்துகொள்வது ராஜயோகம், அனுபூதி பெறுவது ஞானயோகம், விட்டொழிதல் வேண்டும், ஒத்துப்போக வேணடும், பிறருக்கு இடங்கொடுக்க வேண்டும் இவை மூன்றும் வெகு முக்கியம். இவையில்லாவிட்டால் எங்கும் சண்டை சச்சரவும்தான. அபீசிலும் அப்படித் தான்." இதற்குமேல் என்னதான் சொல்லவேண்டியிருக் கிறது.

பின்பு மீரா ஸ்கூலுக்குப் போனர். அப்பள்ளிக்கூடம் காராச்சிபிலுளள மீரா இயககத்தைச் சோந்த ஸாதுவாஸ் வானிஜி என்ற மகானல் காக்கப்பட்டு வருவது. அங்கே சுவாமிகள போனபோது பள்ளிக்கூடத்து காரியதரிசியான ஸ்ரீ கங்காராம வரவேற்றார். சுவாமிகளைப் பற்றிய வர லாறுகளை மற்ற போதகாசாரியர்களுக்குக் கூறினர். அங் கிருந்த பெண் பிள்ளைகள் ஹரே ராம கீர்த்தன மதுரமான குரலில் பாடினர்கள அன்றியும் அவர்கள் பகவத்கீதையி லுள்ள பனனிரண்டாவது அத்தியாயத்தையும் சுவையுடன் ஒப்பித்தார்கள. பிறபு சுவாமிகள் ஒரு சிறு உபனியாசம் செய்தார்.

அதன்பின் டாகடா விசுவலதன் வீட்டுக்கே திரும்பி வந்தார். அந்த வீட்டில் எங்கே பார்த்தாலும் தோரணங் களும் புஷ்பக் குவியல்களும், விளக்குகளும், தெய்வப்படங்

களும். அவையாவும் அந்த நண்பருடைய குருபக்தியை எடுத்துக காட்டின. அவ்விடத்தில சுமார் ஐந்தாறு ஜனங்கள வந்து கூடியிருந்தனா. அவர்களைப் பாதத்தும் சுவாமிகள் கீர்த்தனம் ஆரம்பித்துவிட்டார். பின்பு பிரசங்கம் நடந்தது.

ஒரு மணிபாயிற்று பிக்ஷை அங்கேயே ஏற்றுக்கொண்டார்.

சாயங்காலம 4 மணிகு சுவாமிகள நேராக ஆலந்திக்குப் போனர். அங்கே ஞானேசுவர் மகராஜ அவர்களுடைய ஸமாதிஸ்தானத்தைப் போய்ப பார்த்தார். கீர்த்தனம் செய்து தெயவ வழிபாடும் நிகழ்த்தினர். கோவில் பிரதக்ஷிணம் முடிந்த பின்பு அருகாமையிலுளள மௌன பாபாவைப் பார்ககச் சென்றார் சில நிமிஷங்கள் அங்கே தங்கின பினபு திரும்பினர.

அப்பால் போனது கிர்ககிக்ஷ. அவ்வூரில் தங்கினது எட்டு நிமிஷங்களே. ஆனல் அதற்குள எவ்வளவோ காரியங்கள் நடைபெற்றன. பூர்ண கும்பத்துடன் அவ்வூரார் வரவேற்றார்கள். ராம மந்திரில் ப்ரவேசமும ஆசசனையும் நடந்தன. சுவாமிகளுக்குப் பல பாதபூஜைகள் செய்யப்பட்டன. ஒரு வரவேற்புப் பத்திரிகை வாசிக்கப்பட்டது சுவாமிகள் விடைகூறி ஒரு பிரசங்கமும் செய்தார். இவையாவும் எட்டே நிமிஷங்களுக்குள் நடைபெற்றன.

அத்தருணத்தில் ஸ்ரீ என். எம். இ. தாஸ் அவர்கள் ஒரு ஞான கைங்கரியம் செய்தார். அதாவது சிவானந்த சுவாமிகள் புரிந்துள்ள ஞானோபதேசம் ஒன்றை கிர்க்கியை விட்ட பின்பு சில நிமிஷங்கள் டாக்டர் விசுவநாதன் அவர்

கள் வீட்டிலே சுவாமிகள இருந்து அதற்குப் பிறகு அவசர அவசரமாக திலக மந்திருக்குச செனனூர். அஙகே ஒரு பெரிய கூட்டம கூடிறறு. ஸ்ரீ பி. ஜி. கெர் அவர்கள் சுவாமிகளை எதிர் கொணடழைததா பின்பு சுவாமிகளைப் பற்றிப் புகழ்மொழிகள் பேசினர. டாக்டர் விநோத் அவர்களுமம சுவாமிகளுடைய சரிதத்திரதனைத் சுருக்க மாய்ச சொன்னர. அதன பின் சுவாமிகள் ஓர் உபநியாசம் அளிததா. ஸத்யம ஆறறிமனை முதலியவற்றின் அவசியதனைப பற்றியும ஆதமஞான அடைவதற்காகவே நாம் பூமியில வந்திருக்கிறோம் என்பதைப பற்றியும், உலக சாந்தி நிலை நிற்க வேண்டுமாயின் நாம் செய்ய வேணடியவை எவையெனபதைப் பறறி வெகு அழகாகப பேசினர். டாகடா வந்தேமாதரம கூறினர். கூட்டம கலைந்ததும அதிகக கஷடமிலலாமல சுவாமிகள் வெளியே வர முடிந்தது.

பினபு ஸாய்தாஸ் மணடலத்துக்கு சுவாமிகள் போனர். அமமண்டலததுத தலைவர் வரவேற்றார். ஸாய் பாபா மந்திரததுக்குப போய அஙகே கீர்த்தனங்கள் செய்து ஒரு பிரசனகமும முடிந்து வெளியே வந்தார்.

இரவு 10 மணிக்கு டாக்டா விஸ்வநாதன அவர்கள் வீட்டுக்கு வந்தார். அதற்குப் பிறகு ஸ்டேஷனுக்குப்போக ஏற்பாடுகள் செயயப்பட்டன. போகுமுன் டாக்டர் அவர்கள மனைவியிடம் விடித ஜபத்தின மேனமையைப் பற்றிப பேசினர பினபு எலலோரையும பாரத்து " ஒத்துழைப்பு, விட்டொழிதல், தாழ்மை, நேர்மை என்பனவையாவும வேண்டும். இவையிலலாவிட்டால ஒரு காரியமும நடக்காது.

ஒரு தொழில் செய்ய சாமார்த்தியம இருந்தா மாதிரம் போதாது." எனறார.

பம்பாய்

அகடோபர் 26-ம தேதி காலை 8 மணிகு யாதிரை வணடி பமபாய்க்கு வநதுவிட்டது. முன்னமே குறிபபிட் டிருநதது மதியானம் 1 மணி எனபது. ஆகவே ஐநது மணி நேரம முன்னமேயே பம்பாய்கு வநதுவிட்டார். இநத மாற்றத்தை அறிவிதது வரவேறபுக கமிட்டியாருக் குத் தந்தி அ+ககப்பட்டிருநததால் அவர்கள ஸ்டேஷ னுகு வந்திருக்க முடிநதது. அவர்கள ஸ்ரீ பி. ஜி. டிலோ ஹரிக், ஸ்ரீ எச். எம. மேமத்தா, அவர் குடுமபம, ஸ்ரீ டாக்டர் கே. கே பாட்டியா என்பவர்களும வேறு சில நண்பர் களும் பெருத்த கூட்டஙகளிலலாததால சிறிது சௌகரிய மாக இருந்தது

கனம் எச். எம. மேதாவின மகன் அஜித் மேத்தா என்பவா சுவாமிகளை ஸாண்டஹர்ஸ்ட் ரோட்டிலுளள லக்ஷ்மிபாகுகுக கூட்டிச் சென்றார். அங்கு அங்கேயே தங்குவதாக நிச்சயமாயிருநதது. மேத்தா குடுமபத்தினர் சுவாமிகளுக்கு முன்னமேயே பரிசயமானவர்கள. அவர்கள் மீணடும் சுவாமிகளைப் பார்த்ததால மிகுந்த மகிழ்ச்சி பெற்றாகள்.

காலை $9\frac{1}{4}$ மணிகு டாகடர் ஜோஷியிடம சென்று சுவாமிகள் தமமுடைய தேக நிலைமையைத் தெரிதுகொண டார. திருமபி வந்த நேரதில் பழைய நணபர் ஒருவரைப் பாரத்து அவர் வீட்டில் கீரத்தனமும நடத்தினர்.

ஒரு மணிக்குப் பெருத்த கூட்டம ரெயில்வே ஸ்டே ஷனுக்குப் போயிற்று, சுவாமிகள் 8 மணிக்கே வந்துவிட்

டார் என்ற செய்தி தெரிந்து கொண்டு அந்தக் கூட்டம் அப்படியே லக்ஷ்மிபாகுக்கு வந்தது. சுவாமிகள் கீர்த்தனம் ஆரம்பித்தார். ஒரு ஸத்ஸங்கம் ஏற்பட்டது. ஆங்கிலப் பாடல்களும் பிரசங்கமும் முறையே நிகழ்ந்தன பக்தியின் மேன்மையைப் பற்றியும், ஸத்வ்யவஹாரம்' அடக்கம் முதலியவற்றைப் பற்றி சுவாமிகள் தெளிவாகப் பேசினர். ஏராளமான புஸ்தகங்கள் கொண்டுவரப்பட்டுப் பலருக்கும் கொடுக்கப்பட்டன. இந்த தானத்தைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்

காலை மணிக்கு பத்திரிகை நிருபர்கள் வர ஆரம்பித்தார்கள். உபதேசம் வேண்டும் என்று அவர்கள் கேட்ட பொழுது சுவாமிகள் "நான் எல்லா மதங்களிலும் எல்லா வேதங்களிலும் உள்ளவற்றை வெகு சுருக்கமாகச் சில வார்த்தைகளில் அடக்கியிருக்கிறேன், அவை சூத்ரம் போன்றவை, அவற்றைச் சொல்கிறேன், கேளுங்கள் "உழை, நேசி, கொடு, சுத்தி செய், த்யானம் செய், அனுபூதி பெறு, நன்மை செய், நல்லவனாயிரு, கருணை காட்டு, இரங்கு, 'நான் யார்' என்று சிந்தித்துப் பார், ஆத்மாவை அறி; சுதந்திரமாக இரு—அவமானம் பொறு—பிறர் செய்யும் தீமையை பொறுத்தேற்றுக்கொள, இதுவே உயர்ந்த ஸாதனை, விட்டுக்கொடு, இணங்கு, இடம் கொடு" இவற்றையும் சொல்லிச் சில கீர்த்தனங்களும் பாடல்களும பாடினர்.

இரவு ஏழு மணிக்கு ஸத்ஸங்கம் ஆரம்பித்தது. கீர்த்தனம் பாடும் பெண்மணிகள் ஒரு கூட்டத்தார் வந்தனர். அவர்களுக்கிடையே ஸ்ரீமதி பார்வதி கைலாஸபதி, லலிதா வெங்கட்டாசலம், என்னும் பெரிய பாடகி

களும் வந்தாகள. அவர்கள் வெகு உயர்வான சங்கீத விருந்து அளித்தாாள். அது முடிந்ததும் சுவாமிகள் கீர்த்தனம் பாடினதுமல்லாமல் "அகடபம்" என்ற பாட்டைப் பாடி நடராஜ நாடடியமும நடித்துக் காட்டினர். இரவு 9½மணிக்கு இந்த உத்ஸவம போன்ற நிகழ்ச்சிகள் முடிவுற்றன

அகடேசபர் 27-ம் தேதி காலை லக்ஷ்மி பாகத்தில சுமார் இரண்டாயிரம் பக்தாகள சுவாமிகளை வந்து வணங்கினர். வந்தவர்கள புஷபம, பழஙகள் முதலியன கொண்டு வந்தார்கள் அவற்றை வந்தபொழுது வாஙகுவதும உடனுக்குடன் மற்றவாகளுக்குத் கொடுத்துவிடுவதும சுவாமிகள தொழிற்களாயிருந்தன. இந்த காக்ஷி அபூவ மென்று பலரும் கூறினர. ஏன்? கொடுகக்கும மகாதமாகள் குறையன்றே ?

இப்படிப் பிரஸாதம் கொடுத்து முடிந்ததும் சுவாமி ஆத்மானந்தர் எனபவரும, ஸதயானந்தரும் யோகத்தைப பற்றியும் த்யானத்தைப பற்றியும் பிரஸஙகம செய்தார்கள ஆத்மானந்தர் குஜராத்தியிலும ஸத்யானந்தர் ஸம்ஸ்கிருதத்திலும் பேசினர்கள். அவற்றிற்குப் பின் சுவாமிகள கர்மயோகதனைதப் பற்றி ஓர் அபூர்வமான இணையற்ற சொற் பொழிவு பொழிந்தா காமயோகதனை தன் வாழ்கைகயிலேயே எடுததுக்காட்டவே அவதரிதத வந்துள்ள நம குருசுவாமிகள அதைப பற்றி பேசினல் அது எப்படியிருக்கும் என்று யோசிதததுப் பாாததுக கொளளலாம். முக்கியமாக "நாம யாருககுப் பணிவிடை செய்கிறோமோ அவரே தெய்வம என்ற மனோபாவத்துடன் நாம் உழைக்கவேணடும்" என்று சுவாமிகள கூறியது அதைக் கேட்டவர்கள மனதில் பசு மரததாணி போல பதிநதது.

அடுத்த சொற்பொழிவு மாதுங்காவிலே தென் இந்திய வித்யாஸங்கத்திலிருந்தது. கட்டடத்தின் வெளிப்புறத்து சுவாமிகள் கார சென்றபொழுதே ஒரு பெருத்த மகிழ்ச்சி ஆரவாரம் உண்டாயிற்று. அச்சங்கத்துத் தலைவர சுவாமிகளை உள்ளே அழைத்து சென்றார். அப்பள்ளிக்கூடத்து ஸம்ஸ்கிருத பண்டிதர் தாம் சுவாமிகள்பால் இயற்றியிருந்த ஸமஸ்கிருத கவிதையைப் படிததார் தலைவர் அழகிய வரவேற்பு வார்த்தைகள் சில கூறிய பின்பு சுவாமிகள் எழுந்து ஓம் என்ற தீர்க்கப்பிரணவ த்வனி எழுபபினர். அவ்வொலி கேட்டதுமே எல்லாருடைய உள்ளமும பூரிக்கத் தொடங்கிற்று. ஒவ்வொருவரும் ஒத்து ஓம் என்று சொல்ல ஆரம்பித்தனர். அதைக் கண்ட சுவாமிகள் புன்னகையுடன் "எல்லோரும் என்னுடன் ஓம் என்று சொல்லுங்கள்" என்றார். அதுகேட்டு எல்லாரும் ஓம் என்று ஆனந்தம் பொங்க உரைத்தார்கள. அப்பொழுது சுவாமிகள் சொன்னர் :—" ஆஹா ! பேஷ் ! ஆனந்தம் ஆனந்தம் இப்படிப்பட்ட பிள்ளைகளை நான எங்குமே பார்க்கவில்லை, நாம் இப்பொழுது சொல்லும் ஓம் உலகத்தையே துளைத்துச் செல்லும். ட்ரூமன், ஆட்லி, ஸ்டாலின் என்பவர்கள் உளளத்தையும் பிளநது செல்லும். குழந்தைகளாகிய உங்களுடைய ஓங்கார உச்சரணம் எவ்வளவு வலிமை கொண்டது தெரியுமா ? அதன் மகிமையை எடுத்துரைக்க இயலாது".

பின்பு பெரிதான ஒரு பிரசங்கம் ஆரம்பமாயிற்று அதில் வேதாந்தஸாரம், உபநிஷத உண்மைகள் முதலியன இருந்தன. இந்த உபந்யாசம் முடிந்ததுமே சுவாமிகள்

விரைவாக மாதவபாகத்துக்குத் திரும்பினர். அங்கே அவர்களை எதிர்பார்த்துக் கொண்டு ரமணி ஸ்ரீ மஹேஹரா பாய் ஸைத் காத்திருந்தார். அவர் லக்ஷ்மி நாராயணமந்திர் டிரஸ்டிகளில் ஒருவர். முதலில் மந்திர் ஹாலுக்கும் பின்பு மந்திருக்கும் சுவாமிகளை அவர் அழைத்துச சென்றார். அங்கே அமைக்கப்பட்டிருந்த மூர்த்திகளின் அழகை வர்ணிக்கமுடியாது. மந்திர் சிகரத்தில தபஸ்விகள், யோகிகள், மகான்கள் முதலியவர்களுடைய உருவங்கள் இருந்தன. அவை பண்டைக்காலத்திய தவத்தின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் விளக்கிக் காட்டின. ஹாலிலோ ஸ்ரீ மஹேஹர்பாய் ஸேட்டின் முன்னோர்கள் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

அந்த ஹாலில் மஹேஹர், அவருடைய தமையனர் ஆகிய இருவருடைய உருவப் படங்களையும் சுவாமிகள் திறந்து வைத்தார்கள்.

சாயங்காலம் 6 மணிக்கு நடக்க ஏற்பாடாயிருந்த கூட்டத்தைப் பார்ப்பதற்கென்றே மண்டலேசுவரர் மஹேசுவரானந்த மகாராஜ் வந்திருந்தார். அவர் ஹரித்வாரிலிருப்பவர் அவருக்கு விஷ்ப் பார்லாவில் ஒரு பெரிய ஆசிரமம உண்டு ரிஷிகேச வாசியான, கைலாஸாச்சிரமத்து மண்டலேசுவரார்களும் புரிஜி என்பவரும் வந்திருந்தார். ஆகவே நம்சுவாமிகள் உள்பட இம்மூன்று மஹா மண்டலேஸ்வரர்களும் ஒன்றாய் சேர்ந்து அங்கிருந்தது பெரிதான ஒரு விசேஷமாயிருந்தது.

ஆறு மணிக்குக் கூட்டம் ஆரம்பித்தது. சிவானந்த சுவாமிகளைப் பற்றி முன்னுரை குஜராத்தி பாஷையில் ஸ்ரீ எச. எச். மேத்தாவால் கூறப்பட்டது. ஆங்கிலத்தில்

எழுதப்பட்டிருந்த வரவேற்புப் பத்திரிகையை மேத்தா அவர்கள் மகன் ஹேமலதா மேத்தா எம். ஏ. எல். பி. படித்தார். ஸ்ரீ நட்வர்லாலாஜி குஜராத்திப் பத்திரிகையை வாசித்தார். இவ்விரண்டையும் ஸ்ரீ மஹேந்த்ர அவர்களானந்தாஜி நம் சுவாமிகளுக்கு ஸமர்ப்பித்தார்.

சுவாமிகளும் மிகவும சாந்தமாக ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தின் கம்பீரம் எல்லாவரையும் நிசப்தமாக இருக்கச் செய்தது. அவர் உரைத்த மொழிகள் ஸாக்ஷாத் ஜகதீசுவரன் முகத்திலிருந்தே வந்ததாகத் தோற்றமளித்தன. விஷயமோ பகவத்கீதையின் ஸாரம். இப்பேச்சை ஸ்ரீ மோட்வானி என்பவர் ஒலி பரப்பியில் பதித்துள்ளார்.

சுவாமிகளுக்குப் பின் மண்டலேசுவர் மஹேசுவரானந்தர் மேடையிலேறி "இத்தகைய மகாநகர் பம்பாய் நகர் எல்லளவோ தபஸ் செய்திருக்கிறது" என்று தொடங்கி, சுவாமிகள் அன்பின் அவதாரமாயிருப்பதையும, அவர் கங்கை கரையில ரிஷீகேசத்தில் நெடுநாளாய்த் தவம் செய்து தெய்வானுபூதி பெற்றிருப்பதைப் பற்றியும், இபொழுது தெய்வானுக்கிரகத்தால் புறப்பட்டு வெளியே வந்து லோகோத்தாரணம் செய்து வருவதைப் பற்றியும் வெகு நன்றுகப் பேசினர். அன்றியும சுவாமிகள் அன்னிய நாடுகளுக்கும் போக வேண்டும் என்றும் சொன்னர்.

கூட்டம முடிந்தபின்பு, சுவாமிகள் மேடையிலிருந்து இறங்கினர். எவ்வளவோ பாடுபட்டும கூட்டத்தை விலக்க முடியவில்லை. ஒவ்வொருவருக்கும் சுவாமிகள் பாதபர்சம் கிடைக்கவேண்டும் என்ற அவா உண்டாயிற்று. எவ்வளவோ தொண்டர்கள் அங்கங்கே ஜனக்கூட்டத்தைத்

தடுத்து நின்றார்கள். ஆயினும் ஒரே நெருக்கமும், குழப்பமும் இருந்தது. அத்தருணத்தில எப்படியோ சுவாமிகள் வெளியே வர முடிந்தது, ஒரு விநோதை. அங்கே ஏதோ ஒரு மோட்டார் கார் காலியாக இருந்தது. அதற்குள்ளே அவர் நுழைந்தார். வேறொரு சிஷ்யரும் புகுந்தார். ஒரு கொடியில் டிரைவர் வண்டியை "ஸ்டார்ட்" செய்துவிட்டார். அது சென்று கொண்டிருந்த பொழுது "இது யாருடைய காரோ?" என்று சுவாமிகள் கேட்டதற்கு "இது தங்கள் கார்தான் என்றான்" "இல்லையே"— "ஆமாம் சுவாமிஜி இப்பொழுது இது தங்களடையதுதான்" என்றான். பிற்பாடு அவனைக் கேட்டுப் பயனில்லை என்று தெரிந்தது. யாருடையதானால் என்ன? எல்லாருக்கும் சுவாமிகள் சொந்தம் ஆகையால் எல்லாருடைய காரும் அவருக்குச் சொந்தம் தானே. அந்தக் காரிலேயே தம்மிருப்பிடம போல் சேர்ந்தார்.

அக்டோபர் 28-ம் தேதி காலை 6 மணிக்கு சுவாமிகள் தம்முடை காரியங்கள் செய்யத் தயாராகிவிட்டார். முதலில் ஸ்ரீ எச். எம். மேத்தா வீட்டிற்குப் போனர். அங்கிருந்த வனித விச்சிராம பெண் பள்ளிக்கூடம் சென்றார. அங்கிருந்து ஸாரீத பெண்கள் பள்ளிக்கூடம் போனர். அவ்விரண்டு இடங்களிலும் அபூர்வமான உபதேசங்கள் கொடுத்தார். பின்பு மலபார் ஹில்லுக்கு சுவாமிகளை அழைத்துச் சென்றார்.

திரும்பி வந்தபிற்பாடு மூன்று மகா மண்டலேசுவரர்களும மீண்டும் சந்தித்தார்கள். லக்ஷ்மீ பாகத்தில் அவர்களுக்குச சிற்றுண்டி அளிக்கப்பட்டது. அவர்கள் பசுத

ணங்களை தின்னும்பொழுது மேத்தா குடும்பத்தார் கீதை 15-வது அத்தியாயத்தை ஒப்பித்தார்கள். மஹாமந்திர கீர்த்தனம் சொல்லப்பட்டது. அதன் சாரத்தி பாடமும் கூறப்பட்டது. இவையெல்லாவற்றிற்கும் மேல் தேவிஸ் தோத்திரங்கள் முதலியனவும உரைக்கப்பட்டன.

மாலை 4 மணிக்கு சுவாமிகள் லக்ஷ்மிபாகத்தை விட்டு வெளியே கிளம்பினர். அவர் சென்றது கமால் கெமிக்கல் வர்க்ஸ் அதிபரான பி. எல். ஸாப்ரு என்பவரைப் பார்ப்ப தற்காகவே. அங்கே சில நிமிஷங்கள் இருவரும் உரை யாடின பின்பு ஸ்வாமிகள் ஸ்ரீ மனு ஸுபேதார் அவர்கள் வீட்டிற்குப் போனர். அதற்பிறபு சாப்ரு வீட்டிற்கு வெளியே காருடன் கார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பின்பற்றி வேறு பல கார்களில் பல பெரிய பிரபுக்கள் வந் துகொண்டிருந்தார்கள்.

ஸுபேதார் அவர்கள் காருக்குள் புகுந்ததும் ஸ்வாமி கள் அவருக்கு ஒரு கீதாப் புஸ்தகம் கொடுத்தார். அப பொழுது ஸுபேதார் அவர்கள் "ஸ்வாமிஜி, இதுவரையில் இந்தமாதிரி எத்தனையோ புத்தகங்கள் அனுப்பி அனுக்ர கித்திருக்கிறீர்கள். ஆனல் தங்களை நேரில பார்க்கும் பாக் கியம இப்பொழுதுதான் இடைத்தது என்றார்.

அவர் வீட்டில் நேர்த்தியான ஒரு சிற்றுண்டி விருந்து ஸ்வாமிகளுக்கு அளிக்கப்பட்டது. அப்பால் கீர்த்தனம் வழக்கமபோல் சுவாமிகள் ஆரம்பித்தார். எல்லா, வரும் அதில் கலந்துகொண்டார்கள். பிற்பாடு சுவாமிகள் வெளியேவந்து விட்டார்.

பின் ஒரு பெரிய அரண்மனைபோன்ற கட்டிடத்துக்கு ஸ்வாமிகள் அழைத்துச் செல்லப்பட்டார் அதைச் சுற்றி அடுக்கடுக்காக ஒன்றன் மீதொன்றாகக் கட்டப்பட்டிருந்து வீடுகள் வரிசை வரிசையாக இருந்தன. சுவாமிகள கேட்டார் அப்பாதையாகச் சென்றதைக் கவனித்திருந்த அந்த இடத்து ஜனங்கள் உள்ளிருந்து வெளியேவந்து அவ்ரவர்கள் தின்னைகளில் நின்றார்கள். அவர்களுக்குள் ஒரு பெண்மணி கீழே இறங்கி ஓடிவந்து "ஸ்வாமிஜி! நீங்கள் முன்பு இப்படிக் கீர்த்தனம் செய்வீர்கள். இப்பொழுதும் அப்படியே செய்யவேணும்" என்று சொல்லிப் பாட ஆரம்பித்தார். அப்பொழுது அந்த அம்மை இருகைகளை தலைமீது உயர்த்திவைத்துக் கொண்டே கீர்த்தனம் செய்தார்.

அப்பால் சுவாமிகள் நட்வர்லால் மேத்தா அவர்கள் வீட்டுக்குப் போனர். அவர்தாம் நெடுநாளாக எழுதிவரும் விசித்தரமான நோட்டுபுத்தகத்தை சுவாமிகளிடம் காண்பித்தார். அப்பொழுது சுவமிகள் "நீங்கள் இன்னும் கொஞ்சம் இடம் விட்டெழுதவேண்டும். மசியால் எழுத வேண்டும். பாருங்கள் ஸாஸ்வதி மேத்தா எவ்வளவு அழகாக எழுதுகிறார்."

